ஓ 58

சுந்தரர் கலியாண அம்மானை

O-, 87M,
NO6
119078

உ

பரமபதிதுணை.

ஸ்ரீகண்ணபிரானது புதல்வியாகிய

# சுந்தரிகலியாண அம்மானை

இராமநாதபுரம், வித்துவான்

வாலசுப்பிரமணியபிள்ளையவர்களாலும்,

முதுகுளத்தூர் அருணாசலம்பிள்ளையவர்கள்

குமாரர்,

சுப்பிரமணியபிள்ளையவர்களாலும்

இயற்றியதை

உத்தங்குடி

**பொன்னுச்சாமிபிள்ளை**

அவர்களால்

பரிசோதித்து


மதுரை, புதுமண்டபம், புஸ்தகஷாப்,

இ. ராம.

**குருசாமிக்கோனார்**

அவர்களால்

தமது

ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

ரிஜிஸ்டர் காப்பிரைட்

1906.

O—, 27M, S
N06

119078

உ

பரமபதிதுணை

ஸ்ரீ கண்ணபிரானது புதல்வியாகிய

# சுந்தரிகலியாண

# அம்மானை.

காப்பு.

வடகிரிமேற்கதை வரைந்தசெல்வனை
படவரவணிந்தவன் பணிந்தசோதியை
குடதிகர்வபிற்றனைக் குமரிபாலனை
கடகரிமுகத்தனைக் கனிந்துபோற்றுவாம்.

## அம்மானை

திருமகளாஞ்சுந்தரியைத் திரலிமன்மாலையிட்ட
மருவிலாமாசரிதை மாலையாய்ச்சாற்றுதற்கு
மூலப்பொருளே முதற்பொருளேமுச்சுடரே
வாலக்கணபதியே வாக்கருளவேணுமையா
சுந்தரியாள்சோபனத்தைத் தொல்லுலகில்யான்பாட
கந்தனேயெப்பொழுதும் கருணைசெய்யவேணுமையா
மங்களஞ்சேர்சுந்தரியை வாசவிமன்மாலையிட்ட
இங்கிதஞ்சேருங்கதையை யின்புறவேயான்பாட
வெள்ளைக்கலையாளே விமலிசரஸ்பதியே
உள்ளத்திருந்தே உதவிசெய்யவேணுமம்மா
கருணைபெறுஞ்சுந்தரிக்கு கல்யாணமானகதை
அருமையுடனம்மானை யடியேனும்பாடுதற்கு
குருவேசரணங் குகனேசரணமையா
கருமேகமேனியுள கண்ணனேகாத்தருள்வாய்
ஆருமறியாத அருட்பாரதக்கதையை
மேருவினில்கோம்பால் விரைந்தெழுதும்பிள்ளையாரே
உன்பாதம்போற்றி உரைக்கின்றேனம்மானை

தென்பானவர்க்குத் திடந்தரவும்வேணுமையா
மாயன்மகள்சுந்தரியை வல்விசையனின்றெடுத்த
சேயமிகுவாளபிமன் நிலத்தில்மாலையிட்ட
கதையதனையம்புவியோர் கண்டுமனமகிழ
இதையாமற்செந்தமிழால் செப்புவன்கேளம்மானை

விருத்தம்

குமாரசரணங் குருவேசரணம்
விமலாசரணம் வேதாசரணம்
உமையே திருவே உந்தாள்சரணம்
சமையஞ்சமையந் தருவிர் தமிழே.

அம்மானை.

மாதவத்திலேசிறந்தோர் வாழ்த்திப்புகழ்ந்தேற்றும்
வேதவியாசருற்று மெய்யாகவிப்புவியில்
ஓதியதோர்பாரதங்கேட்டுன்னிச்செயமுனிவர்
ஆதிமொழியி லவருரைத்தபாரதத்தில்
சொல்லுங்கதையிற் சுபமங்கலக்கதையாய்
வல்லமைசேர்வில்விசையன் மைந்தனபிமன்னனென்போன்
இந்தமகிழ்வாய்த் திருமணமுஞ்செய்துகொண்ட
சுந்தரியாள்சோபனத்தைத் தொல்லுலகோர் தானறிய

பாயிரம்

ஞாலம்புகழ்சேது நல்முகவையூர்வாழும்
வாலசுப்பிரமணியன் வாக்காலுரைத்ததமிழ்
செவ்வையில்லாது சிதைந்துப்பலவிடத்தில்
வெவ்வேறாய்த்தானிருந்து விளங்கியதையொழுங்காய்
மறைசேர்முதுகுளத்தூர் வாழுமருணாசலவேள்
நிறைமாதவத்துதித்தோன் நிதமுங்குமாரனிரு
பொற்பதத்தைப்போற்றி புகலுகின்றசுப்பிரமணியன்
அற்புதமாமென்றே அவனியுள்ளோர்கொண்டாட
சிற்றறிவால்யானுமுன்னஞ் செப்பியநூலுஞ்சேர்த்து
கற்றறிவோர்கொள்ளக் கழறினேனம்மானை



கதையின்வரலாறு

கேளும்பெரியோரே கிருபைமனதில்வைத்து
ஆளும்புவிராஜ னானகுருகுலத்தில்
பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும் பன்னுபகைசேர்ந்ததினால்
வஞ்சமுற்றபாவி வணங்காமுடிவேந்தன்
சூதாடிப்பஞ்சவரைத் துரத்தினன்கானகத்தில்
வாதாடமாட்டாமல் வனம்போனார்பஞ்சவர்கள்
ஐவர்புவிவிட் டருங்கானகந்தனிலே
தெய்மவலுவாகத் திரிந்தார்வனவாசம்

விருத்தம்

பாதகன்துரியன்பஞ்ச பாண்டவரானபேரை
பேதகச்சூதால்வென்று பெருவனந்தன்னிலோட்டி
பூதலந்தன்னையாண்டு பொய்மையில்நஞ்சையிட்டு
சேதமாயினனென்றெண்ணி செருக்குடன்வளரும்நாளில்

அம்மானை

வசம்போனாரிவரென்று மனமகிழ்ந்துநூற்றுவரும்
கனமானபுத்தியில்லா கபடரவக்கொடியோன்
கொண்டாட்டமாகக் கொலுப்பெருக்கித்தானிருந்து
திண்டாட்டமானபழி சிந்தைதனிலேநினைந்து
சபைநடுவிலுற்ற சகுனிதனையேபார்த்து
சுபகாரியங்களொன்று தொடங்கியிருக்கிறேன்
கன்னவிதுராசொல் காக்குமக்வத்தாமா
மன்னு துரோணனென் வார்த்தைதனைக்கேட்டருளும்

விருத்தம்

கண்டார்வனவாசங்குடி வாழ்வுற்றனரைவர்
தண்டாமரைமுகமால்மகள் தனையேகலியாணம்
கொண்டாடியென்மகனுக்குநீ கூடும்படியாக
உண்டானதைநிசமாகவும் ஓதும்பெரியோரே

## கலியாண ஆலோசனைசெய்தல்

அம்மானை

மாயன்தவத்துதித்து வளருகின்றசுந்தரியை
நேயமுடன்முன்னாள் நிசவிசையன்புத்திரர்க்கு
சென்றுகலியாணஞ் செய்வதெனப்பஞ்சவர்கள்
அன்றுசொல்லிப்பேசினதை யாமும்நிருத்திவைத்து
நம்முடையபுத்திரனீ ராசனிலக்கணர்க்கு
செம்மையாயிந்தச் செகமெலாந்தானறிய
மங்கலமுஞ்செயய மனதிலிருப்பதினால்
உங்களுடையபுத்தி யோசனையுஞ்சொல்லுமென்றான்
கன்னன்சகுனியிது காரியமேநல்லதென்றான்
மன்னன்விதுரன் மனதுசகியாமல்

## விதுரன் ஞாயமுரைத்தல்

வணங்காமுடியோனே வார்த்தையொன்றுகேட்டறள்வாய்
இணங்காதவார்த்தைகளை யியம்புவரோயிச்சபையில்
பஞ்சவரைச்சூதால் பகையாக்கிக்கானகத்தில்
வஞ்சித்தேதுரத்திவிட்டாய் மாண்டாரோமாளலையோ
பெருக்கமாய்நீயவரைப் பிரபலமுஞ்செய்யாமல்
இருக்கவிடங்கூடவில்லை யென்றேயோட்டிவிட்டாய்
தாரணத்தையுன்றன் கருத்தில்நினையாமல்
மாரணத்தைக்கோரி வகைதப்புச்செய்வர்களோ
காடுறைந்தாலொன்று கனதப்புச்செய்வர்களோ
கேடுறைந்தபுத்தி கினவிலேயுமெண்ணாதே
உயிரிருந்தாலவர் உடனேவருவார்கள்
வயிரமவர்கட்கு வருங்காணிதினாலே
முன்னாளில்ப்பேசி மொழிந்தபடியல்லாது
இன்னாளில்வேறே யினைகேடுசெய்யாதே
பாத்தன்மகன்றனக்கும் பச்சைமால்தன்மகட்கும்
நேத்தியாய்க்கல்யாணம் நீமுடித்துப்பார்த்தாக்கால்
ஊருக்குஞ்சம்மதியாமுற்ற வர்க்குஞ்சம்மதியாம்
ஆருக்குஞ்சம்மதியா மைவருக்குஞ்சம்மதியாம்
காயத்தை நிச்சயமாய்க் கருத்தில்மிகநினைந்து



ஞாயத்தைத்தள்ளி நடுக்கேடுசெய்யாதே
எனக்குத்தெரிந்தமட்டு மெடுத்துரைத்தேனிப்போது
உனக்குத்தெரிந்தமட்டும் யோசினையைப்பாருமென
இந்தவசனமெடுத் துரைத்தான்வில்விதுரன்
அந்தவசனமெல்லா மரவக்கொடியோன்றன்

## துரியோதனன் சொல்லுதல்

காதிலேகேட்டுக் கண்கள்மிகச்சிவந்து
தீதிறைப்பாவி துரியோதனனுரைப்பான்
வாரும்விதுராநின் மகிமையிங்கேசொல்லாதே
ஆருமறியாவளப்பு வுனைநான்கேட்கவில்லை
உம்மாலேயானு முலகாளவோபோறேன்
தெம்மாடிபோபோநீ சேருகின்றவீட்டினிலே
திருத்தமாயென்றன் கிரியதகப்பனென்று
பொறுத்தேனதினால் பிழைத்தாய்நீபோகவென
வாய்க்கொழுப்பினாலே வணங்காமுடியோனும்
தீய்ப்பிடிக்கச்சொன்னவந்தச் செய்தியெல்லாந்தான்கேட்டு
நல்லமரியாதை நமக்குவரலாச்சுதென்று
சொல்லாமல்ப்போனான் துடிவிதுரன்தன்மனைக்கி
என்கான்துரோணரே நீரேதுமுரையாமல்
தூங்காமல்த்தூங்கிச் சுழன்றவகைசொல்லுமய்யா

## துரோணர்ஞாயங்கூறுதல்

என்றுதுரியனியம்பத் துரோணருமே
ஒன்றும்பலியாது யோசனையும்பற்றாது
ஆகாதுகல்லாமல் அடித்துவந்தவினைப்படிப்பு
வேகாதுபோபோநீ வேடிக்கைபேசாதே
உகைளந்தான்பஞ்சவர்கட் குறவாகவேயிருக்கப்
பலபலவாயோசனைகள் பண்ணினதிலென்னவுண்டு
வில்விசையன்கேட்டால் விடுவானொருபகழி
கல்லும்பிளக்குமவன் கைச்சுருக்கும்நீயறிவாய்
வாளால்பீமன்வருவா னொருகொடியில்
பாழாகப்போமுன் படையும்பலசுகளும்

எதுக்குநீ தானிளப்ப மாயோசனைகள்
வாதுக்குச்செய்யவந்தாய் மன்னுமறந்துவிடு
உள்ளபடியேயுரைத்தார் துரோணருமே
கள்ளமனத்தன் கபடனனியாயன்
ஆசாரிதன்னை அடமாகவேபார்த்து
வாசாலமாகவழுத் தினீரிச்சபையில்
பாந்தனுடவில்லும் படையும்பவுசுகளும்
பூத்தானமோவுமக்குப் போங்காணவேறே
என்னபெருமையிது பெருமையல்லாது
பின்னையொருபெருமைப் பேசத்தெரியாது
ஆனதினுலுன்னையளப்பு மிகக்கேள்க்கவில்லே
போனதினுலென்னவுண்டு போம்போமினைதனக்கே
என்றுமன்னன்சொன்ன னெழுந்திருந்தாசாரி
ஒன்றுமுரையாமலுட னெழுந்துபோகலுற்ருர்

## துரியோதனன் கர்னனையுஞ் சகுனியையும் யோசனைகேள்குதல்

வார்த்தைதெரியாத வணங்காமுடிவேந்தன்
காத்திருக்கும்நேசனுங் கன்னனையுந்தான்பார்த்து
மாமன்சகுனியெனும் மன்னனையுந்தான்பார்த்து
தாமோதரன்மகளைத் தாலிகட்டலெக்கணர்க்கு
நல்லஉபாயம்நமக்கறியச் சொல்லுமென்ருன்
அல்லல்விளைக்கவென்றே ஆனசகுனியுந்தான்
மனதில்நினைந்துகொண்டு மன்னனுக்குத்தானுரைப்பான்
கனதையுள்ளபுத்திபெற்ற காவலனேகேளுமினி
பஞ்சவர்கள்போனர்கள் பாரவனந்தனிலே
நஞ்சுநீர்தான்குடித்து நல்லவுயிர்மாண்டுவிட்டார்
மாண்டவசனமதை மாயவனுங்கேட்டிருப்பான்
தாண்டிகாம்கேட்டால்ச் சுந்தரியையீந்திடுவான்
இந்தஅளப்பிருக்க யேன்மலைக்கிறீரெனவே
தந்துபாயச் [illegible] மே சம்மதித்தான்கர்னனுமே
அன்பாயச்சகுனிசொன்ன ஆம [illegible] ளெல்லாம
தென்னன்துரியோன் திருச்செவியிலேகேட்டு



தனதுபண்ணிச்சொன்ன சகுனிதனையேபார்த்து
மனதுகளிகூர்ந்து மறுவசனமேதுரைப்பான்

விருத்தம்

உற்றதோர்சகுனியுரைத்ததேதகலம்
மற்றவர்பேச்செல்லாம்மசகமாத்திரம்
இத்தலம்புகழுகின் றெவர்க்குமேன்மையாய்
அத்திலைக்காத்த அரியிடஞ்செல்லென்ருன்

அம்மானை

உபாயமறிந்தேவுரைத்தீ ரேயிச்சபையில்
சிபாகியுடன்படிக்கை செப்பினுர்மற்றவர்கள்
ஆகையால்நீருமந்த ஆயனிடந்தனிலே
போகவிதுசமயம் போனலும்நீர்சகுனி
தந்திரமாய்ப்பேசிச் சமர்த்தினிலக்கணர்க்கு
சுந்தரியைமாலையிடச் சோபனமுந்தான்பேசி
வாருங்காணென்னுடைய மாமாசகுனிமன்னே
பாருங்காணும்முடைய பராக்கிரமமுள்ளதெல்லாம்
சம்மதிக்கச்செய்திங்கு தான்வருவீரென்றுமன்னன்
வம்பாயனுப்பி மகிழ்ந்திருந்தானம்மானை

## சகுனி பெண்கேட்க துவாரகைக்குச்செல்லுதல்

நல்லதென்றுதான்சகுனி நாரணன்பாற்செல்லவென்று
வல்லமைகள்பேசி மகிழ்வாய்ரதமேறி
கள்ளமனத்தோன் கபடுசெய்யவேணுமென்று
உள்ளபரிசனங்க ளுடன்கூடித்தான்வரவும்
நாடுநகர்கடந்தான் நற்காளகம்புகுந்தான்
காடுகடந்தான் கடியமலையுங்கடந்தான்
ஆறுங்குளமும் அடவிகளும்தான்கடந்தான்
தேருந்தெருவும் சிங்காரவீதிகளும்
வண்ணமுள்ளமாயன் வாழுந்துவாரகையில்

எண்ணரியகிருஷ்ண ரிருக்குமணிமேடைகளும்
கண்டான்மகிழ்ந்தான் கண்ணனரன்மனையைக்
கொண்டாடினான்மகிழ்ந்தான் கோபாலர் தன்மனையில்
வாசலிலேதான்சகுனி வந்திறங்கித்தூதுவரை
நேசமிகுமாயனிடம் நீங்கள்போய்ச்சொல்லுமென்றான்
சகுனிவந்தானெனவே தாமோதரனிடத்தில்
மகிமையாய்ச்சொன்னார்கள் வாசல்நின்றதூதுவர்கள்
ஆனாலவனையழைத்திங்கே வாருமென்றார்
சேனாபதிகள் சீக்கிரத்திலோடிவந்து
கன்றால்விளாவெறிந்த கண்ணனகமகிழ்ந்தா
மன்னாசகுனி உமைவரச்சொன்னாரென்றிடவே
சென்றான்சகுனியுந்தன் சென்னியின்மேல்க்கைகூப்பி
நின்றான்தொழுதான் நெடுமாலும்வாருமென்றார்
வந்தவகைநமக்கு வளமாகச்சொல்லுமென்றார்
நந்தகோபாலாகேள் நான்வந்தகாரியந்தான்
பெருமைபடைத்த பெரியதுரியோதனன்றன்
அருமைமகன்லெட்சணர்க்கு ஆனதிருக்கல்யாணம்
சிக்கைதமிழச் சிறப்பாய்முடிப்பதற்கு
சந்தேகவார்த்தையுமைத் தான்கேட்டுவாருமென்று
அனுப்பிவைத்தாருமிடத்தி லாயனேகேட்டருள்வீர்
சனுப்பெறலாம்வேண்டியதும் சம்பாத்தியம்பெரளாம்
மறைந்தாரேயைவர் வனவாசம்சென்றிடத்தில்
இறந்தாரேயைவ ரினிமேல்வருவதில்லை
ஆருந்தான்கானகத்தில் ஐவரையுங்காணவில்லை
பூருவத்துப்பேச்சைப் புலம்பினாலென்னவுண்டு
பெண்ணைக்கொப்பதிலும் பேணியேதான்கொடுப்பார்
கண்ணனேயுங்கள் கருத்தறியேனென்றுரைத்தான்
அப்போதுமாயன் அளகுபெறுலெட்சுமியை
செப்பமாய்த்தானழைக்கச் சீக்கிரத்திலோடிவந்தாள்
வந்தவளைப்பார்த்தந்த மாயனெடுத்துரைப்பார்
சுந்தரியைப்பெண்பேசி துரியோதனனுப்பிவைத்தான்
வந்தசகுனிசொல்லும் வாய்மொழியைக்கேளுமென்றார்
இந்தவுரைகேட்டெடுத் துரைப்பான்றற்சகுனி



## சகுனி பாண்டவர்களை தூசித்துச் சொல்லுதல்.

பண்டுரைத்தவாறேயப் பார்த்தமகன்றனக்கு
கண்டுமொழியான கன்னியந்தச்சுந்தரியை
கொடுக்கமனதிலெண்ணிக் கூறுவீராமாகில்
நடுக்காட்டில்ப்பஞ்சவர்கள் நஞ்சுநீர்தானருந்தி
செத்தார்பிழைத்தாரோ செய்திதெரியவில்லை
இருக்கயிடமுமில்லை யிருந்துண்ணச்சோறுமில்லை
வருத்தமுடன்சுபத்திரையு மகனுந்தனியாக
எத்தேசம்போனாரோ யெங்குற்றாரோவறியோம்
பத்திப்பிடித்தவர்க்குப் பைங்கொடியையீந்தாலும்
அன்னமரிந்து அவர்களுக்கேயானக்கால்
சின்னஞ்சிறுகுழந்தை சிறுமைப்படுமே
அப்பெரியசெல்வமுள்ளது ...... பெண்கொடுப்பார்கள்
செப்பமுடனுங்கள் பெண்ணுஞ்சிறப்பாயிருக்கவென்றே
எண்ணியான்வந்து சொன்னேனின்னமொன்றுகேட்டருள்வீர்
கண்ணிலான்பெற்றெடுத்தோன் காசினியையாளுமந்த
மன்மகனுக்கேகொடுத்தால் வாழ்வாள்பதிவாக
வின்னம்வருதிது தான் மேன்பாடெனவுரைத்தான்
ஒய்யாரமான உல்லாசச்சுந்தரியை
வையம்புகழரசன் மைந்தனிலக்கணர்க்கு
கொடுத்தால்க்குறைவுளதோ கூறுமென்றான்லெட்சுமியும்
அடுத்தேகுடிகெடுக்க ஆயனுமேசம்மதித்து

## மாயவன் பெண் கொடுக்கிறேனென்று சம்மதித்தல்

அன்னாளில்பார்த்தன்மகன பீமனுக்குத்தாரமென்று
முன்னாளில்ப்பேசி மொழிந்தபடிசெய்யவென்றால்
நாடாண்டபஞ்சவர்கள் நல்லதொருசீமைவிட்டு
காடாண்டுசெத்தார்கள் கரையேறமாட்டாமல்
ஆகையினால்நாமு மரவக்கொடியோனும்
சேகரமாய்க்கூடிச் சிறப்பாயிருக்கவென்று
நினைத்தபடிக்கிப்போது நீர்தானும்வந்தீரோ
மனதிலொருதாழ்வுகளை வைக்கவுநீர்வேண்டாங்காண்

பருவத்தில்கல்யாணம் பண்ணுமலைத்தனனாள்
நிருவிக்கப்போமோ நெருப்பைமுடிந்திடவும்
ஆராலேகூடுமையா அழகுமிகுலெக்கணர்க்கு
சீரானகல்யாணஞ் செய்திடுவோமன்னவனே
தேன்மொழியாள்சுந்தரிக்குத் தென்னவனேநீர்பரிசம்
தானெடுத்துவிட்டுத் தருகாமலேமுகூர்த்தம்
ஓலையெழுதியுடனே யனுப்பிவையும்
சிலமுடனின்னமுமாம் செப்புகிறேன்கேளுமினி
இன்பமுள்ளமைத்துனனை மேந்தல்துரியோதனனை
ரெம்பரெம்பக்கேட்டமென்று நீர்போயுரைத்திடுங்காண்
வரிசைகொடுத்தனுப்பு மன்னுசகுனியென்றே
பிரியமுடனுரைத்தும் பேசினது தப்பாமல்
செய்யக்கடனமக்கு திரமென்றுணர்த்துவிட்டார்
மெய்யென்றுதான்சகுனி விமலனாருமாளிகையில்
அன்னமிகவருந்தி ஆனைபரிசேனையுடன்
மன்னன்திருமால் மலர்ப்பாதந்தெண்டனிட்டு

## சகுனி அஸ்தினபுரம் வருகுதல்

நடந்தாரேகானகத்தில் நல்மலையுமாறுகளும்
கடந்தாரேபட்டணத்தைக் கண்டுமனமகிழ்ந்து
அரவக்கொடியுடைய அண்ணல்கொலுமண்டபத்தில்
பிரியமுடன்கண்டிறங்கிப் பேய்ச்சகுனிவந்தளவில்
வந்தசகுனிதனை வாவென்றுபசரித்து
அந்தஅளப்பு அமைந்ததோசொல்லுமென்றான்
எந்தவகையு மெனக்கொருபாரமல்ல
நந்தகோபால னரசிங்கரூபனிடம்
போனேன்பெருமான் புலன்களையும்நான்பார்த்தேன்
மானாரழகுமிகுமங்கை யெனுஞ்சுந்தரியை
பட்டத்தலைவன் பஞ்சமிகுலெக்கணர்க்கு
கட்டிக்கொடுப்பனென்று கைபோட்டுச்சொன்னார்காண்
உமக்குமவர்க்குமுறவு ரொம்பவேணுமென்றும்
நமக்குத்தெரிந்தமட்டும் நாமுரைத்தோமன்னவனே
காரியத்தைப்பாருங் கலியாணநாள்முகூர்த்தம்



ஆரியரைக்கேட்டே அனுப்பிவிடும்நற்பரிசம்
என்றுசகுனி யெடுத்துரைத்தானிவ்வசனம்
அன்றுமகிழ்ந்தே அரியனறைகுவானம்மானை

### விருத்தம்

அளப்பினிலதிகமென்று னறிவிலாச்சகுனிதன்னைக்
களிப்புமித்திருதராட்டி தனுமிவன்செட்டியென்றான்
துணைத்திடுங்கொருபாணைத் தொடுத்திடுந்துரோணர்புத்தி
இளப்பமென்றுரைத்தான் பொல்லாதெக்களிப்பாலேமன்னன்

### அம்மானை

புத்திதனில்மிச்சமெனப் புகல்சகுனியல்லாது
மற்றவர்கள்புத்தி மடைமைதானென்றுமிரு
வகைகள்தனைப்பேசி வணங்காமுடியோனும்
திசைகளறியவினிச் செய்கிறோம்பாருமென்று
மறையோர்களையழைத்து மணமுகூர்த்தங்கண்டெழுத
இறையோனுரைத்திடவே இலக்கணர்க்கும்சுந்தரிக்கும்
சோதிடசாஸ்த்திரத்தில்ச் சொல்லுமவ்வகைப்படியே
சாதகங்கள்பார்த்ததிலே தானிப்பொருத்தமுதல்
பத்தும்பொருந்தவில்லைப் பார்த்துமந்தமாமறையோர்
உற்றதுராமஞ்சொன்னாலும் உரகக்கொடியோனும்
சத்துருவாய்த்தானினைந்து தண்டிக்கச்சொல்விடுவான்
புத்தியில்லாவேந்தன்மனம் பொருந்தும்படியாக
சொல்லுவதேஞாயமெனச் சுருதியுணர்மாமறையோர்
எல்லவருங்கூடி யங்கிராதுமாதமதில்
தேதிபதினெட்டில்த் திருப்பூட்டலாமெனவே
மாதவர்கள்சொல்ல மகிழ்ந்துஅரவக்கொடியோன்
என்றுபரிச மெடுத்துவிடலாமெனவே
இன்றனுப்பநல்லதினம் மென்னவேபொக்கிசத்தின்
கதவுதிறந்து கனபணிதியுள்ளதெல்லாம்
மதகரிமேலேற்றியந்த மாயனிடம்போகவிட்டான்
சுற்றத்தார்க்கெல்லாமச் சோபனங்கள்சொல்லிவிட்டான்
மற்றுமுள்ளதேசத்து மன்னருக்குஞ்சொல்லிவிட்டான்

துரோணர்விதுரன்முதல் சூழ்ந்தபடைமன்னருக்கு
திராணிதெரியத் திறமாய்முரசறைந்தான்

## பீஷ்மர் துரியனுக்கு புத்திகூறல்

காங்கையருமிந்தக் கலியாணநாள்கேட்டு
துங்கப்பயலேநீ துஷ்டனெனும்கெட்டோ
நாராயணன்பேச்சை ஞாயமென்றுநம்புவரோ
சூராதிசூரரெல்லாஞ் சொல்லிச்சிரிப்பார்கள்
மாண்டார்களென்று மகிழாதேயைவருந்தான்
ஆண்டவனார்தஞ்சமவர்கட்கிருப்பதினால்
சாவதுமில்லையிப்போ தானேவருவார்கள்
காவலனேநீயெடுத்த காரியமும்போய்விடுங்காண்
தலைகுனிந்துநில்லாதே சபையோர்சிரித்திடுவார்
மலைவிழவும்குமட்டி மன்னவனேதாங்கிடுமோ
ஓதிபெருத்தால்த் தூணுக்குதவுமோமன்னவனே
மதிதான்தெரியவென்று வார்த்தைசொன்னார்காங்கையரும்
காங்கையர்சொல்தான்கேட்டுக் காவலனுமேதுரைப்பான்
போங்காணும்பாட்டா புத்தியுமக்கேதுமில்லை
நெஞ்சாரவென்சொத்தை நீயுண்டுதானிருந்தும்
பஞ்சவரையென்றனுக்குப் பாராட்டிச்சொன்னீரே
ஆர்வந்தாலென்னயிப்போ தார்க்கும்பயமோதான்
போர்வந்தாலும்புரிந்து புதல்வனுக்குக்கல்யாணம்
கொற்றவன்நானினைந்த குணத்தின்படிமுடிப்பேன்
மற்றவர்கள்பேச்சை வணங்கிநான்கேட்பதில்லை
திருத்தமாய்ச்சொன்னான் திரியோதனப்பெருமான்
உருக்கமுள்ளகாங்கையரு மொன்றுமுரையாதிருந்தார்

## விகர்ணன்துரியனுக்கு புத்தி கூறல்

நாற்றுவரிலேயிளையோன் நன்னெறியிலேயுயர்ந்தோன்
சாற்றுந்தருமநெறி சாஸ்திரமெல்லாமறிந்தோன்
தோராவடிவழகித் துரோபதையைத்துகிலுரிய
போராதெனவுரைத்தும் புத்திசொன்னயோக்கியவான்
விகர்ணனெழுந்திருந்து வேந்தன்றனைநோக்கி



பகவானுக்கேற்காப் பகைதேடிக்கொள்ளுகிறீர்
பெரியோர்மொழிதடுத்துப் பேசுகிறீர்வாயடங்க
கரியோன்கபடமதை கண்டறியவல்லவரார்
மாமன்சகுனி வார்த்தைதனைக்கேட்பதினால்
சேமமுறுதனது சேனைபடையத்தனையும்
நாசமாய்ப்போவதன்றி நாடெங்கனுஞ்சிரிப்பார்
வாசமிகுவாள்வீமன் வருவான்தவறாது
காரியத்திலொன்றுங் கைகூடமாட்டாது
வீரியத்திலொன்றும் விளங்காதெனவுரைத்தான்
அவ்வுரைகேட்டேதுரியன் ஆங்காரமாயெழுந்து
இவ்வுரைதான்சொல்வதற்கோ வெழுந்தாய்சிறுபயலே
அன்றனிற்பஞ்சவர்கள் அடிமையாய்ப்போனவரை
பின்னுள்துரோபதையால் மீட்டுவகைசெய்ததுடன்
இன்றுநீயென்வார்த்தைக் கெதிர்வார்த்தைசொல்லுவையோ
உன்றலையென்னபய னுன்னுயிரைவாங்கிடுவேன்
இரணியனுக்கேபிரக லாதன்பிறந்ததுபோல்
நிரணமிகும்வாலிக்குச் சிறுவனெனுமங்கதன்போல்
அசுரகுலராவணனை அவன்தம்பிவிபூஷணனும்
பிசகுபண்ணிக்கொன்றதை பேசவுநான்கேட்டிருப்பேன்
அப்படிப்போலென்றனுக்கே ஆகினாய்தம்பியபே
இப்போதுனைக்கொல்ல விதுசமயமல்லவென்று
பொறுத்தேன்பயலே பிழைத்தாயெனப்புகன்றான்
வருந்தாரியமறியா வணங்காமுடியோனும்
இந்தமகிமைசொல்லி யிருந்தான்காணம்மானை
அந்தமுள்ளசெம்பொன்மத யானையின்மேற்போனதெல்லாம்
கொண்டுபோய்வைத்தார்கள் கோபாலர்தன்னிடத்தில்

## மாயவனிடம் பரிசங்கொடுத்தல்

கண்டுதான்மாயன் கருத்தில்மிகநினைந்து
நல்லஅதிசயமும் நாம்பார்க்கலாமெனவே
வல்லவனார்தன்மனதில் வகைகளெல்லாமுள்ளடக்கி
வந்தபசும்பொன்னும் வயிரமுத்துத்தாவடமும்
இந்தமட்டுந்தானோ விதுவோபரிசமென்றார்

கொட்டுங்கள்நீங்களிந்தக் கோபாலப்பெட்டியிலே
கட்டுங்கோபின்னாலே காரியத்திலேயரிவோம்
பரிசமதுசம்மதித்தோம் பாங்கானகல்யாணம்
துரிசாய்நடக்கவென்று சொல்லுந்துரியோதனர்க்கு
முகூர்த்தமிட்டேவோலை முடித்துமஞ்சள்காப்புமிட்டு
சுகிர்த்துரெம்பப்பேசியந்தத் துய்யநெடுமாலனுப்பி
தங்கள்வகைதனிலே சாதியுரன்முறைக்கும்
மங்களமுஞ்சொன்னார்காண் மாநிலமெல்லாமறிய
ஆனையின்மேல்முரசு அடித்தார்கள்பட்டணத்தில்
சேனைதளங்களுக்குந் தெரியமுரசடித்தார்
முரசடித்தசேதியெல்லாம் மூவுலகோர்தான்கேட்டு
உரசுபிறக்கவல்லோ வெருமித்தாரேம்பெருமாள்
எம்பெருமாள்சித்தமதை யெவரறியப்போரார்காண்
வம்புசெய்யவேணுமென்று மனதில்நினைத்தார்காண்
இந்தவினைதோணாமல் லெக்கணர்க்குகல்யாணம்
சுந்தரியைமாலையிடத் துணிந்தானரவுயர்த்தோன்
வருங்காரியமுரைக்கும் மந்திரிமார்சொற்கேளான்
குருக்காயிருதலைபிறக் கொள்ளியெரும்பாக்கிவிட்டான்
காலம்வரும்போது கருத்துமழிந்துவிடும்
கோலமிதுவாகுமென்றோர் குவலைபத்தோரம்மானை
மாயன்முகூர்த்தமிட்டவா றெல்லாஞ்சுந்தரியை

## தாதிகள் சுந்தரியிடம் முகூர்த்தந் தெரிவிக்குதல்

தாய்போல்வளர்த்தெடுத்த சங்குவளையாள்கேட்டு
ஓடிப்பரமனைக்குள் உத்தமியாள்சுந்தரியைத்
தேடினாள்கண்டாள்முன் தெண்டனிட்டேயதுசொல்வாள்
கண்ணேமணியேயென் கற்பகமேஅற்புதமே
பெண்ணேபெருந்திருவே பிரியமுள்ளசுந்தரியே
நீதானசொல்லையென்றன் செவியிலேகேட்டுவந்தேன்
வாதானகாரியத்தை மனங்கொதிக்கக்கேட்டுவந்தேன்
பற்றுதசொல்லையிப்போ பாவிநான்கேட்டுவந்தேன்
சுத்தமில்லாவார்த்தைதனைச் சுந்தரியேகேட்டுவந்தேன்
சோதிக்கமாயவனும் சொன்னதுவோவென்றுரைத்தாள்



நீதிமிகுசுந்தரியாள் நினைவிற்கிலேசம்வைத்து
செங்கமலத்தாதியரே செய்தியென்னசொல்லுமென்றாள்
அங்குடைந்தசெய்தியென்ன யானறியச்சொல்லுமென்றாள்
சொல்லுமென்றுகேட்டவுடன் சுந்தரிப்பெண்ணேகேளும்
கல்நெஞ்சனான கபடனரவக்கொடியோன்
மைந்தனிலக்கணர்க்கு மாலைபுன்னைச்சூட்டவென்று
சந்தோஷமாகச் சபைகூடித்தானிருந்தார்
அரவக்கொடியோனும் அனுப்பிவித்தான்நற்பரிசம்
திரமானமாயனுமே சேர்ந்துமனஞ்சம்மதித்து
பைங்குனிமாசம் பதினெட்டாந்தேதியென்று
எங்குந்தெரிய இயல்பாய்முரசறைந்து
சோபனங்கள்சொல்லித் தலைதூரம்போகவிட்டார்
ஆபரணமாகவுந்தன் அரண்மனையிற்சிங்காரம்
பட்டணமுஞ்சிங்காரம் பண்ணுமென்றுசொல்லிவிட்டார்
எட்டுநாள்தானு மிருக்குதுன்னைமாலையிட
எம்பெருமானுத்தாரம் இன்றைக்கேயாச்சுதம்மா
தெண்புதியவார்த்தை செப்பினார்தாதியரும்

## சுந்தரி கலியாணசமாச்சாரங்கேட்டு புலம்புதல்

சொன்னதொருவார்த்தைகளைச் சுந்தரியுந்தான்கேட்டு
என்னவினைநமக்கிங் கிப்போதுவந்ததுகாண்
ஆதினாள்பேச்சுகளை ஆயன்மறந்தாரோ
நீதிமறந்தாரோ நினைவுதப்பிப்போனாரோ
பஞ்சவர்கள்மேலிருந்த பட்சம்மறந்தாரோ
வஞ்சகன்சொல்லை மனதில்நினைந்தாரோ
நாடுவிட்டுக்கானகத்தில் நல்லவரைத்தான்விரட்ட
கூடவிருந்தே குடிகேடுசெய்தாரோ
பார்த்தன்மகன்றனக்குப் பாரியென்றுநானிருக்க
வார்த்தைதபிசகுபண்ண மாயன்நினைந்தாரோ
அத்தனேயென்றுசொல்லி யருங்கானிற்பஞ்சவர்கள்
செத்தார்களென்று திரியோதனன்பாவி
தனக்குச்செயகாலந் தானேச்சுதென்றுசொல்லி
வினைக்கோமனந்துணிந்தான் விருதாவில்மாயனுக்கு

பரிசங்கொடுத்தானே பாரளந்தமாயனுக்கு
வரிசைவந்ததென்றந்த மாயன்மகிழ்ந்தாரோ
பொருளும்பணமும் புலையன்படைக்கலையோ
நிரையும்பணங்காசும் நீசன்படைக்கலையோ
புலிதான்பசித்தாக்கால் புல்லைப்பொசித்திடுமோ
கலிதானும்பூனைக் கெதிராடிநின்றிடுமோ
சந்தனத்தைத்தேய்த்தாலுந் தன்மணமுங்குன்றிடுமோ
வெந்துருகிநின்றதங்கம் மேனிகுறைந்திடுமோ
பந்தயமாய்ச்சொல்லுகின்ற பஞ்சாங்கம்போனாலும்
அந்தரநட்சேத்திரங்கள் அவைதானும்போய்விடுமோ
ஒருவனுடைபொருளை ஒருவனெடுப்பானோ
கருவிலமைவுதன்னைக் கையால்மறைப்பாரோ
கோபாலன்புத்தியற்றால் குருக்கேதடுப்பாரோ
மாபாவிபேச்சுகளை மாயனறியாரோ
என்செய்வேனிப்போதிங் கேதுசெய்வேனீஸ்பரனே
முன்செய்ததீவினையோ மூதாக்கள்சொற்படியோ
அலையிற்றுரும்பானேன் ஆதரிப்பாரில்லாமலிப்போதேனான்
இலைதுதிர்ந்த மரமானேன்
ஆற்றில்கரைத்தபுளி யானேனேன்சப்பனே
கூற்றுவனுமானேரே கோபாலரெந்தனுக்கு
தாயில்லாப்பிள்ளை தட்டழிந்தவாறுபோல்
பாய்மரத்தைத்தானும் பருந்தாகமானேனே
வலைகைப்பட்டதொரு மான்போலுமானேனே
உலையில்மெழுகானேன் ஒருவர்துணையில்லாமல்
பாரில்மழையில்லாத பயிர்போலுமானேனே
ஆரைவெறுப்பேனான் ஐயோவெனவழுதாள்
குத்திவிழுந்தழுதாள் கோவென்றலறியிட்டாள்
சுத்திருள்சுந்தரியுங் கண்ணீருமாருடை
இந்தவிதமாகவுமே யேக்கமுற்றாள்சுந்தரியும்
சிந்தைகலங்காமற் செவ்வேலனைத்தேடி
ஆயன்மனதை யறிவோமெனவெழுந்து
நேயமுடன்சுந்தரியும் நெடுமாலிடத்தில்வந்தாள்



## சுந்தரி கிருஷ்ணனிடம் ஞாயம்கேட்குதல்

### விருத்தம்

வந்துதானவள்மாயவன் மலரடிவணங்கி
எந்தையேயெனைத் தனஞ்செயனின்றமைந்தனுக்கு
சொந்தமாகியபாரிபென் றுரைத்தசொல்தவிழ்த்து
இந்தாளிலேயிலக்கணர்க் கென்றதைதயிசைப்பாய்.

### அம்மானை

மாதழகிசுந்தரியும் வந்துதிருமாயனிடம்
பாதந்தொழுது பகருவாளம்மானை
என்னையொருவருக்கென் றிருக்கையின்றனில்
பின்னையொருவருக்குப்பேசிடவுங்காரணமேன்
பொருத்தமிட்டமாய்பினைதான் பூவுலகில்மாண்டாலும்
மறுத்தொருவர்க்கேமணந்தான் வையகத்திற்செய்வர்களோ
சாதிதனிலினர் தான்செய்வாரல்லாது
மாதவனேநீருமெனை மற்றொருவர்க்கீய்ந்திடவும்
ஆகுமோசும்மாயிவ் வநியாயம்போய்விடுமோ
சாகுமென்றன்னைமுதனை தந்தையேநீருமறைமூ
சாதித்தபேச்சையின்று தப்பவிடலாமோ
ஆதித்தன்தெற்குவடக் காணுமேமேலெழு
கடல்சவரினுமொரு கலிகாலமானாலும்
சடலமதைவெட்டியதிற் றங்குயிர்தான்போனாலும்
மலைமீதிற்செந்தாமரைதானும் பூத்தாலும்
நிலைதவிரலாமோ நெடுமாலேயென்றுரைத்தா
வெஞ்சமரிற்றோற்காத வீரரெனுமைவர்களும்
கொஞ்சுங்கிளிமொழியாள் கோதைதுரோபதையும்
வேண்டியுந்தன்பாதம் மிகவேவிரைந்துதொழுது
ஆண்டவரேயுன்றன் அடைக்கலமாய்த்தானிருக்க
அடைக்கலத்தை விட்டுவிட்டாலவனியுளோரேசாரோ
இடைச்சிமுலையுண்ட பிள்ளைமல்லோபேசுகிறீர்
ஐயாசரணமிப்போ அடியாளைக்கார்க்கவென்று
மையார்ந்தகன்னியெனும் மாதழகிசுந்தரியும்
அழுதாள்தொழுதாள்பின் ஐயோஅபயமென்றாள்
பழுதுவராதென்னுடைய பாக்கியமேயென்மகளே

## கிருஷ்ணன் சுந்தரிக்கு ஞாயங் கூறுதல் அம்மானை.

வேண்டாமழுகைதனை விட்டுவிடுமென்மகளே
மாண்டாலுனைக்காண வாய்க்குமோவென்றுசொல்லி
பெண்ணரசேயென்று பிரியமுடன்சுந்தரிதன்
கண்ணீர்துடைத்தமர்த்திக் கார்வண்ணனேதுரைப்பார்
நாடுதனைவிட்டார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
காடுதனிற்சென்றார்கள் கவலைபெரிதாகி
பாஞ்சாலிதானுமந்தப் பஞ்சவரைநம்பியல்லோ
தேஞ்சாளொருமுழத்து சேலைதுணியில்லாமல்
இலைபறித்துத்தின்றார்கள் இருப்பிடமுமில்லாமல்
நிலைவிட்டுப்போனார்கள் நிற்கநிழலில்லாமல்
அன்னவெறியெடுத்தே அவதிமிகப்பட்டார்கள்
சொன்னமொழிகேளாமற் றட்டரெனும்பஞ்சவர்கள்
அவதிபொறுக்க முடியாமலொருபொய்கையிலே
பவுருசமாய்நீருக்குப் பட்டுவிட்டார்கண்டாயே
போனவர்கள்பேச்சைப் புலம்பினாலென்னவரும்
மாநிலத்தில்யாவருக்கும் வாழ்வுபெரிதல்லாமல்
காரணத்தைப்பார்க்க கணக்குண்டோவென்மகளே
வாரணத்தோல்போர்த்த மகாதேவர்புத்திரனார்
தொந்திக்கணபதிக்குச் சோபனங்கள்செய்யவென்று
சிந்தித்தாரப்போ சிறந்தவிநாயகனார்
நமக்கேற்றபெண்களிந்த நாட்டினிலேயில்லையென்று
தமக்கேற்றபெண்தேடிச் சந்திக்கரைதனிலே
ஆற்றங்கரைதனிலே அருமற்றபொட்டலிலே
காத்தேயுருக்காந்தார் கண்டவரும்போனவருந்
கொடுப்பாரவர்கள் தலைக்குட்டால்மிச்சமுண்டோ
தடுப்பாருமுண்டோ தலைவிதிதனக்கு
வல்லமைகள்பேசி மானிலத்தில்யாவர்களும்
சொல்படிகேளாதவற்குத் துன்பம்வருமென்மகளே
மானேகேளுநன்றனது மாமிசபத்திரையும்
தானேயவளீன்ற தம்பியபிமனுடன்
தூங்கித்திரிகிறார் சொல்விசையமாபுரத்தில்



வாங்கிக்குடிக்குறான் வாள்விசையன்புத்திரனும்
ஆகையினாலேதான் ஆரணங்கேயுன்றனையும்
சேகரமாய்வாழுந் திரியோதனப்பெருமாள்
திரவியத்திலேமிகுந்த திரியோதனப்பெருமாள்
அரவக்கொடியோன் அருளுமந்தலெக்கணர்க்கு
கட்டிக்கொடுத்துன்னைக் கண்ணாரப்பார்ப்பமென்று
மட்டிலாஆசையென்றன் மனதிலிருந்ததினால்
மன்னன்சகுனிக்கு வலக்கைகொடுத்தமென்றார்
சொன்னமொழிகேட்டுச் சுந்தரியுமேதுசொல்வாள்

## சுந்தரி கிருஷ்ணனுக்கு புத்தி கூறுதல்

பேச்சிமுலையுண்டருளும் பெரியபெருமானே
காச்சியபாலுண்டருளுங் காயாம்புமேனியரே
உரிவெண்ணெய்தான்திருடி யுண்டாயுலகறிய
உரலோடுகட்டுண் டிதைகள்மிகப்பட்டனையே
மாமியுடன்கூடி மருவிவிளையாடினையே
மாமன்றனைவதைத்தாய் மாடாடுமேய்த்துவந்தாய்
கோவனதையைமேய்த்துக் குழலூதிநின்றனையே
ஆவலுடன்பேய்முலைப்பா லருந்தியுயிர்வாங்கினையே
பாவமெனவெண்ணாப் பரனேநீதான்வளர்ந்த
கேவலமோஆயர்குலக் கெருவிதமோலெக்கணர்க்கு
என்னைக்கொடுக்க விசைந்ததுவுமல்லாமல்
உன்னைச்சாரசந்தன் உதைக்கஅவனைச்செயித்து
காத்தபஞ்சபாண்டவரைக் கருத்தில்நினையாமல்
வார்த்தையிழிவாயுரைத்தாய் வையகத்தோரேசாரோ
வாழ்வுசதமாக மகிழ்ந்தேயுரைத்தீரே
தாழ்வுசதமென்பதையும் தானறிந்துபார்க்கலையோ
உடலுமுயிரும்பொருளும் ஒன்றுஞ்சதமலவே
திடமுந்திரவியமுஞ் செல்வஞ்சதமலவே
தண்டிகையும்பொக்கிஷமுந் தானுஞ்சதமலவே
தெண்டிரைசூழ்பூமியுடன் செங்கோல்சதமலவே
ஆடையணிகளதுவுஞ்சதமலவே
மாடமுதல்மாளிகையும் மற்றுஞ்சதமலவே

தாயார்சதமலவே தகப்பன்சதமலவே
நீயார்நானாரென்னும் கிளைவுஞ்சதமலவே
பெண்டிருந்தானும்வரும் பிள்ளைசதமலவே
அண்டாதகோபமது ஆர்க்குஞ்சதமலவே
நீர்மேற்குமிழியென நிச்சயமில்லாதவுடல்
தூரில்லாப்பொந்துமரஞ் சுத்தமில்லாப்பொய்க்கூடு
காற்றைப்பிடித்தடைத்த கசுமாலப்பாண்டமிது
ஊத்தைச்சடலமிது ஒன்பதுவாய்ப்பீத்தல்வெளி
பொய்யானமின்னலிது பொருத்தமில்லாவாழ்வுதனை
அய்யாவேநீரு மறியாதகாரியமோ
உலகிலனேக முயிர்கள்பிறந்ததிலே
துலையாதவேழுவகைத் தோற்றமதிலேபெரிது
இனிதாய்மனித சென்மமென்றேயுரைப்பார்கள்
மனிதரென்றஜென்மம் வகையாயெடுப்பதிலும்
கூன்குருடுசெப்பாலி குணக்கேடுதானீங்கி
ஆண்ஜெனனமானா லருதாம்புவிதனிலே
புவியிற்செனனம் பொருந்தியெடுத்தாலும்
தெவியாதஞானம் வந்தால்த்தானேபெரிதாகும்
பெரிதானகாரியத்தைப் பெரியோரெடுப்பார்கள்
சிறிதானகாரியத்தைத் தீண்டுவாரோநல்லோர்கள்
முன்னாளில்கர்மம் முழுதுமேசெய்ததினால்
இன்னாளில்ப்பெண்ணா யெடுத்தேன்செனனமது
தீராதகர்மவினைதீர்வதெப்போ வென்றிருந்தேன்
ஆராத்துயரிலமிழ்த்தினீர் மாயவரே
சத்தியமும்போய்விடுமோ சட்டமிறந்தாலும்
பத்தினியாளென்றசொல்லே பாரில்ப்பெரிதாகும்
என்னையொருவருக்கே யியம்பிவிட்டீர்முன்னாளில்
பின்னுமொருவருக்குப் பேசுவதுஞாயமல்ல
இன்னம்வருமுமக்குத் திருட்டுவித்தைசெய்வதினால்
என்னுயிரைமாய்த்திடுவே னென்றுசொன்னாள்சுந்தரியாள்

## கிருஷ்ணன் சுந்தரிக்கி புத்தி கூறுதல்

மாதுநல்லாள்சொன்னதெல்லாம் மாயவனுந்தான்கேட்டு
ஏதுகாணிந்தமொழி யிளம்பருவச்சுந்தரிக்கு



மனதுதனைப்பார்த்தால் மகாதவத்தோர்க்கீடாகும்
கனதையுள்ளபுத்திதனைக் கண்டோமிவளிடத்தில்
தாழ்விலாச்சுந்தரிக்குச் சற்குணமுண்டானதினால்
வாளபீமனேபுருஷன் மற்றொருவராகாது
என்றெண்ணிமாய னிருதயத்திலுள்ளடக்கி
நன்றுகாண்வேடிக்கை நாம்பார்க்கலாமெனவே
சுந்தரியைப்பார்த்திரங்கிச் சொல்லுவார்மாயவரும்
என்றனுயிர்மகளே யினியதொருநாயகமே
பவுசுங்கனமுமுள்ள பாக்கியமுந்தானிழந்து
தவசியாய்ப்போகவுன்றன் தலையிலெழுதிவிட்டான்
நம்மிடமேற்குற்றமில்லை நாயகமேயுன்தாயார்
சம்மதித்துச்சொன்னதினால்ச் சரியென்றுரைத்தோமென்றார்

## சுந்தரி தாயாரிடம்சொல்வது

திருமால்மொழிகேட்டுச் சீக்கிரத்தில்சுந்தரியும்
தருகாமலோடித் தாயானலெட்சுமியை
கண்டாள்பணிந்தாள் தன் கண்ணீரைச்சோரவிட்டாள்
வண்டாடுங்கூந்தல்தனை வாகாயவிழ்த்துவிட்டாள்
கிலேசம்பெரிதாகிக் கிட்டநின்றாள்சுந்தரியும்
சலாபங்கொளித்தவர்க்குச் சந்தோசமானதுபோல்
வாரியெடுத்து மகளைமிகவணைத்து
காரிகையேகானின்ற கண்ணேயென்கண்மணியே
பெண்ணேமுகூர்த்தமிட்டுப் பேசியிருக்கையிலே
கண்ணீர்ததும்பவுந்தன் காரியமேதென்றுரைத்தாள்
நேர்த்தியாய்த்தான்முகூர்த்தம் நிச்சயித்தத்தாயாரை
பார்த்துநல்லசுந்தரியும் பகருவாளம்மானை
தாயேநீவார்த்தைதனைத் தப்பிவிடலாமோ
ஆயேயரவமதை யஞ்சாமல்த்தீண்டுவரோ
புலியும்பசுவும்பொருந்தியிருப்பதுண்டோ
எலியுமொருபாம்பு மிணங்கியிருப்பதுண்டோ
தங்கமுடனிரும்பு தான்சேர்ந்திருந்திடுமோ
குன்றிச்சிவப்புமணிக் காந்திதனக்கீடாமோ
பணங்காசுதானுமிந்தப் பாரிற்பெரிசானாலும்

இணங்காதகாரியங்க ளேற்குமோவையகத்தில்
போதாக்குறங்குகையிற் பூமாலைதான்கொடுத்தால்
ஆதரவாய்வாசமது அரியுமோவென்தாயே
கிளியருமையந்தக் கிளிவளர்த்தார்க்கல்லாது
தெளிவாயதைத்தின்னும் சிறுபூனைகண்டிடுமோ
இந்தவுவமைகளை யெடுத்துரைத்தாள்சுந்தரியும்
அந்தமொழிகேட் டருகிருந்தலெட்சுமியும்

## லெட்சுமி சுந்தரிக்கு புத்திகூறுதல்

தாரணியிற்றாயார்சொல்த் தட்டிநடந்தவர்கள்
ஆர்தானும்வாழ்ந்தா ரரியாயோசுந்தரியே
தாபந்தமில்லாமல்த் தங்கையரேநீவாழ்ந்தால்
நான்வந்தொருவேளை நல்லதண்ணீர்தான்குடிப்பேன்
வாழ்ந்திருக்கவேணுமென்று மாதாபிதாநினைப்பார்
தாழ்ந்திருக்கநினைத்தால் தங்கையரேயென்னசொல்வேன்
ஆனாலுமென்மகளே ஆயருடசொற்படிக்கு
தானேமுடியுமல்லால் தடுப்பாருமிங்குமுண்டோ
உன்தகப்பன்சொல்லுகின்ற உத்தரவேயல்லாது
என்றனக்குவேறே யிடமுண்டோவென்றுமவள்
வாயாரச்சொல்லிடவே மனதுநொந்துசுந்தரியும்
தீயானசொல்லையிப்போ செப்பினீர்மாதாவே
ஞாயமதைத்தள்ளி நடப்பார்களோவையகத்தில்
ஆயரும்நீயு மடாத்துகளைச்செய்யுகிறீர்
என்றுமிகக்கூறி யேந்திழையுமன்னேரம்
நின்றுமிகவழுது நெடுமூச்சுத்தானுமிட்டு
சூதானகர்மவினை தொடர்ந்ததுவோவென்தாயே
மாதாவேநீயும் மனவெறுப்புச்செய்தாயே
வினைவசத்தையாரானும் வெல்லமுடியாது
மனதுக்கிசைந்தபடி மாழுவதேநிச்சயங்காண்
இருந்துமென்னகோட்டை யெடுத்ததும்வையகத்தில்
பிறந்தாரிறந்துவிட்ட பேர்களேயல்லாமல்
ஆரார்தான்வைத்திருந்தா ராசையெனும்பொய்க்கூட்டை
வேறாய்நினைந்துகொண்டு மிக்கதொருசுந்தரியும்



மாளிகைக்குப்போய்வாறேன் மாதாவேயும்முடைய
தாளேசரணமென்று தான்வந்தாள்சுந்தரியும்

## தாதியிடத்தில் சுந்தரிசொல்லுதல்

வளர்த்தெடுத்தசங்குவளை மாதினிடம்போய்ச்சேர்ந்து
எழுந்துவிடியோ எனைவளர்த்தசங்குவளை
தாயாரேகேளுமென்று தாயுரைத்தநேர்த்தியெல்லாம்
வாயாரச்சொல்லிவழுத்துவாளம்மானை
இனிமேற்புவியி லிருக்கவுமேயாகாது
அனியாயச்சொற்கேட்டு அரைச்சணமுநானிருக்கேன்
துன்மரணமானக்கால் தோஷம்வருமென்பார்கள்
நன்மரணமென்றனுக்கு நன்றாயுரைத்திடுவாய்
பாசாணந்தன்னைப் பாலிற்கலந்தேதான்
கூசாமலென்றனுக்குக் குடிக்கிடவுந்தந்திடுங்கள்
படுத்துமுறங்கையிலே பண்பாய்ப்பெரியகல்லை
எடுத்துமேநீங்கள்விரைந் தென்றலையிற்போட்டிடுங்கள்
மலைமீதெனையேற்றி மாளவுருட்டிடுங்கள்
நிலைபாக்கிணறுகண்டு நிமிஷத்திற்றள்ளிடுங்கள்
கத்தியினாலேயென் கழுத்தையறுத்திடுங்கள்
வெற்றிலையுஞ்சுண்ணாம்பும் வேண்டிக்கொடுத்திடுங்கள்
ஆழக்குழிதோண்டியெனைத் தாளப்புதைத்திடுங்கள்
மாளச்சுருக்கிட்டெனை மாளிகையில்தூக்கிடுங்கோ
அக்கினியைத்தான்வளர்த்தே அதிலென்னைத்தள்ளிடுங்கோ
தக்கமில்லையுங்களுக்குத் தர்மமேயுண்டாகும்
சேயானசுந்தரியுஞ் செப்பினளிவ்வார்த்தை
தாயொத்தசங்குவளைத் தாதிசொல்வாளம்மானை

## தாதி கனவுகண்டதை சுந்தரிக்குச்சொல்லுதல்

### விருத்தம்

என்னுடமகளேகேளா யிரவில்நான்றுயின்றபோது
சொன்னசொற்பொய்யாகாது சொற்பனங்கண்டேனம்மா
மன்னன்வாள்வீமராஜன் வந்துதன்றுணைவரோடே
உன்னையும்மாலைசூட்டி புவந்துவாழ்ந்திருக்கக்கண்டேன்,

ஆதலாலையர்த்தோ னவன்படைமாளக்கண்டேன்
சாதகனிலக்கணர்க்கு தலைதனைச்சிரைக்கக்கண்டேன்
குதிரைநல்வனத்திற்போன துரோபதையுடனேஐவர்
மாதவனருள்பெற்றிந்த வையகம்ஆளக்கண்டேன்.

அம்மானை.

தேனேகரும்பே தெவிட்டா தமிர்தமுதே
மானேகுயிலே மயிலேமரகதமே
அன்னநடையாளே அருந்ததிபோற்பத்தினியே
கன்னியிளங்கமுகே காரிகையேநாயகமே
பழுதொன்றுமில்லாத பார்த்தன்மருமகளே
அழுதுபுலம்புவதேன் ஆவிதனைமாய்ப்பதுமேன்
தூண்டாமணிவிளக்கே சுகுணமுள்ளவளே
நீண்டோன்திருமகளே நெருப்பில்விளக்காரியமேன்
கண்டேனுன்சொற்பனமென் கண்ணேமிகக்கேளும்
கொண்டரவக்கொடியோனிலக்கணர்க்கு
மணமுகூர்த்தமிட்டே மணவரையின்பந்தலிலே
துணையாகவெல்லோருங் கூடியிருக்கையிலே
விசையன்மகனை விக்கநுபெருவாள்வீமன்
அசையாதகண்டனவீமன்கைவாளாலே
துக்கமுடியனையுஞ் சூழ்ந்தபடைமன்னரையும்
பங்கப்படுத்திமணப் பந்தலிலக்கணனை
அஞ்சுகுடுமிவைத்து அளகாய்த்தலைசிரைத்து
செஞ்சொல்வீரவான் சிறப்பானபந்தலிலே
செங்கையொடுசெங்கை சேர்த்திருக்கக்கட்டிவைத்து
மங்களமாய்வந்த மாப்பிள்ளையாம்லெக்கணன்றன்
தலையில்விளக்கேற்றி சகலருமேதானரிய
கலைதெரியும்ராசக் கட்டழகன்வாள்வீமன்
மாதேயுனையும் மணவரையின்பந்தலிலே
ஆதரவாய்மாலையிட ஆயனுமேநீர்வார்க்க
கானகத்திற்போன கனமுள்ளபஞ்சவர்கள்
மானிலத்தையாண்டு மகிழ்ந்திருக்கக்கண்டேனான்
கண்டேன்கனவும் கடிகளவும்பொய்யாது
தண்டாமரைத்திருவே சஞ்சலத்தைவிட்டுவிடும்



உனக்காகவேறு உபாயமொன்றுசொல்லுகிறேன்
மனக்கவலைவேண்டாமங்கையேயினிக்கேளும்
வளமாய்நடந்த வயணமெல்லாந்தானெழுதி
அளகாயவீமனுக்கு அனுப்பிவிடுமென்றாயே
வயணமிதுவரிந்தால் வருவாரொருநொடியில்
பயணம்பிறப்பட்டா லுன்பாவந்துலைந்திடுங்காண்
வாள்வீமனுன்னை மாலையிட்டுக்கொள்வார்காண்
தாள்வுறாது சந்தோசமாயிருப்பீர்
சங்குவளைத்தாதி தான்மொழிந்தவார்த்தையெல்லாம்
மங்களமாய்க்கேட்டு மனமகிழ்ந்துசுந்தரியும்
பழுதில்லையுரைத்த படியேவயணமெல்லாம்
எழுதியனுப்புகிறேன் என்றந்தச்சுந்தரியும்

## சுந்தரி வாள்வீமனுக்கு நிருபம் எழுதினது

ஓலையெடுத்து வொப்பரவாய்த்தான்வாரி
வாலைக்கணபதியை மனதில்நினைத்துக்கொண்டு
சீலமுள்ளசுந்தரியாள் தேர்விசையன்புத்திரர்க்கு
ஓலையெழுதும்வகை யுரைப்பேன்கேளம்மானை

விருத்தம்

அன்பாய்சுவாமியவர்களுக்கிங் கடியாளானசுந்தரியாள்
தென்பாய்த்தெண்டனிட்டெழுதுஞ்செய்தியாகும்வின்னப்பம்
இன்பாயுமக்கேபாரியென வியம்பியதுபோல்யானிருக்க
வன்பாய்வணங்காமுடியோனு மாயனுநவுமகிழ்ந்தானே.

வணங்காமுடியோனிலக்கணர்க்கு மாலையிடவேவேணுமென்று
பணங்காசதனைத்தானுயர்த்திப் பரிசங்கொடுத்தானதைவாங்கி
குணங்காணெனவேமாயவனுங் கொடுப்பேனென்னச்சம்மதித்து
மணங்காண்பிறக்கும்பங்குனி மாசமுகூர்த்தமதைத்தானே

சந்தம் வேறு

ஆனதினாலையர்த்தோன்சேனைதன்னை
அதமாக்கிநூற்றிருவர்தம்மைக்கட்டி
ஈனமுறவிலக்கணனைசிட்சைசெய்தே
போர்த்தகையுடனவன்றலையிற்றீபமேற்றி

வானவர்கள்மலர்மாரிபெய்யவென்னை
மணமாலைசூட்டலீரோ ராவிட்டால்
ஞானபரா அக்கினியில்வீழ்வேனென்று
நான்சபதம்வைத்துவிட்டேனம்புவீரே.

அம்மானை

திருமேவுவாழ்வீடு தென்னவனேநின்பாதம்
உருமையுடன்சுந்தரியாள் வந்துபணிந்தேயோலை
எழுதும்வகைகேட்டருள்வீ ரென்னுடையநாயகரே
பழுதுடையசொல்லுடையான் பாவிஅரவக்கொடியோன்
தன்மகனுக்கேயென்னையுந் தான்கேட்கமாயவரும்
பொன்னுசைகொண்டுப் பொருந்திமுகூர்த்தமிட்ட
செய்தியான்கேட்டதின்பின் சிந்தைகலங்குதிப்போ
ஐவரில்லாவேளை அநியாயஞ்செய்வதினால்
மன்னவரேவாளெடுத்து வந்துமணப்பந்தலிலே
தென்னவரைவென்று திசையறியக்கட்டிவைத்தே
என்னைமணமாலையிட விதுவேசமயமென்றும்
என்மனதிலுள்ளபடி யெழுதினேனிவ்வோலை
அனைவிதிலேஅரைச்சணத்தில் வந்திடுவீர்
தாகமெனக்குமென்றன் சாமீரல்லாது
வேறேதொருவரையும் விரும்பேன்மனந்தனிலே
வேறேபெரிது அல்லா லொருவர்பெரிதலவே
எல்லோருங்கூடி யிசைந்தாரேயாமாகில்
செல்லாதுயாதொருத்தி செய்வதென்னாலொன்றுமில்லை
பெரியோர்கள்பேச்சைப் பேதைநான் தள்ளிவிட்டால்
மரியாதைதப்பிவிடும் மானிலமெல்லாஞ்சுடுங்காண்
தருணத்திலென்றனைநீர் தாலிதனைக்கட்டாயேல்
மரணத்தையான்முடிப்பேன் வாள்விசையன்புத்திரனே
செத்தாளிவளெனவே செய்திதனைநீர்கேட்பீர்
அத்தால்க்கிலேசமுமக் காவதென்னாலொன்றுமில்லை
தலையெழுத்துமெய்ந்து தான்மாண்டுநான்போறேன்
உலகமதிலுமக்கு ஒருபெண்கிடையாதோ
அருமைதெரிந்த அபிமன்னராசாவே
பெருமையுமக்குவந்தால் வேண்டியென்னாலொன்றுமில்லை



நம்பியிருந்தவளை நட்டாற்றில்த்தள்ளாமல்
தெம்புடனேவந்து சேர்வீர்திடமாக
மணமுடிக்குமுன்னமிங்கு வந்துநீர்சேராட்டால்
பிணமெடுக்கும்வேளையிலே பின்வந்துநிற்பீர்காண்
அப்படிக்கில்லாமல் அடியாள்மேலன்புவைத்து
எப்படியுங்கல்யாணம் யென்னைநீர்செய்யுமென்றே
ஈசரரியஇமையவருந் தானறிய
வாசமுள்ளமாயன் மலர்ப்பாதந்தானறிய
பாரினந்தபஞ்சவர்கள் பாஞ்சாலிதானறிய
சீருமரிய நிசமானசொல்லிதுகாண்
சித்தத்துக்கேத்தபடி செய்விரென்பாக்கியந்தான்
உத்தமரேகாருமென ஓலைதனில்வக்கணையாய்
விண்ணப்பஞ்செய்து விரசாகவேயெழுதி
வண்ணச்சுருளை வலமாகவேசுருட்டி
முத்திரையும்வைத்து சிறுமோதிரத்தினலழுத்தி
சுத்துமுற்றும்பார்த்து சுந்தரியாளப்போது
ஆரிடத்திலேகுடுத்து அனுப்புவோமென்றுசொல்லி
காரிகையாள்சுந்தரியுங் கலங்கிப்பரதவித்து
வாய்வுபகவானை மனதில்நினைந்திடவே

## வாய்வுபகவானிடம் சுந்தரி ஓலையனுப்புதல்

தாயிரங்கிக்கன்றைத் தான்தேடிவாரதுபோல்
யெந்தனுடபோரசே யெங்கள்குலமணியே
உந்தன்மனதுக்குகந்தபடி யான்கேட்பேன்
பாருமென்றுவாய்வு பகவானுமோடிவந்தார்
வாருமெனது மாமனார்தந்தையரே.
நடந்தவயணமெல்லாம் நன்றாய்த்தெரிந்திருப்பீர்
உடந்தையெனவிருந்த உத்தமொருவாள்வீம
மன்னவர்க்குச்செய்தி வகைவிபரமாய்த்தெரிய
சொன்னபடியெல்லாம்நீர் சொல்லிப்பிந்தவோலைதனை
குடுத்துஅவரையிங்கு கூட்டிவந்தீராமாகில்
எடுத்துநிருத்தமக் கென்றுமேலென்னவுண்டு
வேலையொத்தகண்ணாள் மிகவணங்கிச்சொன்னவுடன்

ஓலைதனைத்தாரும் ஒருநாளிகைதனிலே
தெரியப்படுத்துகிறேன் செல்வனைப்புங்கூட்டிவந்து
வரிசையாய்நாலும்பிப்போ மனைமுடித்துவைப்போமென்று
வாங்கினாள்ஓலைதனை வாயுபகவானும்
தாங்கிடவாமல்த் தாண்டியே தானடந்தான்
நடந்தான்மலைகளையும் நல்லவனாந்திரமும்
கடந்தான்வெகுதூரம் கங்கைநதியுந்தாண்டி
திசைநோக்கிச்சென்றான் செல்விட்டஓலைகொண்டு

## வாள்வீமன் வேட்டையாடுதல்

விசையன்மகனப்போது வேட்டைதானாடவென்று
வீரமுள்ளசேனைதளம் வெள்ளமெனவேநடக்க
தீரருடன்வந்து சிங்கங்கரடிபுலி
வேங்கைகரிமான்முதலாய் வெட்டிவரும்போது
ஆங்காரமாக அங்கொருமான்தானோட
மானோடப்பின்தொடர்ந்த மன்னவ்ரெகுராமனைப்போல்
தானோடினான்பரிமேல் தன்சேனைநின்றதுவே
வெகுதூரஞ்செல்லுகையில் வேந்தனந்தமான்மீதில்
வெகுகோபமாக விட்டானொருபகழி
பட்டுவிழுந்ததாகான் பார்மீதுமானதுவும்
கட்டுக்கடங்காக்குதிரை பரியைவிட்டிறங்கி
தாகம்பெரிதாகிச் சங்கரனேதஞ்சமென்று
வாசகினனும்வாள்வீமன் வந்துமரத்தடியில்
வீற்றிருக்கும்போது வேகமாய்த்தானும்வந்த
காத்ததுவும்பார்த்துக் கருத்தில்நினைத்திடுங்காண்
இவ்வேளைதன்னில் பிச்சேதிநாமுரைத்தால்
செவ்வையாய்வாளாற் சிரசைத்தாணித்திடுவான்
யென்னசெய்வோம்நாமினிமே லேனிந்தஓலைதனை
அன்னநடைச்சுந்தரிப்பெண் ணைவிடத்திற்வாங்கிவந்தோம்
இடவுமொட்டானெனவே உள்ளம்மிகப்பதறி
வாடியேகாத்து வரும்விதியில்லாதெனவே
தன்மனதுதேறித் தருகாமலேயோடி
தென்னன்மடியில்ப்போட்டுச் சீக்கிரத்தில்நாத்ததுவும்



ஓலையெடுக்குமுன்னே யுற்றவனிநாற்காதம்
பாலைவனத்திற்ப் பதரியேசென்றதுவே

## வாள்வீமன் ஓலையைப்பார்த்து யோசித்தல்

அப்போதுவாள்வீமன் ஆரோலையோவெனவே
செப்பமுடனெடுத்து சிந்தைதனிலேதான்
அய்யமார்தானும் அனுப்பிவித்தஓலையோதான்
ஒய்யாரமாக வருண்டுவரக்காரியமேன்
ஆரணியம்போன ஐவர்வரவிட்டாரோ
மரபைக்கெடுத்துபித்த மானிலமெல்லாமாளும்
அரவக்கொடியோ னனுப்பிவிட்டவோலையிதோ
தாயகமாயைவரையுந் தான்காக்கவந்தருளும்
மாயன்மகிழ்வாய் வரவிட்டவோலையிதோ
எனக்குப்பொருத்தமிட்ட பென்பிராணநாயகியாள்
தனக்குமனச்சலிப்பாய்த் தானெழுதும்வோலையிதோ
ஆரோலையென்று அரியவேழுத்திரையைத்
தாராளமாகத் தான்பார்த்தான்வாள்வீமன்
சுந்தரியாள்கையெழுத்துஞ் சுண்டுவிரல்மோதிரத்தால்
அந்தமுள்ளமுத்திரைபோட் டனுப்பியிருப்பதையும்
கண்டான்மனது களிபிரியமாய்மகிழ்ந்து
கொண்டாடிவேந்தன் குணமாச்சுருளெடுத்து
வாசித்துப்பார்த்தான் வகைவிபரமாயோலை
வாசகத்தைதக்கண்டுமன்னன் மதியாதெல்லாமறிந்து
கோபாக்கினியாகி குருடன்மக்கள்நூற்றுவரை
ஆபாசமாக்கி யளித்துவிடவேணுமென்று
இருக்குந்தருவாயி லிவனுடையசேனைதளம்
அரசனடிபற்றி அவர்கள்வந்துசேர்ந்திடவும்
சேகரமாகச் சென்றான்விசையபுரம்
ஜெகராசர்போற்றத் தீரன்மனையில்வந்து
தாகந்தெளிந்து தார்புனையும்வாள்வீமன்
நாகமதில்ப்பள்ளிகொள்ளும் நாரணனார்தங்கையரை
வந்துபணிந்தோலைதனை மாதாவிடங்கொடுத்தான்
சுந்தரமாது சுமித்திரையாளேதுசொல்வாள்
வடித்தசெழுந்தேனே மகனேயிவ்வோலைதனை

படித்தெனக்குச்சொல்லுமய்யா பாலகனேயென்றுரைத்தாள்
தயிரியமாய்ச்சொன்னதொரு தாயார்செவிகேள்க்க
வயணமாய்ப்பார்த்து வாசித்தாளோலைதனை

## சுபத்திரை ஓலையினுடைய சமாச்சாரந் தெரிந்து மாயவனை தூசித்தல்

வாசித்தவோலையுள்ள வக்கணையெல்லாங்கேட்டு
தூசித்தாள்மாயனையுஞ் சுபத்திரையாளம்மானை
கூடப்பிறந்தயெனைக் கொல்லவந்தகூற்றுவனோ
மாடுகன்றுமேய்த்த மதியிலிதவோமாயனுக்கு
வணங்காமுடியோனும் மச்சினனுமானானோ
பணங்காசுவாங்கினதால் பஞ்சந்தெளிந்திடுமோ
தூரத்திருப்பவரைச் சொல்லுவது ஞாயமல்ல
சீருத்தலெட்சிமியைச் சென்றுகண்டுநான்வாரேன்
பேதலிக்கவேண்டாமென் பிள்ளாய்மலையாதே
ஆதரித்ததெய்வம்நம்மை யகலாதேயென்மகனே
ஐவர்வனம்போனாலென் றழுகாதேயென்மகனே
தெய்வப்பிலன்நமக்குத் திரமாயிருப்பதினால்
மங்கையெனுஞ்சுந்தரியை மாலையிடுவாய்மகனே
பங்கமில்லையென்று பயணமெனவுரைத்தாள்
உரைத்திட்டதாயாரை உடனேநமஸ்கரித்து
கரைத்திட்டான்கண்ணீரைக் கட்டழகன்வாள்வீமன்

## அபிமன்னன் தாயாருக்கு ஞாயஞ் சொல்லுதல்

தவத்தாலெனையீன்ற தாயாரேநீர்போனால்
பவத்தால்வினைநினைத்த பாவிஅரவக்கொடியோன்
வந்திருந்தானாகிலவன் மைத்துனனுமென்றியெண்ணி
இந்தமொழியவனோ டெவ்வளவுஞ்சொல்லாதே
விடுதிதனில்ச்செல்லாதே வீம்புவுரையாதே
கெடுதியவனோடொருசொல் கெஞ்சியுரையாதே
வண்ணப்பசுமேய்க்கும் மாயனையுங்கண்டாலும்
அண்ணனென்றுயெண்ணி பருமையாய்ப்பேசாதே



பச்சைநெடுமாலுக்குப் பாரியெனும்லெட்சுமியை
மச்சினியாளென்று மகிழ்ந்துறவுசெய்யாதே
கன்னன்சகுனிதனைக் கண்ணாலும்பாராதே
பின்னுமொருவரிடம் பேசாதேயென்தாயே
விதுரன்னன்விகர்னனையு மிருதயவாய்ப்பேசிடுவீர்
சதுர்பெருகுந்துரோணர் தமக்கும்பிதாமகர்க்கும்
சிறுவனுமதுபிள்ளை தெண்டனிட்டானென்றுசொல்லும்
பருவமிகுமாது பத்தினியாள்சுந்தரியை
தனித்திருத்திப்பேசிமிகச் சந்தோசவார்த்தைசொல்லும்
மனத்துயரமில்லாமல் மங்களமாய்வார்த்தைசொல்லும்
பெருமாளுடன்மற்றப் பேர்கள்வழுச்செய்தாலும்
வருவானபிமனுனை மாலையிடவென்றுசொல்லும்
இத்தனையுஞ்சொல்லுமந்த யேந்திழையாளேக்கமுற்றால்
சத்தியமாய்ச்சொல்லியிங்கே தான்வாருமம்மா தாவே
இந்தவசன மெடுத்துரைத்தான்வாள்வீமன்
அந்தவுரைக்கெல்லாம் ஆமென்றுசம்மதித்து

## சுபத்திரை துவாரகைக்குச் செல்லுதல்

தண்டிகையிலேரித் தாதியர்கள்சூழ்ந்துவர
கண்டுஅபிமன் கழல்தொழுதுநின்றபின்பு
சுருக்காய்வழிநடந்தாள் சுபத்திரையாளம்மானை
பெருக்கானஆறுகளும் பெரியமலைப்பூங்காவும்
கானகமுந்தான்கடந்து கண்டான்துவாரகையை
மானகராமென்று வந்தாள்நகர்தனிலே
வீதிகடந்து விஸ்தாரமானதொரு
ஆதியரண்மனையை அவள்நோக்கிப்போகையிலே
தோகையெனுஞ்சுந்தரியாள் தாதியவளோடிவந்து
பாகுமொழியாள்தன் பாதம்பணிந்துகொண்டு
பெண்ணுக்குப்பெண்ணழகி பெருமாளுடமகளாம்
வண்ணக்கிளிமொழியாள் வாழுமரண்மனைக்கு
வாருமென்றுசொல்லி வளிகூட்டித்தானடந்தாள்
சீருயருமவீதிச் சிங்காரமும்பார்த்து

அங்கங்கரண்மனையி லலங்காரமும்பார்த்து
மங்களமாமென்று மங்கையருமாடவரும்
சந்தோசம்பேசுவதும் சற்பக்கொடியோன்முதலோர்
வந்திருக்கவிடுதி வளமாயமைப்பதையும்
பார்த்தாள்மனதிற் பஞ்சவரைத்தானினைந்தாள்
வேர்த்தாள் தன்மேனி விசனமுற்றாள்மூச்செறிந்தாள்
பஞ்சவரைத்தான்வெறுத்துப் பாராளத்தமாய்வரும்
கொஞ்சப்பயலரவக் கொடியோனுடனுறவாய்
இத்தனையுஞ்செய்கிறா ரென்பெருமாளென்றுயெண்ணி
மெத்தவிசனமதால் வெகுண்டுமனதுள்ளடக்கி
யோனுள்பெருமாள்புதல்வி யரண்மனைக்கு
தானுஞ்சுபத்திரையாள் தண்டிகைவிட்டேயிறங்கி
வருவதறிந்து மாதுநல்லாள்சுந்தரியும்
அருசாவெழுந்துத் துயரமெல்லாந்தான்போக்கி
பூரித்துடம்பு புளகிதமாய்த்தான்மகிழ்ந்து
வாரிச்சுருட்டி மகிழ்ந்துமிகஓடிவந்து

## சுந்தரிமாமியாளிடம் தன்னுடைய வருத்தமெல்லாம் தெரிவித்தல்

மாமியார்பாதம் மலர்தாவித்தெண்டனிட்டாள்
தாமிசமில்லாமலெனைத் தற்காக்கவந்தருளும்
என்கொழுநன்மாதாவே யெனக்கிசைந்தமாமியரே
உன்னிருபொற்பாதமல ருயர்தலைமேல்கொண்டேனுன்
வருத்தந்தவிர்க்கவந்த மாமியரேநீர்கேளும்
பொருத்தமிலாலெக்கணர்க்குப் பொருந்தவென்றுயெல்லோரும்
மாயன்சகுனிகர்னன் வணங்காமுடிவேந்தன்
ஞாயநெறிதவறி நடத்தவென்றுசம்மதமாய்
எல்லோருங்கூடி யிலக்கணர்க்குமாலையிட
நல்லமுகூர்த்தமிட்ட நடுக்கேடுயென்னசொல்வேன்
ஆசையாயும்முடனே அடியாளுடதாயும்
பேசியிருந்தசொல்லைப் பேதலிக்கவிட்டாரே
ஐவரிரந்தாரென் றரவக்கொடியோனும்
கைவசமாய்லெக்கணர்க்குக் கலியாணந்தான்முடிக்க



பச்சைமால்தன்னையுமே பணத்தாலுறவுபண்ணி
நிச்சயமாய்த்தான்முகூர்த்தம் நேமித்திருக்கிறார்
தந்திரமாய்யிவ்வசனந் தாதிசொல்லநான்கேட்டு
உந்தன்மகன்றனக்கு ஓலையெழுதிவிட்டேன்
ஓலைவயணமெல்ல முமக்கேதெரிந்திருக்கும்
மாலையிட்டாலுன்சேய்க்கு மாலையிடுமில்லாட்டால்
மாய்க்குகிறேனென்னுயிரை மாண்டபின்புயெந்தனுக்கு
தீக்கட்டும்நீர்க்கடனுஞ் செய்துமுடித்துவிடும்
ஆசைமருமகட்கு அவ்வளவுவேண்டாமோ
தேசமதிலில்லாத் தீவினைகள்செய்தாலும்
சற்றேயழுது தலைமுழுகவேண்டாமோ
அத்தையேயென்று அழுதாளேசுந்தரியும்

## சுபத்திரை சுந்தரிக்கு புத்தி கூறுதல்

பழுதுவராதென்னுடையப் பந்தானச்செல்வியரே
அழுதுபுலம்பாதே ஐவர்மருமகளே
மானேநீசாவதல்லால் மற்றவர்கள்சாகாரோ
தேனேயுலகமெல்லாஞ் செத்துப்பிழைப்பதல்லால்
இருப்பாரொருவரில்லை யெத்தனைநாள்சென்றாலும்
கருப்பாய்ந்தவேளையல்லால் கற்பனைவேருண்டாமோ
சின்னம்வராமலெந்தன் செல்வனுக்கேஉந்தனைநான்
அன்னமேமாலையிட்டு அழகாகவேதானும்
கண்ணாலேபார்க்கயெந்தன் கருத்திலிருக்குதம்மா
பெண்ணரசேநீயொன்றும் பேசாதேயென்மகனும்
உனக்குறுதியானதொரு உண்மைதனைச்சொல்லுமென்று
எனக்குவெளியனுப்பி யிங்குவரவிட்டான்காண்
பாலகனையுண்ட பரமசிவன்றனரிய
மாலையிடவருவான் வாள்வீமனென்றுசொல்லி
மாமிசுபத்திரையும் மருமகளுக்கேயுரைத்து
தாமிதமில்லாமல்த் தான்வருவானென்றுசொல்லி
நடந்தாள்சுபத்திரையும் நமஸ்கரித்தாள்சுந்தரியும்
கடந்தேவரும்போது கண்டாளேலெட்சுமியும்
வந்தீரோவந்தீரோ மதினியரோயென்றுரைத்தாள்
சந்தோசம்சந்தோசம் தான்வந்தேனென்றுசொன்னாள்

## லெட்சுமி சுபத்திரையைப்பார்த்துச் சொல்லுதல்

வீட்டுக்குவந்து விருந்துண்டுபோகாமல்
காட்டுக்குள்ளேதிரியுங் கள்ளரைப்போல்போவதென்ன
வந்தவர்கள் தன்னை வாருமென்றுசொல்லையோ
சுந்தரியாள்மாத்திரமுஞ் சொந்தமோஉங்களுக்கு
வரிசைவரவிட்டதையும் மறந்துவிட்டுப்போனோமோ
பரிசமனுப்பினதைப் பாராமல்ப்போனோமா
கூறும்பரிசம் கொடுத்துவரவிட்டீரோ
ஆருமரியாமலடகேடுசெய்தோமோ
மாதமொருவிசைதான் வந்துபெண்ணைக்கேட்டீரோ
காதவழிநடந்து காலோய்ந்துபோனீரோ
அதிகமாயுங்களுட அண்ணாரண்மனைக்கு
பொதிபொதியாய்நீங்கள் பிடித்துவரவிட்டீரோ
அண்ணனுடதேவிக் களந்தளந்துவிட்டீரோ
பெண்ணைக்கொடுப்பமென்று பிரட்டுருட்டுத்தான்பேசி
தின்றுகெடுத்தோமா சீரளித்துப்போட்டோமா
நன்றிமறந்தோமா நாத்தியரேகேளுமினி
மாயவருங்காணுமுங்கள் வாசல்வரும்வேளையெல்லாம்
ஆயிரந்நூறு யழிந்துதோவுங்களுக்கு
உற்றவர்போல்நீங்க ளூரவாயிருந்ததல்லால்
வெற்றிலைமேல்ச்சுண்ணாம்பு வேண்டியறியோமே
வருவோந்திருநாளில் வந்தாலுன்வீடுதனில்
ஒருநாள்தரித்திருந்து உண்டோமோஉன்வீட்டில்
தெரிசனைகள்பார்க்கவுந்தான் சிற்றூரில்வந்தாலும்
அரிசிகொண்டுவந்துனை யாக்கியுண்டதல்லாது
பின்னேதுமுண்டோவுன் பெருமையெனவேதான்
முன்னுகின்று மொழிந்தாளேலெட்சுமியும்
தாமோதரன்தேவி தானுரைத்தசெய்தியெல்லாம்
சோமோதயமுகத்தாள் சுபத்திரையுந்தான்கேட்டு
மட்டற்றகோபமெல்லாம் மனதில்மிகவுண்டாகி
வெட்டச்சினத்தவர்போல் வேகித்துக்கண்சிவந்து
தீராதகோபமெல்லாஞ் சிந்தைதனி லுண்டாகி



காரார்குழலாள் கனிவைமனதுள்ளடக்கி
தணிந்துவெறுப்பாயுரைத்த தோகையரைத்தான்பார்த்து
தனிந்துசுபத்திரையும் தானேதுரைக்கலுற்றாள்

## சுபத்திரை லெட்சுமியைப்பார்த்து சொல்லுதல்

அன்பானபெண்ணரசே அண்ணனுக்குவாழவந்த
தென்பானபெண்ணே சிவந்தெழுந்தமேனியரே
கரும்பேகனியேசெங் கமலமுகத்தாளே
அரும்பாதகங்கள்செய்தி ராஜனுமுன்னாளில்
விரும்பியிருபேரும் விட்டுப்பிரியாமல்
இருந்தோமிருவர்களு மெண்ணினதும்பேசினதும்
மறந்தோவுரைக்கிறீர் வார்த்தைதனைக்கேட்டருளும்
அறந்தான்பெரிதெனவே ஆரணங்கேநீர்கேளும்
தனக்குருமையெண்ணித் தானிருந்துவாழுகையில்
மனதில்க்கிலேசமதாய் மலைந்திருந்தோமன்னாளில்
பிள்ளைபிறக்கவென்று பேருலகில்நாமிருவர்
வெள்ளிக்கிழமை விரதமிகவிருந்து
புத்திரனும்வேணுமென்று பொருந்தியிருக்கையிலே
மெத்தமனமகிழ்ந்து விரதமிருக்கையிலே
சந்திரனைமாமுடியில் தரித்தசிவன்றன்செயலால்
சந்தோசமாயிருவர் தண்ணீரெடுக்கவென்று
வந்தோம்நதிக்கரையில் மதினியரேநாமிருவர்
அந்தநதியிற்குளித்து ஆனந்தமேபெருக
தீர்த்தங்களாடிச் சிவனைமிகப்பணிந்து
வார்த்தைசொல்லிக்கொண்டதொரு வயணமறியீரே
தற்பரமாய்நின்றசிவ சங்கரனார் தன்னருளால்
கெற்பமக்குண்டாச்சு கிலேசமகன்றதினால்
என்வயிற்றிலாண்குழந்தை யென்றுபிறந்தாலும்
உன்வயத்தில்பெண்குழந்தை யுடனேபிறந்தாலும்
வாகாயிருவருக்கும் மாலையிட்டுப்பார்ப்பமென்று
ஆகாசம்பூமிகங்கை யரியவேசாட்சிவைத்து
வந்தோமேநாமிருவர் வாகாய்ச்செலமெடுக்க
பந்தானமானதொரு பாக்கியமேவீடுதனில்

இருக்கும்பொழுதில்முன்னு ளியம்பினதும்பொய்யாமல்
பெருக்கமாய்நாமிருவர் பிள்ளைகளைப்பெற்றெடுத்தோம்
பெற்றீர்காண்லெட்சுமியே பெண்குழந்தைநீர்தாமும்
உற்றஆண்பிள்ளையைநான் உமக்குமுன்னேபெற்றெடுத்தேன்
அருமையுடன்பெற்றபிள்ளைக் கபீமனென்றுபேருமிட்டேன்
பெருமையாய்நீபெற்ற பிள்ளைபெயர்சுந்தரியும்
பேரிட்டபீமன் பெண்ஜாதியாகுமென்று
நீரிட்டுலகறிய நிலக்காப்புத்தானுமிட்டு
தருமர்சகோதரனார் தம்பிமகன்தேவியென்று
திருமஞ்சனமாட்டிச் சிறந்தஅணியாடையிட்டோம்
ஊருமறியாதோ உலகமறியாதோ
ஆருமறியாரோசொல் லாயனறியாரோ
உத்தாருமுறையா ருடனேயறியாரோ
சத்தாகிலுமறிவு தானிலையோலட்சுமியே
காயாதபாலையுண்ட கார்வண்ணர்மச்சினர்க்கு
தாயாதிக்காரனைப்போல் சர்ப்பனைகள்செய்தாரோ
விதியாலுமைவர் வெளியேறினார்வனத்தில்
அதினாலுனைப்பிரிந்து அகன்றுவிட்டேன்பெண்ணரசே

## சுபத்திரை தன் வறுமைகளை சொல்லுதல்

நாடுவிட்டுபஞ்சவர்கள் நற்காணகம்போனார்
கூடுவிட்டுப்போன குளவிதனைப்போலானேன்
வாதுரைக்கமாட்டாமல் மன்னரைவர்போனபின்பு
ஆதரிக்கயிங்குவொரு ஆதாரமில்லாமல்
போனேனடியாள் பிள்ளைதனையிடுக்கி
தானேவிசையபுரம் தன்னிலேசென்றணுகி
இருந்தேனுடல்மெலிந்தே னில்லிடமுமில்லாமல்
விருந்தாடியுண்டறியேன் வேட்டகத்தில்போயறியேன்
போராகனீன்ற பிள்ளைக்குமைந்தனுக்கும்
ஆராகிலுமொருவ ரனுப்பிவிட்டான்காணேன்
தேடக்கிடையாத செல்வனுக்குமைந்தனுக்கும்
கூடப்பிறந்தஅண்ணன் கொடுத்தனுப்பநான்காணேன்
போதாதகாலம்வந்து போனவருக்காதரவாய்



ஏதாகிலும்நீ கொடுத்தனுப்பநான்காணேன்
தவசியாய்ப்போனவர்க்குத் தானுதவிசெய்யாட்டால்
பவுசுமேலாய்சலிப்புப் பண்ணுவரோலட்சுமியே
எங்களுக்குக்காலம்வந்து இரந்துகுடிக்கையிலே
உங்களுக்குநாங்க ளுதவிசெய்வதெப்படிகாண்
வளியாய்மகிமையதாய் வாழ்ந்திருக்கும்நல்லோர்கள்
எளியோர்தனையுமெதிரிட்டுப்பேசுவரோ
கூலிக்காரிசொல்லு குத்தியுண்ணுமேனிதனை
கேலிக்கோபேசுகிறாய்க் கிருபையுள்ளலெட்சுமியே
சிரக்கமுடிசூட்டியிருந்த் தேசமெல்லாம்ஆண்டதொரு
அரக்கனுடவாழ்வு மலைந்துகெட்டுப்போகலையோ
உக்கிரமாயிந்த உலகமெல்லாந்தானறிய
தக்கனுடதவசு தலைகுலைந்துபோகலையோ
பேரானஅண்டமெல்லாம் பிரபலமாயாண்டிருந்த
சூராதிசூரனுமே அலைந்துருண்டுபோகலையோ
வண்ணமுள்ளபூமியிந்த மண்டலத்தையாண்டவர்கள்
எண்ணமுடியாது யெத்தனையோனறிபேன்
நளனென்றொருவனிந்த ராட்சியத்தையாளையிலே
இளமைதனில்ச்சனிய னிவனைத்துயர்க்கதினால்
பெண்பிள்ளைசெங்கோல் பெருமைதனைத்தானிழந்து
வண்டுறையுங்காவகத்தில் வருந்திவெகுகாலம்
அலைந்தான்மெலிந்தா னருமைதனைக்குலைந்தான்
ஜெலந்தான்கிடையாமல்த் தேகமெல்லாந்தானுலர்ந்தான்
அருசுபன்னித்தான்பிடித்த அயர்சனியன்தன்னாலே
வருஷம்பதினாலும் வனவாசமேதிரிந்தான்
அப்போசனிய னவனைவிட்டுத்தான்விலக
எப்போதும்போலே யிருந்தான்முடிசூட்டி
வினைப்பயனையாராலும் வெல்லமுடியாது
நினைப்பவரார்சொல்லுமிந்த நிலத்திலுள்ளவர்கள்
வாள்வுசிலகாலம் மானிலத்திலுள்ளவற்குத்
தாள்வுசிலகாலந் தான்வருங்காண்லெட்சுமியே
தள்ளுமிளமைசெல்வஞ் சரீரநிசமில்லையென்று
வள்ளுவனார்சொன்ன வயணமறியீரோ

ஆறு ஹுமிந்த அனியாயவாள்வைசம்பி
ஏனோமதிமயக்க மீசனுடகட்டளைகாண்
ஆக்கைப்பொடிப்பொடியா யானுஹும்நல்லோர்கள்
வாக்குரெண்டுபேசவுந்தான் மாட்டார்கள்வையகத்தில்
வெரிச்சந்தணமணியு மின்னேமுன்னாள்தனிலே
அரிச்சந்திரனென்றொருவ னாண்டான்புவியடங்கும்
நீதியுடையமன்ன நிசத்தையரியவென்று
சோதிக்கைக்கிவந்தாராஞ் சொற்பெரியராஜரிசி
அரசனிடமாகவந்து ஆனகவுசிகனும்
திரவியமுஞ்செங்கோலுந் தெத்தமெனவேவாங்கி
காவலவன்தன்மேல்க் கடலைமிகவுண்டுபண்ணி
தேவதைகள்செய்யுகின்ற சீரளிவுக்குள்ளாகி
பொய்யுரைக்கமாட்டாமல்ப் புலையனுக்குமாளாகி
தையலையும்பிள்ளையையுந் தானேவிலைப்படுத்தி
கடனைசெம்பொன் கவுசியர்க்குமேயீய்ந்து
நெடுநாளிருக்கவுந்தா னினைத்திருந்தான்சத்தியத்தை
வாக்குரெண்டுபேசாத மன்னவனைத்தான்மகிழ்ந்து
பாக்கியமுஞ்செங்கோலும் பருதிமதியுள்ளளவும்
வைத்தார்முடிசூட்டி வானவருமீஸ்பரரும்
பெற்றனவன்கீர்த்தி பெருமையிதுலெட்சுமியே
நீதானுரைத்தமொழி நீதிதப்பிப்போகாமல்
வாதானதூற்றுவர்கள் வஞ்சகத்தைக்கேளாமல்
நன்மைநிசமென்றுயெண்ணி நாயகமேஉன்மகளை
என்மகன்வாள்வீமனுக்கு யிப்போதேகல்யாணம்
செய்துமுடிப்பாயுன் சித்தமகிழ்ந்திடவே
கைதவறவிட்டால்க் காசினியோர்தான்சிரிப்பார்
துலக்கமாயிவ்வசனஞ் சொன்னாள்சுபத்திரையும்
இலக்கணமெல்லாமறிந்த லெட்சுமியுந்தான்கேட்டு
வார்த்தைபடிக்கவந்த மதினியாரேநீர்கேளும்
தூற்றுவரைப்பார்க்கவுந்தான் துண்மையோஉங்கள்குலம்
அந்தநாள்ப்பேசினதுக் கபாரதமுண்டானால்
இந்தநாள்வாக்கவெனை யிங்கெழுந்துவந்தீரோ
வீட்டுக்குவீடு வேலைசெய்யும்தனக்கு



நாட்டுப்பெண்ணாளென்று நன்றாய்நினைத்தாயே
மருமகனைவைத்து வரிசையுடன்வாழவென்று
உருமையுடன்பெண்கேட்க வோடிவந்தாயிப்போது

## லெட்சுமியும் சுபத்திரையும் சண்டையிடுதல்

பினைக்கமதியற்றவளே போடிசுபத்திரையே
அனைக்கவில்லையுன்னையுந்தா னளப்புமிகக்கேட்கவில்லை
புலையனுக்குஆசனந்தான் பொருக்குமோபோடியென்றாள்
தலைவாசலைக்கடக்கத் தானேவிரட்டுமென்றாள்
வார்த்தைமிஞ்சிச்சொன்ன மாயனுடதேவியரைப்
பார்த்தனுடதேவியரும் பதறிமனங்கலங்கி
அமையாதகோபமெனக் காக்கிவைத்திரிப்போது
தமையனுடதேவியென்று தானேபிறுவரையும்
பொருத்தேனினிமேல்ப் பொருக்கவெவரால்முடியும்
பெருத்தாலுதிமாங்கள் பிலமிருந்தாலுமோ
என்றேயதட்டி யெதிர்வரவும்லெட்சுமிதான்
அன்றேமயிர்பிடித்து யடித்தாள்சுபத்திரையை
அடித்தபொழுதே யவளுமிவள்சிகையை
பிடித்தாளிருபேரும் பிரண்டுருண்டுகீள்விழுந்தார்
விழுந்தபொழுதுமாமி தனை மெல்லிநல்லாள்சுந்தரியும்
அழுந்தாதவளையெடுத் தாசனமேதாயார்தன்
மூக்குதனிலேற்றி முகத்திலறைந்தாள்முனிந்து
இதுபுதுமையென்று யெல்லோருந்தான்சிரித்தார்
மைசேர்க்குங்கன்னி வடிவழகிலெட்சுமியை
கைதூக்கிவிட்டாள் காண்டீபன்தேவியரும்
காண்டீபன்தேவிதனைக் கண்ணாலும்பாராமல்
தாண்டியரண்மனைக்குள் தான்போனாள்லெட்சுமியும்
மானமதைக்குடுத்த மருமகளேசுந்தரியே
நானுமிதோபோய்வாறேன் நாளைத்திரும்புகிறேன்
இருமென்றனுப்பி யெழுந்தேசுபத்திரையும்
அருவியெனக்கண்ணீர்விட் டவள்சபதம்சொல்வாளே

## சுபத்திரை சபதங்கூறுதல்

### விருத்தம்

நந்தகோபாலன்றேவி நம்மையும்பழித்ததாலே
தந்திரமாகவென்சேய் தனக்கெந்தனித்திறனும்

சுந்தரி தன்னைமாலை சூட்டிடவல்லேனாகில்
விந்தைசேர்லெட்சுமிக்கு விலைப்படியாளாவேனே.

அம்மானை.

சுந்தரியைத் தானனுப்பி சுபத்திரையுமப்போது
நந்தகோபாலனெனும் நாராயணன்றேவி
என்னைப்பழித்தவளு மேசினதால்நாடறிய
மன்னவரெல்லாமகிழ மைந்தனுக்குசுந்தரியை
மாலைதரிப்பேன் மணவறையின்பந்தலிலே
நாலமதிற்றுரியோன் தன்படைகள்வந்தாலும்
வெல்வானெனதுமகன் விளம்பியசொல்பொய்யாது
அல்லவென்றால்லெட்சுமிக்கு யாளடிமையாவேனென்
றன்றுமிகுகோபமுடன் வியம்பிச்சுபத்திரையும்
கன்றிமிகவாடிக் கலங்கினாள்லெட்சுமியும்
பார்த்துநின்றபேர்களெல்லாம் பார்த்திபன்தேவியரை
ஆர்த்தை தயஞ்சொல்லி வணங்கினார்சுந்தரியும்
ஓடிவந்து தான்வணங்கி உத்தமியேநின்சபதம்
பாடிலும்பொய்த்திடுமோ பார்த்தவர்க்குத்தோணுதோ
எதுக்குக்கோப மினிமேல்நடக்கும்வகை
சாதுரியமாகத் தானடத்துமென்றுசொன்ன
சுந்தரியைத்தானனுப்பிச் சுபத்திரையுமப்போது
விந்தையாய்ச்சொல்லி விரைந்தெழுந்தாளம்மானை

விருத்தம்

அன்றுவாள்விசையன்றேவி அப்பவேசபதங்கூற
நின்றிட்ட திருமால்தேவி நிமிஷத்திலோடிவந்து
இன்றுயான்செய்தகோபம் யாவையும்பொறுப்பாயென்ன
என்றவள்காதில்கேட்டு ஏகியேநடந்திட்டாளே

இதுவுமது

கோபமடங்கிவளிநடந்து குவடுநதிகள்காணாத
தாபமிகுந்தமனத்தோர்கள் தண்ணீர்தடுந்தண்மையதாய்
ரூபமிகுந்த அபிமாவென் னுயிரேமகனேயெனத்தேடி
சோபமடங்கும்படிபாய்வந் தொருசொல்மகனைக்கண்டாளே.



## சுபத்திரை தன் விசையநகர் வருதல்

வந்தாள்வழிகூடி வனங்கள்மிகக்கடந்து
செந்தாமரைப்பூத்த செங்கழுநீரோடைகளும்
தேருந்தெருவுஞ் சிங்காரவீதிகளும்
ஆறுங்குளமும் அடவிகளுந்தான்கடந்து
சத்திரமுஞ்சாலைகளும் தாவளமுந்தான்தாண்டி
மெத்தவழிநடந்து விசையபுரநகரம்
கண்டேநகர்புகுந்தாள் காரிகையாள்மாளிகையில்
தண்டிகைவிட்டேயிறங்கி சகிப்பெல்லாந்தான்மாற்றி
அரண்மனைக்குள்ளேபுகுந்து ஆசனத்தின்மீதிருந்து
திரமானயோசனைகள் சிந்தித்தவீற்றிருந்தாள்
மாதாவெழுந்தருளி வந்தசொல்லைவாள்விமன்
காதாரக்கேட்டுக் கடுகியேயோடிவந்து
தாயேசரணமென்று தான்பணிந்தான்வாள்விமன்
சேயேநான்பெற்றெடுத்த செல்வமேயென்றுசொல்லி
கையாலெடுத்தணைத்து கட்டழகாயென்மகனே
அய்யாமணியேயென் னரசேயெனவுரைத்தாள்
அரசென்றெனையீன்ற ஆட்சியரேயென்தாயே
திரமாகப்போனதுவுந் திரும்பியிங்கேவந்ததுவும்
எள்ளளவுநீர்தா னிசகுபிசகில்லாமல்
உள்ளபடியா யுரையுமென்றான்வாள்விமன்
மகனுரைத்தசொற்கேட்டு மாதாசுபத்திரையும்
சுகமானசேதியெல்லாஞ் சொன்னாள்படிப்படியாய்

## அபிமன்னன் தாயாருக்குத் திடஞ்சொல்லுதல்

வகைவிபரமானசொல்லை வாள்விமன்தான்கேட்டு
பகலவனைக்கண்ட பனிபோலநூற்றுவரை
தரையில்விளவடித்து தாமோதரன்மகளை
சிறைபிடித்துநான்வருவேன் சிவனார்கிருபையினால்
விபரமுடனவர்க்கு வெற்றிசொல்லிவந்தபடி
சபதமுடிக்குகிறேன் தாயேசலியாதே
புவியதனிலேயிருக்கும் பூனைபோலாமிடுமோ
வலியமதத்துவாரவாய்த்து தென்றல்ச்சண்டைதனை

விட்டுவிடுவேனே மெய்கலங்கிநிற்பேனே
கட்டுகிறேன் தாலியந்தக் கலியாணவாசலிலே
இவ்வார்த்தையெல்லாமெடுத் துரைத்தான்வாள்விமன்
அவ்வார்த்தைகேட்டு அகமகிழ்ந்து தாயாரும்
வீத்திருந்தாள்நன்றாய் விசையனுடதேவியரும்
தோத்திரமுஞ்சொல்லித் துதித்திருந்தாள்வாள்விமன்
இந்தப்படியாக யிவரிங்கிருக்கையிலே
அந்தக்குடிகெடுக்க அருள்கொண்டகோபாலன்

## முகூர்த்தத்திற்கு துவாரகையை அலங்காரஞ் செய்தல்

ஆகமுடன்சோபனத்துக் கலங்காரஞ்செய்யவென்று
தாகமுடன்சொன்னார்காண் தாமோதரப்பெருமான்
உத்தாரங்கேட்டு யுருதியுள்ளமந்திரிகள்
சுத்தானபட்டணத்தை சோடினைகள்செய்ய லுற்றார்
வீதிகள்தோறும் விதமாய்க்குருஞ்சிகட்டி
சோதியின்பமாகத் தோரணங்கள்தான்தூக்கி
மணவறையின்முன்னே மரகதத்தால்க்கால்நிறுத்தி
இணையாய்வயிரம் பிசைந்தவளைதான்போட்டு
மாணிக்கத்தாலெங்கும் வளமாய்க்கொடுங்கையிட்டு
ஆணிப்பொன்னாலே அருந்திறற்பொற்றகட்டை
ஆய்யதரளமுத்தைத் தூக்கினார்பந்தலிலே
வையகமெல்லாம்பெருங்காண் மணச்சவுக்கைசிங்காரம்
அண்ணாந்துபார்த்து அவர்வர்கள்பற்காட்ட
கண்ணாடிகொண்டுவந்து கட்டினார்பந்தலிலே
பதுமைநிரைத்தார்கள் பந்தலிலேவிந்தையதாய்
சதிர்பெருக்கவென்று சமுக்காளந்தான்விரித்தார்
கோலமிட்டார்பட்டணத்தில் குச்சுகளும்மச்சுகளும்
வேலையிட்டபந்தலிலே மேலிட்டார்பொற்சரிகை
வாழைகமுகுகளை மணவறையிலேநிரைத்தார்
தாழைமலர்மல்லிகைப்பூ சரஞ்சரமாய்க்கட்டிவைத்தார்
அதினருகி[illegible] லங்காரஞ்செய்துவைத்தார்
சேனைதளங்களையும் திரண்டிருக்கச்செய்துவைத்தார்
முத்தாலேதண்டிகைகள் முஸ்திப்புசெய்துவைத்தார்



சுத்தாலவட்டஞ் சுருட்டிக்குடைசெய்துவைத்தார்
பேரிகைடம்மானம் பிசகாமற்சேர்த்துவைத்தார்
கூறியதோர்நாகசின்னங் கொம்புதயார்செயதுவைத்தார்
பூசியதோர்மஞ்சள்ப் புளகமதிலேமயங்கத்
தாசிகளைநூறுலெட்சந் தானேவரவழைத்தார்
இன்னம்வெகுவிதமா யிசைத்துமணவறையை
சொன்னார்பெருமாள் சமுகமதில்மந்திரிகள்
மந்திரிகள்செய்ததெல்லாம் மாயவனுந்தான்பார்த்து
இந்திரன்வந்தாலு மிதற்காசைகொள்வான்காண்
கனமானநூற்றுவர்க்குக் கட்டிவைத்தமாளிகைகள்
வனவாசம்போனவர்க்கு வாய்க்குங்காணென்பார்கள்

## கிருஷ்ணபகவான் துரியனுக்கு ஓலை அனுப்புதல்

### விருத்தம்

அரியோன்மணதுகளிகூர்ந்து அளகாய்நாளைக்கலியாணம்
திரியோதனரேவாருமென்று சிறப்பாயோலையனுப்பியபின்
பரிவாயோலைதனையவிழ்த்துப் பார்த்தே[illegible]மன்னன்
குருவாந்துரோணர்[illegible]னே

### வேறுசந்தம்

சொன்னபொழுதவ்வுரைகேட்டுத்
துரோணர்தன்னை அழைத்தவர்த்
கன்னன்சகுனி அரவயத்தோன்
கண்டேவணங்கித்தெண்டனிட்டு
முன்னேஉமக்குநானுரைத்த
முகூர்த்தமதற்குநாளையென்று தன்
பின்னேமறுசொல்பேசாமல்ப்
பேணிவருவீர்பெரியோரே

### அம்மானை

காளைமுகில்வண்ணனுமே கலியாணத்தைதனில்
நாளைவரவென்று ஓலைமாய்வரைந்தெழுதி
தூதனிடங்கொடுத்து சுறுக்காகஅதைதன்னை

ஆதாவாய்ச்சென்று அரவக்கொடியோனிடத்தில்
வரைந்தசுருள்கொடுத்து மருவசனந்தான்கேட்டு
விரைந்துவரச்சொல்லி விடுத்தார்காண்தூதுவனை
ஓலைதனைவாங்கி யுறுதியுள்ளதூதுவனும்
ஆலயமதான அஸ்தினபுரந்தனிலே
வந்துதான்தூதுவனும் வணங்காமுடியோனை
சந்தோசவேளைகண்டு தானளித்துஓலைகொண்டு
கொடுத்துமருவசனம் கூறினாரம்மானை
அடுத்துநின்றமந்திரியை அரவக்கொடியோன்பார்த்து
மாயனுட்ஓலைதனை வாசித்துமன்னவனும்
தாயகமாக சதிர்பெருக்கியேயிருந்து
துரோணர்முகம்பார்த்துச் சொல்லுவான்மன்னவனும்
பிராணனெனவேதான் பெற்றவிலக்கணர்க்கு
நாரணனுடைய நல்லமகள்சுந்தரியை
பேருப்பரிசமிட்டுப் பேசியிருந்ததினால்
நாளைவரவென்று நாரணனார்ஓலைவிட்டார்
வேளையிதுவென்று விளம்பினானம்மானை
விளம்பினானதக்கேட்டு வேதியனுந்தக்கபடி
அரசமணிமேல்க்கே [illegible] அரவக்கொடியோனே

## துரோணர் துரியனுக்கு புத்திகூறுதல்

ஆரணியந்தன்னிலேதான் ஐவரையும்போகவிட்டு
தாரணியையாளுவது தர்மமோமன்னவனே
பேராசைகொண்டு பிதற்றுகிறாய்கல்யாணம்
ஆராலேகூடுமையா ஐவரிருக்கையிலே
சுற்றங்கொதிக்கவுந்தான் சோபனங்கள்செய்வாரோ
மற்றவர்கள் தங்கள்மனது தனக்கொவ்விடுமோ
கர்மமுனக்குவருங் கானகத்திலேதிரியும்
தர்மனதுநொந்தால்த் தலைவெடித்துப்போகாதோ
பாஞ்சாலிதன்னையுநீ பண்ணிவைத்தபாவமெல்லாம்
தான்சாகவேமருந்து தான்குடித்தாய்மன்னவனே
செங்கோலிலாசைவைத்துத் தீண்டியைவர்கேட்டாரோ
பங்காகநாட்டைப் பகுந்துதரச்சொன்னாரோ
புவனமதிலேதும் பொல்லாங்குசெய்தாரோ



அவர்கள்தனித்தனியே யதிகாரஞ்செய்தாரோ
உனக்கவர்களைநீ யிவ்வேசம்பண்ணிவைத்தாய்
பாதிப்பிறையணியும் பரமனுக்குமேறாதே
மிகுந்துபொசித்தாக்கால் மிச்சமென்னபூவுலகில்
பகுந்துபொசித்தாக்கால்ப் பசிபோமேபாருவாய்
வசியாகுலத்துடையோர் மனதுநொந்துவுன்னிடத்தில்
பசித்திருக்கஉண்பதெல்லாம் பாவமல்லோமன்னவனே
இரத்தக்கலப்பாக யிருந்தவரைக்கானகத்தில்
துரத்திவிட்டுஉண்பதெல்லாந் தோசமல்லோமன்னவனே
பசித்தார்பொருதும்போம் பாலுடனேயன்னமதை
பொசித்தார்பொருதும்போம் புலனறிவாய்மன்னவனே
சாதகமதாகவுமே தம்பியென்றுமன்னனென்றும்
பேதகமில்லாமலேநீ பெருமையுடன்வாளாமல்
ஓயாதஆண்சயுமக் குண்டானதாகையினால்
தாயாதிக்காரனிங்கு தானாகாதென்றுசொல்லி
மூட்டிவினையை முழுதுமேசூதுசெய்து
காட்டில்விரட்டிவிட்டாய் காய்கிழங்குதின்னுமென்று
சத்தியத்தையைவர் தவறிநடவாமல்
பத்திவைத்துப்போனார்கள் பாரவனந்தனிலே
கர்த்தாவேதஞ்சமென்று கானகத்தில்போனவர்மேல்
சற்றுகிலுமுனக்கு தயவுகுணமில்லாமல்
விசையன்மகன்றனக்கு வேண்டிமுன்னாள்சொன்னபெண்ணை
பிசகுபண்ணவேணுமென்று பெருமானுடன்பேசி
கோளையிலக்கணர்க்கு கொள்ளவென்றிப்போது
நாளைப்பயணம் நடவுமென்றாய்மன்னவனே
சாமத்துரோகமுனைத் தான்சூழ்ந்திருப்பதினால்
நேமித்தகல்யாணம் நிறைவேறப்போறதில்லை
பாற்கட்டில்ப்பள்ளிகொள்ளும் பச்சைமாலுன்னமட்டும்
தீர்க்கமுடனைவரையுஞ் செயித்திடவும்போறதில்லை
பேரானஈசன் பிரமன்முதல்வந்தாலும்
ஆராலுங்கூடாது ஐவரையுந்தான்செயிக்க
நெடுமால்தன்பேச்சுதனை நிசமென்றுநம்பாதே
தடுமாறிப்போகுமடா தம்பிதுரியோதனனே

கைச்சுருக்குக்காரன் கனத்ததொருவாள்வீமன்
வைத்திருக்குறன்பெரிய வாள்கொண்டவனெதிர்த்தால்
என்னுனுமுன்னுனு மெவருனுக்கூடாது.
சொன்னேனினிமேலுன் துர்ப்புத்திக்கேத்தபடி
என்றுவெகுபுத்தியெடுத் துரைத்தார்துரோணருமே
அன்றுசொன்னதெல்லா மரவக்கொடியோன்கேட்டு

## துரியன் துரோணரை சினந்துரைத்தல்

நற்குணமாய்நானுமொரு நன்மைசெய்யப்போகையிலே
ஆற்குறியாய்ப்பேச்சுகளைச் சொல்வரோஆசாரி
சேவுகமோநீரெனக்குத் தெண்டிக்கக்கர்த்தாவோ
ஏவுகின்றகாரியத்தைக் கொழுந்திருக்கவேணுமல்லால்
ஆலோசனைகள்சொல்ல அதிகாரந்தந்தோமோ
மேலானபுத்திகளை வேண்டியுரையாதேதன்
சொற்கேட்டுநீர்நடவுந் துரோணரேயில்லாட்டால்
பற்காட்டநீர்நடவும் பஞ்சவர்கள்தன்னிடத்தில்
உண்டமதமோகா ணுமக்குமொருயோசினையோ
பண்டிதானும்முடைய பாச்சல்பரிச்சலெல்லாம்
இனிமேல்பலியாது பெழுந்திரியுமென்றேதான்
அனியாயஞ்செய்யுமரவக் கொடியோனுரைத்தான்
உரைத்தமொழிசெவியி லூடுருவியாசாரி
துரைத்தனத்துக்காகாத் துன்மார்க்கனென்றுசொல்லி
நன்மைபெரிதெனவே நடந்தார்துரோணருமே
தின்மைநினைந்த் திரியோதனன்பார்த்து
யோதாதிவரைவிடப் போகாதெனநினைந்து
குதானநெஞ்சன் துரோணர்முன்னேவந்துநின்று
குருவேசரணமென்று கும்பிட்டேயுசொல்வான்
மருவசனம்வேண்டாமென் வார்த்தைபொருத்தருளும்
சுருர்தபலன்வருங்கான் சுவாமியான்பெற்றெடுத்த
மகனைக்கரையேத்த வரவேணுமென்னுடனே
பெற்றபிள்ளைசெய்த பிழையைப்பொருத்தருளும்
குற்றமென்னஅய்யாநான் கோவித்துக்கொண்டதனுல்
சிறியேனறியாமல்த் தீவினைகள்செய்தாலும்
பெரியோர்பொருப்பரெனப் பேசுவாரென்குருவே



வாருமென்றுசொல்லியப்போ மன்னன்வணங்கவுற்றுன்
காருமென்றமன்னவக் கண்ணுரவேபார்த்து

## துரோணர் துரியனை வெருத்துக்கூறுதல்

செப்புவார்துரோணர் திரியோதனன்றனக்கு
தம்பிதமிலாமலேநீர் தான்சோபன்முடிக்க
நம்மைவரச்சொல்வதினுல் நாமேவருகுகிறோம்
உம்முடையவல்லமையு முலகளந்தார்தன்னுரவும்
கீதித்தபுகளுடைய கர்ணன்சவுரியமும்
குதிக்குஞ்சகுனிக் குரளிபடமேலளப்பும்
தம்பிமார்தன்னுடனே தவ்வுறின்றவல்லமையும்
கம்பினியிலேசரியாய்க் காத்திருப்போர்க்கைச்சுருக்கும்
உனக்குறவாய்வந்திருக்கு முற்றமன்னர்தன்பெலமும்
எனக்குனக்கென்றேயுரைக்கும் இராஜாக்கள்தன்பெலமும்
மூர்க்கமுள்ளசேனை முருக்குந்திருக்குகளும்
பார்க்கலாங்கலியாணப் பந்தலிலேயென்றுரைத்தார்.
உரைத்தார்துரோணரதுக் கோமென்றுமன்னவனும்
சிரித்தானவன்மனதில்ச் சினத்தைதமிகவடக்கி
இப்போதெனுக்கருளு மென்குருவேயென்றுரைத்தான்
அப்போதுரோணருமே ஆமென்றுதானடந்தார்

## துரியோதனன் முதலானோர் கலியாணத்திற்கு துவாரகைக்கு புறப்படுதல்

நடந்தார்துரோணருமே நல்லாதமேரி
நடந்தாரவர்கூடச் சூராதிவீரரெல்லாம்
திக்கெல்லாங்கொண்டாடுஞ் சிறுவீஷ்மர்நடந்தார்
அக்கினியாய்த்தானெரிக்கும் அசுவத்தாமாநடந்தார்
கையில்த்தனுவெடுத்துக் கர்ணன்மிகநடந்தான்
பொய்வஞ்சகச்சூது புகல்சகுனியும்நடந்தான்
சவுரியங்கள்தான்பேசிச்சயித்தவனுந்தானடந்தான்
பவுருசமதாகபாரமன்னரும்நடந்தார்
விசையன்மகன்னைபார்க்கவிதானுமேதானடந்தார்
பிசகுசொல்லாகாங்கையரும்பிரியமுடனேநடந்தார்

சிங்களவர்கன்னடியர் தெலுங்கருடனேநடந்தார்
கொங்குமலையாளர் குடகருமேதானடந்தார்
பதினெட்டு அக்ரோணி படைமன்னர்தானடந்தார்
குதிரைத்தளங்களெல்லாங் கொக்கரித்துத்தானடந்தார்
எதிரிட்டவரைவெட்டு மிராசாக்கள்தானடந்தார்
அதிரதருங்குச்சரரும் அலங்காரமாய்நடந்தார்
இருப்புலக்கை கைப்பிடித்து மிராசாக்கள்தானடந்தார்
நெருப்புகளைப்போல்முழிக்கும் நெட்டோர்தானடந்தார்
வெங்கலத்தேர்க்காரரெல்லாம் வெற்றிசொல்லியேநடந்தார்
பங்கிகளைத்தின்னுகின்ற பட்டாணிமார்நடந்தார்
பச்சைமரகதங்கள் பதித்தரதமேறி
இச்சைகொண்டமாப்பிளைபோ லிலக்கணனுந்தானடந்தார்
திரியோதனனரதத்தில் சிங்காரமாய்நடந்தார்
இத்தனையுஞ்செய்யும்வஞ்ச னேர்தல்தனையின்றேனும்
சுத்தமில்லாப்பெண்பிள்ளை சூழவேதானடந்தார்
மணக்கோலஞ்செய்யவென்று வந்தபடையத்தனையும்
பிணக்கோலமாக்கவேமன் பின்னேதொடர்ந்துவந்தான்
படிக்குங்கலியாணப் பந்தலிலேரத்தவெள்ளம்
குடிக்கவென்றுபேய்கள்முன்னே கூத்தாடிச்சென்றதுவே
இந்தவிதமாக வெழுந்துபடை சூழ்ந்துவர
வந்தான்துரியன் மனமகிட்சியாகவேதான்

## துரியோதனன் துற்சகுனங்காணுதல்.

வணங்காமுடியோனும் வருகின்றபாதையிலே
இணங்காச்சகுனமதை யென்சொல்வேனம்மானை
குறைத்தலைப்பேய்கள்வந்து கூகூவென்றேயலறும்
நரைத்தலைப்பேய்தன்னுடனே நரிகள்வந்தூளையிடும்
காகந்தடுக்கக் கருநாய்களூளையிட
கூகைபலரிடவுங் குறுமுயல்கள் தான்வரவும்
பாம்பானதுவோடிப் படத்தையெடுத்தாடிடவும்
ஆம்படையானில்லா தனங்குயெதிர்வந்திடவும்
தீர்க்கமில்லானெண்ணெய்கொண்டு செக்கானெதிர்வரவும்
கூக்குரலாய்சத்தங் குளரியழுதிடவும்



பாப்பானெதிர்வந்து பஞ்சாங்கஞ்சொல்லிடவும்
சாப்பாடில்லாமல் தவசியெதிர்வந்திடவும்
நெருப்பெடுத்துப்பேதை நேராகவந்திடவும்
குருக்காப்பூனை குட்டியுடனோடிடவும்
ஆகாச்சகுன மனேகமெல்லாங் கண்டுமன்னன்
போதாக்கலையெல்லாம் புத்திதனிலேயடக்கி
நடந்தானிலக்கணர்க்கு நல்லமணமுடிக்க
விடம்போல்மனங்கொதித்து விகர்னனுமங்கேதுசொல்வான்

## துரியனுக்கு விகர்ணன் புத்திகூறுதல்.

அண்ணா துரியரசே யரசருக்கெல்லாமரசே
மண்ணாளும்வேந்தே மறையோர்மரபுதித்த
குருவாந்துரோணர் கூறியதுங்கேழ்க்கவில்லை
சிறியதந்தையாம்விதுரன் செப்பியதுங்கேள்க்கவில்லை
மூதாதையாருரைத்த மொழியுந்தடுத்துவிட்டாய்
எதோவரியே யிணங்காச்சகுனமெல்லாம்
ஆனதுவுந்தீர்தா னிந்திரேயிப்பொழுது
மானபராயிந்த மங்களத்தைத்தானிறுத்தும்
நடந்துவரும்படையும் நல்லோர்களுஞ்சிரிக்க
தொடர்ந்துவரும்படைகள் சோம்பிமுகம்வாட
அருத்தாக்குமிப்பான் அருச்சுனனார் தன்மகனும்
கருத்துக்கிசைந்தபெண்மா கண்டிருப்பொய்யாது
மெய்யாய்நான்சொல்லுவதை வேந்தனேகேளுமினி
செய்யாதகாரியத்தை செய்கிறாய்மன்னவனே
சொன்னாலுங்கோபச் சுடர்போல்விழிக்கிறாய்
மன்னுசகுனி மாமாவால் நம்குடிதான்
தட்டளியக்காலந் தலைமேலேவந்ததினால்
துட்டன்சொற்கேட்டுத் துடிக்கிறாய்மன்னவனே
பேராசையைநிறுத்தும் பெருவிதமுண்டாகுமென
சீராய்விகர்னன் செப்புமொழியைக்கேட்டு
தன்மனதுக்குள்ளடக்கி தார்வேந்தனேதுசொல்வான்
யென்னதான்வந்தாலும் பெத்தனைபேர்சொன்னாலும்
நான்கேட்கப்போறதில்லை ஞாயமுனைக்கேள்க்கவில்லை
வீணாகப்பேசாமல் விகர்னடவுமென்று

நாளுமல்சேனைகளை நடத்திவெளிநடந்தான்
தானுகச்சேனை தளங்கள்வழிநடந்து
போனார்மலையோரம் பூதம்போல்ராவானும்

## இராவான் படுத்திருப்பதைப்பார்த்து துரியன்படைகள் பயப்படுதல்.

மலையோரொழுகாக்கி மற்றோர்மலையதனை
தலகணையாய்ப்போட்டு சாய்ந்துகொண்டுஇராவானும்
பனைமரத்தைத்தான்பிடுங்கி பல்விளக்கிக்கொண்டிருந்தான்
வினையமரியாமல் வேந்தன்முதலானோர்
அந்தவெளியா யவர்களெல்லோருஞ்சேர்ந்து
வந்தார்கள்கால்நுழைய மாட்டாதியங்கிநின்று
இப்பெரியபூதமதை யெங்கும்நாம்கண்டதுண்டோ
செப்புவீர்பிர்மா செகத்தில்படைத்துவைத்த
கற்பினையுமிப்படியோ கண்கலங்குதென்றுரைத்தார்
வெற்புநிகர்தோளான் விடநாகங்கொண்டவனும்
கண்டுகலங்கியவன் கர்னனிடமேயுரைத்தான்
மண்டலீகரெல்லாம் மயங்கிஅங்கு நின்றுகொண்டார்
பார்த்தான்துரியன் பரும்பூதக்கால்நுழைந்தே
ஆர்த்தபெரும்படையை அனுப்புமென்றான்மன்னவனும்
அவ்வார்த்தைகேட்டு அங்கரர்கோனேதுரைப்பான்
இவ்வார்த்தைசொல்லுவரோ யேந்தலேநானிருக்க
பார்க்கிறேனிந்தப் பரும்பூதங்கால்வாங்க
ஆர்க்கிறேனென்று அங்கரர்கோனேதுரைப்பான்
பாரமலைபோலப் படுத்திருக்குமன்னவனே
நேரமல்லோஆகுதுகாண் நீர்கால்மடக்குமென்றான்
ஆரடாநீபுழிப்போ ததட்டிக்கால்வாங்குமென
வீரடாபேசுகிறாய் வேந்தேவழியிலையோ

## இராவானுங்கர்னன்முதலானோருஞ் சண்டைபோடுதல்.

போடாவென்கால்நுழைந்து போகாட்டால்சண்டைசெய்ய
வாடாவெனராவான் வருத்தினனம்மானை
அங்கரர்கோன்தான்வெகுண்டு அனலம்புதானெடுத்து



சிங்கமெனக்கெற்சித்து சிலையில்வைத்துயேவிவிட்டான்
விட்டஅனல்க்கணையும் வெகுண்டுவெருங்கொடுமை
அட்டதிக்கிலுள்ளவரும் ஆகாசவானவரும்
கண்டுபதரிக் கலங்கினாரவ்வேளை
வண்டனெனும்ராவான் மயங்காதொருகரத்தால்
எட்டிப்பிடித்து யெரிகணையைத்தானொருக்கி
விட்டெறிந்துபோட்டு வெகுகோபந்தானாகி
சுழல்பாணந்தானெடுத்துச் சூரனந்தக்கர்னனையும்
விழப்பண்ணவேணுமென வில்வளைத்துநாணொலித்து
தொடுத்துவிட்டானப்போ சுழல்பாணந்தானெழுந்து
கடுமையுடன்வந்துஅந்தக் கர்னனையுந்தேருடனே
எழுப்பியேஆகாசத் தேகினான்காணம்மானை
கருப்போலவேதுரியன் கண்டிருந்தானம்மானை
வானவருந்திக்கிலுள்ள மன்னவருந்தான்பார்த்து
மான்பரன்கர்னனுக்கு மரணநாளின்றோடே
சரியாச்சோவென்று தயங்கிநின்றுபார்த்தார்கள்
எரிப்பாயத்துரோணரிருந்துமதைச்சகிக்க
மாட்டாமல்வில்வளைத்து மணிமந்திரமுச்சரித்து
தேட்டாளனைத்திருப்ப சிந்தைவைத்து ஓர்கணையைப்
போட்டாரதுபோய்ப் பிராவலனைத்தேருடனே
வாட்டாமலேதிருப்பி வந்ததுகாண்பூமியிலே
அப்போதுகர்னன் அலங்கோலமாய்விழுந்து
தப்பிப்பிழைத்தமெனத் தானெழுந்துஆசாரி
பாதந்தனைத்தொழுது பார்த்திபனங்கேதுரைப்பான்
ஆதரிக்கதெய்வமுனை யல்லாதுவேறுமுண்டோ
நாதனேயென்றுபின்னும் நமஸ்கரித்தானம்மானை
இன்றுவிடுவேனோ யிவனுயிரைவாங்குகிறேன்
என்றுஅங்கர்கோமா னெடுத்துரைக்கஆசாரி

## துரோணர் கர்னனுக்குப் புத்திகூறுதல்.

ஆகாதுஉன்னா லவனுயிரை வாங்கிவிட
வேகாதசம்மா விருதாவில்ப்பேசாதே
பஞ்சவரிலேவிசையன் பாலன்போல்த்தோனுவதால்

அஞ்சாதொருவருக்கும் அதாசூரனென்றறியும்
நாம்போகும்கல்யாணம் நன்றாயவனறிந்தால்
சோம்பாதொருநொடியில் குலைத்திடுவானம்மையெல்லாம்
என்னாலுமுன்னாலும் யெவராலும்வெல்லரிது
மன்னுமெனவே வளுத்திரைப்போது
அனல்போலவேசொதித்து அராவானுமேதுரைப்பான்
சினமோடெதிர்த்த சேவகனேநீதானும்
அருண்டுறுடுங்கிமன தஞ்சியேநிற்பதென்ன
திரண்டுவந்தசேனையெல்லாஞ் சேரமயங்குவதேன்
சொல்லடாவென்றான் துற்சாதனன்வெகுண்டு
வல்லபங்கள்பேசி வாளெடுத்துவிட்டெறிந்தான்
வீசியவாளையொடித்து வில்லாலடித்திடவே
தோசியவனிந்து அடிதடித்துஓடலுற்றான்
சிரித்தந்தரவானும் செப்புவானம்மானை
வெருவியேஓடுவரோ வீரமிகுமன்னவர்கள்
வந்தபெரும்படையின் மன்னவரோநீங்களும்பார்
இந்தட்சணமுரைப்பீ ரில்லாட்டாலுங்களையென்
லாலுனதத்துக் கசக்கிடுவேனென்றுரைத்தான்

## இராவானை சகுனிமுதலானோர் வேண்டித் துவாரகைக்கு செல்லுதல்

ஏலாப்பயல்சகுனி யெடுத்துரைப்பானம்மானை
நல்லவரேகேளுமினி நாகக்கொடிவேந்தன்
செல்வரேதுவாரகையில்த் திருவிளாபார்க்கவென்றே
போராரெனவுரைத்தான் புத்தியுள்ளராவானும்
தீராதகோபமுடன் செப்புவானம்மானை
சூதினல்பஞ்சவரைத் துரத்தினன்கானகத்தில்
மாதுதுரோபதையை மயிர்பிடித்துராஜசபை
தன்னில்த்துகிலுரிந்தச் சண்டாளப்பாவிகளை
சென்னிவிளக்கொல்வனெனச் செப்பிவசையும்பேசி
பின்னுமவன்சகித்துப் பேசுவானம்மானை
யென்தந்தைமார்க ளிட்டசபதப்படியே



கொல்லவல்லோவேணுமவர் கூறுமொழிதப்பாமல்
அல்லவென்றுசொல்வதெனக் கழகிலையென்றேயுரைத்துக்
காவலரேயெந்தன் காலின்கீழேநுழைந்து
போவதுவேஞாயம் போங்கள்பிழைத்தீர்களென்றான்
அவ்வார்த்தைசொல்லுமுன்னே அரவக்கொடியோன்முதலோர்
செவ்வையாய்க்கால்நுழைந்து சென்றார்களம்மானை
துரோணாசுவத்தாமன் சொல்ப்பெரியவிஷ்டுமரும்
விரோதமுங்கினையா விதுரனையுமோராவான்
கண்டுதெண்டனிட்டுக் கரங்குவித்துப்போங்களெனக்
கொண்டாடிவிட்டான்காண் கொற்றவனுமம்மானை
எல்லாருமொன்றாகி யின்றுபிழைத்தோமெனவே
நில்லாமற்சென்றார் நெடுமால்பதிநோக்கி
பாளையமுந்தாமும் படைமன்னர்தன்னுடனே
காளமுகில்மேனியனார் கன்னருடதன்பதியும்
காதவழித்தூரங் காணுமெனமன்னவனும்
ஆதரவாய்ச்சோலைதனி லடித்தார்கள்கூடாரம்
கூடாரந்தானடித்துக் கொற்றவனும்வீற்றிருந்தான்
வாடாமல்ச்சேனைதளம் வந்திருந்தாரம்மானை
இருந்துமிளைப்பாறி யெல்லோருந்தானரிய
வருந்திவினைவிளைக்கும் மன்னவனுமன்னேரம்
சயிந்தவனைப்பார்த்து தானேதுரைக்கலுற்றான்
துயர்ந்துவரவேண்டுஞ் சுருக்காகயின்னேரம்
திரமாயெனையீன்ற திருதராட்டிதனுடனே
உரைமுறைகள்பெண்டு பிள்ளையுற்றசனமெல்லோரும்
கூட்டிப்போயின்னேரங் கோபாலர்தானரிய
வீட்டிலிருங்காணும் விடிந்துஒருநாளிகைக்குள்
வருவோமெனவே வயணமெல்லாம்நன்றாக
பெருமாளிடத்தில்ப் பிரியமுடன்சொல்லுமென்று
உத்தாரமிட்டானுரைத் தமொழிதப்பாமல்
பொத்தார்பிரந்தார்கள் பின்னையுமுண்டானவரை
தேரின்மேலேற்றிவெகு சிங்காரமாகவுமே
ஊரில்ச்சனங்கள்மெய்க்க உற்றசயிந்தவனும்

## சயிந்தவன் முதலானோர் கிருஷ்ணரிடம் போய்த் தெரிவித்தல்

சுகமாகவந்தார்கள் அய்யமால்பட்டணத்தில்
அக்ஷணதமாயவனு ரண்டையிற்போய்க்கண்டுகொண்டார்
இந்தப்பெருமைகொண்டு யிங்குவந்தபேரையெல்லாம்
அந்தப்புரந்தனிலே அளகாயனுப்பிவித்து
தன்னிடமாய்வந்த சயிந்தவனைத்தான்பார்த்து
மன்னவனெங்கேமற்றுமுள்ள மற்றரசர்தானுமெங்கே
என்றருளிக்கேட்டா ரென்பெருமான்கோபாலர்
நின்றுசயிந்தவனும் நெடுமால்தனைப்பார்த்து
சூராதிசூரன் துஷ்டருக்குமார்பாணி
வீராதிவீரன் விருதுபெற்றகெம்பீரன்
மண்டலத்தை தயாளும் வணங்காமுடிவேந்தன்
தெண்டிரையில்கீர்த்திபெற்ற திரியோதனப்பெருமாள்
பார்த்தனையும்வீமனையும் பகற்பொழுதிலேயுயிரை
மாத்திவிடவல்ல வணங்காமுடிவேந்தன்
தாரணியோர்மெச்சும் சதுரங்கசேனையுடன்
காரணரேகேளுமுங்கள் நல்லபூங்காவனத்தில்
தென்பாகவந்து அங்கே சேர்ந்தார்கள்வந்தசெய்தி
அன்பாயுமக்கரிய வனுப்பினரெந்தனையும்
வணக்கமுடனே மகிழ்ந்துசயிந்தவனும்
இணக்கமுடனிவ்வார்த்தை யியம்பினனம்மானை

### விருத்தம்.

சிந்தைமகிழ்பூங்காவனத்தில் திரியோதரனுஞ்சேனையுடன்
வந்தவபணைஞ்சயிந்தவனும் மகிழ்ந்தேதவுரைக்கமால்கேட்டு
இந்தவினையைத்தவிர்ப்பதற்கு யிதுதான்சமயமெனவெழுந்து
சொந்தமருகன்றனைத்தேடிச் சுருக்காய்நடக்கத்துணிந்தாரே.

### அம்மானை.

இருங்காண்சயிந்தவனே யினிமேற்கலியாணம்
வருங்காரியம்பார்க்க வாரோமரைச்சணத்தில்
அரவக்கொடியோனை அழைத்துவரோம்வாரோம்
ஒருவர்க்கிதுவசனம் உரையாதேயென்றுசொல்லி



## கிருஷ்ணன் மறையவர்வேடமெடுத்து வாள்வீமனிடம் செல்லுதல்.

மாதவனுந்தானடந்தார் மறையவனைப்போல்வேஷம்
பேதகமில்லாமலொரு பிறைக்கலையுடுத்தி
பஞ்சாங்கங்கைதனிலே பாவனையாய்த்தானெடுத்து
அஞ்சாருமுன்குடுமி அளகானபொன்னூலும்
தளன்றவயசதுபோல் தடியுமொருகையூன்றி
குளன்றுநடந்தார் கோமான்கள்நோக்கி
மெள்ளநடந்தார் விசையபுரநகரில்
தள்ளிநடந்துமிகத் தானேவருகையிலே
விற்பிடித்தகையான் விசையனுடபுத்திரனும்
தெற்பக்குளத்தருகில் சிறந்தமணிமண்டபத்தில்
வலுத்தவர்கள்செய்யுமின்ற வஞ்சனையெல்லாம்நினைந்து
சலித்திருக்கும்வேளைதனில் தான்வந்தாரேதியரும்
ஆர்காணுமிங்குவுமக் காசிருவாதமென்றார்
நீர்தான்சலித்திருக்கும் நினைவுகளைச்சொல்லுமென்றார்
சொல்லுமென்றவேதியரே சோதிடமும்நீரறிந்தால்
வல்லமையாய்ச்சொல்லுமையா மனதில்நினைத்ததெல்லாம்
நினைத்தகருமமதை நீரறிந்துசொன்னக்கால்
மனையிலமுதுபடி வாங்கிவந்துநான்தாரேன்
நல்லமொழிசொல்லுமென்றான் நாராயணன்மருகன்
கல்லையுருவாக்கிவைத்த கார்வண்ணர்தான்கேட்டு

## அபிமன்னனுக்கு மறையோன் சோதிட பொருத்தஞ்சொல்லுதல்.

பஞ்சாங்கந்தன்னையுமே பார்த்துத்தரைதனிலே
அஞ்சாறுகோடு அதிசயமாய்த்தான்கீறி
மேஷம்ரிஷபமென்று விரலைமடக்கியெண்ணி
இராசியும்லக்கணமும் நன்றாய்மிகப்பார்த்து
கற்கடகஞ்சிங்கங் கன்னிக்கேயல்லாது
மற்கடகத்திற்கு வாய்க்குமோமன்னவனே
மன்னனேசொல்லுகிறேன் மனதில்நினைத்ததெல்லாம்
என்னவென்றுகேட்டா லினிக்கேளுஞ்சாஸ்திரத்தை

காணுதுகாணுந்தன் கருத்திலினைத்தவகை
பேணியேயுந்தனுக்குப் பேசியிருந்தபெண்ணை
இடர்களுங்களுக்கு யெதிரிஒருமன்னவனும்
துடர்வாய்ப்பகன்றனக்குச் சோபனமுஞ்செய்யவென்று
பேசினர்காணுமந்தப் பெண்ணைப்பயின்றவன்பால்
இராசிதானென்றவனும் நலமாகச்சம்மதித்து
பரிசமதுவாங்கியிந்த பங்குனிமாஸந்தயிலே
வரிசைபதினெட்டாகும் வாகானதேதியிலே
வெள்ளிக்கிழமை விடிந்தேழுநாழிகைக்குள்
கள்ளக்கலியாணம் கருதிமுடிப்பதற்கு
மாப்பிள்ளையைக்கூட்டி வந்தேதபூங்காவனத்தில்
தாப்பதிலேசெய்துமிகத் தானேயிருக்கிறார்
அனியாயமாக அவர்கினைத்தகாரியத்தில்
சனியன்பிடிக்கிறான் தாலிகட்டமாட்டான்காண்
பெண்டாட்டியாளைப் பொருந்தமில்லாமாப்பிளைக்கு
கண்டாசைப்பட்டதல்லால் காரியமுங்கிட்டாது
மலைபோலபடைபெருக்கி வந்திருந்தமாப்பிளையும்
தலைகீழ்விழுந்தாலுந் தாலிகட்டமாட்டான்காண்
விகற்பமில்லைப்பெண்ணதனை வேண்டியேபெற்றெடுத்த
தகப்பன்மனதுசற்றே சம்மதியில்லாததினால்
கற்புக்கருந்ததியாள் கன்னியெனும்பெண்டனக்கு
அற்பமினைவுசற்று மவள்தனக்கில்லாததினால்
தன்மாமிபிள்ளை தனக்கேபுருடனென்றும்
அன்பாகநெஞ்சி லவளுக்கிருப்பதினால்
அவன்தானினைத்தபடி யாதுமேயல்லாது
இவராலொருகருமம் மேலாதுமன்னவனே
உமக்குவியாழமது உச்சமிருக்குதென்று
நமக்குத்தெரிந்தபடி நவின்றோம்காண்மன்னவனே
நாளுடனேலக்கினமும் நன்றாயிருக்குதுகாண்
வாளெடுத்துநீர்தான் வளிகடவுமன்னவனே
ஓலைபொழுதிவிட்ட வுறுதியிருந்திருப்பீர்
சோலிசெய்யவேண்டாஞ் சுருக்காய்நடவுமென்றார்
இந்தவசன மெடுத்துரைத்தான் மாமறையோன்



அந்தவசனமெல்லாம் அரிமனுமேதான்கேட்டு
திருந்தமுள்ளமன்னன் சிந்தைதனிலமகிழ்ந்து
கருத்துள்ளவேதியர்தன் காலிலவணங்கித்து
நினைத்தவையனைத்தெல்லாம் சீர்திருத்துசொன்னதினால்
மனத்துயரந்தீர்ந்ததென்றான் வாள்வீமனம்மானை.

## விருத்தம்.

வேதங்காலைமேமிதரிந்துகொல் விமலனேமனமாதவா
விந்தையான அரவிந்தபாதமது வேறுமென்னுமுடிமேலையா
நீதமென்றபொருளேயெனக்குதவி நீரெழுந்தருளிவந்ததால் [றல்
நினைவிலென்னுகிறவிசனமென்றியொரு நிலையில்நின்றுனது அருளி
வாதுசெய்ததிரி யோதனதியர்தன் மாமிளைந்தெனது வாளிறல்
மாயனஞ்சயெதிராகவந்தபடை மாரியோடமனமாலினான்
காதல்கொண்டதிருமாலுடன்புதல்வி கன்னிதன்னைமாலைசூட்டவே
கருணையானவரமேயெனக்கருள்செய் கமலபாதமதுசரணமே.

## அம்மானை

கமலாசனத்திருக்குங் காரணனேகாரணனே
தமியேனைக்காக்கவந்த சாமிசரணமய்யா
துயராலெனதுமனஞ் சுழலுகின்றதேதனில்
தயவாககாக்கவந்த சாமிசரணமய்யா
வாருடையசுந்தரியை மாலையிடவேனுமென்று
தாகத்தைத்தீர்க்கவந்த சாமிசரணமய்யா
சுந்தரியைமாலையிட்டு சுகம்பெறுவீரென்றுசொல்லி
எந்தனுக்குநல்வாக்கு யிப்போதுதாருமய்யா

## மறையவர் வாள்வீமனுக்கு நல்வாக்குகொடுத்தல்.

கவுரவர்கள்தன்னுடனே சண்டைபடைகள்வந்தாலும்
அவரைச்செயிக்கவாம் ஆரணனேதாருமய்யா
குறைதயாதசெல்வங் கொடுத்திடவேணுமய்யா
மறையோனேயென்று வணங்கினன்வாள்வீமன்
குணங்களுடனேதான் கூறுவான்மாமறையோன்
பணங்காசுக்காசைவைத்து பச்சைமால்தன்மகனை

நிச்சயமதாக நினைத்தபடிநீர்முடிக்க
அச்சனைதயிந்தாவென்னவே அபிமனுக்குத்தான்கொடுத்து
எட்டுத்திசையோர்வந் தெதிர்த்தாலும்வெல்லவென்று
தொட்டுக்கொடுத்தார் சுகுர்தருணன்கைவாளை
வாளைநமஸ்கரித்து வாங்கினான்வாள்வீமன்
ஆளிலுயில்மாயனுமே ஆகாசமார்க்கமதாய்
எழும்பிப்பனையபடி யில்லாத்தில்வந்திருந்தார்
வளம்பொருந்தும்பார்த்தன்மகன் மறையோனைக்காணமல
என்னபுதுமையிது யிங்குவந்தமாமறையோன்
பின்னையொருவரில்லை பெருமாளெனநினைந்து
இனிமேலுஞ்சும்மா யிருக்கப்போகாதெனவே
தனிமையாயன்னையிடம் தான்வந்தானம்மானை

## அபிமன்னன் தாயாரிடம் விடைகேட்குதல்.

### விருத்தம்.

அன்னையேபோற்றிபோற்றி அன்புள்ளதாயேபோற்றி
முன்னமேயெனக்குப்பேசி மொழிந்தசுந்தரியாள் தன்னை
இன்னிலமரியவேதா னிச்சணமடியேன்சென்று
கன்னியைமாலைசூட்டக் கருத்துடனனுப்புவீரே.

### இதுவுமது.

அரியானயன்வந்தாலு மரவுயர்த்தவன்வந்தாலும்
பெரியவர்துரோணசாரி பின்னுமற்றெவர்வந்தாலு
முரியவன்படைகளெல்லாம் முகூர்த்தமொன்றினிலேவென்று
கரியமால்மகளைத்தாலி கட்டவும்வரஞ்செய்வீரே.

### அம்மானை.

என்னைப்பயின்றெடுத்த யின்பமுள்ளதாயாரே
உன்னைத்தொழுதேனு னுகந்தபிள்ளையாகையினால்
மாயன்மகளாரை மாலையிட்டுநான்வரவும்
தாயேயெனக்குவரந் தந்தருளவேணுமம்மா
எத்தனைபேர்வந்து யெதிர்த்தாலும்வானதனால்
அத்தனைபேர்தன்னையுமே அரைச்சணத்திலேஜெயித்து



மாப்பிள்ளையாமென்றுவந்த மன்னனிலக்கணர்க்கு
காப்புத்தரிக்குமுன்னே கலந்துகொள்ளவேணுமம்மா
வேண்டினான்தாயை மிகப்பணிந்துதாலுரைத்தான்
காண்டீபன்தேவி கருத்தயர்ந்துமெய்சோர்ந்து
பெரியதவத்தால்நான் பெற்றெடுத்தகண்மணியே
அரியவனம்போன அருச்சுனனார்தன்மகனே

## சுபத்திரை அபிமன்னுக்குப் புத்திகூறுதல்.

வஞ்சகமில்லாமலேவா வனவாசந்தான்போனார்
பஞ்சம்பிழைக்கயிந்தப் பட்டணத்தில்வந்திருந்தோம்
வயதுபிழைக்கவல்லோ. வந்தோமிவ்வூர்தனிலே
சயதுதனையெடுத்துக் கழுத்திலசுருக்கிட்டதுபோல்
எல்லோருங்கூடி யிலக்கணக்குமாரனுக்கு
கல்யாணஞ்செய்து கன்பானையத்துடனே
வந்தேயிருக்கும் மணவறையின்பந்தலிலே
எந்தவிதம்போய்வருவாய் யென்மகனேபேசாதே
உனக்கொருபெண்ணிந்த வுலகிற்கிடையாதோ
தனக்குமுகும்முடைய ஜாதியிலேபெண்பார்த்து
செல்வக்கலியாணமதாய்ச் செய்யுகிறேனென்மகனே
மல்லுக்குநீயிணங்க வேண்டாமடாமகனே
அத்தைமகள்சுந்தரிமே லாசைவைத்துப்பேசுகிறாய்
பத்தயிலையெலட்சுமிக்கு பவுசுரொம்பயென்மகனே
மாமன்மகளென்றுசொல்லி வாஞ்சைவைத்துப்பேசுகிறாய்
கோமனைக்குண்டியவன் குடுக்கலியாமெனமகனே
அனியாயஞ்செய்யு மரவக்கொடியோன்தளத்தில்
சனியன்பிடித்து தானலைவானென்மகனே
வனம்போனபஞ்சவர்கள் வருவார்பதறுதே
தினம்பாதகமெனவே தெரியாதோயென்மகனே
நன்றானகாலம் நமக்குவருங்காலையிலே
அன்றேகலியாண மப்போமுடித்திடலாம்
வெத்திபெருமன்னன் விதர்ப்பர்கோன்பெற்றெடுத்த
பத்தினியைகலியாணம் பண்ணலாமென்மகனே
நாடாள்வாயென்றுன்னை நான்தான்நினைத்திருக்க

மாடாடுமேய்க்க வரச்சொல்வானுன்மாமன்
வேல்சிரக்குங்கண்ணுறவுன் வில்பிடித்தகைபாலே
பால்கரக்கச்சொல்லியல்லோ பண்ணுவானுன்மாமன்
பானையத்தார்தங்களுக்குப் பால்தயிர்மோர்தானெடுத்து
வனியத்தில்போவெனவே ஓட்டுவானுன்மாமன்
ஊத்துகிறேன்கஞ்சியிப்போ வார்க்காலிமாட்டையெல்லாம்
சேர்த்துவிட்டுமேய்த்துவரச் செப்புவானுன்மாமன்
பெண்ணுனசுந்தரியைப் பெற்றெடுத்தவெட்கமியும்
விண்ணுணம்பேசியல்லோ விதியிலேதான்வருவாள்
பேரும்பெருமை பிரபலமுமானேனென்பாள்
ஆருமெதிரில்லையென்பா ளத்தைதபுடதன்சேதி
பெருமைசொல்லிக்கொள்வார்தம் பெண்ணையெடுப்பாரோ
அருமையில்லாப்பேரிடத்தி லடுத்தடுத்துப்போவாரோ
தாரமவர்களில்லை சொந்தமடக்காறுவும்
ஈரமில்லாநெஞ்சருட னிணங்கியிருப்பாரோ
சாதிசனமென்றுசொல்லி சம்மந்தம்செய்வதிலும்
வருமதியாம லிருப்பதுவேநல்லதென்று

## வாள்வீமன் தாயாருக்கு ஞாயங்கூறுதல்.

சலிப்பேபெரிதாகச் சாற்றினள்தாயாரும்
ஒலிப்பானவார்த்தையெல்லாம் வுற்றவீமன்தான்கேட்டு
தேனுரைபோல்நீயுரைத்த சேதியெல்லாமுள்ளதுதான்
நானுமொருசெய்தி நவிலுகிறேன்கேட்டருள்வீர்
மாருதிரவிகுல வம்மிசத்திலேபிறந்த
ஸ்ரீராமன்கானகத்தில் சேர்ந்ததனையறிவீர்
மாதாகைகேயிசொன்ன வார்த்தைதனைமாறாமல்
போதாதகானம் புகுந்ததுவுங்கேட்டிருப்பீர்
பிள்ளைகள்தான்பிறந்தால் பிதிர்வாக்கியங்கள்தனைத்
தள்ளிவிடப்போகாது தாரணியிலென்தாயே
மகிமையுடனிப்புவியில் மானிடராய்த்தான்பிறந்தால்
புகல்பெருமையல்லாது பொருள்பெரிதோவென்தாயே
முன்னுலகறிய முகூர்த்தமிட்டசுந்தரியை
இன்றுவில்விட்டுவிட்டால் வெகுநிந்தைப்பார்கள்



வஞ்சனையேசெய்து வாழுந்துரியோதனர்க்கு
அஞ்சிவிட்டோமிருந்தா லரசர்கையாரோ
பேயாகிலும்நீதான் பெற்றபிள்ளைநானிருக்க
தாயேயுன்வாக்குத் தவறிவிடலாமோ
பச்சைமால்தன்னுடைய பாக்கியத்தைதவேணுமென்று
இச்சைகொண்டுநானு மியம்பவில்லையென்தாயே
இந்துநுதலழகி யேலக்கருங்குழலாள்
சுந்தரிமேலாசைவைத்துச் சொல்லவில்லையென்தாயே
சபையறியநீயுரைத்த சத்தியம்பொய்யாகாமல்
உபகாரியமுடிக்கத் துடங்கினேனென்தாயே
நீயுரைத்தசொல்லையும்நான் நிலைநிறுத்தேனுமாகில்
நேயமுறும்பஞ்சவரை நிந்திப்பாரென்தாயே
ஆகையினால்வேறொன் றனைப்புகள்செய்யாமலும்நான்
போகவிடைதாருமென்று புதல்வன்பணிந்துநின்றான்
பணிந்துநின்றதன்மகனைப் பார்த்தேசுபத்திரையும்
துணிந்துமனமகிழ்ந்து சொல்லுவாளம்மானை
இடரான நூற்றுவர்க ளிருந்தபடைமன்னரெல்லாம்
கடல்போல்வளைந்துனைக் கலக்கிடவந்தாலும்
உத்தவுடைவாளா லொன்னலரைத்தாசெயித்து
சுந்தரியைமாலையிட்டுச் சுகமாகவாருமென்று
அனுப்பிவிடைகொடுத்து அவனைமிகநினைந்து
மனுப்புகுந்தமாளிகையில் வந்திருந்தாளம்மானை

## அபிமன்னன் தாயாரிடம் விடைபெற்று துவாரகைக்குச்செல்லுதல்

### விருத்தம்.

சதிர்பெருதாயார்தன்னைத் தூண்வலமாகவந்து
துதிசெய்துமலர்கள்தூவித் தொழுதுதனைவாருமேத்தி
அதிவிதரணங்களு ரபிமனுமாக்ரமித்து
எதிரிகளெவனுரென்று பெருந்துமேநடந்தானன்றே

### அம்மானை.

அன்னைதனைத்தொழுது ஐவர்தனைநெஞ்சில்வைத்து
உன்னிதமாய்மாயனையும் உள்ளினைந்தேதீரனிந்து

கச்சைகட்டிவில்லெடுத்து கட்டாரி தான்சொருகி
பச்சைமுருகுடனே பதக்கமிகவணிந்து
மலைநிகர்த்ததிண்புயத்தில் வச்சிராங்கிச்சோடணிந்து
தலைமேல்முடிசூடி தங்கரத்னக்குண்டலமும்
காதிலணிந்து கண்ணாடி தான்பார்த்து
பாதிமதிசூடும் பரமன்தனைத்துதித்து
கையிலேதானெடுத்தான் கனத்தவச்ரவாளதனை
மெய்யெல்லாந்தான்குளிர்ந்து விசையபுரத்தைவிட்டு
தர்மந்துணையெனவே தானடக்கவாள்வீமன்
கர்மமெல்லாந்தூற்றுவரைக் கலந்துகொண்டதம்மானை
திசைநோக்கியேநடந்தான் திருமால்துணையெனவே
அசையாதகுன்று மடவிகளுந்தான்கடந்து
சோலைவனமூங்கில்வனஞ் சொற்பெரியபூங்காவும்
பாலைவனந்தான்கடந்தான் பார்த்தன்மகன்வாள்வீமன்
ஆறுகடந்து அடவிகளுந்தான்கடந்து
ஊருகடந்து உயர்ந்தமலைதான்கடந்து
திருடர்கடமாடுந் திரள்வனங்கள்தான்கடந்து
கரடிபுலிவாளுங் கானகமுந்தான்கடந்து
நடந்தான்வெகுதூரம் நாராயணாவெனவே
தொடர்ந்துவரும்போது சொற்பெரியகங்கைநதி
பெருகிவரக்கண்டு பிர்மைகொண்டுவாள்வீமன்
அருவிதனைக்கடக்க ஆற்றுமனதுள்ளுடைந்து
தாமோதரனேயுன் தஞ்சமல்லாலெங்களுக்கு
ஆமோஒருசெயலு மச்சுதனேஆறுதனை
கடக்கவரந்தாவெனவே கங்காபவனிதன்னை
வடக்குமுகமாகநின்று வணங்கினனம்மானை

## விருத்தம்

எல்லாவுயிர்கள்தனைக்கார்க்கு மின்பக்கடலேயெவர்களுக்கும்
நல்லாதரவுநின்னையன்றி நானேவறியேன்நாயடியேன்
பொல்லாதவனென்றெண்ணமல்ப் பொருத்தேவளிநீ விடுகெனவே
வில்லார்பெரியவிசையன்மகன் மிகவும்வணங்கித்தொழுதானே



### அம்மானை

தாயேபுவியைத்தன்னைக்கவரும்லெட்சுமியே
தாயேயுனக்குமொரு நல்லடிமையாகையினால்
மனதிரங்கியெந்தனக்கு வழிவிடவும்வேணுமம்மா
தனதுமகனெனவே தற்காக்கவேணுமம்மா
அம்மையேயென்று அடிபணிந்தான்வாள்வீமன்
செம்மையுடன்மகிழ்ந்து சிந்துகங்காதேவியுமே
தாழ்ந்துவழிவிலகத் தான்கடந்தானாறுதனை
சூழ்ந்தவனங்கடந்து அருசாய்நடக்கலுற்றான்
கட்டாகன்வாள்வீமன் கடுகிவழிநடந்து
வட்டமொருபாறைதனில் வந்திருந்தானம்மானை

## வல்லரக்கன் வாள்வீமன் நித்திரையை எழுப்புகிறது.

### விருத்தம்

சோலைசேர்பாறைதன்னிற் சுகமெனயிருந்தான்பின்னும்
பாலகன்தூயரம்நீங்கப் படுத்துநித்திரைசெய்போது
சீலமாய்த்தெரிசனத்திற் சீதான்மகனைத்தானும்
மாலையிட்டவளோடின்ப மகிழவுங்கனவுகண்டான்

### அம்மானை.

பாறைதனில்வாள்வீமன் படுத்துவுறங்கையிலே
காரைப்பழித்தகுழல் கன்னியெனும்சுந்தரியை
மாலையிடவேணுமென வந்தவரைத்தான்செயித்து
தாலிபுனைந்தம்மாதைத் தழுவியணைவதுபோல்
பாலன்கனவுகண்டு பண்பாகக்கண்வளர்ந்தான்
மாலையிருள்பூண்ட வனத்தில்வாழ்வல்லரக்கன்

### விருத்தம்.

இப்படித்தரிசனங்க ளியல்புடன்கண்டேதானும்
விற்பிடித்திலங்குகையான் விசையன்மாமகன்வாள்வீமன்
சொற்படிதூயிலும்வேளை துடித்திடக்கோபமிஞ்சி
கற்படிரெனவேதாண்டிக் காட்டுவல்லரக்கன்வந்தான்.

சிந்த அடித்துச் சிதறிவிட்டானம்மானை
கானகத்தில்வல்லரக்கன் கண்டுமனம்பதறி
மானிலத்தில்வாழு மனிதனிவனுகுமென்று
எண்ணியிருந்தோமே யிவனேசிறுபயல்தான்
பண்ணியதோர்சண்டையிதைப் பார்க்கமுடியாது
ஆனாலுமிப்போ தரைக்ஷணத்திலேயிவனை
நானேவிடுகிறவன் நன்றாயிருந்ததுகாண்
உதட்டில்துரும்பிவனை ஊதிவிடவேணுமென்று
அதட்டினல்வல்லரக்கன் அண்டங்கிடுகிடென
நாறுமலையை நெடிக்குமுன்னேதான்பிடுங்கி
சிறியெறிந்து திரும்பியொருகையாலே
பார்மீதில்நின்ற பதினுயிரமரத்தை
வேரோடேபேர்த்துமிக விட்டெறிந்தான்வல்லரக்கன்
அரக்கனெறிந்தமர மத்தனையும்வாளாலே
நருக்கிக்குவித்துவிட்டான் நாராயணன்மருகன்
அழுத்தமுள்ளவல்லரக்கன் அவீமனையுங்கொல்லுதற்கு
கழுத்தைத்திருகிடவுங் கையால்பிடிக்கலுற்றான்
பிடிக்குங்கரத்தைப் பெருமாளுடமருகன்
அடித்துவிழும்படியாய் துண்டுதுண்டாய்வெட்டிவிட்டான்

## வல்லரக்கன் கையிழந்து சண்டைசெய்தல்.

கைபோனவல்லரக்கன் கனகோபங்கொண்டெழுந்து
பைவாயரவமது பாய்ந்தேரிவாரதுபோல்
கொம்பில்லாமாடு குனிந்துமுட்டவாரதுபோல்
தம்பியவனைச் சரிபிடிக்கவேணுமென்று
எட்டியேபாய்ந்தான் எருமைக்கிடாப்போலே
தட்டினான்வாளால் தான்விலகிவாள்வீமன்
முன்னுலரக்கன் முகம்பார்த்துயேதுரைப்பான்
சொன்னால்தெரியாதோ துன்மார்க்கமுள்ளவனே
உன்னாலெனைச்செயிக்க வொண்ணாதுவல்லரக்கா
என்னாலேநீயிரக்க யிங்குவந்தாய்கண்டாயே
தப்பிப்பிழைத்துமிகத் தானோடிப்போகாட்டால்
இப்போதென்வாளுக் கிரையாய்ப்பலிகொடுப்பேன்



உயிர்பிழைக்கவேணுமென்றால் ஓடியேபோவெனவே
தயிரியமாயிவ்வார்த்தை தான்சொன்னான்வாள்வீமன்
அவீமனுரைத்தமொழி அரக்கனுமேதான்கேட்டு
குபீரென்றெழுந்தான் குவலயமெல்லாம்நடுங்க
பல்லால்மரம்பிடுங்கிப் பார்த்தன்மகன்மேலே
வல்லரக்கன்விட்டெறிய வாள்வீமன்தான்சினந்து
துட்டனிவனைத் துணித்துவிடவேணுமென்று
வெட்டினான்வாளால் விழுந்தானேவல்லரக்கன்
அரக்கன்கடோர்க்கயனுக் கபயமபயமென்று
உரக்கம்பிடித்து உயிரிளந்தானம்மானை

## வல்லரக்கன் அபயக்குரல் கேட்டு கடோர்க்கயன் கமலக்கன்னியிடஞ் சொல்லுதல்.

விருத்தம்

அபயமென் றரக்கன்விழுந்தா னவன்குரலதனைநன்றாய்
சபைதனிலிருந்ததீரன் தளபதிகடோர்க்கயன்தான்
விபரமதாகக்கேட்டு வினைவிதிமுடிவுகாலம்
நிபமதுவந்ததென்றே நினைவினில்த்துயரமுற்றான்

இதுவுமது

அன்னையாங்கமலக்கன்னி அவளிருபாதம்போற்றி
உன்னுடதமையனான வருமையென்மாமனார்க்கு
என்னமோஅவதிகால மெந்தனுக்கபயமென்று
சென்னியில் மயிர்தடிக்கச் செவியினிற்கேட்டேனென்றான்.

அம்மானை

ஆதலால்வல்லரக்கன் அபயமிட்டுவிழுந்தகுரல்
காதிலேகேட்டுக் கடோர்க்கயனுந்தானடுங்கி
தாயார்கமலகன்னி தன்பாதம்போற்றிசெய்து
ஓயாமலேபுலம்பி உரைப்பான்கடோர்க்கயனும்
உனக்குத்துணையான உடற்பிறப்புஉன்தமையன்
எனக்குப்பிலமாக யிருக்கின்றவென்மாமன்

அவதிவருதேவாழு மாரணியந்தன்னிலேதான்
அவதிவந்ததென்று அபயமிடுஞ்சொற்கேட்டு
அறிந்துவருகிறே னம்மாவனுப்புமென்றான்
தெரிந்துகமலக்கன்னி சிக்கிரத்திற்போவெனவே
உத்தாரமிட்டா ளுடனேகடோர்க்கயனும்
வித்தாரமானதொரு வில்லுமிகவெடுத்து
பாய்ந்தேரிநிற்கும் பகழிமிகவெடுத்து
காய்ந்தோரைத்தீய்க்குகின்ற கட்டாரிதானெடுத்து
சூலமிகவெடுத்து துடிமிகுந்தவாளெடுத்து
காலன்தனைச்செயிக்குங் கனத்ததெண்டுங்கைப்பிடித்து
போர்க்கோலமாகப் புறப்பட்டான்வீமன்மகன்
ஆர்க்காகிலும்பயந்து அஞ்சான்கடோர்க்கயனும்

## கடோர்க்கயன் வல்லரக்கனிறந்துகிடப்பதை கண்டு மனவருத்தமடைதல்.

ஓடிவனமெல்லாம் ஒருநாழிகைதனிலே
தேடியேபார்த்துலர்ந்து சிரானமாமனைத்தான்
காணாமல்நெஞ்சங் கலங்கியேதான்புலம்பி
கோணுதமேனியெல்லாங் குலைந்துமனம்புண்ணாகி
எங்கேயினிக்காண்போ மென்னுடையமாமனைத்தான்
சங்கராவென்றுசொல்லி தான்புலம்பிப்போகையிலே
துலையாதபாதையெனுஞ் சொற்பெரியப்பாறையிலே
மலைபோலேதான்விழுந்து வல்லரக்கன்தான்கிடந்தான்
கண்டான்கடோர்க்கயனுங் கனத்ததொருமாமனையும்
துண்டாய்த்தலையறுத்துச் சுருண்டுகிடப்பதையும்
கண்ணாலேபார்த்துக் கதரிவிழுந்தழுதான்
எண்ணுதபெண்ணமெல்லா யெண்ணிமிகவழுதான்
மாமனரக்கனுக்கு மானிலத்திலீடுமுண்டோ
காமன்தனையெரித்த காரணனார்தன்செயலோ
கூர்கொண்டரக்கனையுங் கொன்றமகாவல்லவனை
ஆர்தானெனவறியேன் அரனேஅபயமென்றான்
இந்தஅரக்கனையு மிப்போதுகொன்றவனும்
வந்தால்தெரியுமவன் வாள்சுறுக்குங்கைவலுவும்



என்றேமயங்கி யிவன்புலம்பும்வேளையிலே
நன்றானபார்த்தனுட நல்லபிள்ளைவாள்வீமன்

## வாள்வீமன் கடோர்க்கயனைப்பார்த்து சொல்லுதல்.

முடுகிக்கடோர்க்கயனார் முன்வந்தயேதுசொல்வான்
மடியில்கனமிருந்தால் வழியில்பயங்காணும்
பாங்குடனேவாழுகின்ற பாரிலொருவருக்கு
தீங்குநினைத்தாக்கால் திரும்பிவருந்தீங்கவர்க்கு
மண்ணுலகில்வஞ்சமன்றி வழிநடந்துபோவாரை
கொன்றுதின்போமென்றுவந்தாற் குத்தமல்லோமன்னவனே
தசையிலுணர்விருந்தும் தன்னையுமேகொல்லவந்த
பசுவைவிடுவதுண்டோ பாரிலேமன்னவனே
நம்மிடகாரியமாய் நாமேகும்வேளையிலே
வம்பாகவந்து வழிமறித்தானென்றுசொல்லி
ஏண்டாவழிமறித்தா னென்றவுடன்வல்லரக்கன்
தாண்டியேஓடிவந்து தலையைத்துணிப்பேனென்றான்
தலையைத்துணிப்பனென்ற சண்டாளன்றன்னையுமே
மலையைஉளிசெயித்த வாரதுபோலேயவனை
காயம்பிளந்து கனத்தவுயிர்வாங்கிவிட்டேன்
ஞாயமதைநீயறிந்து நன்றாயுரையுமென்றான்
பாலனிவையுரைக்கப் பார்த்தேகடோர்க்கயனும்

## கடோர்க்கயன் வாள்பீமனைச் சினந்துரைத்தல்

ஆலமதுபொங்குமாபோ லவன்மனதிற்கோபமுற்று
வாடாசிறுபயலே வாய்க்கொழுப்பாய்பேசுகிறாய்
போடாசிறுவா புத்திகெட்டுப்பேசாதே
அரக்கன்தனைவதைத்தோ னரியயனோவென்றிருந்தேன்
பரக்குங்கொசுகுப் பயலோநீகொல்கிறவன்
கரணமதுபோடாதே கடோர்க்கயனுக்கேயெமனும்
திரணமடாநீயுஞ் சிறுபயலோநிற்கிறவன்
வீறிட்டுநிற்குகிறாய் வேண்டாமென்கண்ணாலே

யேறிட்டுப்பார்த்தா லெறிந்துவிடுவாய்பயலே
வல்லரக்கன்தன்னை வதைத்தோமென்றேதுணிந்து
சொல்லவந்தாய்நீயெனக்குச் சுண்டுவிரற்கிடாமோ
பரிட்சைபண்ணவந்துநின்றாய் பயலேவுனதுயிரை
அரைச்சணத்தில்வாங்கி யனுப்புகிறேன்காலனிடம்
பம்மாத்துநாலே பகுடியோபேசவந்தாய்
எம்மாத்திரமெனக்கு யென்றான்கடோர்க்கயனும்
வீமன்மகனுரைக்க விசையன்மகன்தான்கேட்டு
ஆமோவிதுவும் அதிசயமென்றேதுசொல்வான்

## அபிமன்னன் கடோர்க்கயனை சினந்துரைத்தல்.

உரக்கம்பிடித்துன்மாம னுயிர்தான்விடும்போது
இரக்கமுடனபய மிட்டேவிழுந்ததற்கு
வருவோனுடனெதிர்த்து வல்லமைகள்பார்ப்பமென்றே
இருந்தேன்விளையாடி யிளப்பாரியின்னேரம்
வந்துயென்னோடெதிர்த்து வாய்க்கொழுப்பாய்ப்பேசுகிறாய்
இந்தனையாய்ப்பேசுகிறாய் நீதான்படித்தவன்போல்
நீயேதுரைத்தாலும் நில்லாதுயென்னுடனே
பேயேயுனக்குப் பிறகுதெரியுமடா
தாங்கப்படாதசொல்லைத் தானுரைத்தாயிப்போது
வேங்கைப்புலியின்முன்னே வெள்ளாடுதானிகரோ
நரியைமதியாமல் நண்டுகரணமிட்டால்
பரியாசம்பண்ணுதென்று பார்க்குமோமன்னவனே
ஆலோலமென்று அரைக்கீரைவேர்பிடுங்க
ஏலேலப்பாட்டு யேதுகாண்மன்னவனே
நெடுகப்பருத்திருந்தால் நீபலமென்றெண்ணாதே
கடுகுசிறுத்ததினால் காரமதுபோய்விடுமோ
செத்தஅரக்கனுக்குச் செய்வாய்சடங்குகளை
மற்றொன்றுமென்னிடத்தில் வாய்விண்டுசொல்லாதே
மகிமைபெற்றவாள்வீமன் மதியாமல்சொன்னதெல்லாம்
துகையுடனேகேட்டான் துடிசேர்கடோர்க்கயனும்
நெருப்புயெரிவதுபோல் நீலவிழிகள்ரெண்டும்
அருப்பம்படபடென அவன்கோபங்கொண்டெழுந்து



## வாள்வீமனும் கடோர்க்கயனுஞ் சண்டையிட்டுக்கொள்ளுதல்.

துண்டரீகமாகவுமே சொன்னசிறுவனுடன்
சண்டைசெய்யலாமெனவே தன்கையில்வில்லெடுத்து
தனுவைவளைத்துமிகத் தான்பூட்டினான்கணையை
வினைபுரியவாள்வீமன் மேலேதொடுக்கலுற்றான்
தொடுத்தபகழிதனைச் சுருக்குடனேவாள்வீமன்
பிடித்தேயொடித்துவிட்டான் பிலமறியவம்மானை
அம்புதனைத்தானு மபிமன்பிடித்தொடிக்க
வெம்பிக்கடோர்க்கயனும் வேகமாய்க்கண்சிவந்து
சீரானபாலகனுந் திறலபிமன்தன்மேலே
நூறாயிரம்பகழி நொடிக்குமுன்னே தான்தொடுத்தான்
மெய்யானகோபமுடன் விசையன்மகன்மார்புதனில்
ஐயாயிரம்பகழி அரைச்சணத்திலேதொடுத்தான்
பாலகனார்தன்கழுத்தைப் பார்த்தேகடோர்க்கயனும்
நாலாயிரங்கணையை நன்றாய்த்தொடுத்துவிட்டான்
தாரணியுமார்பன் தன்னுடையகண்பார்த்து
நூறுபகழி நொடிக்குமுன்னே தான்தொடுத்தான்
வாளாலபிமன் வலதுகையைத்தான்பார்த்து
ஏழாயிரங்கணையை யெடுத்துத்தொடுத்துவிட்டான்
இந்திராதிதேவர்முத லெவரும்பிரமைகொள்ள
சந்திராயுதமெடுத்துத் தானேதொடுத்துவிட்டான்
அக்கினிபோலேயெரிக்கும் ஐந்நூறுபாணமதை
உக்ரமுடனேதொடுத்தா னுற்றபீமன்தன்மேலே
விரசாய்க்கடோர்க்கயனும் விட்டதொருபாணமெல்லாம்
சரமாரியாகத் தானேவருகையிலே
பூமியதிர்ந்திடவே புனல்சுவறிப்போய்விடவே
ஏமகிரிமுதலா யெட்டுங்கிடுகிடென
வானவர்களெல்லா மருண்டுபிரண்டோட
கானகமெல்லாம்நெருப்பாய்க் கனல்பிடித்துவெந்திடவுஞ்
சந்திரருஞ்சூரியருந் தத்தளித்துப்பின்வாங்க
அந்தரநட்சேத்திரங்க ளதிர்ந்துஉதிர்ந்திடவும்
கார்க்கோடன்போல கடோர்க்கயனும்வில்லெடுத்து

தீர்க்கமுடன்பொருதாள்.செந்தீபிடித்திடவே
கணைமாரிதன்னைக் கண்டேயபீமனுந்தான்
இணையானவாள்தனை யெடுத்தான்கரந்தனிலே
அஞ்சாமல்நின்று அதிர்ந்துவரும்பாணமதை
பஞ்சாகவேயடித்து பார்த்தன்மகனேதுசொல்வான்
கத்தைவித்தையின்னமுண்டோ கைச்சுருக்குமின்னமுண்டோ
அத்தனையும்பார்ப்போமுன் ஆனுவத்தைப்பாருமென்றான்
வில்பிடித்துநீயும் வெகுநாள்ப்பொருதாலும்
அல்பமென்றேயுன்னை அரைச்சணத்தில்கொன்றிடுவேன்
வல்லரக்கன்தன்பழியை வாங்கவந்தவல்லவனே
வில்லெடுக்குங்கைவிரலை வெட்டித்துணிப்பேனின்றே
வீரமுடனிவ்வார்த்தை விசையமகன்றானுரைக்க
தீரன்கடோர்க்கயனுஞ் சிந்தைதனில்க்கோபமுற்று
கோலமுள்ளதெண்டெடுத்துக் கொக்கரித்துஆக்கிரமித்து
பாலகன்மேல்விட்டெறிந்தான் பாரமுள்ளதெண்டதனை
தெண்டாயுதம்வருகத் திருமால்மருகனுந்தான்
துண்டாய்நறுக்கிவிட்டான் துடிவீரன்வாளாலே
பீமன்துணிவறிந்து பண்பாய்க்கடோர்க்கயனும்
சூலமதைவிட்டெறிந்தான் சுகுர்தகுணன்தன்மேலே
சீறிச்சினந்துவருந் திரமுடையசூலமதை
மாறிப்பிடித்தொடித்தான் வாள்வீமனம்மானை
சிறுவனுடதிரத்தால்ச் செயலானதுமறந்து
மருதனுசுதானெடுத்து வாகாகநாணேத்தி
ஓயாமல்மந்திரத்தை யுடனேயுருச்செபித்து
மாயாவினோதன் வளர்கணையைத்தான்பூட்டி
மார்பிளவாங்கி வலுத்தகடோர்க்கயனும்
சீர்பெருகுபாலனுட சென்னிதனைப்பார்த்து
விட்டானொருகணையும் விசையாகவேசினந்து
தொட்டபகழியது சுருக்கெனவேதானெழுந்து
ஒன்றுபத்துநூறு ஓராயிரங்கோடி
அன்றுதுகைசொல்ல வடங்காப்பிரளையமாய்
ஆனையதுபோல அதட்டும்சிலதுகணை
சேனையதுபோல சிலதுகணைமுன்போகும்



கரடிபுலிபோலே காணுஞ்சிலதுகணை
உரஞ்செய்யுங்கூளியைப்போ லோடுஞ்சிலதுகணை
துடியான அக்கினிபோல்ச் சொலிக்குஞ்சிலதுகணை
இடிபோல்கிடுகிடென்று பேசுஞ்சிலதுகணை
ஒளியானமின்னலைப்போல் ஓடுஞ்சிலதுகணை
பலிகுடுவாவென்று பகருஞ்சிலதுகணை
சூறுவளியதுபோல்ச் சுற்றுஞ்சிலதுகணை
கார்மேகம்போலே கவ்வுஞ்சிலதுகணை
கடல்போலலையெழும்பிக் கவியுஞ்சிலதுகணை
வடவாமுகாக்கினிபோல் வளையுஞ்சிலதுகணை
சாயாஷத்திரிகள்செய்து கடோர்க்கயனும்விட்டதொரு
மாயாஷத்திரம்வெகுண்டு வரும்போதுவிண்ணவர்கள்
தேவருடனே திசைநான்முகத்தோனும்
மூவருடனேமுக் கோடிவானவரும்
சூரியனுஞ்சந்திரனுஞ் சுற்றுமுள்ளசித்தர்களும்
பாரிலுள்ளபேரும் பயந்தேமனம்நடுங்கி
தங்கள்நிலைமைவிட்டுத் தானோடிப்போவாரும்
இங்கேயிருக்கயிட மில்லையென்றுபோவாரும்
இனிமேலுகமுடிவு யின்றுசரியாச்செனவே
தனியாய்மலைதனிலே சமாதிசெய்யப்போவோரும்
சீலமிருந்தவளர் தேர்விசையன்புத்திரர்க்கு
காலஞ்சரியெனவே கணக்கெண்ணிப்பார்ப்போரும்
காணுமலேயொருவர் கானகத்தில்வாள்வீமன்
வீணாகவேமடிய விதிவசமோவென்பாரும்
இந்தவிதமாய் யெவரும்பயஞ்செனிக்க
அந்தக்கடோர்கயனு மமர்பொருத்தானம்மானை
மட்டுமிதமில்லாத மாயாஷத்திரங்கள்தனை
கட்டழகன்வாள்வீமன் கண்ணாலேதான்பார்த்து
திருமால்தனைநினைந்து சிந்தைதனிலேவரையும்
குருவாகவேநினைந்து குணமுள்ளவாள்வீமன்
அண்டர்கிடுகிடென அவன்கையில்வாளெடுத்து
கொண்டலிடித்தாப்போல்க் குழந்தையவன்கொக்கரித்து
கவடுசெய்துதான்விடுத்த கடோர்க்கயன்றன்பாணமெல்லாம்

தவிடுபொடியாகத் தானடித்தான்வாளாலே
வீசினதுபார்த்து மேலோகத்துள்ளோரும்
கூசினார்கண்கள் குவலையத்திலுள்ளவரும்
கருத்துவந்துதான் தொடுத்த கற்பினைமாயாஸ்த்திரந்தை
அருத்தெரிந்தான்காணுமிவன் ஆண்பிளையுமாமெனவே
கவனத்துடன்சினந்து கடோர்க்கயனுமந்நேரம்
இவனைச்செயிக்கும்வகை யெந்தவிதமென்றுசொல்லி
மற்போர்பொருவமென்று மனதில்நினைந்துகொண்டு
கற்பபோல்மனதுடைய கடோர்க்கயனுமப்பொழுது
சண்டைக்கிசைந்துவந்த சமர்த்தனெனும்வாள்பீமன்
அண்டைதனில்வந்து அதட்டியவனைப்பெலமாய்
போடாசிறுபயலே புஜபெலமுள்ளானிவேன்
வாடாயினிநாமள் மற்போர்பொருவதற்கு
வந்தாலின்னேரம் மதிப்பாமலுன்னுயிரை
அந்தக்னூருக் கனுப்புகிறேன்பாரேனவே

## வாள்வீமனும் கடோர்க்கயனும் மல்யுத்தம் செய்தல்.

வலியச்சருவி மடிபிடித்தான்வீமன்மகன்
புலிபோல்ச்சினந்தெழுந்து போர்விசையன்புத்திரனுட
மடிதான்பிடித்திழுத்தாய் மற்போர்பொருவதற்கு
துடியாகநீயுரைத்த சொற்படியுமாமெனவே
கைகோர்த்திருவருமாய்க் காலோடுகாலுபின்னி
மெய்யோடுமெய்யுரசி வெகுண்டுசினந்தெழுந்து
வலசாரியாகவுமே வாள்வீமன்சுற்றிடவும்
பிலமாயிடசாரி பிரட்டிக்கடோர்க்கயனும்
தூக்கியெறிந்தான்காண் சுழல்காற்றடித்தாப்போல்
தாக்கியெறியவுமே தனஞ்செயனார்புத்திரனும்
ஆகாசவீதியிலே அடைவாகவேசுழன்று
வாகானபூமியிலே வந்தேதமனந்தெரி
சிரிக்கடோர்க்கயனை சினந்துகையினாற்பிடித்து
வாரியெடுத்தெறிந்தான் வலிமையுடனந்தரத்தில்
அந்தரத்திலேசுழன்று ஐயோஅபயமென்று



வந்துவிழுந்தான்காண் மண்மேல்க்கடோர்க்கயனும்
மூர்ச்சைதெளிந்தபின்பு முன்கோபத்தோடெழுந்து
தாச்சன்யமில்லாமற் சமர்த்தன்கடோர்க்கயனும்
வெற்றிமிகச்சொல்லி விசையன்மகன்மார்பினிலே
குத்தினான்கையாலே குவலயமெல்லாம்நடுங்க
அந்தஅடிபட்டு அபீமன்மனங்கலங்கி
நொந்துதகையாரி னடிக்குமுன்னேதானெழுந்து
நீட்டினான்கையை நெடுவீமன்றன்மகன்மேல்
மூட்டினான்குத்து முதுகுபிளந்திடவே
குருதிவழிந்தோடக் கோபமதுமேலாகி
உருதியுடன்சினந்து உற்றகடோர்க்கயனும்
வந்துபொருதான்காண் வாள்வீமன்தன்மேலே
இந்தவிதமாக யிருவோரும்சண்டைசெய்தார்
ஆனையுடனானை அடர்ந்துபொருதாப்போல்
வானிடிமுழக்கம் வாரதுபோலேகுமுறி
சிங்கமுடன்சிங்கம் சினந்துபொருதாப்போல்
கங்குல்பகலுடனே கலந்துபொருதாப்போல்
வாலியுடன்சுக்கிரீபன் மற்போர்பொருதாப்போல்
வேலவனுஞ்சூரனுமாய் வெகுண்டுபொருத்தாப்போல்
குலங்கள்தழைக்கவந்த கோபாலராமனுடன்
இலங்கையரக்கனுமே யெதிர்த்துப்பொருதாப்போல்
எட்டுத்திசையு மீரேளுகோணங்களும்
அஷ்டகிரிமுதலா யதிர்ந்துவிழத்தான்பொருதார்
காடுமலையுங் கனல்பிடித்துவெந்திடவும்
சேடன்முடிகுலுங்கச் சேர்ந்திருவர்தான்பொருதார்
வடகடலுந்தென்கடலும் வந்துகவிந்தாப்போல்
இடமும்வலமுமதா யிருபேருஞ்சண்டைசெய்தார்
இவனையவனடிக்க யேலாமலேபொருதார்
அவனையிவனடிக்க ஆற்றாமலேபொருதார்
இப்படியாய்மற்போ ரிருவருமாய்ச்செய்யயிலே
நற்புடையதீரனெனும் நல்லகடோர்க்கயனும்
சீரென்றபுத்தியினால்ச் சிந்தையுற்றுப்பாலகனை
ஆரென்றுகேட்டு அறிந்துவதைசெய்வமென்றே

விலகிச்சிறுவன்முன்னே வீமன்மகன்வந்துநின்று
சலுகைக்கடோர்க்கயனுந் தானேதுசெப்பலுற்றான்

## கடோர்க்கயன் அபிமனனை யாரென்று வினவுதல்

### விருத்தம்

செந்திருமார்பனான செல்வனேசிறியபாலா
உந்தனோடமர்கள்செய்ய உறுதியென்மனமோயில்லை
தந்தையின்பேர்தானென்ன தன்னுடபேர்தானென்ன
வந்தகாரியந்தானென்ன வகையெனக்கருளுவீரோ.

### அம்மானை.

வாலப்பருவமுள்ள மன்னவனேஉன்னுடனே
கோலச்சமர்பொருதக் கூடுதில்லையென்மனது
என்னையறிந்திருந்தா லிதுவரையுஞ்சண்டைசெய்யாய்
உன்னைப்பயின்றவரு ருன்பேருரையுமென்றான்
கருத்துடனேயிவ்வார்த்தை கடோர்க்கயனுந்தானுரைக்க
திருத்தமுள்ளவாள்வீமன் செப்புவானம்மானை

## வாள்வீமன் கடோர்க்கயனை பார்த்து வீரபராக்கிரமஞ் சொல்லுதல்

### விருத்தம்

திரமுடன்புவியின்மீது சினந்தபோர்க்களத்தில்யாரும்
உரவதுபேசுவாரோ வுயர்குலத்துதித்தோர்தங்கள்
மரவதுதவறுவாரோ வலுவுள்ளவெதிரிமுன்னே
சரணதுபுகுவாரோதன் தலையதுபோய்விட்டாலும்

### அம்மானை

முகத்தில்மயிர்முளைத்து முனைபடைத்தமன்னவர்கள்
அகத்துடனேதன்கையிலே ஆயுதத்தைப்பெற்றவர்கள்
தலையில்கிரீடம்வைத்த சத்திரியகுலவங்கிஷத்தார்
நிலையில்மனதுபெற்ற நீதியுள்ளமன்னவர்கள்
இசலிச்சமர்களத்தி லெதிர்த்துப்போர்செய்யயிலே



பிசகாயெதிரிகையால்ப் பிராணனதுபோனாலும்
பேருருரைத்தல் பெருமையல்லமன்னவனே
நீருரெனவிளங்க நீதியல்லமன்னவனே
நாடறியப்பெற்றெடுத்த நற்றகப்பனானாலும்
கூடப்பிறந்ததம்பி குணமுடையோனானாலும்
பெற்றுவளர்த்தெடுத்த பிள்ளையதுவானாலும்
வித்தைதவருத்திவைத்த மெய்க்குருவேயானாலும்
எதிர்த்துச்சமர்களத்தி லிருந்துசண்டைசெய்யயிலே
துதித்துரவுபேசச் சுகுர்தமில்லைமன்னவனே
காலனெமன்வரினுங் கையாடவேணுமல்லால்
ஞாலவுடலைநம்பிச் சொந்தடுமையென்பாரோ
நம்மைப்படைத்தசிவன் நமக்கெதிராய்வந்தாலும்
தம்மாலேயானமட்டுந் தான்பார்ப்பதல்லாது
பின்வாங்கலாமோ பெருமையுள்ளமன்னவர்கள்
முன்வாங்கும்போர்க்களத்தில் மொழிந்துரவுபேசுவரோ
போதாதுநீயுரைத்த புத்திபெருசல்லவென்று
வாதாகவேயுரைத்தான் வாள்பீமனம்மானை

## கடோர்க்கயன் அபிமனனைப் பார்த்து ஞாயங் கூறுதல்

காவலவன்சொல்லக் கடோர்க்கயனுந்தான்கேட்டு
சேவகனேயாருமெனச் சிந்தைமகிழ்ந்தேதுரைப்பான்
நீயுமெனக்குரைத்த நீதிமனுவிக்கியானம்
ஞாயமரியாமலுன்னை நான்கேட்கவில்லையிப்போ
துயர்ந்துயிருவருமாய்த் துடங்கியமர்செய்யயிலே
பயந்துவுனக்காகவும்நான் பாராட்டிக்கேள்க்கவில்லை
வல்லமையுமுந்தன்வடி வழகும்நான்பார்த்து
கொல்லமனதுசற்றுங் கூடுதில்லைமன்னவனே
சிறுபிள்ளாயுன்னுடைய சீளகைநான்பார்த்து
கிருபைபெருகுதல்லால்க் கெருவம்வருகுதில்லை
காலன்முதலோரைவெட்டுங் கையாயுதத்தாலே
பாலன்தனைக்கொன்றால்ப் பலனேதுமன்னவனே
வில்லிற்பெரியவனே விந்தையுள்ளபாலகனே

சொல்லிச்சமர்கள்செய்தால் தோசமில்லைமன்னவனே
வன்பானபோர்க்களத்தில் வந்தெதிர்த்தமன்னருடன்
தன்பெருமைத்ததினால்த் தாட்சியுண்டோபாலகனே
என்கோபம்நீக்கி யிசைந்தனதுபோர்கேட்டால்
உன்கோபம்நீக்கி யுனையுமென்றான்வீமன்மகன்
வளமாகச்சொன்ன வசனமெல்லாந்தான்கேட்டு
விளம்புவானப்போது வில்விசையன்றன்மகனும்

## கடோர்கயனிடம் வாள்பீமன் வந்தகாரியமும் தன்மரபுமுரைத்தல்

விருத்தம்.

ஆண்டவருணமாய னவனியையளந்தபாதன்
நீண்டவர்தமக்குமன்பாய் நிரைந்தமைத்துனர்களான
பாண்டவரைந்துபேர்களுள்ப் பாரதமுடிக்கவந்த
காண்டிபன்பெற்றெடுத்த காளைநானபீமனென்றான்

அம்மானை.

பகரும்மதிகுலத்துப் பாண்டுகுந்தாதேவிமனம்
அகலாதபிள்ளை ஐவர்களில்ப்பார்த்தனுக்கு
இனியமகன்காணு மென்பேரபீமனென்றான்
தனிமைசுபத்திரையாள் தானீன்றபாலகன்காண்
தந்தையர்க்குந்நூற்றுவர்க்குந் தாம்பகைகளானதினால்
அந்தவினையமதா லரவக்கொடியோனும்
கனத்தபுத்தியில்லாக் கபடனங்கேசூதாடி
வனத்தில்விரட்டிவிட்டான் வாகானஐவரையும்
கானகமுமைவர் கடிகியுரைந்தபின்பு
மானகரையாளும் வணங்காமுடிவேந்தன்
முன்னாளெனக்கு மொழிந்ததொருசுந்தரியை
இன்னாளவன்மகனும் லெக்கணர்க்குக்கலியாணம்
செய்யவென்றுமாயனுட சிந்தைதனைத்திருத்தி
வையகமெல்லாமறிய மணமுகூர்த்தம்நிச்சயித்து
வணங்காமுடியோனும் மாப்பிள்ளையுஞ்சேனைகளும்



குணங்காண்நயமெனவே கூட்டமிட்டுயெல்லோரும்
வருகிறாரென்றுசொல்லி வண்மையுள்ளதூதுவனும்
உருமையுடன்வந்து உரைத்தான்காணம்மிடத்தில்
அந்தவயணமெல்லா மறிந்துவருவோமெனவே
இந்தவழிமார்க்கம் யானும்வருகையிலே
வல்லரக்கன்கண்டு வழிமறித்துச்சண்டைசெய்தான்
நல்லபுத்தியானுரைக்க நன்மையெனக்கேளாமல்
ஓடியெனைப்பிடித்து வுயிர்வதைக்கவந்தான்காண்
நாடியவன்தலையை நானறுத்தேன்வாளாலே
விழுந்தானவையமென்று வீருடையசொற்கேட்டு
எழுந்துவந்தயென்னுடனே யெதிர்த்தீர்காணீருமிப்போ
உம்மோடெதிர்த்து யுத்தமதுசெய்தேனான்
இம்மாத்திரமுமல்ல லேதுமில்லைமன்னவனே
வளிதான்விலகிவிடும் வளிவிடவுமாட்டீரால்
தெரியாமலேவாரும் நேர்ந்துசமர்செய்வதற்கு
பேச்சப்படிப்பதென்ன பின்னுமுன்னும்பார்ப்பதென்ன
கூச்சமென்னவென்றுசொல்லிக் கூறினான்வாள்பீமன்
வீமன்மகன்கேட்டவுடன் மெய்சோர்ந்துகைசோர்ந்து
தேம்பியழுதுகொண்டு சிறுவனைக்கையாலமர்த்தி
பாலகனேமுன்னாள்ப் பழவினையோநானறியேன்
காலமிதுவெனவே கடோர்க்கயனுங்கூறலுற்றான்

## கடோர்க்கயன் தன்மரவும் வரலாரும், அபீமன்னனிடம் சொல்லுதல்

விருத்தம்

தபவுவாய்மைநிரைதவரிடாமல்வரு
தர்மபுத்திரசகோதரன்
சாடைகண்டுபொருவீமராசனருள்
சாதகத்தில்வருபுதல்வன்யான்
கயல்சிரந்தவிழிகமலகன்னியருள்
கடோர்க்கயனெனதுபேருமே
கானகத்திலுரைவல்லரக்கனுயிர்
காருமென்றவையமானதால்

செயமிகுத்தவனைவெல்வதாரெனவே
தேடியானும்வரும்வேளையில்
செல்வனுன்னையெதிர்கண்டுமென்னுண்டைய
சிறியதம்பியெனவறியேன்
பயமுமென்றதனிவழியில்வந்தசிறு
பாலனேயுனதுமேனியிற்
பாணமெய்திடவுஞ்ஞாயமோகொடிய
பாவமேயெனவிளம்பினன்.

அம்மானை.

தம்பியுமேயாச்சு தமையனுமேமானாச்சு
வம்பிலிருபேரும் மாழுவினைக்கேதாமே
அல்லரக்கன் தன்னாலே வனத்திலுனதுயிரைக்
கொல்லவினைந்ததொரு கூற்றுவனுமானேனே
கோபாலன் தன்மகனைக் குறித்தவரும்தம்பியுன்னை
மாபாவிகொல்ல மனதில்த்துணிந்தேனே
தம்பியென்றுகாணுமுனைச் சற்றுமுமலிந்தால்
அம்புதொடுப்பேனோ அடிக்கவுமென்கைவருமோ
தாக்கியெரிவேனோ தான்மார்க்கஞ்செய்வேனோ
வாக்கில்ப்பிரக்கார்த வசனமுரைப்பேனோ
கண்ணேமணியேயென் கருத்துகந்ததம்பியரே
அண்ணனுரைத்த ததினலேகுற்றமுண்டோ
தமையனுரைத்ததினல் தாட்சியுண்டோதம்பியரே
நிமையில்விரல்படவே நெடுவிரலைக்கொய்வாரோ
இந்தவிதிமக்கு யிவ்வனத்தில்வந்ததுவுந்
தந்தையர்கள்செய்தபலன் தற்காத்துக்கொண்டதுகாண்
தன்மர்க்கினையதொரு தனஞ்செயனார்புத்திரனே
நன்மைக்கிடரில்லையென்பார் நம்மளவிற்கண்டோமே
சீராணவார்த்தைகளைச் செப்பிக்கடோர்க்கயனும்
மார்போடுமார்புரள வாள்வீமனையணைத்து
மனதில்துயரமெல்லாம் மாத்திவிடும்தம்பியரே
நினைத்தபடிமுடிப்பேன் நீர்சலிக்கவேண்டாங்காண்



விருத்தம்

குணத்தினிலதிகமான குழந்தைவாள்வீமாகேளாய்ப்
பணத்திலுக்காசைபூண்ட பச்சமால்மகளைகாளை
மணத்துடன்மாலைசூட்ட வருகின்றவேந்தர்தன்னைக்
கணத்தினிற்செயிப்பேனென்று கடோர்க்கயனருளிச்செய்தான்

௨-வது விருத்தம்

மட்டில்லாயெட்டக்குரோணி மன்னரோடெதிர்வந்தாலும்
வெட்டிபோரணக்களத்தில் வெற்றியுமுனக்கேதந்து
தொட்டுவுன்விரல்கொடுத்துச் சுந்தரிதனக்குத்தாலிக்
கட்டிடச்செய்வேனென்று கடோர்க்கசனருளிச்செய்தான்

௩-வது விருத்தம்

அருளியதமையன்பாத மபீமனும்வணங்கிவாயை
இருகரமதனல்ப்பொத்தி யென்னையாள்பவனேபாவந்
சிறுபயலறிந்திடாமல்ச் செய்திடுங்குற்றமெல்லாங்
கருதிடாமனம்பொருத்துக் காப்பதுன்கடனேயென்றான்

அம்மானை

கன்னாரப்பார்த்துக் கடோர்க்கயனுந்தானுரைக்க
அண்ணாவியென்று அடிதொழுதுவாள்பீமன்
அறியாமல்ச்செய்தகுற்ற மத்தனையும்நீர்பொறுத்துச்
சிறியெனைக்காருமென்று தெண்டனிட்டான்வாள்பீமன்
வாள்பீமன்றன்னுடனே மகிழ்ந்துகடோர்க்கயனும்
பாள்போனவல்லரக்கன் படுகளத்தில்வந்துகண்டு
அரக்கன்றனையடக்கி அவன்சடங்கைத்தான்முடித்து
இரக்கமிருவருமாய்த் தீர்த்தமதுதானாடி
என்னுடையதம்பியரே யென்கூடவாருமென்று
தன்மையாய்க்கைகோர்த்துத் தானேநடக்கலுற்றான்

## கடோர்க்கயனும் வாளபீமனும் கமலகன்னி யிடம் செல்லுதல்

இருண்டவனங்கடந்து யின்பமுள்ளஆர்கடந்து
பெரியஅருவிப் பெருமலையுந்தான்கடந்து

மாயாவினோதன் மருகனையுந்தான்கூட்டி
தாயாங்கமலகன்னி தன்னிடத்தில்வந்துநின்று
வந்தானுனதுமகன் வாள்வீமனென்றுசொல்லி
சந்தோசமாகத் தான்பணிந்துவீமன்மகன்
தாமரையின்பாதமதில்த் தானிருவரும்வணங்கி
கோமான்கள்நிற்க கோதையரும்மெய்மகிழ்ந்து
வாழ்த்தியிருவரையும் வாரியெடுத்தணைத்து
தாள்விலாநீங்கள் தான்வாள்வீரென்றுரைத்து
பெருமைக்கடோர்க்கயனை பெற்றெடுத்ததாய்பார்த்து
அருமையுள்ளபாலனிவ னார்காணுமென்றுரைத்தாள்
உரைத்தமொழிகேட்டு உரைப்பான்கடோர்க்கயனும்
மறைத்துவிடலாமோ வளர்கின்றசந்திரனை
அளகுயர்ந்ததர்ம ரவர்க்கிளையவீமருக்கு
இளையஅருச்சுனனு மீன்றெடுத்தபாலனிவன்
வாசமுள்ளமாயன் மகளானசுந்தரிமேல்
ஆசைகொண்டுவந்தான் அபிமனிவன்பேரெனவே
வணக்கமுடன்தொழுது மாதாவின்முன்னுக
இணக்குடனேயிவ்வயணங் கடோர்க்கயனுந்தானுரைத்தான்
பிள்ளையுரைத்தமொழி பிரியமுடன்தாய்கேட்டு
உள்ளமிகமகிழ்ந்து உரைப்பாள்கமலகன்னி
காண்டீபன்பெற்றெடுத்த கண்மணியேயென்மகனே
நீண்டபுகழுடைய நெடுமால்மருமகனே
திங்கள்முகவதனு செய்யபுகழ்வாள்வீமா

## கமலகன்னியிடம் அபிமன்னன் தன்வரலாறுசொல்லுதல்

### அம்மானை

இங்குவந்தகாரியத்தை எந்தனுக்குச்சொல்லுமென்றாள்
அன்னையரைப்போற்றி அபிமனுமங்கேதுரைப்பான்
முன்னாளில்த்தானும் மொழிந்ததொருபூருவமும்
கானகத்திலேவர் கடிகிடந்ததுவும்
மானிலத்தில்நாற்றவர்கள் மனைவுதப்பிச்செய்ததுவும்
சுந்தரியைக்கேள்க்க சுபத்திரையாள்போனதுவும்



சந்திரமுகலெட்சுமியாள் சண்டையிட்டுப்பேசினதும்
தாயார்சபதமிட்டுத் தானோடிவந்ததுவும்
மாயன்முகூர்த்தமிட்டு மணவோலைவிட்டதுவும்
வயணமதுவரிந்து மாப்பிளையும்நூற்றுவரும்
பயணமதுவாகப் படைகூடிவந்ததுவும்
தூதுவனுமோடிவந்து சொன்னமொழிநான்கேட்டு
ஆதரவாய்ப்பார்த்து யானுந்தனியாக
வரும்வழியிலேயரக்கன் வந்துமறித்ததுவும்
சருவியமர்செய்தவனைத் தன்வாளால்வெட்டினதும்
அரக்கன்குரல்கேட்டு அண்ணாவிவந்ததுவும்
பிரக்கினையில்லாமலிரு பேர்கள்சமர்செய்ததுவும்
தன்பேரைக்கேட்டிசைந்து சமாதானமானதுவும்
சொன்னான்படிப்படியாய்த் தோற்றவுமேவாள்வீமன்
கட்டளகன்சொன்னதெல்லாங் கமலகன்னிதான்கேட்டு
இட்டவிதியோவெனவே யேங்கிமிகவழுது
அய்யோமகனே அவதிமிகப்பட்டீரோ
மெய்யானகீர்த்திபெற்ற வில்விசையன்புத்திரனே
வகைகள்தெரியாமல் மாண்டிறந்துபோவதற்கோ
பகைகள்பண்ணிக்கொண்டீரோ பாளரக்கன்தன்னாலே
கர்மமோஉங்களுக்குக் கானகத்தில்வந்தபிழை
தர்மசெயலாலே தானேபிழைத்தீர்காண்
என்றுகமலகன்னி யிருவரையுங்கொண்டாடி
நின்றஅபிமனுக்கு நேராகக்காப்பணிந்தாள்

### விருத்தம்

மாப்பிளைநீதானந்த மாயவன்மகளுக்கென்று
காப்பதுபுனைந்தாளந்தக் காளைவாள்வீபன்கையில்
தோப்பதுஅரவுயத்தோன் சுகம்பெற்றுஅடைவீரென்றுங்
கூப்பிடுமுர்தவாக்குக் கொடுத்துப்பின்னுரைக்கின்றாளே

### இதுவுமது.

அன்புளகடோர்க்கயாகே ளருமையாயுனக்குவந்த
தம்பிபின்னுகச்சென்று சத்துருதனைச்செயித்து
நம்பிசுந்தரிக்கு நல்மணமாலைசூட்டி
தெம்புடன்வருவீரென்று திருவுளமருளிச்செய்தாள்

இதுவுமது

அருளினதாயார்பாத மனுக்கிரம்பெற்றோமென்று
இருவருந்தொழுதுபோற்றி யிச்சணமங்கேசென்று
வருகிறோமென்றுசொல்லி வாளொடுதனுசுமேந்தி
இருவர்களிரண்டுபேருந் திசைதனைநோக்கிச்சென்றார்

## கடோர்க்கயனும் வாளபீமனும் துவாரகைக்குச்செல்லுதல்

அம்மானை

காப்பணிந்ததாயார் கமலகன்னிதன்பாதம்
வாய்ப்புடனேபோற்றிசெய்து வளமாயிருவருமே
நடந்தார்வழிகூடி நாரணனைத்தஞ்சமென்று
படர்ந்தநிழல்தன்னில்ப் பாங்காயிருபேரும்
இருந்திருந்துநாமு மிளப்பாறிப்போவமென்று
பொருந்தியிருவருமாய்ப் போகவென்றுசம்மதித்து
பாதைநடந்தார்களொரு பச்சைமலைமேலே
சீதளமாயிம்மலையில்த் தீர்த்தமொன்றுமுக்கியமாய்
அந்தநதிக்கரையி லாலமரநிழலில்
வந்திருந்தார்கள் மன்னவர்களந்நேரம்

## வல்லரக்கி தன்னை மாலையிடச்சொல்லுதல்

அம்மானை.

கானகத்தில்வாழுங் கடியதொருவல்லரக்கி
ஆனைகுதிரை பன்றி அன்பதுநாறுயிரத்தை
தின்றுபசியாறியபின் சிரந்ததண்ணீர்தான்குடிக்க
அன்றுநதியினில்வந் தரக்கியுமேநீர்குடித்து
சிவந்தமயிருடைய சென்னியுள்ளவல்லரக்கி
கவந்தமெனக்கூத்தாடிக் கருமலைபோல்வந்துநின்று
பல்லைதிறந்தாள் பதினாயிரமுளத்தில்
கொல்லத்துணிந்துவந்த கூற்றுவனோவென்றுயெண்ணி
வேகித்துவீமன்மகன் வில்லெடுத்தானப்போது
மோகித்துவந்தேன்காண் மோடியோமன்னவனே
எந்தவூர்நீங்க ளிப்போதுயிவ்வனத்தில்



வந்தவகைதனையு வளமாகச்சொல்லுமென்றாள்
அப்போதுசொல்வா னனகடோர்க்கயனும்
இப்போதுகேட்டருள்வாய் யெங்களுடசேதிகளை
தம்பியபீமனிவன் தமையனுமேநானாகும்
அம்புவியிலிந்த அபிமனுக்குக்கல்யாணம்
மாயன்மகள்சுந்தரியை மாலையிடப்போறோங்காண்
ஞாயமிதுவென்றான் நல்லகடோர்க்கயனும்
சொன்னமொழிகேட்டுத் தோகையருமேதுரைப்பாள்
யென்னபுத்திகாணுமக்கு யின்பமுள்ளமன்னவனே
கொச்சையிடையனெனுங் கோபாலன்தன்மகளை
இச்சைகொண்டுவந்தீரே யேதுமறியாமல்
நூற்றுவர்க்குத்தன்மகனும் நன்மையுள்ளலெக்கணர்க்கு
நேற்றேமுகூர்த்தமிட்டு நிறைவேறிப்போச்சுதுகாண்
மஞ்சள்நீராடுகிறார் மாப்பிள்ளையும்பெண்ணுடனே
கொஞ்சிவிளையாடுகிறார் குழந்தமணப்பந்தலிலே
நீங்களதுபார்த்து நெடுமூச்சுவிட்டெரிந்து
ஏங்கிவருவதற்கு யிப்போதுநீர்போறீர்
உம்முடையதம்பியர்க்கு முமக்குமொருபெண்டாய்
செம்மையுடனென்னையிப்போ செய்யுங்கலியாணம்
பேருடையசுந்தரியாள் பிள்ளைபெறுமுன்னே
நூறுபிள்ளையிப்போ நொடிக்குமுன்னேநான்பெறுவேன்
அலையதிசெயமா யபிமானிநினையாதே
எவருமெனைப்போலே யில்லையிந்தப்பூமியிலே
காலழகுங்கையழகுங் கண்ணழகென்போலுமுண்டோ
மேலழகும்பல்லழகும் விரலழகுங்கண்டீரோ
சுருண்டமயிரழகுஞ் சூட்டினையும்பார்த்தீரோ
இருண்டகருப்பழகு மெங்கேயுநீர்பார்த்தீரோ
மன்னவரேயென்முலைக்கி மலையுஞ்சரியலவே
தென்னவரேயென்னிடைக்கிச் செக்குஞ்சரியலவே
உத்தமரேயென்னுதட்டுக் குரலுஞ்சரியலவே
சுத்தவரேயென்வயிற்றுக் கடலுஞ்சரியலவே
என்னுடையவாய்மொழிக்கி யிடியுஞ்சரியலவே
நன்னயமாயுங்களுக்கு நானேமனைவியல்லால்

கையால்ப்பிடிக்கக் கசங்கிவிடுஞ்சுந்தரிமேல்
மெய்யானஆசைகொண்டு விருகப்போரீரே
பிடிக்கயிடையில்லாத பெண்ணின்மேலாசைகொண்டு
அடிச்சுடவுங்கானகத்தி லேயோநடந்துவந்தீர்
கடல்நிரைந்ததண்ணீருங் கால்வயிறுமெந்தனுக்கு
பிடியரிசிபொங்கியுண்ணும் பெண்தேடிப்போவாரோ
மாராதஆசையினால் வந்தேனுமதுஇஷ்டம
கூறுமலொன்றுங் குணப்பிசகுஞ்செய்யாமல்
என்கழுத்தில்தாலி யிப்போதேகட்டுமென்றாள்
ஆசைகொண்டுவல்லரக்கி அவளுரைத்தசேதியெல்லாம்
தேசம்விட்டுவந்த சிறுவர்களுந்தான்கேட்டு
ஏக்கம்பிடித்துவந்த இராட்சசியைவாளாலே
மூக்குமுலையுடனே முன்மயிருந்தானறுத்து
விரட்டினனப்போ விசையனுடபுத்திரனும்
முரட்டுவனுவரக்கி மூக்கிழந்தோமென்றுசொல்லி
இவரைவழிமரித்து யிப்போதேகொல்வனென்று
கவலைபெரிதாகிக் கானகத்திலேயோடி
ன்னைப்பயின்றெடுத்த தகப்பனிடந்தனிலே
மின்னியிடிக்குமொரு மேகமெனவேகதரி
அழுதுபுரண்டழுதா ளப்போதுராட்சதனும்
தொழுதமகள்தன்னையுந் தூக்கியரவணைத்து
பாக்கியமேயென்னுடைய பாலகியேயுந்தன்னையும்
ஆக்கினையார்செய்தவனு மார்காணுரையுமென்றான்

விருத்தம்.

பஞ்சவாளருஞ்சுபேரில்ப் பற்றுளான்வீமன்பெற்ற
தஞ்சமாம்ரெண்டுபிள்ளை சுமர்த்தர்கள்வனத்தில்வந்தார்
கொஞ்சியென்மோகத்தாலே கூடிநீர்மருவுமென்றேன்
அஞ்சாமல்வாழினுலே யாக்கினைசெய்தாரென்றாள்

இதுவுமது

பொற்கொடியுரைத்ததெல்லாம் புஜபலவரக்கன்கேட்டுக்
கற்புடைமாதேயுந்தன் கணவன்வல்லரக்கன்றானும்
மற்புயத்பீமன்கையால் மாண்டதுமறிகிலாயோ
முற்பயவிதியால்ச்சென்றாய் முனிந்தென்னசெய்வமென்றான்



அம்மானை

நன்றியுள்ளஉன்புருஷன் நல்லவல்லரக்கனையும்
கொன்றவர்கள்தன்னிடத்தில்க் கோதையரோபோவாரோ
செப்பமிலாவாக்கினைகள் செய்தாரென்றெண்ணாதே
தப்பிப்பிழைத்துயிங்கு தான்வந்ததேபோதும்
மூக்கிருந்தாலென்னபலன் முலையிரண்டும்சுமந்து
தூக்கித்திரிந்ததினால் சுகுர்தமென்னயென்மகளே
மதிமயங்கவேண்டாமென் மகளேயெனத்தேற்றி
சதிருடனேராக்ஷதனும் தான்போனான்கானகத்தில்
கவலைபெரிதாகிக் காட்டரக்கிபோனபின்பு
இவர்கள்தகையாறி யிருந்தயிடம்விட்டேகி
மையானகானகத்தில் மலையும்நதிகடந்து
எய்யாமலேநடந்து யிருவருமாய்ப்போகையிலே

## கடோர்க்கயனும் பீமனும் ராவான்படுத்திருப் பதைப் பார்த்தாச்சரியப்படுதல்

கருமுகில்போல்மேனி கனத்ததொருராவானும்
ஒருமலையில்ச்சாய்ந்துகொண்டு ஒருமலையிற்கால்நீட்டி
வானுரையுமேகமதை மன்னவனுந்தான்பிடித்து
தானேகசக்கியவன் தண்ணீர்குடிப்பதையும்
கண்டானபீமன் கடோர்க்கயனுமன்னேரம்
விண்டார்மனதில் மிகுந்தபயமுண்டாகி
அண்ணாவேநீருமிந்த அதிசயத்தைப்பார்த்தீரோ
கண்ணாலேபார்க்கவுமென் கண்ணிரண்டுங்கூசுதுகாண்
இப்படியும்பிர்மா யிவனைப்படைத்தாரோ
எப்படிநாம்போவோ மிவனுடையகால்தாண்டு
தாள்ந்துநடப்பதற்குச் சம்மதியோ அண்ணாவே
ஆள்ந்துவுரைசொல்லுமென்று அபீமன்னன்றுனுரைத்தான்
அப்படியேசொல்லுகிறேன் அஞ்சாதேதம்பியரே
எப்படியும்நாம விவனைவழிவிலகி
போகவழிசெய்யுகிறேன் பொறுங்காண்நொடியிலென்று
வேகமுடன்சென்றான் வெற்றியுள்ளராவான்முன்
கிட்டவணுகிநின்று கிருபையுடனேதுசொல்வான்

வட்டமலைமீதிலொரு மலையிருந்தவாறதுபோல்
மேல்முகட்டையூடுருவ வீற்றிருக்குமன்னவனே
கால்மடக்கமாட்டீரோ கடிகைவழிநாங்கள்செல்ல
பாதைவழிதனிலே பருங்காலைநீட்டுவீரோ
ஏதுகாணிப்பிள்ளையை யெவருஞ்சகிப்பாரோ
நாங்கள்வழிநடந்து நன்மையுடனூர்சேர
வாங்குமுமதுடைய வளர்ந்திருக்குங்காலதனை
நீட்டியிருப்பதுவும் நீதியல்லவென்றுரைத்தான்
மேட்டிமையாய்ச்சொன்னான் வீமனுடபுத்திரனும்
இவனுரைத்தசெய்தியெல்லா மிராவணனுந்தான்கேட்டு
செவிபொறுக்கமாட்டாமல்ச் செப்புவானம்மானை

## கடோர்க்கயனும் வான்பீமனும் இராவணனிடம் தர்க்கம்பேசுதல்

### விருத்தம்

குழந்தைப்பயனுஞ்சிறுபயனுங் கூடிவனத்தில்வந்தீரோ
இளந்தைப்பருவந்தனி லுமக்கு மிக்கசெருப்பங்கொடுத்தவரார்
வளர்ந்தமரத்தைப்பிடுங்கியுங்கள் மண்டைசிதறவடித்திடுவேன்
நுழைந்துபோமென்கால்வழியே நுழைந்தபேர்கள் தழைக்கப்பாய்

### அம்மானை.

செப்புகிறேனையிப்போ சிறுபயல்காளுங்களுக்கு
இப்புவியையாளுகின்ற யேந்தல்திரியோதனனும்
துணையானதம்பியர்கள் தொண்ணூற்றொன்பதுபேர்
இணையானமகுடமுடி ராசமன்னருள்ளோரும்
வெற்றிபெருங்கன்னன் விரல்வேந்தரால்துணிந்தார்
சுத்தமுள்ள ஆசாரி துரோணர்சிறவீஷ்ட்டுமரும்
ஆருக்குமஞ்சாத அசுவத்தாமாதவிர
போருக்கெதிரான புவியாளும்மன்னவரும்
சமர்க்களத்திலமுன்னேருஞ் சயிந்தவனுமற்றுமுள்ள
அமர்க்களத்துக்கேற்றதேர் ஆனைகுதிரைகளும்
சிங்காரமானதொரு சேனைதளமுள்ளதெல்லாம்
எங்கால்வழியாக யேகினரிப்போது



புத்திகெட்டுப்போனரோ பூதளத்துமன்னரெல்லாம்
சுத்தரணவீரபத்திர சூரரோநீங்களுந்தான்
அசகையரியமென்று அளப்புவைத்தோபேசுகிறீர்
கொசுகுபோல்நீயிருவர் குழந்தையல்லோநீங்களுந்தான்
வந்தானேயெல்க்கண்ணனு மாட்பிள்ளானென்றுசொல்லி
இந்தாலோபோரான்காண் னென்கவட்டிலேநுழைந்து
அரியஉமக்குரைத்தேன் அவதிப்படவேண்டாம்
நரியினிடந்தனிலே நண்டுகொணமிட்டால்
பரியாசம்பண்ணுமென்று பார்த்திருக்குமோநரிதான்
தெரியாமல்நீங்கள் சிறுபிள்ளைபுத்தியினால்
வீரியத்தினாலேவிகுவு செய்துகொள்ளாமல்
காரியத்தைப்பாருங் கவட்டின்வழியேநுழைந்து
நடந்துபோமுங்களுக்கு நல்லபுத்திநாமுரைத்தோம்
திடந்தானிதுவெனவே செப்பினனிராவணனும்
இராவணனுரைத்தமொழியிருபேருந்தான்கேட்டு
பொறாமைகொண்டு புண்ணியருமேதுரைப்பார்
மலைபோல்ச்சடலமுமாய் மன்னவனேநீயிருந்தால்
தலைமேலெழுதிவைத்த சதுமுகனும்நீதானோ
குப்பைதனில்க்கீரை கொழுத்துமுளைத்தெழுந்து
கப்புங்கவருமிட்டால் கதவுநிலைக்காகுமோ
பருத்திப்பொதியையும் பாரமென்றுபேசுகிறீர்
நெருப்புப்பொரிநாங்கள் நீர்தானறியீரோ
உயர்ந்தமலைமேலே ஈருக்காந்திருந்ததினால்
பயந்துவிடுவோமோ பாதைதனைவிட்டுவிடும்
நீட்டியகால்தன்னை யிப்போநீர்மடக்குமல்லாட்டால்
தாட்டிகமாயெங்களுடன் சமர்பொருதநீர்வாரும்
பருவமுடன்கிட்டவந்து பாலர்களுந்தானுரைக்க
இருவருரைத்தமொழி இராவணனுந்தான்கேட்டு
வாரீர்சிறுபயல்கா வளர்மலையைத்தான்பார்த்து
ஓரியடுத்துநின்று வூளையிடும்வாறதுபோல்
செயல்பெருகும்பட்சிகளில் செங்கருடனுக்கெதிராய்
உயரப்பரப்பனென்ற ஊர்க்குருவியைபோலும்

வல்லமைகள்பேசி வளிவிடவுஞ்சொன்னீரே
நல்லதொருவசனம் நாமுரைக்கக்கேட்டருளும்

## விருத்தம்.

தெளிவாயுரைத்தசிறுவர்களே செப்பும்வகையொன்றதுகேளீர்
ஒளிவாமெனதுகைக்கணைதா னென்றேவிடுவேனும்மாலே
சுளிவாயதனைவிலக்கிமனத் துணிவாயென்முன்வருவீரேல்
வளிதானுமக்குவிடுகின்ற வகைதான்சபதமெனவுரைத்தான்

## அம்மானை.

இப்போதொருபாண மெய்புகுமேறீங்களுந்தான்
தப்பிமனத்திடமாய்த் தான்வருவீராமாகில்
உத்தமரேஉங்களுக்கு உபசாரமாகவுந்தான்
வெத்திசெய்வீரென்று விடுவேன்வளியதனை
சம்மதியோவென்றுஞ் சபதமிதுவெனவே
செம்மையுடன்ராவான் செப்பினனம்மானை
இயம்புமொளியதனை யிருவர்களும்தான்கேட்டு
நயம்புகளாறுரைத்த நற்சபதமெங்களுக்கு
சம்மதியுமாச்சுதுகாண் சமதரியவேணுமிப்போ
உம்முடையகையால் ஒருமித்துப்பாருமென்றார்

## இராவான் அபிமன் கடோர்க்கயன் பேரில் நாகாஸ்திரம் விடுதல்

இசைந்தசிறுவர்கள்மேல் இராவான்மனம்வெகுண்டு
அசைந்துபுவிநடுங்க அண்டமெல்லாந்தீப்பிடிக்க
நாகாஸ்த்திரமதனால் நல்லதொருவிர்ப்பூட்டி
வாகாய்ப்பிரணவத்தின் மந்திரத்தையுச்சரித்து
மார்பிரளவாங்கி வலுவுடையராவானும்
சீர்பெரியபாலர் சிரம்பாத்துயெய்யலுற்றான்
கையால்த்தொடுத்தகணை காலாந்தகன்போலே
மெய்யானகான்கமும் வெந்துநீறாகிடவே
திங்கள்கதிரோனுந் தெற்குவடக்காகிடவே
எங்கும்புகையெழும்ப யிவ்வுலகுமவ்வுலகும்
தேவாசுரர்முதல் ஜீவஜெந்துவுள்ளதெல்லாம்
மூவருடன்கலங்கி மூற்சைகளுண்டாகிடவே



கடல்சுவரிப்போய்விடவுங் கமர்பிளந்துபூமியெல்லாம்
வடவையனல்பரந்து மகாமேருவும்நடுங்க
சீரிச்சினந்துகொண்டு சீக்கிரத்திலேயெழும்பி
மாரிப்படமெடுத்து வாயில்விசங்கள்கக்கி
தேடிச்சரிப்படுத்தச் சிறுவரெங்கேயென்றுசொல்லி
நாடியெழுந்ததுகாண் நாகாஸ்த்திரந்தானும்
வருகுங்கணையினுடமகா கோபந்தான்பார்த்து
தெரிந்துமனந்துணிந்து தேர்விசையன்புத்திரனும்

## வாள்பீமன் நாகாஸ்திரத்தை வெட்டுதல்

தமையனுக்குமுன்னாகச் சணப்பொழுதில்வந்துநின்று
எமையடிமைகொண்டருளு மென்பெருமாள்தஞ்சமென்று
பண்ணுனஐவருட பாதமதைநெஞ்சில்வைத்து
கண்மூடியேயபீமன் கருடதியானங்கள்செய்து
கட்டளகன்வாளெடுத்துக் கடுநாகபாணமதை
வெட்டினன்பட்டு விழுந்ததுகாண்ரெண்டுதுண்டாய்
அரவக்கணைமடிய அந்தரத்திலுள்ளவர்கள்
பொருமைஅபீமனுக்குப் பூமலர்கள்தான்சொரிந்தார்
சித்தர்முனிவர்களுந் தேவர்களுங்கொண்டாடி
வெத்திரணசுத்த வீரனிவனாகுமென்றார்
திட்டிபடுமென்றுசொல்லித் திருநீர்தனைப்பூசி
கட்டியணைத்துக் கடோர்க்கயனுமுத்தமிட்டான்
கணையானதையறுக்கக் கண்டுமிகுராவானும்
உணர்வாயகமகிழ்ந்து உயர்ந்தமலைவிட்டிறங்கி
துதித்துநலம்பேசிச் சுருக்காகஓடிவந்து
கதித்தயிருவரையுங் கையாலரவணைத்து
நான்விடுத்தபாணமெனும் நாகாஸ்த்திரந்தனக்கு
மான்பிடித்தயீஷ்பரனும் மாயவருமஞ்சிடுவார்
எட்டுத்திசையிலுள்ளோ ரென்னுடையகைக்கணையை
தட்டிவிடமாட்டார்கள் தம்பியரேநீங்களுந்தான்
வலுவுடையாரென்றுசொல்லி வளிதானுமக்குவிட்டேன்
சிலையில்மிகுத்தவரே செப்புமொழிகேட்டருள்வீர்

ஆரெவரென் றுடம்மை யறிந்திருக்கவேணுமுங்கள்
பேரே தாவுங்கள் பிதாபேரைச்சொல்வதுடன்
எந்தவூர்நீங்க ளிங்குவந்தகாரணமேன்
வந்தவிபரமதை வாகாயுரையுமென்று
மனமகிழ்ந்திராவான் வகையுடனே தான்கேள்க்க
கனமிருந்தசொல்லான் கடோர்க்கயனுமேதுரைப்பான்

## இராவானிடம் கடோர்க்கயன் தன்பிரப் புரைத்தல்

விருத்தம்.

குருகுலத்தவரில்மிக்க கொற்றவரைவர் தன்னில்
தருமனுக்கிளையவீமன் றன்மகன்கடோர்க்கனென்பேர்
விருதுசொல்விசையன்பெற்ற விதரணையபிமனித்த
சிருவனுமெனக்குத்தம்பி செப்புவேனின்னங்கேளீர்

வேறு விருத்தம்.

எங்கள் தந்தையர்க ளைவரிப்புவி
யிளந்துகானகம தேகினர்
தங்கள்செல்வமு மிருந்ததென்றுதுரி
யோதனதியர்கள் கூடியே
எங்கள்தம்பியிவ் வபிமனுக்குமுன்
னிசைந்தசுந்தரி தன்னையும்
தங்கள்சேயெனு மிலக்கணர்க் கவர்கள்
தாலிபூட்டிடக் கருதியே

2-வது

வஞ்சமேகுடி கொண்டநெஞ்சுடைய
மன்னனான துரியோதனன்
கஞ்சமாமலர் வதனமாயவன்
கருத்திசைந்திட விவர்கள்நாள்
அஞ்சிடாமலே குறித்துவந்திடு
மாசனுண்மையு மறியவே
வஞ்சமின்றியே வனிகடந்துநாம்
வந்தவாரென வழுத்தினன்.



## இராவான் இருவரையும் தம்பிகளெனவறிதல்

அம்மானை.

ஈசனுமேதானறிய வென்னுடையதம்பியர்க்கு
பேசியிருந்தபெண்ணை பெருமாள்பிரட்டதிறல்
தீமையுடைய திரியோதனன்பாவி
சேய்னிலக்கணர்க்கு ஜெயசோபனமுடிக்க
நல்லமுகூர்த்தமது நாள்மூன்றெனத்தூதன்
சொல்லுமொழிகேட்டோம் சோபனத்தைதக்கண்ணாலே
பார்க்கலாமென் றுமிந்தப் பாதைவழிநாங்கள்வந்தோம்
மார்க்கமிதுவெனவே வகைவிபரமாயுரைத்தான்
இவ்வார்த்தைகேட்டவுட னிராவான்மனமகிழ்ந்து
செவ்வையாய்த்தானுரைத்தச் சிறுவர்களைத்தானணைத்து
காணக்கிடையாததொரு கண்ணனைதம்பியரே
வீணுக்குயிர்வாங்க வினைகள்நினைந்தேனே
கருமவிதியோமுன் கற்பினையோயீஷ்பரனே
அருமைக்குழந்தையின்மே லம்புதொடுத்தேனே
தேடக்கிடையாத தெள்ளமுதேதம்பியரே
கூடப்பிறந்தவரைக் கொல்லநினைந்தேனே
ஆவதறியாமலனியாய அம்புதொட்டேன்
பாவமெனக்குவந்து பலியாதோயீஷ்பரரே
அந்தவசனமுன்னே யறிந்தேனேயாமாகில்
இந்தவழியில்வந்த யிலக்கணகுமாரனையும்
பொய்யானநூற்றுவர்கள் போர்வேந்தர்சேனையெல்லாம்
கையால்ப்பிடித்துயெர்தன் காலால்நசுக்கிடுவேன்
ஆயனுடபேச்சை யறிந்தேனேயாமாகில்
மாயனையுமிங்கே வரவளைக்கமாட்டேனோ
ஆரோயிவன்று னறிந்ததில்லையென் றுமென்னை
வேறொருவருய்நினைக்க வேண்டாங்காண் தமபியரே

## இராவான் கடோர்க்கசன் வாள்பீமனிடம் தன்பிறப் புரைத்தல்

வாகுடையதீரன் வாள்விசையன்புத்திரன்காண்
நாககன்னிபெற்றெடுத்த ராவானென்பேர் தானும்

வல்லவரேநீங்கள்சொன்ன வகையாலிங்கேதனன்
நல்லவரேயுங்களுக்கு நான்மூத்தவன்காணும்
வெருப்பாகயானும் விஷம்போலச்சொன்னதெல்லாம்
பொருத்தருளவேணுமெந்தன் புத்தியுள்ளதம்பியரே
என்றுபலவிதமா யிசைந்தழுதுவோடிவந்து
குன்றனையதோளான் குழந்தைதபிருவரையும்
கட்டியரவணைத்து கருணையுடன்ராவாணும்
முட்டிவிழுந்தழுது முகத்தில்முகத்தைதவைத்து
கைகள்தனையெடுத்துக் கண்ணோடரவணைத்து
மெய்யுடையதம்பியர்மேல் மிகுந்ததயவுவைத்து
கூக்குரலும்வைத்துக் கோவென்றபையமிட்டு
ஏக்கம்பிடித்து யிருந்தானேராவாணும்
ஓலமிட்டவண்ணலுட வுருமைதனைப்பார்த்தளவில்
காலில்முடியுரசக் காளையர்கள்தான்பணிந்து
பட்சமுள்ளஅண்ணாவுன் பாதம்சரணமெங்கள்
அச்சந்தவிழ்த்த அண்ணாரேநின்பாதம்
துணையாகுமெங்களுக்குச் சொந்தமுள்ளஅண்ணாவே
இணைபிரியாதும்முடைய யேவல்செய்துகொண்டிருப்போம்
தர்க்கமுரைத்தோமே தமையனென்றுந்தோணாமல
பக்கமனிதர்கண்டால்ப் பரியாசஞ்செய்வாரே
வாலிபத்தினாலே மதமேபெரிதெனவே.
கேலிபண்ணினோமேயுன் கிருபையறியாமல்
பெற்றெடுத்தபிள்ளையது பிசகுகளைசெய்தாலும்
அத்தனையுந்தாய்பொருப்ப தவள்மேல்க்கடனாகும்
ஆகையினாலும்முடைய அடைக்கலங்காண்யெங்களுடன்.
சேகரமாய்நீயிருந்து செய்விர்கலியாணம்
சரணஞ்சரணமென்று தான்தொழுதான்வாள்பீமன்
கருத்தில்மிகவன்புவைத்துக் கடோர்க்கயனுந்தான்தொழுதான்

## நாக்கன்னியிடம் மூவருஞ்செல்லுதல்.

தெண்டனிட்டதம்பியரைத் திருமார்பிலேயணைத்து
வண்டுரையுங்கான மலையுந்திகடந்து
வேகமுடன்நடந்து விந்தைநகர்தானணுகி



நாககன்னியென்னுமொரு நல்லதொருதாயாரைக்
கண்டுவணக்கமுடன் காவலர்கள்மூவருந்தான்
தொண்டுசெய்துநின்று தொழுதுவணங்கலுற்றார்
தாயேசரணமென்ற தம்பியர்கள்மூவரையும்
சேயர்களேயென்னுடைய செல்வர்களேகண்மணியே
வந்திரோயென்னுடைய வரிசையுள்ளமைந்தர்களே
சந்தோசமாச்சுதென்று தான்மகிழ்ந்துநாககன்னி
இன்பமுள்ளராவாளே யென்மகனேயிப்போது
தம்பியர்களாரெனவே தான்கேள்க்கநாககன்னி
பாதந்தொழுது பரிவுடனேராவாணும்
ஆதரவதாகவவனு மெடுத்துரைப்பான்

விருத்தம்.

பெரியதாதையெனும் விமராஜனருள்
பேர்சிறந்திடு கடோர்க்கயன்
பேதமில்லையிவ னபீமனென்னுடைய
பிதாவினுக்குரிய மைந்தனார்
உரியதம்பியர்க ளெந்தனுக்குவெகு
உண்மையான துணையானவர்
உண்டனேகமிவர் தர்மசிந்தனைக
ளுந்தனக்குமுயர் பிள்ளையாம்
கரியமால்மகனை லக்கணர்க்கொரு
கபடமான கலியாணமுங்
கர்னனுஞ்சகுனி யரவுயர்த்தனொடு
காரியம்புரிய வேகினார்
தெரியவேணுமிதையென்றுமென்னுடைய
சிரியதம்பிய ரிருவருஞ்
சிந்தைநொந்திவர்கள் வந்ததாமெனுச்
செப்பினனினிய தென்னவே

அம்மானை

சீருலவுந்தாயார் திருவடியைப்போற்றிசெய்து
பூருவமுந்தம்பியர்கள் புலனுந்தெரிந்திடவே
எள்ளமுவுந்தப்பாம லிராவாணுரைத்திடவே

கிள்ளைமொழியுடையாள் கிருபையுடன்தான்கேட்டு
மக்கள்தனையுமங்கே வாரியெடுத்தணைத்து
பக்கமருகிருத்திப் பருவமுடனேமகிழ்ந்து
ஆணிப்பொன்முத்தே அருச்சுனனுந்தன்மகனே
காணிக்கிவாய்த்த கருவலமேயென்மகனே
தேமல்வடிவழகா சிரந்தொருவாள்விமா
மாமன்மகள்மேலே வாஞ்சைகொண்டோவுமக்கு
சுத்தமுள்ளபாலா துரையேதுரைத்தனமே
அத்தைமகள்மேலே ஆசைகொண்டோவுனக்கு
கன்னிமணஞ்சூட்டியுன்னைக் கண்ணாலேபாராமல்
மன்னரைவர்தானும் வனவாசம்போனாரே
ஆருமற்றயேழையைப்போ லபிமாவனத்தில்வந்தாய்
பூருவத்திலிட்டவிதிப் பொரியோமதிமயக்கோ
கருணையுடன்பிரகே கடோர்க்கயனும்வந்ததினால்
தருணமதையறிந்து தானேயழைத்துவந்தான்
ஏதுமறியாதபிள்ளை யிராவானும்நீங்களுமாய்
வாதுசெய்துகானகத்தில் மடிந்திடவும்போனீரே

## நாககன்னி தன்புதல்வர் மூவருக்கும் புத்திசொல்லி யனுப்புதல்

கண்ணேயபிமா கடோர்க்கயனேயென்மகனே
அண்ணனிவனுமென் றறியாமற்போனீரோ
கல்லைபுருவாக்கிவைத்த கரணனூர்தம்முடைய
நல்லபுதுமையென்று நாககன்னிதானழுதாள்
புலம்பியழுதொரு புத்தியுள்ளதாயாரை
வலம்புரியசச்சுத்திவந்து மாதாவைத்தானமர்த்தி
பண்ணியதோர்பூசையுந்தான் பாலர்களைக்காத்ததுந்தன்
புண்ணியத்தினாலே பிழைத்துவந்தோம்மாதாவே
சித்தமயங்காமலுந்தன் சிந்தைமகிழ்ந்தெங்களுக்கு
புத்திசொல்லுமென்று புதல்வர்பணிந்துநின்றார்
தனதுபிள்ளைமூவர்களுந் தானுரைத்தசொற்கேட்டு
மனதிலுள்ளதுக்கமெல்லாம் மாறியபின்நாககன்னி
திங்கள்முகமாகிச் சிந்தைமகிழ்ந்தன்புடனே



எங்கும்புகழுடைய இராவானைத்தான்பார்த்து
வாரீர்மகனேயென் மைந்தனபிமனுக்கு
கூடியிருந்தொரு கோபாலன்றன்மகளை
கைப்பிடித்துவைப்பதற்குக் கட்டளையுமிட்டோனன்
இப்போதுதம்பியர்க ளிருவருக்குமேதுணையாய்
போகவிடைகொடுத்தேன் புத்தியுள்ளராவானே
சேகரமாய்நீங்களுந்தான் சென்றனுகும்வேளையிலே
மாபாவியான வணங்காமுடியோனும்
தீபாவிதன்னுடனே சேர்ந்தபடைமன்னவரும்
தடுத்துவளிமறித்துச் சண்டைசெய்தாராமாகில்
அடுத்ததுணையான அபிமன்கடோர்க்கயனை
ஏர்க்கையுடனே யெதிர்த்தஅரசருடன்
போர்க்களத்தில்ச்சண்டைசெய்யப் போவென்றனுப்பாதே
அறியாதபால னபிமன்கடோர்க்கயனும்
தெரியாக்குழந்தைகளைச் செருக்களத்திலேவாதே
வந்தெதிர்த்தபேர்களுடன் மார்கொடுத்தாபொருதி
அந்தஅரவுயர்த்தோ னவன்தனையுமேசெயுத்து
முன்னமுடியாமல் முடித்தபூவாடாமல்
வெள்ளிக்கிழமையிலே வெண்மதியவேளையிலே
மாயன்மகளை வாள்விசையன்புத்திரற்கு
நீயிருந்துகல்யாணம் நிறைவேரப்பண்ணிவைத்து
வாருமென்றுசொல்லி வரங்குடுத்தாள்நாககன்னி
சேருமென்றுசொல்லி திருநீறுதான்கொடுத்தாள்
உத்தாரமானதையு முண்மையுடன்தான்கேட்டு
பெத்தாள்திருவடியைப் பிரியமுடனேபணிந்து
அன்புரைத்ததாயேயுன் னனுக்கிரகமானதினால்
தம்பியர்க்குச்சோபனமுந் தான்முடித்துநான்வாரேன்
அடியேன்கள்தன்னையிப்போ அனுப்புமென்றுராவானும்
படிமீதிலன்னையுட பாதமதுபோற்றிநின்றான்

### விருத்தம்

போத்திப்பணிந்த குமாரர்களிற் பொருணமயுடையவபிமனுக்கு
சாத்திதிருமஞ்சனமாட்டிச் சருகைத்துயில்கொண்டேயுடுத்தி
நித்துநுதல்வெண்ணீற்றையிட்டுக் கிரீடஞ்சிரசில் கிரணமெனப்
பாத்துவயிரக்கடுக்கன்முத்துப் பதைக்கமிகவுமணிந்தாளே.

## விருத்தம்

வாலமதனன்போலிருந்த வாள்வீமனையும்மாப்பிளைபோலக்
கோலம்புரிந்துபெருமாள்தன் குழந்தையமூர்தசுந்தரியை
தாலிபுனைந்து வர்ருமெனத் தரித்தாள்காப்புஅபிமனுக்கு
சோலியினிமேலென்னயிங்கே சுருக்காய்நடவுமெனவுரைத்தாள்.

## அம்மானை

அன்புடையமைந்தருக்கு அமுதமிகவேபடைத்து
இன்பமுடனே யிசைந்துவரங்கொடுத்து
நலங்காணிதுவெனவே நல்லவபிமனுக்கு
அலங்காரஞ்செய்து யனுப்பினாள்நாககன்னி
அனுப்பிவைத்ததாயா ரடியிணையைத்தெண்டனிட்டு
தனுப்பிடித்தகையுடைய தம்பியிவர்மூவருந்தான்

## நாககன்னியிடம் மூவரும்விடைபெற்று துவாரகை செல்லுதல்

ஆயுதமும்பூண்டு யகமகிழ்ந்துகொண்டாடி
தூயவர்கள்மூவருந்தான் துருசாய்நடக்கலுற்றார்
சுதைபெருகும்பூங்காவுஞ் சோலைகளும்தான்பார்த்து
கதைகள்தனைப்பேசிக் கட்டழகன்தானடந்தார்
ஊர்ணியுந்தோப்பு முயர்ந்தமலைநாடும்
ஆரணியமான அருங்கானகங்கடந்து
மரவருடதேசம் மருட்டியர்கள்தன்தேசம்
சூரவருடதேசங் குணமாகவேகடந்து
பருதிமதிதெரியாப் பனிக்குமலையுள்ளதையும்
மருதநிலம்பார்த்து மன்னவர்கள்தானடந்தார்
காடுஞ்செடியுங் கண்டுவழிகூடி
வேடர்திரியுமொரு விந்தைமலைகடந்தார்
இனியமலைகளிலே யிருந்துதவிப்பாரி
கனிகள்தனையருந்திக் காவலர்கள்தானடந்தார்
இந்தவிதமாகவுந்தா னிருநாற்றுக்காதவழி
வந்தார்கள்பாலர் வருகும்வழிதனிலே
வேகமுடையதொரு வில்விசையன்புத்திரர்க்கு



தாகமிகவெடுத்துத் தண்ணீர்தவித்ததினால்
நடக்கவிலமிலைகாண் நல்லதொருஅண்ணாக்களே
கடக்கவகையில்லையென்றுக் கட்டுரைசெய்தானபீமன்
இவ்வசனங்கேட்டு இராவானரவணைத்து
தவ்விநடந்துவந்த தம்பியரேயிப்போது
குருந்தநிழல்தனிலே குணமாகநீங்களுந்தான்
இருந்துதவிப்பாரு மிப்போதரைச்சணத்தில்
ஜெலமெடுத்துநான்வாரேன் சிவன்செயலாலென்றான்னன்
நலமானவார்த்தைபுத்தி நவின்றான்ராவானும்
இந்தவசன மிருவருமேதான்கேட்டு
அந்தப்படிநிழலில் யாங்களிருக்குகிறோம்
நாக்கைப்பிடிக்குதுகாண் நல்லதண்ணீர்தானெடுத்து
சீக்கிரத்தில்வாருமெனச் செப்பினார்தம்பியர்கள்
கட்டுடையயென்றுணைவா கடோர்க்கயனேதம்பிதனை
விட்டுப்பிரியாமல் வீற்றிருப்பீரென்றுசொல்லி

## அபிமனுக்கு தண்ணீர் கொண்டுவர இராவான் செல்லுதல்

தண்ணீரெடுத்துவரத் தானடந்தான்ராவானும்
விண்ணீரில்லாத வெங்கானகந்தனிலே
ஓடித்திரிந்தலைந்தான் ஒருநதியுங்காணாமல்
நாடித்திரிந்தலைந்தான் நல்லதண்ணீர்காணாமல்
மலைபுங்குவடுகளும் வல்லரைக்கர்காடுகளும்
தலைதூரமோடிச் சுத்திரமேகாணாமல்
கைசோரமெய்சோரக் கால்கள்மிகச்சோர
ஐயாயிரங்காத மவனலைந்துங்காணாமல்
கவலைபெரிதாகிக் கலங்கிப்பரதவித்து
சிவனேசிவனேயென்று சிந்தைமிகவும்நொந்து
என்னவினைப்பயமோ வென்னுடையதம்பியர்க்கு
நன்னீரையின்னேரம் நானலைந்துங்காண்கிலேனே
ஒருநாளிகைதனிலே உனக்குச்செலமெடுத்து
வருவேனெனவுரைத்தேன் வழிபார்த்திருப்பாரே
ஆவிதுடித்திடுமே ஐயோவென்தம்பியர்க்கு

பாவியெனைப்போலப் பாருலகிலொருமில்லை
எனறுயிகப்புலம்பி இராவாணமவ்வனத்தில்
அன்றுவருகையிலே யருகாகவோர்மலையும்
பச்சைநிறமாகப் பண்புடையவுன்னிதமாய்
உச்சிதனைக்கண்டோ ருலகிலொருவரில்லை
பெரியமலைதனைப் பெருமையிகுராவாணும்
உருமையுடன்கண்டவனும் ஓடிவருகையிலே
அந்தவழியிலொரு ஆலாவிருக்ஷமதில்
வந்துயிருக்குமொரு வாகாகிரணபக்ஷி
மன்னன்மனதுநொந்து வருவதையுந்தான்பார்த்து
என்னவயணமிவ னிங்குவந்தகாரியத்தை
கேள்ப்போமெனவே கிரணபக்ஷிதானினைந்து
வாள்ப்பூண்டகையுடைய மன்னவனைத்தான்பார்த்து
தனதுடையமன்னவனே தாமரைப்பூங்கையானே
மனதுநொந்துகானகத்தில் வந்தவகையேது
வீரமுள்ளதம்பியரே வெத்திக்கிசைந்தவரே
ஈரமிலாக்கானகத்தில் யேன்வந்திரித்தூரம்
பேசுவீரும்முடைய பேருருமெந்தனிடம்
கூசாமல்ச்சொல்லுமென்று குணமுடனேதான்கேள்க்க
கருணையுள்ளபட்சிதனைக் கண்டுமேராவாணும்
கிரணபட்சிதன்னிடத்தில் கிருபையுடனேதுரைப்பான்

## இராவான் இருதலைப்பட்சியென்னுங் கிரணபட்சி யிடம்தன் வரலாரு சொல்லுதல்

பாண்டுமகராஜன் பாலரைவர்தங்களிலே
காண்டீபன்பெற்றெடுத்த காளையரில்ராவாணும்
எனக்கிளையதம்பியர்களிருவரையுந்தான்கூட்டி
வனத்தின்வழியாகவுமே வந்தோமென்தம்பியர்க்கு
தண்ணீர்விடாயெடுத்துத் தயக்கமதுவுண்டாகி
அண்ணாவென்றென்னுடனே யவனுரைத்தசொற்கேட்டு
பதறிமனதுநொந்து பாலகரையங்கிருத்தி
இதமுடையதண்ணீ ரெடுத்துவரயிங்குவந்தேன்
இருளடர்ந்தகானகத்தில் யெங்குந்திரிந்தலைந்தேன்



ஒருகிராமைதண்ணீரை யுண்மையுடன்நான்காணேன்
என்செய்வேனென்றுமன மேங்கிவருகையிலே
உன்னையெதிர்கண்டே னுன்னுறவுமாச்சுதிப்போ
தாகமுடன்வந்தவர்க்குத் தண்ணீரிருக்குமிடம்
பாருமொழியுடையீர் பகருவீராமாகில்
உந்தனுக்கேதர்ம முடன்பலிக்குமென்றேதான்
விமலர்பதம்பணியும் வீரமிகுராவாணும்
இனிமையுடன்சொன்னசொல்லுக் கிரங்கிக்கிரணபட்சி
கனிவாயகமகிழ்ந்து காவலனைப்பார்த்துரைக்கும்
தாகந்தெளிவதற்குத் தண்ணீரிருக்குமிடம்
வாருடனேசொல்வேன் மகாகொடுமையிவ்வனத்தில்

## இராவாணுக்கு கிரணபட்சி தண்ணீரிருக்கு மிடஞ் சொல்லுதல்

மலைதானிருக்குதுபார் மலைமேல்ஜெலமுமுண்டு
தலையருவிதீர்த்தமதைத் தான்கீழ்விழாகாமல்
அசுரனெனுமொருவன் அவன்போர்கடல்முழுங்கி
பசியாரவேணுமென்று பாரில்வருநீரையெல்லாம்
அனுவளவுங்கீழே யதுவிழுந்துசிந்தாமல்
உணவுகொள்ளவேணுமென்று யோசினையுங்காதவனி
அகலமுள்ளவாயை அவனும்பிளந்துகொண்டு
பகலுமிரவுமதாய் பதினையிரவருடம்
மண்டுகிரானந்த மலையருவித்தண்ணீரை
உண்டுபசியடங்க வோர்வருடம்செல்லுமையா
அந்தமட்டுந்தண்ணீ ரரியயர்க்குங்கிட்டாது
சிந்தவிட்டான்தண்ணீரை ஜெலமெப்படிக்கிடைக்கும்
உத்தகருமமுமக்காகவே யுரைத்தேன்
மற்றொருவற்கேட்டால் வாய்திறந்தும்நான்பேசேன்
ஏகமாய்நாங்கள் யெம்மலையில்வாள்ந்தாலும்
தாகந்தெளிவதுஞ் சந்திரகரணியல்லால்
வாசமுள்ளபொய்கை வளர்நதியில்நீர்குடியோம்
தேசமுள்ளதண்ணீரைத் தீண்டோமொருநாளும்
எங்களுடசாதிக் கிசைந்தவகையிதுகாண்

உங்களுடனானு முர்வுபுரிந்ததினால்
உமக்காகவேண்டியோரு யோசனையுஞ்சொல்லுகிறேன்
தமக்கானசேதியென்று தான்கேளுமன்னவனே

## இராவாணுக்கு கிரணபட்சி அசுரனுடைய மர்மம்சொல்லுதல்

பெருத்தவசுரனுட பெருங்காற்பெருவிரலை
அருத்துவிடவுமக்கு ஆனுவமுமுண்டானால்
உயிரிளந்துபோவானுடனசுரனிப்போது
தயிரியமாயிம்மலையில்த் தண்ணீர்மிகவெடுத்து
போகலாமென்று புலனையுமக்குரைத்தேன்
ஏகலாமென்றுசொல்லி யிதமாய்க்கிரணபட்சி
எழும்பிப்பரந்ததுகாண் யினத்தாரிடந்தனிலே
தளம்பியுரைத்ததெல்லாந் தான்கேட்டிராவாணும்
இவனைச்ஜெயிக்குவகை யெந்தவிதமென்றுசொல்லி
சுவனத்துடன்மலையில்க் கட்டழகன்தானேறி
பார்க்கும்பொழுதிலங்கே பால்போலருவியென்று
மார்க்கமுடனேர்தாமாய் வந்துவிழுகிறதும்
அண்ணாந்துகொண்டு அசுரன்குடிக்கிறதும்
தண்ணீரனுவளவுந் தான்சிதராதுண்பதையும்
கண்டுமனதுநொந்து காவலனுமந்நேரம்
துன்பெண்ணியேயிவனைத் துணித்துவிடுவோமெனவே
வில்லெடுத்துநாணேற்றி வீரக்கணைபூட்டி
பல்லுதனைப்பார்த்துப் பக்ஷிதொடுத்துவிட்டான்
விட்டதொருபாணம் விசையுடனேதானோடி
மட்டிப்பயலசுரன் வாய்காரும்பல்லுதனில்
ஊடுருவப்பாய்ந்து உடைந்ததுகாணத்கணையும்
கேடுவந்ததென்று கெடிகலங்கித்தான்பார்த்து
மைமுகில்வாழும்மலையில் வந்தம்மைமயிக்கணையால்
எய்தவனுமாரோவென் றேறிட்டுப்பார்க்கையிலே
தொடுத்தேயொருகணையால்த் துய்யதொருராவாணும்
கெடுத்தானசுரன் கெதியடங்கக்கண்ணினையும்
கண்போயசுரன் கலங்கிமனம்வாடி



வின்பார்த்துநின்று விளம்புவான்வல்லசுரன்
ஆரடாயிவ்வனத்தி லஞ்சாமல்வந்தவனும்
நீரடாயிம்மலையில் நின்றுகுடிக்கையிலே
காணாமல்நீயுங் கணைபூட்டியெய்தாயே
தோணாமல்ச்செய்தவனைசும்மாவிடுவேனோ
கண்ணைக்கெடுத்தாலென் கைவலுவும்போய்விடுமோ
இன்னைக்கேயுன்னுயிரை யெமலோகமேத்திவிப்பேன்

## இராவரன் அசுரனைக்கொல்லுதல்

கூரடாவென்று கோவென்றையமிட்டு
பாரடாவென்றுசொல்லிப் பாருலகெலாம்நடுங்க
கலைமான்பிடித்திடவுங் கானகத்தில்வேடர்வந்து
வலைவளைத்தார்ப்போல வல்லசுரன்கைநீட்டி
மீன்பிடித்தார்போலே மிருகமுதலுள்ளதெல்லாம்
தான்பிடித்துக்கொல்லுவதைத் தானறிந்துராவாணும்
கைக்குளகப்பட்டுமவன் கைகடந்துவோடுதற்கு
பக்குவமில்லாமல்ப் பார்த்துமதிமயங்கி
ஒதுங்கபிடமுமில்லை ஒளித்தோடப்பாதையில்லை
பிதுங்கபிடமுமில்லைப் பெரியவனந்தனிலே
மூலைமுடுக்குகளில் மூனைந்துதிரிந்தாலும்
நாலுபுரமுமிவன் நன்றாய்வளைந்துகொண்டான்
ஆகையால்நாமும் அமடுவருமுன்னாக
வேகமுடனசுரன் விரலைநறுக்கவென்று
திரமுடையவில்லிலொரு திவ்வியாஸ்திரம்பூட்டி
விரலைக்குறித்துமங்கே விட்டானொருபகழி
சுருக்குடையபாணந் துடிதுடித்து அந்நேரம்
நறுக்கியெறிந்ததுகாண் நல்லசுரன்றன்விரலை
விரல்போகவேயசுரன் விண்ணிடிபோலலறி
மரணவலிப்பெடுத்து மாண்டுவிட்டானம்மானை
அரக்கன்மடிந்திடவு மவ்வனத்திலேயிருக்கும்
கரடிபுலியானைமுயல் கவுதாரிதான்முதலாய்
பரக்கும்பறவைகளும் பலதிசையிலுள்ளதெல்லாம்
திரத்துடனேஅங்குவந்து தேடியேராவாணை

ஓடிவந்துகண்டுபணிந் தம்மா னுயிர்பிழைத்தோம்
வாடும்பயிர் தனைய மழைவந்துபெய்ததுபோல்
வந்திரேயெங்களுயிர் மாளாமல்காத்தீரே
இந்தமலைத் தண்ணீ ரிவ்வனத்திலில்லாமல்
தாகந்தெளியவினித் தண்ணீரைத்தானருந்தி
தாகவிடாய்த்தீராமல்த் தயங்கிப்பரதவித்தோம்
இத்தனையும்போக்கி யிடரைத்தவிழ்த்துவைத்த
வித்தகரேயென்றுபல விதமாய்ப்புகழ்ந்துபின்னும்
எங்கள்பிராணீ ரென்றிரந்துசிலிங்கினங்கள்
தங்கள்தங்களிச்சையிலே தானோடிப்போனதுவே

விருத்தம்.

விரல்போயசாலுயிர்மடிய மிகவேமகிழ்ந்துஇராவணுந்
திரமாய்மலையினரிவினன்னீர்சென்றேயெடுத்துக்கமண்டலத்தில்
ஒருநாளிகையவ்வனங்கடந்து வுயர்ந்தமலைகள்பலகடந்து
சிறுபாலகரையுளம்மகிழ்ந்து தேடிநடந்துசென்றனே

அம்மானை.

தம்பியர்க்குத்தண்ணீரைத் தானெடுத்துராவணும்
அம்பில்வெகுதூருசா யவனும்வருகையிலே
வருந்திவளிநடந்து வாயுலர்ந்துதாகந்தாய்
குருந்தநிழலடியில்க் குமாரரிருக்கையிலே
ஆவென்றுநீர்குடித்த வசுரன்மடியயிலே
கோவென்றசத்தமெனுங் கூக்குரலாய்த்தான்கேட்டு
அபையமெனுங்குரல்க்கேட் டபீமன்கடோர்க்கயனை
உபையமுடன்பார்த் துரைப்பானொருவசனம்

## பீமன்னன் அபையக்குரல் கேட்டு கடோர்க்கயனிடம் சொல்லுதல்

சத்தம்பிறந்ததென்ன தமையனார்சென்றபக்கம்
வெத்திமிகுஅண்ணருக்கு விக்கினங்களுண்டோதான்
ஏதோதெரியவில்லை யிவ்வனத்தில்சத்தமது
சூதோவினைப்பயனோ துன்பமோஅண்ணருக்கு
போனவிடத்தில்ப் பொல்லாங்குவந்ததுண்டோ



ஏனோஇதுவரைக்கு மிங்குவரக்காணோமே
குரையானகானகத்தில்க் கொற்றவருமம்மைவிட்டு
அரைநாழிகைநிமிசம் அண்ணாவிநில்லாரே
ஜெலமெடுக்கச்சென்றவிடத்தில் தீவினைகளுண்டாச்சோ
கலகமிட்டசத்தமெந்தன் காதிலேகேட்டதிப்போ
இருண்டவனத்திலொரு பெதிரியினால்கைசேர்ந்து
அரண்டுபுலம்பியெந்த னண்ணரழுதாரோ
எந்தவிதமென்றனக்கு மிப்போதெரியவில்லை
அந்தவிதம்பார்த்து அடியேன்வருகுகிறேன்
வருமளவுமிங்கே வழிபார்த்திருமெனவே
திருவுரையும்வாளபீமன் செப்பினனம்மானை
கருதியுரைத்ததெல்லாங் கடோர்க்கயனுந்தான்கேட்டு
உருதியுரைத்ததொரு உண்மையுள்ளதம்பியரே!
அண்ணாவிசென்றவிடத்தி லபகேடுவாரதில்லை
விண்ணோரெதிர்த்தாலும் வில்லாற்செயித்திடுவார்
மிக்கானகானகத்தில் மிகுந்ததொருதண்ணீரும்
சிக்காமலின்னந் திரிகுறாரண்ணாவி
அதிகஜெலங்கிடைத்தா லரைச்சணத்திலேவருவார்
எதிரியவந்தனக்கு மிவ்வுலகிலுண்டோதான்
நீரேன்மயங்குகிறீர் நிமிஷமதிலேபார்த்து
வாரேனெனதுடைய வாஞ்சையுள்ளதம்பியரே
தகையுடனேகானகத்தில் தம்பிநீர்செல்லாமல்
அகலாமலிந்தநிழ லதிலேபடுத்திருங்காண்
சுந்தரியாள்வாழுந் துவரபுரிநகரம்
அந்தாதெரியுதுபா ரஞ்சாமல்நீரிருங்காண்
என்றுகடோர்க்கயனு மொழிந்திடவுமன்னேரம்
நன்றியுள்ளவாள்பீமன் நயந்தேதுசெப்பலுற்றான்
எமக்குத்திடமுரைத்து யிவ்வனத்தில்நீர்போனால்
உமக்குத்துணையெவர்கா ணொருவருமாய்ப்போவீரே
நீடுயர்வனத்தில் நீர்தனியேபோகாமல்
கூடவருவேனுன் கொற்றவரேயென்றுரைத்தான்

## கடோர்க்கயன் வாள்பீமனுக்கு புத்தி கூறுதல்

என்னமொழியுரைத்தா யின்பமுள்ளவாள்பீமா
நன்மையுள்ள அண்ணருரை நாந்தவரலாகாதே
அண்ணரிங்குவந்தால் யாமொருவரில்லாட்டால
கண்கலங்கியெங்குந் கதரித்திரிவாரே
உன்னைத்தனியேவைத்து உயர்கானகந்தனிலே
கருதிநடப்பதற்கு காலோவளங்குதில்லை
தருகியிருக்கவென்றால்த் தமையனைப்புங்காணேமே
வேத்தாளுமில்லையுன்னை விட்டுப்பிரிவதற்கு
ஆத்தாங்கரைப்பசுப்போ லலையுதேயென்மனது
ஆனாலுந்தம்பியரே அண்ணர்தனைத்தேடியிப்போ
நானேபோய்பார்த்துஒரு நாளிகையிலேவாரேன்
அந்தமட்டுந்தம்பியரே அஞ்சாமல்நீர்தாமும்
இந்தநிழலைவிட்டு யெங்கையும்நீசெல்லாமல்
வழியில்வருவாரிடத்தில் வார்த்தைமிஞ்சிப்பேசாமல்
எளியவர்போல்நீரு மிங்கேயிருமெனவே
மெய்யுடையபுத்திகளு மிகவேயெடுத்துரைத்து
கையிற்றனுவெடுத்து கடோர்க்கயனுந்தானடந்தான்
புத்திசொன்ன அண்ணரேநீர் போய்வாருமென்றுசொல்லி
பத்தியுடனேதொழுது பாலகனும்வீற்றிருந்தான்

### விருத்தம்.

கண்ணருவிகொண்டயர் கடோர்க்கயநடந்தான்
வண்ணமலரானபத மானதுசிவப்ப
அண்ணனைநினைந்திடமுன் னேருமொருகாலும்
பண்ணுமிளையோனிட மிருக்குமொருகாலும்

### இதுவுமது.

அன்னவனடந்திரு ளடர்ந்திடும்வனத்தே
தன்னடிசிவந்துகொப் பளமதுதுலங்க
முன்னவனைநாடியொரு கண்ணுமெதிர்பாயும்
பின்னவனைநாடியொரு கண்ணுபிரகெய்தும்



### வேறு விருத்தம்

மன்னவன்கடோர்க்கனிந்த வாறுதான்மனதுநொந்து
முன்னமேமான்பின்சென்ற முதல்வனும்ராமன்றன்னை
பின்னவன்றேடிச்சென்ற பிரமைபோல்நமக்குவந்தா
லென்னனும்செய்வோமென்று யெண்ணியேநடக்கலுற்றான்

## இராவணைத்தேடி கடோர்க்கசன் செல்லுதல்

மவுனமுடன்மாயனையும் மனதில்தியானமதாய்
கவலையுடனேதான் கடோர்க்கயனுமவ்வனத்தில்
முன்பார்த்துமேநடப்பான் முதல்வன்மேலாசைகொண்டு
பின்பார்த்திளையவன்மேல் பின்னுசைகொண்டுநிற்பான்
துலையாதகானகமுந் துகையாயிரங்காதம்
மலைவாசமுள்ளதெல்லாம் மன்னவனுந்தான்தேடி
பேராசைகொண்டு பிரமைமிகப்பிடித்து
சூறுவளிபோலச் சுளன்றுவருகையிலே
காறுனையொன்று கடோர்க்கசன்மேலேபாய
பேறுனைதன்னைப் பிளமிகவடித்து
துணிந்துநடந்தான் துலைதூரமவ்வனத்தில்
தணிந்துமலையோரம் தானும்வருகையிலே
காட்டில்ஜலமெடுத்துக் கமண்டலத்திலேயேந்தி
ஓட்டம்நடையுடனே ஓடிவந்தான்ராவாணும்
அண்ணனிவனென் றறிந்துகடோர்க்கயனும்
வண்ணமலர்ப்பதத்தை வந்துகண்டுதெண்டனிட்டான்
சீர்பொருந்துமவ்வனத்திற் தேடிவந்ததம்பியரை
மார்போடணைத்து மனமகிழ்ந்துராவாணும

## கடோர்க்கயனைப்பார்த்து இராவணன் புத்தி கூறுதல்

வித்தான்தம்பியரை விட்டுத்தனிவழியே
இத்தூரமிவ்வனத்தி லிங்கேவரலாமோ
தேகமினைத்திடுமே சிறுவனுக்குமின்னேரம்

தாகமெடுத்ததினால் தாள்வுகுரைவந்ததுண்டோ
நேருயிருபேரும் நிழலிலிருக்கையிலே
ஆருகினுமுமக்கு அபகேடுசெய்தாரோ
தாட்சியொன்றும்வாராமல் தம்பியரைக்காருமென்று
ஆட்சியுரைத்தசொல்லை யயர்ந்துமறந்திரோ
கிட்டயிருந்துமனக் கிலேசமதைத்தீராமல்
விட்டுவந்தாயென்ன விதிவசமோதம்பியரே
தீப்பிடிக்குங்கானகத்தில்ச் செலமெடுக்கானும்வந்தால்
பேய்பிடிக்குதோயெனையும் பிரகேவரலாமோ
தேடியிந்தக்கானகமுந் திரிந்தலைந்துநீயுமிப்போ
ஓடிவந்தசெய்தி யுரையுமென்றான்ராவானும்
அழுதுபுலம்பி அரனைமிகநினைந்து
தொழுதுகடோர்க்கயனுஞ் சொல்லுவானம்மானை

## இராவானிடம் கடோர்க்கயன் தேடிவந்த விபரம் சொல்லுதல்

மெய்யானஅண்ணாவி வீற்றிருந்தோமன்னிழலில்
அய்யோஅபையமென்று அருங்குரலாய்க்கேட்டதுகாண்
குற்றமில்லாஅண்ணரேநீர் கொடுவனத்திற்போனபின்பு
சத்தம்பிறந்ததினால்ச் சமுசியமுண்டாச்சுதுகாண்
ஆதலாலிவ்வனத்தி லண்ணரேயுந்தனுக்கு
ஏதோபிசகு இருக்குமெனவேநினைந்து
தம்பியர்க்குவேணபுத்தித் தயவுடனேநானுரைத்து
வெம்பியழுகாமல் வேற்றிடத்திற்செல்லாமல்
இருமென்றரவணைத்து யித்தூரமோடிவந்தேன்
தருமந்தலைகாக்குந் தமையரேயுமையிப்போ
கண்டபொழுதேயென் கவலையொழிந்ததுகாண்
தொண்டனுமக்கெனவே தொழுதான்கடோர்க்கசனும்
காலில்விழுந்த கடோர்க்கசனைத்தானெடுத்து
மேனிதுரப்பூண்டுமெய்யோடரவணைத்து

## கடோர்க்கயனுக்கு இராவான் புத்திகூறுதல்

மனப்பயத்தைவிட்டுவிடும் வாகுடையதம்பியரே
வினைப்பயனையாராலும வெல்லமுடியாது



மதியின்பிலத்தாலே வாழ்வாரொருவரில்லை
விதியினெழுத்ததனைவிலக்குவருமுண்டோதான்
இந்தனையும்பிர்மா பெழுத்தென்றறியாமல்
அத்தைநினைந்ததினா லாவதுவுமொன்றுமில்லை
சிந்தையொன்றுதானினைக்கத் தெய்வமொன்றுதானினைக்கும்
அந்தமகிமைதனை யாரறியப்போறார்காண்
உரமுடையபூமியண்ட முயிர்களையுண்டாக்கிவிக்கும்
பிரமன்றலையிலொன்றைப் பிடுங்கியரன்போடலையோ
சிறுலவுங்கானகத்திற் சீதைதனைமுன்னாளில்
வீரமுள்ளராமரங்கே விட்டுப்பிரியலையோ
அன்னாளிசீனமைந்தபடியல்லாது
இன்னாளில்வந்ததல்ல வென்னுடையதம்பியரே
தூரவிலிருக்கின்ற தூய்யதவத்தோரெனினும்
பிரவிமயக்கம்விட்டுப் பேராதுதம்பியரே
தண்டாமரைமுகத்தான் தம்பியபிமனையும்
கண்டாலெனக்குக் களைதீருமம்பியரே
ஆகையினாலெந்தன் அருமையுள்ளதம்பியரே
வேகமுடன்வாருமென்று மிக்கதொருராவானும்
துடிமிகுந்தஅண்ணருட சொற்கேட்டிளையவனும்
கடிகிடந்துவந்தார் கானகத்திலம்மானை

விருத்தம்.

இணையாயிருந்தகடோர்க்கயனு மிராவான்மிகவுமனமிளகித்
துணையாயிருந்தவபிமனையுஞ் சுகமாய்க்காண்போமெனநினைந்து
கணைபோலெழும்பிமலைகள்முதற் காடுகளித்தகொருநொடியில்
உணரவாயிவர்கள்பாதைதனை யுடனேயறிந்துநடந்தாரே

## இராவான் கடோர்க்கயன் இவர்களைக் காணாமல் அபிமனன் பரதவித்தல்

அம்மானை.

இந்தவிதம்நடந்து யிவர்கள்வருகையிலே
அந்தநிழலிலிருந்த வபிமன்கதைசொல்லுவேன்
அண்ணாவிதன்னையனுப்பியபின் வாள்பிமன்

என்றுதனெண்ணமெல்லாம் மெண்ணிமனம்புண்ணாகி
இருவரையுங்காணும லேங்கிபரதவித்து
ஒருவன்றனியனுமா யுளன்றுமனதேங்கி
அட்டதிசையும் அபிமனுமேஆராய்ந்து
எட்டியெட்டிபார்த்து ஏங்கிபரதவித்து
பார்த்தகண்ணும்பூத்து பதரிவாய்விட்டழுது
வேர்த்துகிருகிருத்து வெம்பிமனந்தேரி

விருத்தம்

தன்னுடதமையமார்கள் தானும்வந்திடுவரென்னு
அன்னிழல்தன்னில்ச்சற்றே அவனுமங்கிருந்துபார்த்து
இன்னமென்தமையமார்கள் யிங்குவந்திடவுங்காணேம்
என்னமோஅவதியென்று யேங்கியேமனதுநொந்தான்

2-வது

காவலரிருவர்சென்ற கானகப்பாதைதன்னை
ஆவலர்ப்பார்ப்பான்பின்னு மாற்றுவான்மண்மேல்வீள்வா
பாவம்யான்செய்தேனென்று பதருவான்மன்னுவாடி
ஆவதுஒன்றுந்தோணு தசந்துகித்திரைசெய்தானே

அம்மானை

போனவளிபார்த்துப் புலம்பியேமன்னவனும்
தானேயசந்து தனியேமண்மேல்விழுந்தான்
அத்தனெனுமுருந்த ஞயனுடசோதனையால்
நித்திரையுங்கொண்டான் நினைவுமதிலேபொருந்தி
சுழுத்திதனில்மனது சொக்கியொன்றுந்தோணமல்
அழுத்தமுடன்றுயின்று னபிமனுமன்னேரமதில்

## காந்தருவி அபிமனனிடம் வருகுதல்

இந்துமுகத்தா ளிலங்குவடிவுடையாள்
கெந்தருவியென்னுங் கிருபையுள்ளமங்கைபரும்
வாகானமேருவெனும் மலைதனக்குப்போகவென்று
ஆகாசமார்க்கமதா யவ்ரதத்தின்மீதேறி
செல்லுகின்றபோது சிறந்ததொருபூமியிலே



நல்லதொருசோலைகளும் நற்குறுந்தையும்பார்த்து
தெரிந்துரதமிறங்கிச் சிறந்ததொருசோலையிலே
இருந்துதவிப்பாறி யேகுவோமென்றுயெண்ணி
மங்கைரதமிறக்கி வந்தாள்குறுந்தநிழல்
அங்கேயபிம னவன்றுயின்றுனன்னேரம்
புருவத்தழகும் பொன்போலமுகத்தழகும்
கருணைபொழுகுமவன் கண்ணழகுங்காதழகும்
மார்பழகுந்தோளழகும் மலர்போலிருகரமும்
பார்புகளும்வில்லியெனும் பார்த்தன்மகன்காலழகும்
தலையில்கிரீடமிட்டுத் தளதளனமின்னுரதும்
மலையைநருக்குமொரு வச்சிரவாள்மின்னுரதும்
காயாம்புமேனிக் கட்டளகன்தூங்கிறதும்
வாயூறிநின்றுமந்த வஞ்சியருந்தான்பார்த்து
காமனழகுமிவன் கண்ணழகுக்கொவ்வாது
தாமனழகுமிவன் தன்னழகுக்கொவ்வாது
கண்டதில்லைநாமுமிந்தக் கட்டழகனைப்போலே
மண்டலத்தில்வேதன் மகிழ்ந்துபடைத்தானோ
கெவுணம்பரந்ததிலுள்ள கிரிகையென்னவொன்றுமில்லை
இவனையனுபவித்தா லீடேத்தமுண்டாகும்
அரைநாளிவனையிவனை யனைந்தால்ப்பரலோகம்
கரையேரலாமெனவே காந்தருவிநெஞ்சில்வைத்து

## கெந்தருவி அபிமன்னனை தூக்கிச்செல்லுதல்

மார்க்கமுடனேதான் வாள்விமன்கிட்டவந்து
நீர்க்கமுடனின்று சிந்தைதனிலேதான்
பாக்கியவான்றன்னைப் பண்பாயெடுப்பமென்றே
தூக்கியெடுத்தாள் துயின்றதுவுந்தப்பாமல்
விந்தையுள்ளதேரில் மிகவேபடுக்கவைத்து
அந்தரத்திற்சென்று ளவளும்ரதமேறி
பொன்னுலகந்தன்னில புகுந்துபிரியமதாய்
தன்னுடையமாளிகையில்த் தானிறக்கியேரதத்தை
நிறுத்தியவளுமந்த நித்திரைசெய்மன்னவனை
வருத்தமதுதவிர் வஞ்சியருமேதுசெய்வாள்

தம்பூருவீணை சாமண்டலத்துடனே
கெம்பீரமானதொரு கின்னரமுந்தானெடுத்து
மீட்டினுள்சந்த மிருதுவசனமதாய்
மூட்டினுள்ராகம் முளுதுந்தவறாமல்
சங்கீதவாத்தியமுந் தானேபடித்துநின்றான்
அங்கேகமகமென அழகுபன்னீர்தான்சொரிந்தாள்
பாலனுடனித்திரையைப் பாங்காயெழுப்புதற்கு
காலைநெருடிமெள்ளக் கையாலப்பிடிக்கலுற்றாள்
சீருலவுங்கெந்துருவி செய்யுஞ்சமிக்கினையால்
ஆருகாணென்று அபிமனெழுந்திருந்து

## அபிமனன் நித்திரைதெளிந்து யோசித்தல்

நாலுதிசையுமவன் நன்றாகவேபார்த்து
கோலமுள்ள அண்ணார்தனைக் குழந்தையவன்காணமல்
இருந்தவிடமுமெங்கே யிங்குவந்ததாய்யென்ன
குருந்தநிழலைவிட்டுக் கொண்டுவந்தாருமிங்கே
ஊத்துச்செலமெடுக்க ஓடினதோரண்ணரெங்கே
பார்த்துவரப்போன பட்சமுள்ள அண்ணரெங்கே
என்னபுதுமை யிங்குவந்தோமென்றுயெண்ணி
மன்னனபிமன் மனதுகலங்கையிலே
இசப்படுத்திநம்முடைய யிச்சையதிலேமயக்கி
வசப்படுத்தவேணுமென்று மங்கைமனதிலெண்ணி

## கெந்துருவி அலங்காரஞ்செய்துகொள்ளுதல்

சரிகைத்துயிலணிந்தாள் தங்கரத்னவோலையிட்டாள்
முருகுபிருபுரமும் முகமிலங்கத்தானணிந்தாள்
காப்புகொலுசணிந்தாள் கைவிரலின்மோதிரத்தை
மாப்பிளையுங்கண்டு மகிழவேதானணிந்தாள்
தங்கக்கடையமிட்டாள் தண்டைசிலம்பணிந்தாள்
இங்கிதமாயிரத்னமீ யிலங்கப்பதக்கமிட்டாள்
மோகம்பெருகவென்று மூக்கிலொருதொங்கலிட்டாள்
பாகுமொழியாள் பவளப்பணிதியிட்டாள்
ஏரிட்டுப்பார்த்தோ ரெல்லோருந்தான்மயங்க
நீதிட்டாள்நெற்றியிலே திலக்காப்புத்தானுமிட்டாள்
வந்தவர்களெல்லோரும் மயங்கிவிழும்படியாய்
செந்தூரப்பொட்டுச் திருநுதலிலேயணிந்தாள்



எல்லோருங்கண்டே யிவளோரதியெனவே
மல்லிகைமுல்லை மருவுபிச்சிசெண்பகமும்
சீவிமுடித்து சிறந்தஜடைபின்னலிலே
பூவைமுடித்துவைத்தாள் பூமியெல்லாந்தான்மணக்க
சல்லாவுடையணிந்தாள் சரீரமெல்லாந்தான்தெரிய
உல்லாசமான வுடமைபலவணிந்தாள்
கற்றோர்முனிவோருங் கண்டுமயங்கிடவே
சற்றேஸ்தனந்தெரியச் சரிகைரவுக்கையிட்டாள்
பார்த்தோர்களெல்லாம் பதரிமயங்கிவிழ
கோர்த்தமுத்துத்தாவடத்தை கொந்தோடுதானணிந்தாள்
ஆடவர்களெல்லோரு மவள்பிரகேசத்திவர
வாடைப்பொடியணிந்தாள் வாள்விழிக்குமையணிந்தாள்
எந்தனுடமையவலிலே யிந்தமன்னன்சிக்கவென்று
மந்திரமொன்றுச்சரித்து வந்தாளேமோகினிபோல்
துங்கரணவீரன் துடிவிசையன்புத்திரன்முன்
மங்கையரும்வந்துநின்று மணவறையிற்பெண்போலே
நாணினாள்சற்றே நகைத்தாள்குறிஞ்சிருப்பாய்
தூணின்மறைவாகத் துலுக்கும்பிலுக்குமதாய்
புக்குமணவறையிற் புதுமாப்பிளையிடத்தில்
வெட்கப்படுவதுபோல் மெல்லிநல்லாள்வந்துநின்று
ஆதரவினாலே அபிமனையுந்தான்பார்த்து
பேதைமொழிபோலே பேசுவாள்காந்துருவி

## கெந்துருவி காந்தர்வ விவாகஞ்செய்து கொள்ள விரும்புதல்

கண்ணுக்கிசைந்துவந்த கனவான்மனவாளா
பெண்ணுக்கிரங்கும் பெரியபுத்திபுள்ளவரே
கன்னியறியாதவனைக் கன்னிமணஞ்செய்யவந்த
தென்னவரேநானுமுன்னாள் செய்யுந்தவப்பயனோ
கலையெடுக்கசென்றிடத்தில் கண்டதிரவியமே
பிளைபொருக்கவேணுமல்லோ பெண்சாதிதன்மேலே
மோடிவைக்கலாமோயென் முகம்பார்த்திரங்குமய்யா
கூடியணைவதற்கு கொளுந்தியென்றுசொல்லுமய்யா
கண்டாசைப்பட்டதொரு கன்னியெனையிப்போது
பெண்டாளநீருமுன்னாள் பெற்றபலன்காணும்

விரும்பியுனையாசைகொண்ட மெல்லியரைச்சேருமையா
கரும்புதின்னக்கூலியுந்தான் கையில்க்கொடுப்பார்களோ
விரகம்பொருக்குதில்லை மேனியுருகுதுகாண்
சரசமதுசெய்துயிந்த தனுவணையில்க்கூடுமையா
ஆசையுடன்வந்துநின்று ஆரணங்குஞ்சொல்லிடவே
வாசமுள்ளசொல்லையெல்லாம் வாள்வீமன்தான்கேட்டு

## அபீமனன் கெந்துருவிக்கி தன்வரலாறு சொல்லுதல்

கருமுகில்போல்க்கூந்தலுடைக் காரிகையேநீகேளாய்
குருகுலத்திலேபிறந்த கொற்றவர்களைவரிலே
தருமர்க்கிளையதொரு தனஞ்சயனார்புத்திரனேன்
கருமமிகயபடைத்த கவுரவர்கள்சூதுசெய்து
நாட்டிலிருக்காதபடி நன்மையுள்ளபஞ்சவரை
காட்டில்துரத்திவிட்டான் கனத்ததுரியோதனனும்
ஆணுவமுமுண்டாச்சு ஐவர்வனம்போனதினால்
தோணும்படிமுடிக்கக்கூடாங்கிவனங்காமுடியோன்
எனக்குப்பரிசமிட்ட யெழில்மிகுந்தசுந்தரியை
தனக்குப்பிறந்தபிள்ளை சமர்த்தனிலக்கணர்க்கு
கொள்ளவென்றுபேசிக் கொடியதுரியோதனனும்
உள்ளஜனமத்தனையும் உறமுறையாரெல்லோரும்
வந்தார்களென்று மணமுகூர்த்தம்நாளையென்றும்
சுந்தரிதானோலைச் சுருளெழுதிவிட்டாள்காண்
மாதுடையவோலைதன்னை வாசித்துமன்னேரம்
சாதகமாயென்னுடைய தாயார்தனக்குரைத்து
எந்தனுடதமைய ரிருவரையுந்தான்கூட்டி
வந்தோம்வழியிலொரு வனத்தில்வரும்போது
தாகமெனக்காச்சு தமையனுமேநீரெடுக்க
ஏகினாரவ்வனத்தி லிருந்தேன்தனியனுமாய்
சோதனையாய்நித்திரையுந் தூயினுகின்றவேளையிலே
நீதியரியாமல் நீர்தானெடுத்துவந்தீர்
பூவையரேநானுமிப்போ பொன்னுலகம்நானறிந்தேன்
ஆவலெல்லாமென்னுடைய அண்ணரிடமல்லாது



வேறேயொருகருமம் விபரமறியேனான்
காப்புத்தரித்ததொரு கைதனையும்நீர்பாரும்
மாப்பிள்ளைபோல்கோலமிட்ட வடிவழகைநீர்பாரும்
கருதியிருக்குமொரு கன்னியரைமாலையிட
விரதமிருந்தவுடல் மெலிந்ததையும்நீர்பாரும்
பெண்கட்கரசேநான் பேசக்கேளிப்போது
பெண்களுடன்கூடிப் பேசியிருந்தறியேன்
பூவையரேகேளுமினிப் பூவுலகில்யான்பிறந்து
பாவையர்கள்தன்னுடனே பாயில்ப்படுத்தறியேன்
வஞ்சியரேநானும் மாதருடனேகலந்து
கொஞ்சிவிளையாடிக் கூடிப்புணர்ந்தறியேன்
மெத்தவயதெனக்கு மிகுதியில்லையிப்போது
பத்துவயதெனக்கு பாவையர்மேல்நாட்டமில்லை
அடிக்கரும்பைத்தானுமுண்டா லதுதான்ருசியாகும்
ஓடிக்கும்நுனிக்கரும்பை யுண்டால்ருசியாமோ
பேருரைத்தசுந்தரிக்கிப் பின்னொருவனேதெனவே
வீரெனக்குவந்ததல்லால் விரகமெனக்கேதுமில்லை
எல்லாமறிந்திருப்பீ ரென்றேயபிமனுந்தான்
நல்லாதரவுடனேநயந்து மிகவுரைத்தான்
காவலவன்சொன்னதெல்லாங் கன்னியருந்தான்கேட்டு
ஏவல்செய்யுந்தொண்டர்கள்போ லெதிராகவந்துநின்று

## கெந்துருவி அபீமனனை விவாகஞ்செய்து கொள்ளசொல்லுதல்

நன்றாயிருந்ததுகாண் நமக்குரைத்தசேதியெல்லாம்
தின்றால்ப்பசியாருங்காண் திங்கரியார்க்கென்னவுண்டு
ஏதுமறியோமென் றெடுத்துரைத்தீர்மன்னவரே
மாதருடதன்மேலே வாஞ்சையில்லையென்றுசொன்னீர்
பொருத்துயிருங்காணும் புண்ணியரேஉந்தனுக்கு
வருத்திக்கொடுக்குகிறேன் மதனநூல்சாஸ்திரத்தை
மூட்டுமதன்வித்தை முன்னேபடியால்
பாட்டுப்படிப்புகளில்ப் பலனேநூமன்னவனே
மெய்யாகச்சொல்லுகிறேன் மேதினியிலெவர்க்கும்

சய்யோகவித்தையல்லோ தானேநிசமாகும்
காமவித்தைதமாத்திரம்நீர் கற்றறிந்தீராமாகில்
யமனுக்குங்கூட எழுதிவிட்டாம்சீட்டு
கள்ளுக்குடிப்பதற்கும் காமவித்தைசெய்வதற்கும்
பள்ளிக்கூடந்தனிலே படித்திடவும்வேணுமோதான்
மாதவனார்தன்மகளை மாலையிட்டுப்போவமென்றீர்
ஏதோயிதுவரைக்கு மிருப்பார்களோபெண்ணைவைத்து
பரிசங்கொடுத்தவர்கள் பார்த்துவிட்டுப்போவாரோ
வரிசைபெற்றமாமனய்யன் மற்றிடத்திலீய்வாரோ
தாமோதரன்மகள்தான் சர்க்கரையோவுந்தனுக்கு
நாமாத்திரங்கசப்போ நன்றாயுரைத்திரே
தழுவியணையுமென்று தானேவலியவந்தால்
கிழவியென்றுசொன்னகதை கேட்டோமுமதிடத்தில்
அண்ணமார்தம்மிடத்தில் ஆசைவைத்துச்சொன்னீரே
தன்னிலெடுத்துவந்து தாகமதுதீர்த்தாரோ
மலையாமலென்னையுநீர் மருவியிருந்தாலும்
தலைமகனோர்பிள்ளை தான்பெற்றுநான்தாரேன்
இத்தடுத்திரவியமுந் சிறந்தமணிமாளிகையும்
ஆடவரேநீரும் அனுபவித்துத்தானிருந்தால்
இன்பம்பெருகிடவே யேந்திழையுமந்நேரம்
அன்புடனேசொன்ன எபிமனிடந்தனிலே
மையல்வெறிமிகுந்து மங்கையுரைத்தசொல்லை
செய்யபுகழ்மன்னன் திருச்செவியிலேகேட்டு
வாரணிந்தசுந்தரியை மருவுவதேதல்லாமல்
தாரணியிலுள்ளபெண்கள் தாய்காணுமென்றனுக்கு
தலைமறியக்கைபிடித்த தாரமதுதன்னைவிட்டு
பலதுரையிலேமிதித்தால் பாவமல்லோபைங்கொடியே
கைப்பிடித்துமாலையிட்ட கணவனிருக்கையிலே
அப்புறத்திற்செல்லுவது மாகாதுபெண்ணனங்கே
ஞாயமதையறிந்து நன்றாய்நடவாமல்
மாயமபக்கமுள்ள வார்த்தைதப்பகராதே
வீணாகநீதவித்தை ரெம்பரெம்பச்சொன்னாலும்
ஏலாதுபோமென் றெடுத்துரைத்தானேமன்னவனும்



பதபாகமில்லாமல்ப் பார்த்தன்மகன்சொன்னதெல்லாம்
இதமானதேர்கையரு மிருசெவியிற்றான்கேட்டு
தோணுமலிந்தத் துடியணையும்நம்பியல்லோ
வீணாசைகொண்டு விருதாவில்நின்றேமே
வாரும்புதுநிலவில் மருவியெனைச்சேராட்டால்
ஆருமிலையுனக்கு யானேயெமன்காணும்
கட்டியெனையணைத்து கலந்திடவுமாட்டீரேல்
விட்டுவிடுவேனோ பிகுவுபண்ணவேண்டாங்காண்
பொறுத்தேனிதுவரைக்கும் பொறுமைபெரிதெனவே
மறுத்துரைக்கவேண்டாம் மருவியிருந்தாலும்
கன்னியிவையுரைக்கக் காவலனுந்தான்கேட்டு
என்னவிதியெனவே யேந்திழையைப்பார்த்துரைப்பான்
கொள்ளாதநஞ்சைக் குடிப்பாரோபூமியிலே
துள்ளாதேயென்னிடத்தில்த் தூரநில்லுமென்றுரைத்தான்
சினந்துரைத்தசேதிதனைத் தேன்மொழியாள்தான்கேட்டு
மனந்தனிலேகோபம் மகாகொடுமையுண்டாகி
உத்தசிறுவனையு முயிர்வதைக்கவேணுமென்று
சித்தமதில்நினைந்து சேயிளையுமேதுசொல்வாள்
இளப்பமென்றுயென்னையுநீர் யெண்ணாதேயும்முடைய
அளப்பரியச்சொன்னதல்லா லனுபோகமேதெனக்கு

## கெந்துருவி அபிமனனை அசுரனிடங் கொண்டுவந்து ஒப்பிக்குதல்

அமையுமய்யாகோபம் அரைநாளிகைதனிலே
தமையனிடந்தனிலே தான்கூட்டிநான்போரேன்
வல்லவரேவாருமென்று வணங்கிநமஸ்கரித்தாள்
நல்லதென்றுவாள்வீமன நன்றாய்யெழுந்திருந்தான்
அஞ்சாமல்வஞ்சகமாய வளரதத்தின்மேலேத்தி
தஞ்சமுடன்கெந்துருவி தானும்ரதமேறி
நடத்தினாளந்திரத்தில் நல்லதொருதேரதனை
கடத்தினாள்பூமியிலே கன்னியருமம்மானை

### விருத்தம்

சிறுவனைரதத்தில்வைத்துச் சிறந்தபூவுலகில்மிக்கோர்
பருபதமதனில்ச்சென்றுப் பசாசினிபீடந்தன்னில்

அருகினில்த் தவசுசெய்யும் அசுரனைக்கண்டுபோற்றி
ஒருபயனுமக்குத்தந்தே னுமதுகாரியம்பாரென்றாள்
அம்மானை

மங்கைநல்லாள்தேரை வளர்பூமியில்நடத்தி
அங்கேயொருமலையி லசுரனொருவனொருவன்
அவன்பேர்புலைய னவனிடத்திற்கொண்டேகி
இவனையவனிடத்தில் வெத்தாகவொப்புவித்து
தவலையைதீர்சற்றுந் தலக்குமையாமலே
தவசைநிறைவேற்றி தயவைநமக்கருளும்
உபசாரமென்ன உமக்கும்நமக்குமிப்போ
அபசாரம்செய்தாலும் மன்புவையுமென்றுசொல்லி
பொய்புரையாமன்னவனைப் பிடியுமென்றுராட்சதன்றன்
கையிற்கொடுத்துவிட்டுக் கன்னியருந்தான்போனாள்
கொடுத்தசிறுவனையுங் கொண்டுவந்துவல்லசுரன்
அடைத்தகுகையதனை யவனுமிகத்திறந்து
குகையிலிருக்குமந்தக் குழந்தையர்கள் தன்னுடனே
வகைவிபரமாக வாள்வீமனையடைத்து
ஏனையினித்தவசு யிவனுடனேயெண்ணினது
தானுமிரமுஞ் சரியாச்செனமகிழ்ந்து
பெலிகொடுக்கவேணும் பிசாசனிக்கிபின்னேரம்
மலையில்புனலாடி வருவோமெனவசுரன்
திசைதெரியாக்கானகத்தில் சென்றான்மலையோரம்
குகையிலடைப்பட்டிருக்குங் குணமுடையவாள்வீமன்

## வாள்பீமன் குகையிலடைப்பட்டிருக்கும் குழந்தைமார்களைக்கேட்குதல்.

வாடிமனதுநொந்து மயங்கிப்பரதவித்து
கூடஅடைத்திருக்குங் குழந்தையரைத்தான்பார்த்து
எனக்கிளையதம்பியரே யெந்தனுக்குரைத்தீரோ
தனிக்குகையில்நீங்களிப்போ தடைபட்டிருப்பதென்ன
இந்தவசுரனென்ன யிங்குவொருபிடமென்ன
அந்தவசனமெனக் கரியவேசொல்லுமென்றான்



## அடைபட்டிருக்குங் குழந்தைகள் புலையன் விர்த்தாந்தத்தை அபீமனுக்குசொல்லுதல்.

கோமானுரைத்தமொழி குழந்தையர்கள் தான்கேட்டு
சீமானேயுந்தனுக்குச் செப்புகிரோங்கேளுமினி
வன்னிமலைதனிலே வாளுமசுரனிவன்
தன்னைப்பயின்றெடுத்த தாயார்பசாசினியாள்
வெகுநாளிவளிருந்து மேனிமிகத்தளர்ந்து
பகல்போல்மயிர்வெளுத்துப் பல்லுமிகக்களன்று
நாடிநரம்பசந்து நடையுமிகத்தள்ளாடி
வாடியிரச்சிபுண்ணா வாய்குளரிக்கண்புகைந்து
ஞாலமதையரக்கி நமநாரிலாசைவைத்து
காலஞ்சரியாகிக் கணக்குந்துகைமுடிந்து
போகவழிதேடிப் பிராணன்தவிக்கையிலே
தாகமுடன்புலையன் தாயாரிடத்தில்வந்து
அருமையுடன்பெற்றெடுத்த அன்னையரேஆச்சியரே
பெருமையுடன்வாழ்ந்திருந்த பேயேபிசாசனியே
இருந்தேன்மலையாம லேவல்சொல்லநான்கேட்டு
வருந்திவளர்த்தெடுத்த மாதாவேயுந்தனுக்கு
சாகவும்நாள்வந்ததென்று தானேமலையாதே
போகவும்நாள்வந்ததென்றுப் புலம்பித்தவியாதே
மனதில்நினைத்ததெல்லாம் வாரிவந்துநான்தாரேன்.
எனதுமுகம்பார்த்துரைப்பா யெந்தனுடதாயாரே
தாயாரிருகரத்தைத் தன்னுடையகண்ணில்வைத்து
ஆயேசரணமென்று அழுதான்புலையனுந்தான்
பொருமியழுததொரு புலையனையுந்தான்பார்த்து
அருமைமகனேநீ யழுகாதேயென்றமத்தி
மண்ணிலிருந்துகொண்டு மனிதருயிரையெல்லாம்
கொன்னுதின்னுவாழ்ந்திருந்தேன் கோடியுகம்வரைக்கும்
இப்போதுயெந்தனுக்கு யெழுத்துமுடிந்ததினால்
தப்பாமலேமரணந் தானெனக்குவந்ததுகாண்
கர்மந்துலைந்ததுகாண் காசினியைவிட்டகன்று
தர்மமெனும்நகரந் தான்தேடிநான்போரேன்

தனதுமகனேயுன் றன்னிடத்திற்சொல்லுகிறேன்
மனதிலொருஆசைதனை வைத்திருக்கிறேன்கேளும்
மரந்துவிருதாவிலிங்கே மாண்டுவிட்டோமாகில்
எரிந்துவிடாமலென்னை யெடுத்தடிக்கிநீயுமிந்தப்
பெரியவனத்திலொரு பீடமது தான்போட்டு
வருசமொருக்கால் வந்துஒருநாளையிலே
புவியாளும்மன்னவர்க்குப் பிறந்தபுதல்வர்களாய்
தவியாமலாயிரம்பேர் தானேயொருதொகையாய்
இட்டமுடன்கொண்டுவந்து யென்னுடையபீடமதில்
வெட்டிப்பெலிகொடுக்க வேணுமடாயென்மகனே
பத்தியுடனெனக்குப் பண்ணுகின்றபூசையினால்
பெத்துப்பெருகிப் பெரியகுடியாயிருப்பாய்
உள்ளமதிலாசை யுரைத்தேனுனக்கெனவே
பிள்ளைதின்னும்ராட்சசைதயும் பிரண்டுமடிந்தாள்காண்
தாயார்பிசாசினியுந் தான்மரணமானதற்பின்
ஓயாமலேயளுது யுருண்டுபுலையனுந்தான்
மண்ணிலெடுத்தடக்கி மாதாவுரைப்படியே
திண்ணைபொன்றுபோட்டுச் செய்திருக்கிறான்பீடம்
வருசமது தப்பாமல் மன்னவர்களாயிரம்பேர்
உருசைதாயார்க்கு உகந்துபெலிகொடுப்பான்
பண்டுதனைப்போலே பலிகொடுக்கயெங்களையும்
கொண்டுவந்துயிந்தக் குகையிலடைத்துவைத்தான்
எரிபூசைக்காயிரம்பேர் யெண்ணக்குறைந்ததினால்
மரியாதையாகவுமே வாள்த்திருந்தோமிக்குகையில்
எம்பியரேகொஞ்சநா ளிருக்கலாமென்றிருந்தோம்
தம்பியரேநீர்வரப்போய்ச் சரியாச்சுஆயிரம்பேர்
ஆருரைத்தவாக்கோ அனியாயமோநமக்கு
தமெழுத்தாய்வேத னுடனெழுதிவிட்டானோ
சந்தேகமேதுயினித் தலைமுழுகப்போனவனும்
வந்தால்நமதுயிரை வாங்கிவிடுவானொடியில்
நேத்திரமாயும்முடைய லேவடிவழகை
பார்த்திருந்தோமானால் பசிபோகுமெங்களுக்கு
காப்புத்தரித்திருக்குங் காவலரேஅண்ணனி



மாப்பிளையும்பெண்ணுமின்னம் வாழ்ந்துண்டிருக்கலையோ
எமக்குவிதிமுடிவா யின்பமனுவிக்கவில்லை
உமக்குவிதிவசமோ ஓகோகோவென்றழுதார்
பழுகும்ஒருவயசுப் பாலர்சொன்னசேதியெல்லாம்
அழகுடையசெல்வ னபிமனுமேதான்கேட்டு
ஏதுக்கும்நீங்களென்மே லிரங்கியழவேண்டாம
சாதிக்கும்புத்தியொன்று சாற்றுகிறேன்கேட்டருள்வீர்

## அடைபட்டிருக்குங் குழந்தைகளுக்கு அபிமனன் புத்தி கூறுதல்

விருத்தம்.

பளிபாதகம்விடுமோசெயல் பலியாதினியுலகில்
முளுமோசமுமிவனேசெய முடியாதிவனுடலைக்
களுகோரிகள்பொசிக்கவே கைவாளால்துணிசெய்வேன்
அளுகாதையுமளுகாதையு அபிமனுரைகேளும்

2-வது.

குளைசூடியஅரனார்பதம் மறவாதவனுரைப்பான்
பிளையானதுஉயிராம் வதையெவருகிலும்மிடரில்
விளைவர்ரொரிநரகானதில் வினையானதுவிடுமோ
அளுகாதையும்மளுகாதையும் அபிமனுரைகேளும்

பொல்லாஅரக்கன்வந்துநம்மைப்
பிடிக்கும்பொழுதில்நீங்களெல்லாம்
வில்லாற்பெரியோன்றனையுமுன்னே
வெட்டிப்பெலியுங்கொடுத்துவிட்டு
எல்லாரையுநீயொருமிக்க
யிரைவாவெட்டிப்பெலிகொடென்று
நல்லாயுரைத்தீராமாகில்
நருக்கிவிடுவேனவன்றனையும்

அம்மானை

கொடுமைபட்டசெல்வர் கூடாதொருநாளும்
கட்டாளினிற்பாலாய்க் கவிந்துவிடுந்தம்பியரே

நன்றாயிருந்ததுகாண் நாரணனார்சோதனையும்
கற்பமதாகின்றாலுங் காயசித்திசெய்தாலும்
நற்பெரியஆகாச நற்கெவனம்பாய்ந்தாலும்
திரணமதைமேருவதாய்ச் செய்தாலுமவ்வழியினில்
மரணம்பலிக்குமல்லால் மற்றதிலேயொன்றுமில்லை
தெளிந்துவுரைத்தாலுஞ் ஜெகத்திற்பிறந்தவர்கள்
அழிந்துவிடுவதல்லால் ஆவதுவுமொன்றுமில்லை
இனிமேல்பலவிதமா யெண்ணியழவேண்டாங்காண்
கனிவாயுமக்குமொரு கருத்துரைக்கிறேன்கேளும்
புலையனெனுமசுரன் பிடிக்கவருமன்னேரம்
மலைவுகளில்லாமலொரு வார்த்தையொன்றாகிலுரைப்பீர்
முன்னேயிவனை முதற்பெலியுந்தான்கொடுத்து
பின்னாலேயெங்களையும் பெலிகொடுப்பீரென்றுசொல்லும்
இந்தமட்டும்நீங்கள் எடுத்துரைத்திராமலில்
அந்தமட்டும்போது மவனுயிரைத்தான்வாங்கி
போக்குகிறேநீங்கள் பிழைத்திருந்தாற்போதுமது
பாக்கியமுமாமெனக்குப் பரலோகமுங்கிடைக்கும்
இதுகாணுமக்களப்பு மில்லையினிமேலாக
பதறாதிருங்களென்று பாலகனுந்தானுரைத்தான்
வேறுமொழிபேசாமல் குழந்தையர்கள் தான்கேட்டு
க்கிருந்தாரம்மானை

விருத்தம்.

இவனுரைப்படியேகேட்டு யிருந்தனர்குகையினுள்ளே
அவன்மலைபருவித்தீர்த்த மாடிநன்னீரெடுத்துக்
கவனமதாகவந்து கடிகிளன்பெலிபீடத்தில்
பவமதுபெருகவென்றே பருகும்நன்னீர்சொரிந்தான்

புலையன் ஆயிரங்குழந்தைகளையும்
பெலியிட அழைக்குதல்

அம்மானை.

பெத்தபிசாகினியாள் பீடமதிலேபுலையன்
சுத்தியிடமாகவந்து தொழுதுநமஸ்கரித்து
தாயேயுனதுமனஞ் சந்தோசமாகிடவே



ஆயிரம்பேர்பிள்ளைகளை அறுத்துக்கொடுக்குகிறேன்
தாள்வுகுறையில்லாமல் தாயேநீயிப்போது
காவுகொண்டுஉன்மகனை காத்தருளுமென்றுசொல்லி
வந்தான்குகை பருகில் வாளுமொன்றுகைப்பிடித்து
சந்தானமானகுகை தன்னையுமேதான்திறந்து
பாலரையெலாமசுரன் பாச்சைக்கயறுகொண்டு
காலன்பிடித்ததுபோலக் கைகள்ரெண்டுந்தானிட்டு
வளைத்துப்பிடித்திழுத்தான் வல்லசுரனன்னேரம்
குழந்தையர்களெல்லோருங் கோவென்றழுதிடவே
வெளியிலிழுத்துவந்தான் மிக்கபெலிபீடமுன்னே
சுளிவாய்வளைத்துகொண்டு சொல்லுவான்பாலருக்கு
பேர்பெற்றயென்தாய்தன் பெலிக்கிசைந்துவந்தீரோ
ஆர்பெற்றருங்களைப்போலரிய தவமகிமை
பூஜாபலனுமக்குப் புண்ணியரேவாச்சுதுகாண்
கூசாமல்நீங்கள்நின்று கும்பிடுங்கோபீடமதை
ஏழைப்புலையன்முதலெல்லோருமேசுகமாய்
வாளவென்றுசொல்லி மனதில்நினைத்திடுங்கோ
தரைபார்த்திருந்துகொண்டு தலையையசைத்திடுங்கோ
கரைபேத்திப்போடுகிறேன் கையறுவாள்தன்னாலே
தலையையசைங்களென்று தயவுசற்றுமில்லாமல்
புலையனுரைத்திடவே பொறுமையுள்ளபாலரெல்லாம்

ஆயிரங்குழந்தைகளும் புலையனைப்
பார்த்துச்சொல்லுதல்

அசுரன்றனைப்பார்த்து அகமுருகியேதுசொல்வார்
பிசகுஅனுவளவு பேதமில்லையாகையினால்
தப்பாமல்நாங்களுமே தலையையசைக்குகிறோம்
இப்போதுநாங்க ளியம்புகின்றசொற்படிக்கு
மனுக்கொடுக்கவேணுமந்த வகையதனைநீர்கேளும்
தனுப்பிடித்தக்கையனென்றுந் தம்பியர்தமன்னவனை
அறுத்துமுதற்பெலியிட் டதன்பிறகுயெங்களையும்
நிறுத்திப்பெலிகொடுங்காண் நீர்வாழ்ந்திருக்கவென்றால்
இந்தமனுக்கொடுக்க வென்றார்குமாரரெல்லாம்

அந்தவுரை தனைக்கேட் டசுரன்மனமகிழ்ந்து
அபையமிட்டபிள்ளைகளை யமர்த்தியேவல்லசுரன்
உபையமிட்டபிள்ளையைப்பார்த் தோடியிங்கேவாருமென்றான்

## அபிமனன் புலையனைப்பார்த்துச்சொல்லுதல்

செருவமுடன்சொன்னதையும் கேட்டவுடன்வாழ்பீமன்
மருவசனந்தானுரைப்பான் வல்லசுரன் தான்கேட்க
கைப்பிடியாயெங்களையுங் கருக்தருக்கநீ துணிந்தாய்
அப்பணிந்தசுவரனோ ஆண்டவர்கருமோதே
ஆடுகிடாய்க்கோழிகளை யறுத்துப்பெலிகொடுப்பார்
மாடுபன்றியானதையும் வதைத்துப்பெலிகொடுப்பார்
இவ்வழிவேயல்லாமல் யிந்தவழிகேட்டறியோம்
தெய்வமனுடரல்லால் திரும்பவுண்டோபூவுலகில்
தன்னுயிர்போல்மன்னுயிரை தானினைப்பார்நல்லவர்கள்
சின்னமனுஷரல்லோ செய்வாருயிர்வதைகள்
ஏனோகெடுவா யிதுவுனக்குதர்மமல்ல
ஆனாலும்ரெம்ப அரக்கொடுமைசெய்யுகிறாய்
பால்குடிக்கும்வாய்மாறாப் பச்சைக்குழந்தைகளை
கோல்பிடிக்கும்சின்ன குமாரர்களைக்கொண்டுவந்து
வலதுவ்வழக்கறிய மாட்டாதுயென்பதுபோல்
பெலிகொடுக்கவோநினைந்தாய் பேயாபுலையாபோ
செத்திறந்துபோனவர்க்கு ஜெகத்திற்பொசிப்புமுண்டோ
புத்திகெட்டுதோவுனக்கு போடாபுலைப்பயலே
உன்னுடைய தாயார்க்கு வுற்றபெலிநீயுமல்லால்
என்னிடத்திலுன்மகிமை யேலாதுசொல்லுகிறேன்
ஓடிப்பிழைபோடா ஓடாமலிங்குவந்தால்
பீடமதிலுன்னையிப்போ பெலிதான்கொடுத்திடுவேன்
ஆறென்றிருக்காதே அபிமனல்லோயென்பேரும்
பாரின்றயென்னுடைய பாரமுள்ளவாள்திறத்தை
அரிந்துபிழையுமென்று அபிமனெடுத்துரைத்தான்
தெரிந்துமிகவசுரன் சிந்தையிகவெகுண்டு

## புலையனுக்கும் அபிமனுக்கும் யுத்தம்

சாகுமொருசணங்கன் தன்மனையிலேருமென்று
கருக்தருக்கவைத்திருந்த கைபருவாள்தன்னையுமே



அருத்தமுடன்விட்டெறிந்தா னபிமனுடமேலே
பெருக்கமுடனெறிந்த பெரியதொருகத்திதனை
நருக்கியெறிந்துவிட்டான் நல்லதொருவாள்பீமன்
கண்டான்புலையனுமே கண்சிவந்துகோபமுற்று
இரண்டாயிரமலையை யெடுத்துவந்துதானெறிந்தான்
வாரமலைகள்தனை வாள்பீமன்வாளாலே
பூசைசெய்யவேளை தப்பிப் போகுதென்றுதான்புலையன்
பாசமெனுங்கயிற்றை பார்த்தெறிந்தான்மன்னவன்மேல்
வருத்தப்படுத்திவிக்கும் வல்லசுரன்பாசமதை
அருதறிந்துபோட்டுவிட்டா னபிமனுடவாளாலே
வீமதென்டையும்பிடிப்பான் மிக்கதொருவல்லசுரன்
ஏமதண்டமொன்றனை யெடுத்துமிகவெறிந்தான்
திக்குகளெல்லாம்நடுங்கச் சீறிவருந்தெண்டதனை
சக்கைசக்கையாகவுமே தானெறிந்தான்வாழ்வீமன்
வெற்றிகொள்ளும்மன்னவன்மேல் மிகவசுரன்கோபமதாய்
குத்தியிவனை குடல்பிடுங்கவேணுமென்று
குதித்தானொருகுதியும் குவலயமெல்லாம்நடுங்க
மிதித்தெறிந்தேவந்தான் விசையன்மகன்தன்மேலே
ஆர்ப்பரித்துவார வசுரனையுமன்னேரம்

## புலையனை புலையன்றாய்க்கே பலிகொடுத்தல்

வேர்ப்பறித்துத்தள்ளிவிட வேணுமெனவேநினைந்து
வாள்பீமன் தன்கையிலே வச்சிரவாள்தானெடுத்து
தாள்விலாமாயனையுந் தன்னுளத்திலேநினைந்து
மலைபோலெதிர்த்துவந்த வல்லசுரன் தன்னையங்கே
தலைவேறுடல்வேறாய் தான்துணித்தான்வாள்பீமன்
கதரியசுரனுயிர் காலனிடமேபோக
பதரியுடல்தலையும் பாரில்விழுந்ததுவே

விருத்தம்.

புலையனவன்மடிந்துயிர் புகுதவுஞ்சிறுவர்
மலையயானவயும்நீங்கினார் குழந்தையர்மனதில்
நலமிதாமெனவானவர் நறுமலர்சொரிந்தார்
சிலைபில்ராகவன்மருமகன் திருவுளஞ்சிறந்தான்

## இராவான்கடோர்க்கபனிருவர்களும் அபிமனைத்தேடித்திரிகுதல்

### விருத்தம்.

விண்டிடாதிருவக் கானகமலைகளும் விரைவில்ச்
சண்டமாருத மென்னவே நடந்து தானபிமன்
பண்டுதானுமே யிருந்திடும் நிழல்தனிற்பார்த்துக்
கண்டிடாமலே யிருவரு முருகினார் கரைந்து

### அம்மானை

பகைவர்களைவெல்லுகின்ற பார்த்தன்மகனிங்கிருக்க
தகையமாவேணுமென்று தண்ணீர்தனைத்தேடி
முன்னாகவேநடந்த முதல்வனெனும்ராவானும்
பின்னாலேதேடுகின்ற பெரியகடோர்க்கயனும்
சேர்ந்துயிருவருமாய்த் திரள்வனமெலாங்கடந்து
சாந்தகுணமுடைய தம்பியபிமனுந்தான்
இருந்தநிழலிலேதான் யிருவர்களும்தான்பார்த்து
குருந்தநிழலிலந்தக் கொற்றவனைக்காணமல்
கருத்தழிந்துமெய்யசந்து கண்ணீர்மிகச்சொரிந்து
வருத்தமனதிலுற்று மயங்கிப்புலம்பலுற்றார்
அட்டதிக்கெல்லாம்புகழும் அபிமானேயெங்களையும்
விட்டுப்பிரிந்ததென்ன மெய்யுடையதம்பியரே
தாபந்தணிவதற்கு தண்ணீர்தரவில்லையென்று
கோபமெங்கள்பேரில்க் கொடுமைவைத்துப்போனீரோ
திங்களுதல்சுந்தரியாள் செல்வியின்மேலாசைவைத்து
எங்கள்தனைமறந்து யெவ்விடத்தில்போனீரோ
வனத்திலசுரனுட வஞ்சகத்துக்குள்ளாகி
தனித்திருக்கமாட்டாமல் சண்டைசெய்யப்போனீரோ
சாதகமாயெங்களையும் தான்பார்க்கவேணுமென்று
பாதைவழிச்சென்று பருவனத்தில்ச்சென்றீரோ
அன்புசொல்லியுன்பிறகே யாங்கள்வந்தோமாமாகில்
துன்பமென்றுயெங்களையுந் துலைத்துவிட்டுப்போனீரோ
காட்டானைசிங்கம் கரடிபுலியாளிகளை



வேட்டைசெய்யவேணுமென்று விரைந்துமிகப்போனீரோ
எங்கேயினிக்காண்போம் யென்னுடையவாள்பீமா
சங்கேந்துமாலழகன் தன்னுடையசோதினையோ
முன்னாள்வினைப்பயனோ மூதாக்கள்செய்ததுவோ
இன்றுனைப்பிரிந்தோம் யீஸ்பரனேயென்றழுதார்

### கொச்சகம

பிரியாதஅண்டில்களேப் பேடைமயில்த்தாராவே
வெரிசேரும்பூங்காவில வீத்திருக்கும்—மாங்குயிலே
சரியானவில்விசையன் தன்னுடையபுத்திரனும்
அரியாச்சிறுகுழந்தைய பீமன்வரக்காணீரோ (௧)

இன்பமுள்ளசோலையிலே யிருந்துவிளையாடுகின்ற
துன்பந்தவிர்த்தருளுந் தாக்கணமே—கேட்டருள்வீர்
வம்புசெய்யுந்துற்சனரை மார்பிளக்கவல்லவனும்
அன்புடையதம்பிய பீமன்வரக்காணீரோ (௨)

வல்லமைகளானதொரு வக்காவேகொக்கினமே
சொல்லுமொருசேதிதனைத் தோற்றமுடன்—கேட்டருள்வீர்
கல்லையுருவாக்கிவைத்த காரணனார்தன்மருகன்
நல்லஅபிமினிங்கே நாடிவரக்காணீரோ (௩)

அம்புவியிற்பஞ்சவர்ன மழகுள்ளகிள்ளைகளே
வம்புசெய்யவில்லையெங்கள் வார்த்தையொன்று—கேட்டருள்வீர்
நம்புமொருசுந்தரிக்கு நாயகனுமெங்களுக்கோர்
தம்பியபிமனிங்கே தான்வரவுங்காணீரோ (௪)

வெத்திசெய்யும்யாளிகளே வேகமுள்ளகுஞ்சரமே
பத்தியுடனாங்கள்சொல்லும் பாதரவைக்—கேட்டருள்வீர்
நித்திரையிலும்மறவா நேசமுள்ளயென்துணைவன்
புத்தியுள்ளபீமனிங்கே போதவரக்காணீரோ (௫)

பூமரமேசெண்பகமே புன்னைமரமேகமுகே
மாமரமேயென்னுடைய வார்த்தையொன்று—கேட்டருள்வீர்
விமர்க்கிளைய வில்விசையன் புத்திரனும்
தாமனபீமனிங்கே தான்வரவுங்காணீரோ (௬)

அந்திரமேமங்குலமே அம்பரநட்ஹேந்திரமே
சந்திரனேசூரியனே தானுரைக்க—கேட்டருள்வீர்
சுந்தரியைநல்முகூர்த்தஞ் சோபனமுந்தான்முடிக்க
வந்தஅபிமனிக்த வனத்தில்வரக்காணீரோ ௭

ஆறுகுளமேநதியே அன்புபெருநல்மலையே
தேரும்வகையெங்களுக்கு செப்பிடவும்—மாட்டீரோ
கூறுமொருசுந்தரியை கொஞ்சிவிளையாட்டமையல்
ஊறும்பிமனிங்கே ஓடிவரக்காணீரோ ௮

வில்வமரமேதுளசி வெள்ளைமலர்மல்லிகையே
நல்வசனமாகவுமே நானுரைக்க—கேட்டருளவீர்
கல்வியரிவிற்பனனுங் கட்டளகன்பஞ்சவர்க்கு
செல்வனபிமனிங்கே தேடிவரக்காணீரோ ௯

ஆலமரமேயரசே அத்திமரமேகுருந்தே
சீலமுடனுங்களுக்கு செப்பும்வகை—கேட்டருள்வீர்
கோலமுள்ளபஞ்சவரில் கூறுமொருபார்த்தனுக்கு
பாலனபிமனிங்கே பாதைவரக்காணீரோ ௰

விருத்தம்

இருநிலத்துள்ளோர்புகழ்பெருமரவானெழில்மிகுகடோற்கயனிரு
கருமமோகமக்குபிவ் விதம்வந்தெதென றமேகாவலர்புலம்பி [வர்
வருமைதானுற்றவிருந்தனர் மண்மேல்மாயவனிதுதனையறிந்து
கருணைதான்பெருகிவேதியன்போல காவலர்திருவர்முன்வந்தார்

வேறு விருத்தம்

வந்தவரிந்தமன்னரையெழுப்பி
மயக்கமுந்தீர்ந்திடவுரைப்பார்
சுந்தரிமுள்ள மன்னரேநாமும்
அய்யமால்மகள்மணந்தனக்கு
வந்தனமந்த வழியுமேபிசகி
வருகின்றவேளையில் மருத
விந்தைசேர் நிழலில் இலகுழந்தையர்க்குள்
வேலவனென்னவேகிரத்தான்



அந்தநற்பாலனங்கனமிருக்க
அவ்வழிசென்றிடவெதிறய்
வந்துமோமக்கு தெண்டனிட்டேதான்
வணக்கமாயெங்கிருந்தேதான்
இந்தநல்வனத்தில் செல்கின்றீரென்றே
யியம்பிடமானிடம்போரேம்
விந்தைசேர்கோவே என்றுநாமுரைக்க
விளம்பினனோர்மொழியன்றே ௨

அங்குநீர்சென்றால் அரவுயர்த்தோனும்
அவன்படை தன்னுடன்வந்து
மங்களமாக மால்மகள்தன்னை
மன்றல்தான் செய்திடயிருப்பான்
தங்கனென்றெண்ணி அஞ்சிடாநீரும்
சொல்லுவீர் பிமன்வாளேந்தி
மங்கைசுந்தரியை மணமதுசெய்ய
வருகிறனென் றவர்க்குறைத்தே ௩

உன்னுடபடைகள் தனையும்வதைத்து
உன்மகன்லெக்கணன்றன்னை
அன்புடனேதானுக்கினைசெய்ய
அவனுமே வருகிறதாக
உன்னுடன்சொல்லென் றுரைக்கயான்கேட்டு
ஓடினாம்வருகைபினும்மை
அன்புடன்கண்டேன் அவதியுந்தொலைந்து
அகன்றிடு மென்றுமேநடந்தார் ௪

அம்மானை.

கானகத்திலுள்ளதெல்லாம் கண்பார்த்தபிமனையும்
போனவழிசொல்லுமென்று புலம்பித்தவித்திருப்பார்
அழுவார்மனதுநொந்து ஐயோஅப்பாவென்று
விழுவார்புவிதனிலே மேனியும்புண்ணாகிடவே
பாரில்மணமாலையிட்டுப் பார்க்கலாமென்றிருந்தோம்
ஆரையினிபார்ப்போம் ஐயாகோவென்றழுதார்

சுத்திப்புலம்பியபின் கடோர்க்கயனும்ராவானும்
புத்தியதுமயங்கிப் பொறிகலங்கிமூர்ச்சையதாய்
அடித்துவிழுந்தா ரருங்கானகந்தனிலே

## ஸ்ரீகிருஷ்ணன் மூவரையும் மொன்று சேர்த்துவைத்தல்

திடத்தபுத்திபுள்ளவனுந் திருமாலிவையறிந்து
பீத்தக்கலையுடுத்தி பின்குடுமிதொங்கவிட்டு
சாத்துமொருநெத்தியிலே தியவுதிருநாமமிட்டு
காலூன்றியேநடக்க கடினமிகவானதுபோல்
கோலூன்றியேநடந்து குருவேதியர்போல
கிளவரெனமெலிந்து கிடுகிடெனத்தள்ளாடி
வழிபிசகிக்கானகத்தில் வந்தவர்களைப்போலே
மாயவனும்வந்தார் மனமகிழ்ந்து அன்னேரம்
நேயமெனும்ராவான் நெடியகடோர்க்கயனும்
படுத்துக்கிடக்குமொரு பாதைவழிதனிலே
அடுத்துவந்துமாயன் னவர்கள்தனையெழுப்பி
ஆசீர்வதித்து அவர்களிடமேதுரைப்பார்
பேசிநீர்நம்மிடத்திற் பிராமணனும்நானேழை
சொல்லுகிறேன்கேளுந் துவாரகையில்மாயவனார்
நல்லமகள்சுந்தரிக்கு நாளைக்கலியாணம்
செய்குறாரென்றுசொல்லுஞ் சேதிதனைநான்கேட்டு
ஐயமில்லையென்று அம்முகூர்த்தவேளையிலே
போனால்நமக்குப் பொருளுதவுவாரெனவே
நானேவடதேசம் நகரைவிட்டுஓடிவந்தேன்
வந்தேன்வெகுதூரசாய் வழிபிசகிக்கானகத்தில்
ஐந்தாறுநாளாய் யலைந்தேன் திசைபிசகாய்
ஓடித்திரிந்தலைந்து ஒருவரையுங்காணமல்
தேடிவனத்தூடே சென்றுவருகையிலே
மலையினருகாக மருதநிழல்தனிலே
தலைமையோருவருடன் தானுயிரங்குழந்தை
சுத்தியருபிருக்க அரைமகன்போலேசிறுவன்
வெத்திமிகசொல்லி வீற்றிருந்தாரவ்விடத்தில்



கண்டேனவர்களையுங் கருத்தில்மிகமகிழ்ந்து
விண்டேனவர்களிடம் வேதனையுமேன்மையையும்
சொல்லியுபசரித்துத் தோத்திரமுஞ்சொன்னேனான்
நல்லவருமென்று நமஸ்க்கரித்துயெந்தனையும்
இருமென்றருகிருத்தி யெங்கேவந்தீரிங்கையென்றார்
வருகும்வயனமெல்லாம் வகைவகையாய்பாலருக்கு
வந்துவுங்கானகத்தில் வழிபிசகிப்போனதுவும்
சிந்தையுள்ளமர்மமெல்லாஞ் செப்பினேன்பாலருடன்
என்வார்த்தைகேட்டு யிருக்கின்றபிள்ளைகளில்
பொன்வார்தபொற்கிலைபோலப் புதல்வனெனுமோர்சிறுவன்
என்னைவரவழைத்து யிருமென்றுபசரித்து
சொன்னசொல்லையுங்களிடஞ் சொல்லுகிறேன்கேட்டருள்வீர்
நாளைமுகூர்த்தமங்கே நல்லதொருசுந்தரிக்கு
வளைமறையோனே யின்பமுடன்நீர்போனால்
அரவுயர்த்தோன்றனையும் அரிகேசவன்றனையும்
இராமயவர்களிடம் செப்புமொருவார்த்தை
திதுரையார்தர்மதம்பி தேர்விசையன்புத்திரனும்
மாதுநல்லசுந்தரிக்கு மாப்பிளையாம்வாழ்விமன்
காப்புத்தரித்துமவன் கையிலொருவாளெடுத்து
நாற்பதுநாழிகைக்குள் நல்லதொருபட்டணத்தில்
வருவாரொருநிமிஷம் மன்னர்படையத்தனையும்
நரிநாய்களுக்கு நல்விருந்துவுண்டுபண்ணி
எட்டுத்திசையறிய யிலக்கணனைசிச்சைசெய்து
கட்டுகிறேன் தாலியந்தக் கன்னியெனுஞ்சுந்தரியை
மாலையிடவருவான் வாள்வீமனென்றுசொல்லும்
தாலிகழுத்திலிடத் தான்வருவானென்றுசொல்லும்
பெரியமறையோனே பிசகாமலிவ்வசனம்
திரியோதனனிடத்தில் செப்பினீராமாகில்
கணைதயுடனுனைக் கலியாணப்பந்தலிலே
மனதில்நினைத்ததெல்லாம் வாரியுமக்களிப்பேன்
நிச்சயமாய்நம்பியிப்போ நீர்போம்துவாரகைக்கு
இச்சணமேவாரோமென் றியம்பியடிபணிந்து
போமென்றனுப்புவித்தான் புகளுடையபாலகனும்

ஆமென்றதுகேட் டவர்களையும்விட்டகன்று
நான்வந்தேனித்தூரம் நல்லவரேயுங்களையும்
தான்கண்டேனென்மனதில் சந்தோஷமாச்சுதுகாண்
போறேன்துவாரகைக்கி புத்தியுள்ளமன்னவரே
நீரேன்மயங்குகிறீர் இனித்தபடியுமக்குக்
கூடிவருமென்றுசொல்லி கோவிந்தமாமறையோன்
நாடித்துவாரகையில் நண்ணினர்கோபாலர்
மறையோனுரைத்தமொழி மன்னவர்கள் தான்கேட்டு
குறைகள்தனையகற்றிக் குளிர்ச்சியுடனேமகிழ்ந்து
ஆதிமகாமூலம் அரிகேசவன்றானும்
வேதியர்போல்வந்துகந்து விக்கினத்தைதீர்த்தார்காண்
தாரணிபுமார்பா தம்பிகடோர்க்கயனே
வாருமினிமேலாய் மனதில்குறைவேண்டாம்
சாதிமறையோனமக்கு தானுரைத்தசொற்படியே
காதவழிநடந்தால் காணலாந்தம்பிதனை
ஐயமினிநமக்கு அனுவளவுவேண்டாங்காண்
மெய்யாகவென்பிரகே விரைந்துமிகவாருமென்று
எட்டிநடந்துசென்று வீமவான்வனத்தூடே
தொட்டுநடந்துசென்றான் துய்யகடோர்க்கயனும்

விருத்தம்

மறையவனுரைத்திடும் வார்த்தையாவையும்
இறைமொழிபிதுவென யிருவர்நம்பியே
குறையிலையென்மனக் குளிர்ச்சிகன்னினார்
உறையுமவ்வனங்கடந் தோடினார்களே

அம்மானை.

சுருக்காயிருவர்களும் துலைதூரமுள்ளதெல்லாம்
நெருக்கும்வனங்கள்தனை நிமிஷத்திலேகடந்து
தம்பியெங்கேயென்று தவித்தவருகையிலே
கும்புடனேஆரப்பேர் கூடியிருக்கையிலே
நல்லமருதநிழல் நடுவேஅரிமருகன்
வல்லமையாய்வீற்றிருந்தான் வாள்வீமனம்மானை



கண்டார்களங்கு கடோர்க்கயனுமாவானும்
பூரித்துடம்பு புள்கிதமுமுண்டாகி
வாரிப்புனல்சொரிந்த வான்பயிர்போலேயாகி
மயிர்க்குச்செரிந்து மன்னனிருவர்களும்
உயிர்க்கேத்ததம்பியிடம் ஓடிவரும்போது
வாளாளவீமன் மன்னவனுந்தான்பார்த்து
தாளாமல்வாரவர்கள் தமையனெனவேயறிந்து

## இராவான் கடோர்க்கயனை அபிமனன் கண்டு சந்தோசமடைகுதல்

ஆனந்தமாகி அபிமனெழுந்திருந்து
தானும்வெகுவேகமதாய் தமையனிடமாயோடி
அண்ணாவியென்று அவர்களிருபாதமதை
கண்ணன்மருகன் காவலனுந்தான்பணிந்தான்
வந்தனமங்கரித்த வாள்வீமன்தன்னையுமே
சந்தோஷமாகத் தமயரிருபேரும்
வாரிமிகவெடுத்து மார்புதனிலேயணைத்து
கண்ணீர்ததும்பிக் கமலமுகஞ்சிறந்து
பண்ணுனதம்பியரைப் பார்த்தேதுரைக்கலுற்றார்

விருத்தம்

எரிந்தகானகத்தன்னையுந் தனியில்விட்டேதான்
பிரிந்தபாவியைத்தமையனென் றுரைப்பதும்பெரிதோ
அருந்தவேஜெலமெடுத்துனக் களித்திடாதசடன்
இருந்துசகதகப்பனிலை யென்றனரிருவர்

வேறு

இருவர்கானகத்திடைவெளி வேகினமிடறாய்
ஒருவனுகவர்தவதிகள் பட்டிடவுமக்கு
மருவிலாமலேஅயன்முன்ன மெழுதியவசமோ
கருமமோயுயிர்த்துணைவனுக்கிதுவெனக் கரைந்தார்

அம்மானை

ஐயாவேயெந்தன் அழகுடையதம்பியரே
செய்யாதகர்மமுன்னாள் செய்தோமோயிவ்வனத்தில்

விட்டுப்பிரிந்தோமே விதியின்வசத்தாலே
தட்டளிந்துபோகாமல் தருமருடசெயலால்
கண்டோமினிமேல்க் கவலையெல்லாந்தீர்ந்ததுகாண்
பண்டேபுவியளந்த பச்சைமால்தன்னருளால்
ஆபத்துதீர்ந்ததுகா ணருமையுள்ள தம்பியரே
சாபத்தால்வந்ததொரு சங்கடமுந்தீர்ந்ததுகாண்

## அபிமனிடத்தில் ராவுான் போய்வந்த விர்த்தாந்தங்களை சொல்லுதல்

மன்னுஅபிமா வனத்திலுனைத்தனியே
இன்னுளில்விட்டுமங்கே யேகினேம்நீரெடுக்க
போனயிடங்களெல்லாம் புனலுங்கிடையாமல்
கானகமெலாந்திரிந்து கண்டேன்மலைதனையும்
அம்மலையினுச்சியினி லருவியெனும்நீரெடுக்க
செம்மையுடனேகத் திரமுடையபவல்லசுரன்
காவல்பெரிதாகிக் காத்துவரும்நீரையெல்லாம்
ஆவலுடனேபொசிக்கு மசுரனுடனேயெதிர்த்து
வெட்டியசுரனையும் மிகுந்தமலைமேலே
இட்டமுள்ளதண்ணீ ரெடுத்துவருகையிலே
கண்டேன்கடோர்க்கயனை கானகத்திலன்னேரம்
விண்டேன்மனது விதனம்பொறுக்காமல்
வாடியிருவருமாய் வந்துவுனைக்காணுமல்
தேடித்திரிந்து திகைத்துவந்தோமித்தூரம்
தம்பியுனைக்கண்டுயெங்கள் தாகந்தெளிந்ததுகாண்
வெம்பியெங்கள்மீதில் விசனம்வைக்கவேண்டாங்காண்
கொண்டுவந்தோம்தண்ணீர் குடியுங்குழமையதாய்
மண்டலத்தையாளவந்த மன்னுயென்தம்பியரே
அங்கேயிருந்துநிழலதனைவிட்டுத்தம்பியரே
இங்கேநீர்வந்தவகை யெங்களுக்குச்சொல்லுமையா
கூட்டமுடைய குழந்தையர்கள்தன்னுடனே
காட்டிலிருந்தவகை கண்மணியேசொல்லுமென்றார்
இந்தவிதமா யிவர்களுரைத்திடவே
சிந்தையுடன்கேட்டுச் செப்புவான்வாள்விமன்



### விருத்தம்.

தனியே குருந்த நிழல்தனிலே
  தானே படுத்துத் துயின்றதுவும்
இனிதாய் கெவுன காந்துருவி
  லெடுத்தோதமிட்டெழுப்பியதும்
கனிவாய்ச் சேறென் றவளுரைக்கக்
  காத விலையென் றுரைத்ததுவும்
வினைதான் புலையனிடத்தில் வந்த
  விபரம் முழுதும் விளம்பினனே

### அம்மானை.

நடந்தவயணமெல்லாம் நன்மையுடன்வாள்வீமன்
துடர்ந்துபடிப்படியாய்ச் சொன்னுனிருவரிடம்
காதாரக்கேட்டு கலங்கிமனதசந்து
குதோயென்தம்பியர்க்குத் துன்பவருமோவெனவே
அழுதுபுலம்பி யரவணைத்துத்தம்பியரை
பழுதுனக்குவாராது பட்சமாவுள்ளமட்டும்
தீங்குவருவதில்லை திருமால்தானுள்ளமட்டும்
நாங்கள்நுனைத்தேடி நல்வனத்தில்கண்டதினுல்
இனிமேல்க்கிலேசமக் கெள்ளளவும்வாராது
கனிவாய்முகமிலங்குங் கன்னியெனுஞ்சுந்தரியை
உனக்கேதிருப்பூட்டி உலகாளவைக்குகிறேன்
தனக்கேத்தபுத்திகளைத் தானுரைத்தான்தம்பியர்க்கு

## ஆயிரம்பிள்ளைகளையும் அவாளவாளுருக்கு அனுப்பிவிடுதல்

அருகில்வந்துநின்றதொரு ஆயிரம்பேர்பிள்ளைகளை
உருமையுடன்பார்த்து ஓதுவான்ராவானும்
தனிமையுள்ளபாலர்களே தம்பிசிறுவர்களே
இனிமேற்பயம்வேண்டாம் மேகுழுங்களூர்தனக்கு
போய்வாருமென்று பொருமையுடனேயுரைத்தான்
தாய்போலுரைத்தசொல்லை தட்டாமல்பாலர்களும்
கார்க்குமபிமனுட கமலபதம்போற்றி

மார்க்கமுடன்ராவான் மலர்பதமும்தான்போற்றி
தீரன்கடோர்க்கசனை தெண்டனிட்டுதான்போற்றி
ஊரும்வர்பதியும் உத்தநகர் தானேகி
தேனூருஞ்சோலை திரண்டவனங்கடந்து
போனாரவர்கள்பதி புதல்வர்களுமம்மானை

## விருத்தம்.

சிறுவர்கள் தனையனுப்பிச் சிறந்திடமூவருந்தான்
மருமலர்கமலும்பொய்கை வளர்நதிதீர்த்தமாடி
கருமமானதுவருமற் கனிபலசுவையோடுண்டு
பெருதுவாரகையைநோக்கிப் பிரியமாய்நடந்தாறன்றே.

## அம்மானை

கருமவினைகளெல்லாம் கானகத்திலேபோட்டு
தருமர்துணையெனவே தானடந்துபோகலுற்றார்
சந்திரகிரிதனையும் சதுரகிரிமலையும்
இந்திரகிரிநீலகிரி யிமயகிரி தான்கடந்து
மாவருடதேசம் வனத்திரமுந்தான்கடந்து
குரவருடதேசம் குவடுபதிதான்கடந்து
கதைகள்மிகப்பேசிக் கானகமுந்தான்கடந்து
சதுர்பெருகுகஞ்சமலை தான்வந்தாரம்மானை
கஞ்சமலையருகில் கமலநதியோரம்
பஞ்சவர்கள்புத்திரரும் பாங்காகவந்திருந்தார்

## சிவயோகமாமுனி இந்திரனிடம் வச்சிராயுதம் வாங்கிவருகுதல்

அந்தநதிக்கரையி லவர்வீற்றிருக்கையிலே
சிந்தையுடனே சிவயோகமா முனியும்
பொன்னுலகந்தன்னில் புரந்தரனார் தன்னிடத்தில்
நன்னயமாய்ச்சென்று நாள்மூன் றமங்கிருந்து
தெய்வநகர்மன்னன் சிவயோகமாமுனிக்கு
மெய்நுனிரவேதான் வேண்டியுபசாரமிட்டு
வந்தரிஷிபினுட மலர்ப்பதமுந்தான்போற்றி
எந்தனிடம்வந்தவகை யேதோவெனக்கேட்டான்
விருமபியுபசரித்து வெத்தயுள்ளயிந்திரனை
திரும்பிமுகம்பார்த்து செப்புவார்மாமுனியும்



மன்னாயெனக்குவுந்தன் வச்சிராயுதந்தனையும்
இன்னாள்குடுத்து யெனையனுப்புமன்னவனே
நம்முடையதேவியெனும் நல்லதொருபத்னியாள்
உம்முடையகையா யுதம்பார்க்கவேணுமென்றால்
வாங்கிவருவேனென்று வந்தேனுமதிடத்தில்
தாங்கள்மனதுகந்து தந்தனுப்புமின்னேரம்
கொண்டுபோய்நானுமந்த கோதையர்க்குத்தான்காட்டி
வண்டுரையும்மார்பாவுன் வச்சிராயுதந்தனையும்
நல்லமுகூர்த்தமொரு நாளிகைக்கியுள்ளாக
வல்லவனேகாட்டி வந்துகொடுக்குகிறேன்
என்றுமுனிகூற இந்திரனும்தான்மகிழ்ந்து
நன்றெனவேஆயுதத்தை நல்லசிவயோகரிடம்
குடுத்துஉபசரித்து குணமாயனுப்பிவிட்டு
எடுத்துமணிவானை யேகினார்மாமுனியும்
கஞ்சமலைவாழுங் கன்னிரிசிபத்தினிக்கு
நெஞ்சாரக்காட்டியவர் நேரேவருகையிலே
கண்டார்களங்கே காவலர்கள்மூவருந்தான்
கொண்டாடிநின்று குருமுனிவன்தாள்போற்றி

## சிவயோகமாமுனியிடம் ஆயுதத்தை பிடுங்கி கொள்வதற்கு மூவருந்தர்க்கம் செய்யுதல்

அய்யனேமாமுனியே அருளும்பெரியோனே
கையில்பிடித்துவந்தீர் கனகவச்ரவாள்தனையே
தவசியாய்ப்போனவர்க்குத் தானாயுதமேது
அவசியமாயும்மிடத்தில் யார்கான்கொடுத்தார்கள்
இருடிப்பெயரைவைத்துயிராஜாக்களாயுதத்தை
திருடியிங்கேகொண்டுவந்தீர் செப்புமென்றாமூவர்களும்
தக்கமிட்டசேதிதனை சாந்தமுனி தான்கேட்டு
அக்கினிபோற்கோபம் அவர் தனக்குமுண்டாகி
கண்ணிலேகண்ட கடும்பிள்ளைகளானாலும்
எண்ணியுரையாமல் யெள்ளமுவுந்தோணாமல்
மாமுனிவனென்று மனதுபயமில்லாமல்
தாமிதமாயுங்களுட சண்டாளப்புத்தியினால்

மரியாதையெண்ணியே மார்க்கமவைத்துப்பேசாமல்
பரியாசம்பண்ணவந்தீர் பாலர்களேயுங்களுக்கு
கேடுவரும்போது கெடுமதிகள்தோற்றுது
ஈடியெனதுமுன்னே நய்யாண்டிபண்ணிடவும்
இங்கேகடந்துவந்தீ ரேவர்காணும்நீங்களுந்தான்
உங்களுடபேரை யுரையுமென்றார்மாமுனியும்
அந்தவுரைகேட் டபீமனுமங்கேதுரைப்பான்
குந்திமக்களைவர் குழந்தையர்கள்நாங்களுந்தான்
என்பேரபீம னிவர்பேர்கடோர்க்கசன்காண்
இன்பமுள்ளராவா னெங்களுக்குமூத்தவன்காண்
மாயன்மகளாரை மாலையிடவந்தோங்காண்
தூயவரேயும்மைச் சூழ்வனத்தில்கண்டோங்காண்
தாட்சிகமாயாயுதத்தை தான்குடுத்திருமாகில்
கேட்டவிலை தாரோங் கிருபையுடனென்றுரைத்தான்

## சிவயோகமாமுனி மூவருக்குஞ் சாபங்கொடுக்குதல்

உரைத்தவயணமெலா முயர்முனிவன் தான்கேட்டு
கரைத்துவிடுவதுபோல் கண்கோபங்கொண்டுமுனி
வாடாகிறுபயலே வாள்வீமாயென்மகிமை
நாடாமல்நீயுமிப்போ நய்யாண்டிபண்ணினதால்
பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும் பாரதப்போர்செய்கையிலே
நஞ்சுபதின்மூன்றும் நாளைச்சமர்தனிலே
உன்னாயுதமும் உனக்கேஉதவாமல்
மன்னன்சயிந்தவன்கை மாலையதினாலே
மாண்டிடுவாயென்றுசொல்லி மாமுனிவன்சாபமிட்டான்
வேண்டிவினைவளர்த்த விதியின்பயத்தாலே
அடுத்துநின்றராவான் னவன்தனையும்பார்த்துமுனி
கடுத்துமுகஞ்சினந்து காங்கையுடனேதுரைத்தான்
அளப்புடனேபாரதப்போர்க் காரம்பஞ்செய்யயிலே
களப்பெலியாயுன்னை கருத்தருக்கசாபமென்றார்
கஞ்சமலைமுனியுங் கடோர்க்கசனைத்தான்பார்த்து
நெஞ்சமுருகிடவே நினைத்தார்மகாமுனியும்
நல்லபனிரெண்டாநாள் நடக்கும்சமர்தனிலே



சல்லியன்கையம்பால் தான்மாண்டிடுவையென்று
மூவருக்குஞ்சாபம் மொழிந்தேமகாமுனியும்
தேவநகர்நோக்கி சென்றார்காணம்மானை

### விருத்தம்.

யோகமாமுனி சாபமுயர்ந்ததால்
சோகசாகர வேலையிலேமனம்
தேகஜீவனு மேசெயல்வாடியே
தாகமோடதில் மூவர்தயங்கினர்

### அம்மானை.

சாபங்கொடுத்தமுனி தான்போனதின்பிறகு
பாவம்நமக்குவந்து பலித்ததென்றராவானும்
வெம்பிமனதுநொந்து மேனிகருகருத்து
தம்பியரைப்பார்த்துமிகத் தானேதுரைக்கலுற்றான்
அரியாமலிவ்வனத்தி லமர்ந்தமுனிதனக்கு
தெரியாமற்சொன்னபிழைத் தீங்குவந்துசூழ்ந்ததுகாண்

## சிவயோகமாமுனி போனபின் இராவான் தம்பிகளுக்கு புத்தி சொல்லுதல்

வாய்க்கொழுப்பினாலேநாம் வாய்மதங்கள்பேசினதால்
தீப்பிடிக்குஞ்சாபம்நம்மைத் தீண்டிவந்துசூழ்ந்ததுகாண்
வந்தவகையினையும் மனதில்நினையாமல்
இந்தவினைதனக்கோ விவ்வனத்தில்நாமும்வந்தோம்
சாத்தியமான தபசிகள்தன்சாபமதை
மாத்திவிடநமக்கு வல்லமையுமுண்டாமோ
பெரியோர்திருவிளங்கள் பேதித்தாலெப்பொருளும்
சரியாய்முடியுமெனுஞ் சான்றோருரைபோமோ
குத்தமதைவிலக்கக் கூடாதெவருலும்
சித்தங்கலங்கியினிச் செய்வதென்னதம்பியரே
பேரின்மையின்பம் பிணிமூப்புச்சாக்காடு
ஆறுங்களுமில்லமைப் பல்லால்வேறுமுண்டோ
இடையிலொருக்காலும் மில்லையெவர்களுக்குந்

தொடரும்வினைப்போகம் சூழுங்கருவினிலே
அமைத்தபடிமுடியும் அனுவளவுந்தப்பாமல்
சமத்துரைக்கப்போமோ தாரணியில்தம்பியரே
முன்வினையைநீக்க முடியாதெவராலும்
தன்வினையே தன்னை தனலாகச்சுட்டதுகாண்
மயக்கம்மினிவேண்டாம் மாயன்கிருபையினால்
தியக்கமெல்லாந்தீர்ந்துவிடுஞ் சீருடைய தம்பியரே
வாருங்கோவென்பிரகே வளரும்துவாரகைக்கு
பாருங்கோவென்னுடைய பாணமெனுஞ்சித்திரத்தை
அருத்துக்குமிக்குகிறேன் அரவக்கொடியோன்படையை
பெருத்த அரசரையும் பிள்ளைபோலாக்குகிறேன்
சன்னசிசாபந் தலைபளவில்வந்தாலும்
இன்னுளிலிந்த இடையன்மகள் தனையும்
மாலையிட்டுவைக்குகிரேன் வாள்வீமாவென்பிரகே
காலையெட்டிவைத்துக் கடுகநடவுமென்றான்
அஞ்சாதகண்ட னழகுபெருராவானும்
நெஞ்சாரத்தம்பியர்க்கு நிசமாகவேயுரைத்தான்
தாட்டிகமாய்சொன்ன சமயனுடபாதமதை
நாட்டமுடனே நமஸ்கரித்துத்தானடந்தார்
ஆடுமயில்வனமு மாரணியந்தான்கடந்து
ஓடும்நதிகடந்து உற்றமலை தான்கடந்து
வன்புரையும்பாதை வனத்தூடேமூவருந்தான்
அன்பதிங்காதவழி யவர்கள்மிகடந்து
காட்டின்வழிநடந்து கருமமெலாந்தான்துலைந்து
தேட்டமுடனே சேர்ந்துவந்தார்கானகத்தில்

## மூவரும் மாம்பழம்பறித்துச் சாப்பிடுதல்

வருகும்வழிதனிலே மாந்தோப்பொன்றுகண்டார்
பெருந்தோப்பிலோர்மரந்தான் பிரபலமதாய்வளர்ந்து
ஒருபுறத்தில்பூவு மொருபுறத்திற்காய்களுமாய்
மறுபுறத்திலிங்கிதமாய் மாம்பழமுந்தான்குலுங்க
இந்தவிதமாக யிருந்ததுகாண்மாமரமும்
அந்தமரந்தன்னை யபிமனுமேதான்பார்த்து



வண்டுறையும்பூங்கா வனமெலாம்சுற்றிவந்து
கண்டதில்லையிந்தக் கனிமாமரம்போலத்
தழைத்திருக்குமிந்தத் தனிமாமரம்போல
பழத்தைதப்பிடுங்கியிப்போ பட்சணமும்பண்ணுதற்கு
ஆவல்கொள்ளுதென்று ணபிமனுமேயன்னேரம்
காவலவன்சொன்ன கருத்தறிந்துராவானும்
பருத்தமரத்தினுட பழமதனைத்தான்பார்த்து
குறித்துத்தொடுத்துவிட்டான் கொடுங்கணையையன்னேரம்
கணையின்விசையாலே கனிகளுதிர்ந்திடவே
உணவுகொள்ளவாள்வீம னுதிர்ந்தபழமத்தனையும்
எடுத்துப்பிரியமதா யிரண்டுதமையனுக்கும்
கொடுத்துயினியகனி கொள்ளுமென்றுதானுரைத்து
தானுமொருகனியைச் சாப்பிட்டிளைப்பாறி
தேனுலவுமாமரத்திற் செல்வர்களும்வீற்றிருந்தார்
இருக்குந்தருவாயில் இயல்மறையோன்பிராமணியும்
உருக்கமுடன்காசி யூர்தனிலேதானிருந்து
கண்ணன்துவாரகையிற் கலியாணங்கூடுதென்று
வண்ணமுள்ளசெம்பொன் வாங்கிப்பிழைப்பமென்று

## வேதியன் மனைவியுடன் துவாரகைக்குச் செல்லுதல்

பெரியமறையோனும் பிராமணியைத்தான்கூட்டி
அரியவழிகூடியம்மரத்தில் வந்தார்காண்
வேயாபல்வேதமுரைக்கும் பிராமணனும்
ஆயாசமாக வழியினையுந்தான்பார்த்து
யோகமுமக்குயிங்கே யுடனேவருங்காணும்
தாகம்நமக்குரெம்பத் தான்வந்திருப்பதினால்
எந்தனுடபெண்சாதிக் கெனக்குமொருகனிதான்
தந்திரேயாமானாற் றூன்பருந்துசாப்பிடுவோம்
வழிநடந்துவந்த மயக்கமெலாந்தீர்ந்துவிடும்
தெளிவாகவேநடந்து சேர்வோந்துவாரகைக்குத்
தாமிதமுமிலாமற் றூருமொருகனிதான்
மாமரத்ததில்வந்தமறையோனுந் தானுரைத்தான்

வேதியனுஞ்சொல்ல விசையன்மகன்றான்கேட்டு
சாதிமறையோர்க்குந் தாகந்தெளிந்திடவே
பரித்தகனிகளிலே பழுத்தபடாமாங்கனியை

## வேதியனும் மனைவியும் மாம்பழஞ்சாப்பிட்டிறந்துபோகுதல்

அறுத்துப்போசியுமென் வவன்கொடுக்கமாங்கனியும்
ஆனகனிமுன்னாள் அருங்கொம்பிலிருக்கையிலே
மானிலத்திலேகருடன் வட்டமிட்டுநல்லரவைக்
காலாலிடுக்கிக் கனவேகமாய்ப்பறந்து
மாலானபட்சியது மாமரத்தின்மார்க்கமதாய்ப்
பறந்துவருகையிலே பாம்பதுவுமன்னேரம்
கரந்துவிடங்கள் தனைக் கக்கிடவுமப்போது
நஞ்சுவிழுந்ததுகாண் நல்மாங்கனிமேலே
வஞ்சமிதுவெனவே வாளபீமன்றோணமர்ப்
பார்த்திடவுமந்தப் பழம்போலிருந்ததினால்
ஆர்த்தகனியிதுதான் அந்தணர்க்குவாகுமென்று
கையாலேயெடுத்து கனத்தவுபசாரமிட்டு
மெய்யாகவேகொடுத்தான் வேதியருமன்னேரம்
வாங்கிமனமகிழ்ந்து மனையாட்டியாள் தனக்கும்
பாங்குடனேபாதி பகுந்துமேதான்கொடுத்து
உண்ணுமெனவே யுபசரித்துப்பாதிதனை
தின்னுமறையோனுஞ் செத்திரந்தான்றேவியுடன்
மாம்பழத்தையுண்டு மறையோனும்பிராமணியும்
சாம்பசிவாவென்றுசொல்லிற் றனேமடிந்துவிட்டார்
மறையோன்மடிந்திடவே வாள்வீமன்ராவானும்
கரையாதநெஞ்சன் கடோர்க்கயனுந்தான்பார்த்து
திடுக்கிட்டுடல்நடுங்கிச் சிந்தைவெகுபுண்ணாகிக்
கொடுக்குமொருகனியாற் குற்றம்வந்ததென்றேங்கி
வழிகூடியிம்மரத்தில் வந்திருந்தமாமறையோன்
பலியானதெமக்குப் பலித்ததெனவுள்ளசந்து
மேனிதடுமாறி விழுந்தானபீமனுந்தான்
ஏனிதுவோவென்று மிருவர்மெலிந்தார்கள்



பொல்லாதபாவ புதுமையடைந்தோமெனவே
கல்லானசிந்தை கரைந்தார்களம்மானை

### விருத்தம்

வாடிவாடி மயங்கியழுதனர்
ஓடியோடி யுருண்டுபிரண்டனர்
கேடிதாமென வென்றுவபீமனுங்
கூடவேமடிவே னென்றுகூறினான்

ஆழிசூழ்புவியார்கள் சகிப்பரோ
பாழிலேமறையோ னுயிர்போகுமின்
றூழிலேகனியானதை யீய்ந்ததால்
மாழுவேனென வாளையுருவினான்

### அம்மானை

தாகித்துவந்த சதிருடையவேதியர்க்கு
ஆகத்துயிரிளக்க யான்கொடுத்தமாங்கனியை
தின்றுமறையோனுந் தேவியுடனேயிறக்க

## பிராமணன் இறந்துபோனதைப்பற்றி வாள்பீமன் வருத்தப்படுகுதல்

கொன்றதுரோகிக் கொடும்பாவிநானெனவே
மறையோன்றனைவதைத்து மாலையிடநான்போனால்
இறையோன்றனக்குமங்கே யிதுசகிக்கமாட்டாது
தேடரியவொண்ணாத தெளிவுடையவண்ணர்களே
கூடமடிந்திடுவேன் குருமறையோன்றன்னுடனே
நீங்கள்மனதுநொந்து நின்றுருகிவாடாமற்
போங்களுனதுநகர் புகழுடையவண்ணர்களே
வேண்டியெனைவளர்த்த மிக்கதொருதாயாருக்கு
மாண்டுவிட்டானுந்தன் மகனென்றுரையுமிப்போ
கர்மமோயென்பிறகே கானகமெலாந்திரிந்தீர்
தர்மமோவென்றுசொல்லித் தானழுதான்வாள்வீமன்
சிறுவனழுதிடவே சிந்தைநொந்துராவானும்
அருமையுடன்பார்த்து அன்புடனேயேதுரைப்பான்

கலையரிந்த தம்பியரே கட்டழகா கண்மணியே
மலையாதே நீயும் மனமயங்கி வாடாதே
மதியார் புவிதனிலே வாழ்ந்தாரொருவருண்டோ
விதிதான் வினைந்துகொண்டால் விட்டுவிலகிடுமோ
பாதைவழிவந்திருந்த பார்ப்பான்பிராமணிக்கும்
சூதுசெய்துகொன்றீரே துன்பம்நினைந்திரோ
அவர்க்குமுமக்கு மரும்பகைகளுண்டாச்சோ
எவர்க்குஞ்சரியாமோ யிந்தவகையே யுரைத்தீர்
தவிக்குதென்றுகேட்டவர்க்குத் தான்கொடுத்தீர்மாங்கனியை
புவிக்குள்மறையோன் பொசித்தானிறந்துவிட்டான்
தர்மந்தனைத்து தான்கொடுத்தீர்மாங்கனியை
கர்மம்வந்துதென்றூர் காக்கவெவருல்பு யும்
நாமொன்றுதானினைக்க நாராயணப்பெருமாள்
தாமொன்றுதானினைத்தார் தம்பியரேயென்னசெய்வோம்
ஆபத்துவேளைக் கருளினீர்மாங்கனியை
பாபத்தொழிலிருந்தாற் பாருளகிலென்னசெய்வோம்
இப்பிறப்பில்வேதியர்க்கா யிறந்துயிர்போனாலும்
விப்ரகுலதோஷம் விடாமற்றுடருமையா
ஆதலாலிந்த வருமறையோன்றன்னையுமே
சாதகமாய்நாமிப்போ தானெழுப்பவேண்டுமல்லால்
மயங்கியழுததினால் வருமோவுயிர்தானும்
தியங்கியழுததினால் ஜீவன்றிரும்பிடுமோ
விமலருடபதத்தை வேண்டித்தவசிருந்து
எமனைவரவழைத்தா லிப்போதுயிர்கொடுப்பான்
ஆலமதையுண்ட அரனார்தனைநோக்கி
காலமதில்நீரும் தவசிருங்காண் தம்பியரே

## அபிமனன் பரமசிவனைவேண்டி தவசு செய்புதல்

சித்தமதுவெனவே சிரந்தொருராவானும்
புத்தியுரைத்தான் புகழுடையதம்பியர்க்கு
சதிருடையராவான் றனுரைத்தசொற்கேட்டு
இதுதான்னிசமெனவே யிசைந்துகொண்டுவாழ்பிமன்
பூமலரும்பொய்கைப் புனலில்மிகமூழ்கி



நேமமதுமுடித்து நெடியதொருமாமரத்தில்
உண்மையுடனேதா னுந்தகுசப்பில்விரித்து
தன்மையுடன்மனதாய்த் தானங்கதிலிருந்து
ஆராதவாசை யானுவமுந்தானருந்து
வேரானகாமவெகுளி தனைவிரட்டி
இடகலையைப்பின்கலையா யிரேசகமாய்த்தானடத்தி
சடலம்பிங்கலையாற் சந்திரனைத்தான்வாங்கி
இருகலையுமோர்கலையா யிழுத்துச்சுளிமுனைக்குள்
அருளுமொருவன்னிதனைக் காதுதியுமுண்டுபண்ணி
கொழுந்துபடருமற் கும்பகத்திலேயிருத்தி
எழுந்தாதிமூலத் திறைவனிருதாழ்போற்றி
மூலக்கினைசண்டி மூக்காலுமேபோற்றி
கோலப்பிறையைக் குண்டலியின்வாசிதாய்
வன்னிதனையெழுப்பி மாய்கையெலாந்தான்பொசிக்கி
துன்னுமொருசர்க்கருமச் சொர்ப்பனமுமடருந்து
சுழுத்திதுரியாதீதம் அவாதசமுந்தான்கடந்து
வழுத்தரியக்கூடர் மவுனவட்சரத்தடங்கி
தாயர்னசந்திரகலை சகஸ்திரதளமூடனுயி
பாயுமொருஞானப் பாலமுர்தபானமுண்டு
முப்பால்கடந்து முடிசூளியங்கடந்து
அப்பால்திருவிசுற்பத் திருவரையும்போகவிட்டு
ஆனந்தமானயருள் வெளியிலேயொளிவாய்
தானுந்தலைவனுமாய்ச் சதாகாலம்நாட்டமதாய்
புருவச்சுளிமுனையில் பொருந்திபிரமநிஷ்டை
இருளைப்பகலாக்கி யிருந்தான்பெருந்தவசு
மைந்தனபிமன் மகாதேவரைநோக்கி
சிந்தைகலங்காமற் செய்தான்பெருந்தவசு

## பரமசிவனும் பார்வதாதேவியும் பிரசன்னமாகுதல்

தவசுஆடவருமை சாம்பசிவன்றானறிந்து
அவசரமாகவருள் ரிஷபவாகனத்தில்
மங்கையுமையாளும் வளருமிடப்பாகமதாய்
திங்கள்சடையிற்றரித்த சிவனுமெழுந்தருளி
குஞ்சரத்தைக்காக்கவன்றோன் கோபாலர்வந்ததுபோல்

அஞ்சலஞ்சலென்று வரமருளமகிழ்ந்து
வருந்தித்தவசிருக்கும் வாள்வீமன்முன்னம்வந்தார்
இருந்துமொருபாலன் சிவனையெதிர்கண்டிடவே
சாதனமதான தவசைவிட்டுக்கீழிறங்கி
வேதன்பெருமாளரியா விமலர்திருப்பாதமதை
பத்தியுடனே பார்பதிசமேதர்தனை
சுத்திவந்துதெண்டனிட்டுத் தோத்திரமுஞ்செய்யலுற்றான்

## வாள்பீமன் பரமசிவனைக்கண்டு தோத்திரம் செய்யுதல்

### விருத்தம்

மதிசூடிவேணியரனேமெஞ்ஞான வடிவாயிருந்தபொருளே
விதியோனுமாலுமரியாதபாதம் வெளிகாணலாவதெளிதோ
பதிவானசிந்தையுனதாள்விரும்பிப் பலகாலும்பாலுமரவேன்
எதிராகவந்துளனையாதரித்த யிமையோர்கள்போற்றுசிவனே ௧

நிலையானவேதமறையாகமங்கள் நிசமானபோதமெவையுந்
தலையாகநின்றமுதலேவின்னோர்கள்சாரூபபாதமரவேன்
விலைமாதராசைதனிலேவிழுந்து மெலிவானபேதமனதா
யலையாமலெந்தனெதிராகவந்த வரனேமெஞ்ஞானசிவனே ௨

வாடாதகொன்றையருகோடும்பை வாகாயணிந்தபொருளே
தோடாருமங்கைக்குடல்பாதியீய்ந்த சுடரேயுன்னுமரவேன்
கூடானகர்மவினையாலெடுத்த குலைசெய்தபாவபுலையன்
தேடாமலெந்தனெதிராகவந்த தேவாதிதேவசிவனே ௩

யோகாசனஞ்செய்முனிவோர்கள் தேவருளமேயிருந்தபொருளே
வாகானதுந்தனிருதாளைநெஞ்ச மறவேனென்னுமரனே
போகாதவஞ்சயிருளேமிகுந்து பொறிமூடிநின்றபுலையன்
ஆகாதவன்றனெதிராகவந்த வரனேமெஞ்ஞானசிவனே ௪

செய்காரியத்தை யறியீர்தென்ன சிறியேனுரைக்க யிடமோ
கைபாதகத்தி னிடராகவந்த கலைமாதவர்க்கு யினிதாய்
பைசூர்விஷத்தை யொருகாமவிட்ட பளிதானகன்று விடவே
மெய்வேதியர்க்குமுயிர்தான்கொடுத்துவிடவேணுமெங்கள்சிவனே



### அம்மானை.

ஆதிபராபரனே பரனேசரணமையா
சோதியேஞானச் சுடரேயருவுருவே
அண்டம்நிறைந்துநிற்கு மழகானமந்திரமே
பிண்டம்நிறைப்பிறக்கும் பெரியதொருமூலவித்தே
பூதாதிக்குள்ளாய் புகுந்திருக்கும்பூரணமே
வேதாகமத்தில் விளையாடும்விற்பனமே
உடலுமுயிராயுமிருக்குங்காரணமே
அடருமொருமாய்கைத் தொழிற்குரியபிஞ்ஞகனே
குறியாய்மவுனமுதற் குணம்பெரியமாதவனே
அரிவாய்நிறைந்திருக்கு மானந்தமுள்ளவனே
காலன்றனையுதைத்த கமலபதத்தோனே
பாலன்றனையருந்தப் பட்சணமுஞ்செய்தோனே
புரத்தையெரித்தவனே பூதப்படையோனே
சிரத்திலருகுதும்பை திங்கள்சடைவேணியனே
காமன்றனையெரித்த கண்ணுதலேமுக்கண்ணனே
நாமனரியாத சரணமடியேனறிந்தேன்
தானைப்பணிந்தறியா தம்பேன்மிகவறிந்தேன்
ஏனைக்கிரங்கியென்னை யெட்சிக்கவந்தருளும்
பாம்பாபரணமணி பரனேசரணமையா
நாம்பாவிசெய்த நடுக்கேடுதீருமையா
காசலையாய்மாயன்மகள் கற்புடையசுந்தரிமேல்
ஆசைகொண்டுவந்தே னரும்காவனந்தனிலே
எனக்குக்குறித்தபெண்ணை யிலக்கணக்குமாலையிட
தனக்கட்டுடன்கூடிக் காண்போமிருக்கையிலே
வந்தேதகாவிர்த மாமாத்திறிமுனிமேல
இந்தமறையோனு மென்னருகில்வந்திருந்தார்

## வாள்பீமன் வேதியனையும் அவன்மனைவியையும் யெழுப்பித்தரும்படி பரமசிவனைவேண்டுதல்

இச்சையுடன்மாங்கனிதா னெடுத்துமிகவருந்தி
மிச்சமிருந்ததையும் வேறுமென்றுவைத்திருந்தேன்
பசியால்மறையோன் பழமெனக்குத்தாருமென்றார்

ருசியாமொருகனிபார்த் துதவினேன்வேதியர்க்கு
பருத்தப்பழமிதென்று பகுந்துயிருகூறுக
அருந்ததனையங்கொருகூ றவர்மனைவிக்கேகொடுத்து
ஒருகூறுதன்னையுமே யுண்டவுடனேமறையோன்
இருபேருமாக யிறந்துவிட்டாரீஸ்பரனே
இவர்கள்தனையெழுப்பி பெண்ணையுமேகாத்தருளும்
கெவுனரிஷிகளுக்கும் கெதிகொடுக்கும்பாதமதை
கண்டபொழுதே கடந்தேறினேனெனவே
தெண்டனிட்டுவிழுந்தான் சிவனாதன்பாதமதில்

## வேதியனையும் அவன்மனைவியையும் பரமசிவனெழுப்பித்தருதல்

### விருத்தம்

திருவனுகிய வபீமனுஞ் செப்பியசெய்தி
இறைவனுகிய வரனிருசெவியிலிற் கேட்டு
பரிவதாயுமை பாகனுமவர்க்கருள்புரிந்து
கருணையாலுயிர் கொடுத்தனன் மறையவன்றனக்கே.

இன்சொலந்தணன் றேவிதன் னுயிர்கொடுத்தெழுப்பி
அஞ்சிடாதென வபீமனுக்கருள்வரமளித்து
நஞ்சைவாரிமுன் னமுதென வருந்தியநாதன்
மிஞ்சுமாநகர் கயிலையில் மேவினர்விரைந்தே

### அம்மானை.

வாசமுள்ளம்மாமறையோன் மனைவியவள்தனையும்
ஈசன்மனமகிழ்ந்துயிருவரையுந் தானெழுப்பி
பாரிற்புகழுடைய பாலனபீமனுக்குத்
தாரிலுயர்செல்வந்தனைத்து மிகவாழ்ந்திருக்க
குறையாதசெல்வங் கொடுத்தருள்புரிந்து
இறையோன்கயிலைநகர்க் கேகினாரம்மானை
ஆதியரனேக வபீமன்மனமகிழ்ந்து
வேதியனார்பாதம் வேண்டிநமஸ்கரித்து



திரமுடையவேதியரே செல்வரேயம்மானே
பரமசிவனுடையபாதமலர் பார்த்துவந்தேன்
வரிநுற்றமாங்கனியை யுமக்குவளித்ததினற்
பேறுபெற்றேன்யானும் பிரபலமுமானேனுன்
அய்யரேநீரென்னிவந்த வாச்சிரமந்தானேக்கி
மெய்யாய்நடவுமென்று விசையன்மகன்றெண்டனிட்டான்
அந்தணருமங்கேவபீமனையுந் தானேக்கி
இந்திரன்போல்வாழ்ந்துண்டிரு மென்றுபசரித்து
போனார்துவாரகைக்குப் பூவையுடன்வேதியருந்

## வேதியரும் மனைவியும் துவாரகைசென்றபின் அபீமனன் றமையனிடம் செல்லுதல்

தானுமபீமன்றமையனிட மாகவந்து
பத்தியுடனேயவர்கள் பாதநமஸ்கரித்து
சுத்திவந்துதெண்டனிட்ட சொற்பெரியதம்பியரை
தூக்கியெடுத்துத் தழுவிமுகத்தோடணைத்து
இங்குநயருந்த சிவதவத்தின்வல்லவனே
செயமானரங்கமதிற் செய்ததவமுள்ளவனே
மயக்கந்தவிர்த்தாசிக்க வந்தருளுஞ்சீமானே
யோகநிஷ்டைதன்னு லுயர்சிவனைநேரிந்து
சாகுமறையவனைத் தானெழுப்பிவிட்டவரே
கண்மணியேயென்று கடோர்க்கசனும்ராவானும்
தண்மையுடன்மகிழ்ந்து தம்பியரைக்கேட்டிடவே
அப்போதபீமன் அவர்களுடனேயுரைப்பான்
தப்பாதுவுங்களுட தர்மவிசேடமதாற்
பெரியவென்றவசுக் ரகிங்கியேயீஷ்பரனார்
பழியாகியமறையோன் பத்தினியுமேயெழுப்பி
வந்ததுவுமீசன் மலர்ப்பாதங்கண்டதுவுந்
சிந்தைமகிழ்வுடனே செப்பினன்வாள்பீமன்
சிறுவனுரைத்தயின்சொற் செவிகேட்டிருவர்களும்

அரிதாயிதுவெனவே வாணந்தமேபெருகி
இனிமேற்கருமவினை யெள்ளளவுமில்லையென்று
களிவாயிவர்கள்மனங் களிகூர்ந்தாரம்மானை

விருத்தம்.

அனையவர்மகிழ்ந்தார்காசி யந்நகர்நீங்கினபின்பு
சுனையதில்த்தீர்த்தமாடித் தயரமென்பதுமொழித்துக்
கனவினில்மரவாதித்திய காலகிந்தனை முடித்து
இனமுயர்துவாரகைக்கு யெழுந்துமேநடந்தார்மன்னோ

அம்மானை

அச்சமில்லாராவா ணபீமன்கடோர்க்கயனும்
மச்சவடிவுடையோன் வாழுந்துவாரகையைக்
காணலாமென்று கடுகவெளிநடந்தார்
வேணுகோபாலரங்கே வீற்றிருக்குமுப்பரிக்கை
அந்தாதெரியுதென்று வன்பாய்வெளிநடந்தார்
இந்தாதெரியுதென் றுயெக்கிவெளிநடந்தார்
சாலைவழிநடந்தார் சங்கடமுமில்லாமல்
சோலைவழிநடந்தார் துயர்களொன்றுமில்லாமல்
துவாரகையின்மானகரைச் சூழ்ந்தவடபாகம்
தபால்நடைக்குமேனெனவே தானடந்தார்மூவர்களும்

## மூவருஞ்சித்திரமணிச் சாவடி போய்ச்சேறுதல்

செம்பொற்சிகரவரைச்சித்திர மணிச்சாவடிதான்
பைம்பற்றிருமதிலும் பார்க்கவலங்காரமதாய்
கடைகள்வரிசையதாய் கட்டியிருக்கிறதும்
திடமுடையசோலைகளுஞ் செண்பகப்பூங்காவனமும்
செந்தாமரைசெறிக்குஞ் செங்கழுநீரோடைகளும்
பந்தானமான்தெரு பாங்கியர்கள்வீடுகளும்
சக்சமாய்ப்பேசியந்த சாலைவழிபோவாரும்
பகுடிகளைப்பேசியந்தப் பாதைவழிபோவாரும்
சீலமிகுந்திருக்குஞ் சித்திரமணிச்சாவடியில்
வாலிபராய்க்கூடி வந்திருந்துபோவாரும்



பெண்களுடனேபுருடர் பிரியமுடனேகூடி
தன்மையுடனே தனித்திருந்துபோவாரும்
தங்களுடனவர் தமமோடுறவாக
வங்கணமாய்ப்பேசி மகிழ்ந்திருந்துபோவாரும்
சாதங்கறிவகைகள் சமைத்துத்துரிதமதாய்
வேதப்பிராமணர்க்கு விருந்துகளைச்செய்வாரும்
அருகிபரதேசிகட்கு அன்னம்படைக்கிறதும்
தகையுடனேவந்தவர்க்குத் தண்ணீர்குடுப்பதுவும்
இத்தகைமையாக விருக்குமந்தச்சாலையிலே
சித்திரமணிச்சாவடியிற் சேர்ந்தார்கள்மூவருந்தான்

விருத்தம்.

படமானதவிரிசேடனின் முடிமேல்வளர்பவனையோன்
குடியாகிய துவருபதி நகரானதினருகே
வடபாரிசமொருசாவடி விமமாய்வருவோர்கட்
கிடமாயிதுநலமாமெனவே போயிருந்தாரே

அம்மானை

பூவனமுந்தேப்பும் பொருந்துமணிச்சாவடியும்
தாவளமாமென்றுவதிற் றுணிருந்தார்மூவருந்
மிருக்கும்பொழுதிலங்கே யியல்சேர்மலர்மடந்தை
பெருக்குமலர்மல்லிகையும் பிச்சிமலர்சண்பகமும்
முல்லையிருவாச்சி முகிழ்சேர்மகிழமலர்
நல்லசிவந்தியுடன் நறுமலர்கள்தானெடுத்து
அன்னநடைபோல அவளும்வருகையிலே
மன்னவர்கள்மூவருந்தான் மடந்தையைத்தான்பார்த்து
வாருமிருமெனவே மரியாதையாயழைத்து
பேருமதுடையபிரபலமுஞ் சொல்லுமென்றார்
செல்வுறுரைத்தமொழி திருமடந்தையாள்கேட்டு
கல்வியுடையவரே கருணையுள்ளமன்னவரே
தேவர்சகாயன் திருவேங்கிடப்பெருமான்
மூவர்தனிலொருவன் முராரிதிருமார்பன்
தாமோதரப்பெருமான் முன்னீன்றசுந்தரிக்கு

119078
O-, 7M, N06

பூவால்மலர்தொடுக்கும் புகழ்சேர்மடந்தையென்பேர்
தினக்கட்டளையாகச் சிறந்தமலர்தான்கொடுப்பேன்
எனக்குத்தொழிலிதுகா ணென்றாள்மலர்மடந்தை
பாங்கியிவையுரைக்கப் பாலர்களுந்தான்கேட்டு
தாங்கிநடந்துவந்தோர் தாதியரைப்பார்த்துரைப்பார்

## சுந்தரிக்குப்பூமலர் கொடுக்கும் பூமடந்தை வீட்டில் மூவருஞ் சேறுதல்

தூரவழிநடந்த சோபமதிர்வதற்கு
தாருமமுதுகறி தந்தால் விலைகொடுப்போம்
உண்டுபசியாறி யொருநாளிங்கேயிருந்து
மண்டலத்தில்மிக்க மதுரைநகர்காண்போரோம்
அழைத்தவயணமிது வம்மையரேயென்றுரைத்தார்
இழைத்தவர்கள் தங்களுக்கு யேதாகிலுங்கொடுத்து
பசித்தவயாமத்தப் பலனலவோபாலர்களே
பொசித்தமுதுநீருந்திப் போகலாமூர்தனக்கு
ஏழைமனைதனக்கு எழுந்தருளுமென்றுரைத்தாள்
வேளையிதுவெனவே விரைந்தெழுந்துமூவர்களும்
போனார்கள்சுந்தரிதன் பூமடந்தைவீட்டினிலே
தேனார்மொழியழகி செல்வியெனும்பூமடந்தை
தம்பிமலர்தொடுக்குஞ் சுபகாரியம்நிறுத்தித்
தம்பியரைவேண்டிச் சமையல்செயவேபுகுந்தாள்
அம்மையரேநீருமெங்கட்க் கமுதுகறி தான்சமைத்தால்
தம்முடையகாரியத்திற் றாள்வுகுறைவாமோதோ
பார்த்தனுடதேவியெனும் பதிவிரதையாள்தனக்கு
பூத்தொடுக்கும்தாதியுட பிள்ளைகாண்நான்றானும்
தங்களுடபூமிவிட்டுத் தான்போனார்பஞ்சவர்கள்
எங்களுக்குமங்கே யிருப்பிடமும்மில்லாமல்
போமோரும்மதுரைதனிற் பிழைக்கலாமென்றுசொல்லி
நீரேனமயங்குகிறீர் நிசமாய்மலர்தொடுத்து
வைக்குகிறேன்நான்றொடுத்த மாலையதுகொண்டேகி
இக்கணமேயுங்க ளிசமானிடந்தனிலே
கொடுங்காண்வரிசை கொடுத்தாலிதிப்பாதி



எடுங்காண்வரிசையெனக், கீய்ந்திடுங்காணென்றுசொல்லி
மானபரன்விசைய வாள்பீமன்றானுரைக்க
கூனமுதுகுடைய கோதையருந்தான்கேட்டு
நிசங்காணிதுவெனவே நிமிசமதில்ன்னேரம்

## அபீமனன்சுந்தரிக்கு பூமலரால்தன்போ லுருவஞ் செய்தனுப்புதல்

கசங்காமலர்மாலைக் கட்டுமென்றுதானுரைத்தான்
தாழைமலரதனைத் தானெடுத்துவாள்வீமன்
நீளமுதுகெனவே நீட்டியதைமுடிந்து
செந்தாமரைமலரால் திருமுகமுமுண்டுபண்ணி
மந்தாரையாலே வயர்தனையுமுண்டுபண்ணி
பன்னீர்மலராலே பாதங்களுண்டுபண்ணி
சின்னயிருவாச்சியினாற் சிறுவிரல்களுண்டுபண்ணி
செங்கழுநீர்ப்பூவாற் சிரசுதனைவகுத்து
அங்குமுள்ளநாசிக் கழகுகுமிழமலரில்
சிவந்திமலராலே திருச்செவியுமுண்டுபண்ணி
குவிந்தமலர்களினாற் குடுமியொன்றுதான்முடித்து
முல்லைமலராலே முத்துப்போற்பல்வகுத்து
நல்லபுருவமதை காகமல்லியால்வகுத்து
மருக்கொழுந்தாலே மயிரொழுங்குமுண்டுபண்ணி
நீலோர்ப்பனமலரால் நீலவிளியுண்டுபண்ணி
மாலார்ப்புதமெனவே மகிழமலருந்தியதாய்
செண்பகத்தினாலிரண்டு செங்காமுமுண்டுபண்ணி
பண்புபெருந்தும்பையினாற் பத்துநகமுண்டுபண்ணி
பூவாலுருவகுத்துப் பூமலராடையிட்டு
தேவாபரணமெனச் சிவந்தமலராற்சூடி
வாடாதபூவை வாளெனவேகையிலிட்டு
தாடாளன்பூமலராற் சமைத்ததிருவுருவை
கனையாழிமோதிரத்தைக் கனிமலருக்குள்ளேபதித்து
துணையோரிருவருடன் றய்யமணிச்சாவடியில்
வந்தோமெனவே வயணமெல்லாங்கண்டெழுதி
அந்தச்சுருளதனை வமைத்தவுருக்குள்ளடக்கி

காமாதிமோகக் கலையைபதிலேலிருத்தி
மாமன்னர்மோகனமென் மந்திரத்தையுச்சரித்து
கைப்பிடிக்குஞ்செண்டுமலர் கட்டழகன்றன்கொடுத்து
மைப்படியுங்கன்னி மாலுடையசுந்தரிமேல்
காதல்பெரிதெனவே கட்டிவைத்தான்செண்டுமலர்
சாதிமலர்மடந்தை சமையல்மிகவுண்டுபண்ணி
தூரத்திருந்துவந்த சொற்பெரிய தம்பியரே
நீரித்தனைநேரம் நெடும்பசியாய்த்தானிருந்தீர்

## பூமடந்தை வீட்டில் மூவருஞ் சாப்பிட் டிளைப்பாறுதல்

சமையல்முடிந்ததுகாண் சாப்பிடவும்வாருமெனக்
கமலமுகஞ்சிரித்து காரிகையுந்தானுரைத்தாள்
மடந்தையுரைத்தமொழி மன்னவருந்தான்கேட்டு
இடந்தானமுதருந்த யிப்போதுசெய்யுமென்றார்
சாதுரியமான தலைவாரிலைவிரித்து
போதுமெனவேசமைத்த புளிக்கறியும்பச்சடியும்
கூட்டுக்கறிவகையும் குணமாம்பொரிக்கறியும்
வாட்டத்தீரவைக்கும் மாங்கனியுந்தான்படைத்தாள்
குலத்தாலொருகனியாய்க் கொண்டுவந்துதான்படைத்தாள்
கலத்தாலதிரசமும் சர்க்கரையானபண்டம்
பாகமதாய்ச்செய்த பாயாசஞ்சர்க்கரைதேன்
தாகந்தணிக்கும் தயிரமுதுதான்படைத்தாள்
பாசிப்பயறும் பருப்புடனே தான்படைத்தாள்
நேசமுடன்புத்துருக்கு நெய்யானதும்வார்த்து
சம்பாவரிசிபொங்கல் சாதமிகப்படைத்தாள்
உம்பர்தனக்கு முகந்தகரி தான்படைத்தாள்
அதிருசியதான வருக்கைவையுந்தான்படைத்தாள்
எதுபிரியமுங்களுக்கு யேதென்றெனக்கேட்டாள்
பாலும்பழமும் படைத்தேதமலர்மடந்தை
மேலுமுபசாரம் வேண்டியதுதானுரைத்தாள்
அம்மையார்தான்படைத்த வமுதுகறியானதெல்லாம்
செம்மையிதுவெனவே சிரந்தொருமூவர்களும்



உண்டார்மனமகிழ்ந்தா ருடனேமடந்தையரைக்
கொண்டாடிக்கொண்டு குடுத்தார்பணிதியொன்று
இட்டபணிதிபது எனக்குச்சரியெனவே
கட்டுமலர்மாலையெங்கே காவலரேயென்றுரைத்தாள்
கொத்துமலர்ச்சரமுங் குணமானசெண்டதையும்
மற்றுமுள்ளபூமலரும் வாளீமன்றுனெடுத்
இந்தாருமம்மையரே யெஜமானி தான்மகிழ
கொந்தூறும்பூவைக் கொடுமென்று தானுரைத்தான்
வாங்கிமலர்மடந்தை மாலையுடசேர்பார்த்து
ஆங்காணுமாலை யழகாயிருக்குதுகாண்
நரைத்தகிழவிதனை நையாண்டிசெய்யுதுகாண்
இரத்தினமணிச்சுந்தரியை யென்னபண்ணுமோவரியேன்
வாகானமாலை மனமகிழ்ந்துவாங்குவளோ
தாகீதுபண்ணியெனைத் தண்டிக்கச்சொல்லுவளோ
என்னபலன்வருமோ வென்றுசொல்லித்தாதியரும்
மன்னவரேபோய்வாரேன் வருமளவுநீர்தாமும்
வீட்டிலிருங்காணும் வெளியேதிரியாமல்
கோட்டிழுலைமாதர் குடிகேடுசெய்வார்கள்
விருந்திட்டழைக்குகிற மெல்லியர்கள்தானுமுண்டு
மருந்திட்டுத்தான்மயக்கி வாங்குவார்கைப்பொருளை
சொன்னைமுகமினுக்கிச் சொகுசாய்வருவார்கள்
உள்ளிருக்கும்பூருப முங்களுக்குத்தோணுது
வசியமுமெய்து வருவார்சிலபேர்கள்
புலியிருக்குங்காட்டிற் போவாரோதம்பியரே
தாள்வுவருமலிங்கே தானிருங்கோவென்றுசொல்லி

## பூமடந்தை சுந்தரிக்கு பூக்கொண்டுபோகுதல்

வாள்விழியாள்செண்டுமலர் வாங்கிநடக்கலுற்றாள்
ஓமென்றிருவரிருந்தா ருற்றதொருதாதியரும்
ஆமென்றிவள்நடந்தாள் ஆயபணபட்டணத்தில்
வந்தாளரண்மனையின் வாசல்வழியாய்நடந்து
செந்தாமரைமுகத்தாள் செல்விபெறுஞ்சுந்தரியைப்
போத்திப்பணிந்து பூவார்செய்செண்டதனை

தோத்திரமுஞ்சொல்லியங்கே சுந்தரியின்கைக்கொடுத்தாள்
பெண்களுக்குநாயகமாம் பேறானசுந்தரியுங்
கண்குளிரப்பார்த்துமலர் கையால்மிகவாங்கி
ஆலோசனைக்காரி ஆயன்மகள்சுந்தரியும்

## சுந்தரியாளிடம் பூமலரைக் கொடுக்குதல்

மேலாகியமலரை விந்தையுடன்தான்பார்த்து
காணுமிதுவரையுங் கட்டிவந்தபூமலர்தான்
ஆணுதிருவுருவோ வருந்தர்திசெய்ததுவோ
தானேசமைந்ததுவோ தாதிசெய்யும்வேலையிதோ
தேனூர்மொழியாள்தன் சிந்தையிலேதானினைந்து
கட்டுமலர்செண்டுதனைக் கண்ணுருவத்தான்பார்த்தாள்
வட்டமொருசுருளும் வலக்கரத்தின்மோதிரமும்
உள்ளேயடக்கிவைத்த வொப்பனையுந்தான்பார்த்து
கிள்ளைமொழியாள் இருமையுடனேபார்த்து
வடித்தமொழிபகரும் வாள்வீமன்வந்ததும்
தடித்ததமையருமே தான்வந்திருப்பதுவும்
நாள்மூன்றுகானகத்தில் நடந்துவந்தசேதியெல்லாம்
வாள்போன்றகன்னிதனை மாலையிடவந்ததுவும்
பூமடந்தைவீட்டில் புதியமுதுகொண்டதுவும்
தாமிதமில்லாமற் றனக்கெழுதிவிட்டதுவும்
வம்புபகருமல் மலர்த்தாதிவீட்டினிலே
இன்பமுடனேவந்திரங்கி யிருப்பதுவும்
தெரியும்படியாய்ச் சிருவிரலின்மோதிரத்தை
அரியும்படிக்கே யனுப்பியிருக்கிறதும்
மெய்பானசுந்தரியுன்மே லிருக்குமாசையினால்
கையால்மலர்தொடுத்துக் கட்டிவிட்டமாலையொன்றும்
எழுதியிருந்ததிதலா யின்பமுடன்றான்பார்த்து
பொழுதுதனையரிந்த புஷ்பமதுபோலாகி
திட்டமுள்ளசுந்தரியுஞ் சிந்தையெலாந்தான்குளிர்ந்து
கட்டுமலர்தாதியின்மேல் கனபிரியமாய்மகிழ்ந்து
செம்பொன்நிதிகோடி சிவிகைதுயிலாபரணம்
உம்பள்மதாகவுமே ஊருமதுகொடுத்து



அளருமலர்தொடுக்கு மாயிரம்பேர்தாதியர்க்கும்
பிள்ளைகள்விசாரித்திடவே பெரியதனமும்கொடுத்து
சித்தமலர்தொடுத்து நீயிங்கேவாருமென்று
உத்தமியாள்சுந்தரியு முடனேவிடைகொடுத்து
வசந்தமணிமேடையிலே மாதுநல்லாள்சுந்தரியும்
இசைந்துமவள்தனியா யிருந்துகொண்டுமேதுசெய்வாள்

## சுந்தரி பூமலரைப்பார்த்து இச்சைகொள்ளுதல்

பூமலரின்செண்டை புருஷனென்றுதான்பணிவாள்
சாமியெனதுமுகந் தான்பாருமென்றுசொல்வாள்
தேடியமுதுவும்மைத் திகைத்திருந்தேனித்தனைநாள்
மோடிசெய்யலாமோ முகம்பாருமென்றுசொல்வாள்
கலைசிரக்குஞ்செண்டுமலர் கட்டழகாயென்கணவா
இலைசுருட்டிநான்றருவே னிப்போதருந்துமென்பாள்
வேல்பிடிக்குங்கைபழகா வேண்டிவளிநடந்த
கால்பிடிக்கிறேனெனவே கையாலெடுத்தணைப்பாள்
சற்றுவுமக்குயென்மேற் றயவிலையோவென்றுசொல்வாள்
முத்தந்தனையிடுவாள் முகத்தைதமுகத்தோடணைப்பாள்
ஆரிட்டருகோடு மளுதகண்ணீர்தான்மரைய
எரிட்டெனைப்பாரு மென்சாமியென்றுசொல்வாள்
பித்தாயங்கொள்ளாமற் பெண்ணேநீவாடியென்று
முத்தானவாய்திறந்தோ ருத்தாரஞ்சொல்லுமென்பாள்
பஞ்சணைமெத்தையின்மேல் பாங்கியர்கள்தாலாட்ட
கொஞ்சிவிளையாடவுநீர் குணமாகவாருமென்பாள்
கணையாளிமோதிரத்தைக் கழற்றியெர்தன்கைக்கொடுத்து
துணையாளரைத்தேடத் துணிந்தீரோவென்றுசொல்வாள்
வாசமுள்ளசெண்டுமலர் மங்கைமுகந்தானோக்கிப்
பேசவில்லையென்றுசொல்லி பேய்போல்புலம்பலுற்றாள்
தன்முகத்தைபார்த்துமலர் தான்பேசவில்லையென்பாள்
வர்மம்பிடித்து மங்கையருமேதுசெய்வாள்
சீவிமுடித்தகுழல் சிக்காய்பிரட்டிவைப்பாள்
பூவுலகுமேனிதனிற் புளுதிபடவேபிரள்வாள்

செங்கைவளைவிதனைச் சேராமலேயுடைப்பாள்
தங்கப்பணிதிகளைத் தவிடுபொடியாக்கிடுவாள்
ஏற்றமுள்ளபொற்றுகிலே யின்பமுடன்கட்டாமல்
பீற்றப்புடைவைகளைப் பின்னுமுன்னும்சுத்திடுவாள்
மஞ்சள்குளிக்கரியாள் வாடையது தள்ளிடுவாள்
பஞ்சணைமெத்தையிலே படுத்துறங்கரியாள்
பாலனமுந்தேனும் பளியென்றுதள்ளிடுவாள்
வேலனையகண்ணாள் விழிதனக்குமையுணியாள்
வெள்ளிலையும்பாக்கும் விரும்பியொருபோதருந்தாள்
துள்ளிவருமோகத் துயர்க்கடலிலேயழுந்தி
பகலுமொருராவாய் பரதவித்துமையல்கொள்வாள்
திகழுமொருபிரவிற் றிங்கள்சுடுதென்றுசொல்வாள்
பாலொழுகுஞ்சந்திரனைப் பனிகாரனென்றுசொல்வாள்
சீலமுருமாங்குயிலைத் திங்கச்சினந்திடுவாள்
பன்னீர்செலங்கொடுத்த பாங்கியர்கள்மேற்சினந்து
வென்னீரிதாமெனவே விட்டெறிந்துகண்சிவப்பாள்
மற்றுமொருநித்திரையில் வாள்பீமன்வாரதுபோல்
உற்றகினுக்கண்டு வுதரியெழுந்திருப்பாள்
அஞ்சார்மலருருவை யனுதினமுந்தான்பார்த்து
என்சாமியென்றுசொல்லி யெதிருகவந்துநிற்பாள்
உருக்கமுடனாசைவைத்த வுத்தமரேயிப்போது
முருகமருந்திட்டவரே முக்காலுஞ்சொல்லுமென்பாள்
காதல்வெறிபித்து கண்தூக்கமில்லாமல்
மாதரசிசுந்தரியும் மயங்கினளம்மானை

விருத்தம்.

இவ்வனகமால்மகளின்பம் வேண்டியே
ஒவ்வியகாமனேய்.யுற்றுவாடினாள்
பவ்வியமாய்வரும்.பார்த்தன்மாமகன்
திவ்வியமாதின்மேற் றியக்கமாகினான்

அம்மானை

அந்தப்புரந்தனிலே யவனுமயலானான்
இந்தச்சிருகுடிசி லிருந்ததொருபாலர்களும்



கனத்தகடோர்க்கசனுங் காவலவன்ராவாணும்
வனத்திற்றிரிந்தலைந்து வந்தவர்களானதினால்
வுத்தமலர்மடந்தை ஒருங்குமனையானதினால்
நித்திரையுங்கொண்டார்கள் நீதியுடனம்மானை
தமைப்பிருபேருந் தான்றூங்கும்வேளையிலே

## வாள்பீமன் சுந்தரியை நினைந்து இச்சைகொள்ளுதல்

நிமைபொருந்தமாட்டாமல் நேசமுள்ளவாள்பீமன்
மலர்மடந்தையின்னமட்டும் வரவிலையென்றேபார்ப்பான்
இலகுமொருசுந்தரியா ளிருக்குமிடமெங்கேயென்பான்
போவார்வருவாரைப் போய்மரித்துச்சுந்தரிபேர்
நாவாற்பலதரம்நீர் நவிலுமெனவேயுரைப்பான்
கண்ணாட்டிவாழுகின்ற கனகமணிமேடைதனை
அண்ணாந்துபார்த்துமதற் காலோசனைநினைப்பான்
துவளுமரங்களையுஞ் சுத்தமுள்ளமாநதியுஞ்
அவளாமெனநினைந்து வங்குமிங்குமாய்த்திரிவான்
வாலப்பருவமுள்ள வஞ்சியெனும்சுந்தரியாற்
சோலைக்கிளியனமே தூதுபோய்வாருமென்பான்
கந்தமலர்வாவியினிற் கண்டதொருபூவையெல்லாம
சுந்தரிதானுமெனவே தொட்டுமுகத்தோடணைப்பான்
காப்பிட்டக்கையழகி கட்டிவைத்தபொற்கொடிதான்
கூப்பிட்டதென்றுசொல்லிக் குதித்தோடியேநடப்பான்
ஓடும்நதிகளிலே வுலாவுகின்றமீன்கள்தனை
தேடுகின்றசுந்தரியாள் திருக்கண்ணெனப்பிடிப்பான்
கதலியிளங்கமுகைக் கண்டாசைகொண்டுருகி
பதுமினியாள்தோள்துடையைப் பாருமெனவேதொடுவான்
ஆலமரங்களிலே யமர்ந்தயிலேதான்பார்த்து
மானுடையசுந்தரியாள் வயறென்றதைத்தொடுவான்
கிட்டமுடன்பார்த்து சிரந்தகருமேகமெல்லாம்
கட்டழகிகூந்தலெனக் கண்டேனெனமொழிவான்
போதமுள்ளசெவ்விளநீர்ப் பூங்காவிற்கண்டவுடன்
மாதுதனமெனவே வாரிமுகத்தோடணைப்பான்

முல்லையரும்புகளை மோகமுறுசுந்தரியாள்
பல்லாமிதுவெனவே பாவித்தருகிடுவான்
கஞ்சமலர்க்கொடியை காவிவிழுங்கொடியாள்
வஞ்சியிடையெனவே வந்துகையாற்றுன்றெடுவான்
பொய்கைதனிலேவனசப் பூமலரைமாதினுட
கையிதாமென்றயிரு கண்ணுலணைத்திடுவான்
காவில்மயில்கூவ கண்டெய்தினபிரகே
ஆவலுடனே யவளாமென்றிரிவான்
தேசமுருக்கமலர்ச் செவ்விதனாமென்றுசொல்லி
ஆசையுடன்சுவைத்து அமுர்தமிரக்கிடுவான்
தாறுரும்புல்லைத் தழுவணையாமென்றுசொல்லி
பாருமலோடிப் படிப்பாளெனமுக்கிருப்பான்
மோகவெறிபிடித்து முளுதுமனமேமயங்கி
ஆகம்மெலிந்துருகி யவன்புலம்பும்வேளையிலே

## சுந்தரியிடம்போன பூமடந்தை தான்பெற்ற சன்மானத்தை மூவரிடம் சொல்லுதல்

### விருத்தம்

கூனமுழுகம்மைமவர வேமணையில்மூவர்
போனவகைசொல்லுமென வேயுரைசெய்போது
தேனெழுகுசெண்மலர் தெரிவைகரமீய்ந்தேன்
தானுமகிழ்ந்துமிதி தந்தவகைசொல்வேன்

ஆனைபணிரெண்டுபரி யன்பதுகொடுத்தாள்
மானகரமானபதி மூன்றதுவளித்தாள்
மேனகைகள்கோடிபணி யாடைகளுமீய்ந்தாள்
தானமெனக்கோடிநிதி தானுமீவியந்தாள்

தந்தமதிறைற்சமைத்த தண்டிகையளித்தாள்
விந்தைமலர்மங்கையரில் மேலெனவமைத்தாள்
இந்தவிதமானதொலா முங்களனுகூலம்
எந்தன்மகவாகவிரு மென்றுவளிசைத்தாள்

பின்னுமவள்மன்னவரைப் பேதரவியந்து
பொன்னுடையசெல்வமதை யேற்றபடிகொண்டு
என்புவனெனுமிக்கியபி னீமவிதிசெய்து
அன்பொடிபுரிந்திதனை யாண்டருளுமீரே



### அம்மானை.

வரிசைதனைவாங்கி மலர்மடந்தையன்னேரம்
விரசுகொண்டுதன்மனையில் மேவினளம்மானை
மங்கையிடந்தனிலே மலர்தான்கொடுத்ததுவுஞ்
சங்கையிலாப்பாக்கியத்தைத் தானீய்ந்தனுப்பினதும்
வந்ததுகாண்நீங்கள் மனையில்வந்துசேர்ந்தபலன்
சுந்தரிக்கிமாலைகட்டுந்தோகையர்களாயிரத்தில்
நானுமொருபேனை நரைத்தகிளவியற்குந்
தானுமொருவுதவி தான்குழந்தையில்லாமல்
ஏங்கித்திரிந்தே னெனக்குவருஞ்சம்பளத்தை
வாங்கியுபாயமதாய் வயர்பினைத்துக்கொண்டிருந்தேன்
வந்தீர்மனைதனிலே மலர்தொடுத்துநீர்கொடுத்தீர்
அந்தவிசேடமதா லதிபலனுண்டாச்சு
தாய்க்கிளவினாளொருத்தி தம்பியரோயுங்களுக்கு
பாக்கியமுமிந்தப் பவுசுகளுமும்மிதுகாண்
இருந்தஅனுபவிபு மென்காலமுமுடிந்தால்
பொருந்துமொருதன்மைதின்மை புண்ணியரேசெய்துவிடும்
பதிவாயெனக்குவந்த பாலர்களேயிப்போது
இதுதான்குறிப்பெனவே யியம்பினள்பூமடந்தை
தயவாய்மலர்மடந்தை தானுரைத்தசேதியெல்லாம்
நயமாமிதுவெனவே நல்லதென்றுமூவர்களும்
அன்னமதுவருந்தி ஆயிளையாள்தன்மனையில்
மன்னவர்கள்தானு மகிழ்ந்திருந்தாரம்மானை

### விருத்தம்

சூரியனுமேற்றிசை தொடுத்தனன்விரைந்தே
காரிருளடைந்தநெறிக் ககனமதிபுற்றான்
சீருயருபோர்விசயன் சேயனுமயீமன்
வாரணியுமால்மகனை நாடுவன்மனத்தே (௧)

காமனுடபேரிகை கடற்றெருனிமுழங்கக்
மாமரமதானகுயில் வாத்தியமிசைக்கத்
தாமயல்விளைக்கவொரு தாயெனவெழுந்த
சோமனைவிலக்கியொரு சூரியனுதித்தான் (௨)

### அம்மானை.

மனத்தினிருளதனை மாற்றுமறிவதுபோல்
கனத்தயிருள்விலக்கிக் கதிரவனும்வந்துதித்தான்
பாரிற்புகழுடைய பஞ்சவர்கள் தன்புதல்வர்
நீரிற்றலைமுழுகி நேமநிஷ்டை தான்முடித்து
போஜனமுஞ்செய்து பொருத்தியொருமனதாய்
யோசனையும்பண்ணி யுரைப்பானிடும்பிமகன்

## அரவான் கடோர்க்கயனும் வாள்பீமனுக்கு புத்திகூறி துவாரகைக்குச் செல்லுதல்

திங்கள்முகவதனு சிறந்தகொருவாள்பீமா
மங்கைதனைமாலையிட வந்தோமுமக்காக
வண்ணமலர்மடந்தை வந்துசொன்னாள்சுந்தரிக்கு
இன்னையமுகூர்த்தமென வியம்பினதுங்கேட்டிருப்பீர்
சும்மாயிருக்காமற் சோபனமுஞ்செய்வதற்கு
அம்மானிடத்தினிற்போய் யளப்பரித்துநான்வாறேன்
ஆளுந்துரியோ னவன்படைகள்வந்தாலும்
பாளையத்திலுள்ள பலனரிந்துநான்வாறேன்
தம்பியிங்கேநீருந் தாமதமில்லாமல்
எம்பியரேயிங்கே யிருங்காண்மலையாமல்
அருமையுடன்மாது அம்மையார்வீட்டினிலே
வருமளவும்நீரும் வழிபார்த்திருமெனவே
சிந்தையுள்ளபுத்திகளைத் திடமாயெடுத்துரைக்க
அந்தவசனமதுக் காமென்றுவாள்பீமன்
பணிந்துநமஸ்கரித்து பயணமனுப்பிவிட்டான்
துணிந்துகடோர்க்கசனுஞ் சொற்பெரியராவானும்
மன்னனரவக்கொடியோன் வாழுகின்றபாளையத்தில்
என்னவடிவெடுத்து யேகுவோமென்றுசொல்லி
கருத்திலொருநினைவு கவனமதுவுண்டாகி
விருத்தரெனுங்கோபால வேசமதுதானெடுத்தார்



### விருத்தம்

பாலிருகலசந்தூக்கிப்பருங் கலையிடையிற்சுத்தி
மேலெனுமார்புதன்னில் வெண்திருநாமஞ்சாத்திக்
கோலனுகையிலூன்றிக் கொங்கணிதரித்துக்கொண்டு
சாலவுந்துவாரகைக்குத் தாநடந்திட்டார்மன்னோ

### அம்மானை.

ஆயர்வடிவெடுத்து ஆனதொருபாலர்களுந்
தூயவரிவாழுகின்ற துவாரகையின்பட்டணத்தில்
வந்தார்களென்பெருமாள் வாழுமணிவாசலிலே •
சந்தேகமில்லாமற் றுமோதரனிடத்தில்
அரசர்நிறைந்திருக்கு மாசாரவாசலிலே
நிறைந்தமுகமாயிருக்கு நெடியமால்பொற்பதத்தைக்
கண்டார்கள்பாற்குடமும் கண்ணனென்றிராகவைத்து

## கிருஷ்ணனிடம் பாற்குடம் கொண்டுவந்த இருவரும் மர்மமாய் பெண்கேட்டு தர்க்கித்தல்

தொண்டுபண்ணும்பேர்களென்று தொழுதுநமஸ்கரித்தார்
இடையரெனப்பணிந்த இருவரையுந்தான்பார்த்து
அடையலரைப்பார்க்கவந்த வாஸ்பினையாளாமெனவே
போர்முகூர்த்தம்செய்யவந்த புத்திரர்களாமெனவே
கார்நிறத்தமேனிக் கண்ணர்மனதிலெண்ணி
வாரீர்பசுமேய்க்கும் வாகுடையகோனுகளே
பேரேதுசொல்லுமிங்கே பீதாம்பரங்கொடுக்கச்
செவ்விதழின்வாய்திறந்து திருமாலுரைக்கலுற்றார்
அவ்வசனங்கேட்டு அரவானெடுத்துரைப்பான்
நாங்களிருக்குமிடம் நல்லகருவூர்காணும்
தாங்கள்தனதுபசு தான்மேய்க்குமாயர்கள்நாம்
என்பேருடல்முழுங்கி யிவன்பேர்கடல்கலக்கி
அன்பாயுமதுபசு யாம்மேய்க்குமந்நாளில்
கன்னல்போலும்முடைய கமலமரைப்பசுதான்
அன்றனிலோர்கன் றதுவின்றிருந்ததுகாண்
அக்கன்றைநாங்க ளனேகபிரியமதாய்

தக்கபடிகேட்டு தான்வந்தோமுன்னாளில்
பால்குடிக்கும்பச்சைப் பசுவின்கன்றெங்களுக்கு
கோல்பிடிக்கும்மாயவரே கொடுத்தீரன்னாள்தனிலே
அந்தயிளம்பசுங்கன் றதுதானுமெங்களையே
சிந்தையுடனத்தித் திரிந்ததுகாணப்போது
உம்முடையவீட்டிலது உண்மையுடனின்றதுகாண்
தம்முடையமாளிகையில் தானேவளர்ந்துவர
வாளுமிளம்பசுங்கன் வளரட்டுமெங் கிருந்தோம்
எனையுடபசுவென் றென்றுமனிப்போது
ஆரோயொருவருக்கு அப்பசுவைத்தானமிடப்
போரீரெனக்கேட்டுப் புண்ணியரேநாங்கள்வந்தோம்
கொடுத்தபொருள்தனைக் குவலயத்திலுள்ளவர்க
ளெடுத்துவொருவருக்கு யீய்ந்திடவுங்கண்டீரோ
நாருயணரேநீர் ஞாயம்மறந்துவிட்டீர்
லாருகிலும்மை யடுத்துப்பிளைப்பதுவும்
தந்தபசுங்கன்றையிப்போ தான்கொடுத்துநீரனுப்பும்
வந்தவகையிதென்றுமன்ன ரிடையோருரைத்தார்

## பார்குடம் கொண்டுவந்த இருவரிடம்கிருஷ்ணன் பெண்கொடுக்கமாட்டேனென்று மர்மமாய் தர்க்கித்தல்

சங்குசக்கரபாணியெனும் தாமோதரன்கேட்டு
மங்களமாமென்று மனதில்மிகமகிழ்ந்து
பஞ்சவர்கள்பெற்றெடுத்த பாலரிவருமெனவே
இஞ்சொல்கமக்கு யிவர்மருகனுமென்று
கலியாணவார்த்தைதனைக் காதாரவேகேட்டு
வலிமையாய்வாள்வீமன் வந்திருக்கிறனெனவே
உள்ளமிகமகிழ்ந்து வுரைப்பாரிடையருக்கே
வெள்ளைமனதுடைய வேசுமிருகோனுங்களே
நாட்டிலுமக்குமுன்னாள் நற்பசுவின்கன்றீய்ந்தோம்
காட்டிகரேநீருமதைத் தான்வளர்த்துக்கொள்ளாமல்
இளங்கன்பயமரியா தென்றசொல்லுமெய்யாக
களங்கமரவென்வீட்டில் கன்றைவிட்டுவென்போனீர்



பார்த்துயிரைகள்வைத்துப் பரிபாலனமாக்கிக்
கேர்த்தியுடன்வளர்த்த நீலநிரக்கன்பசுவை
நம்மிதென்றுநீங்கள்வந்தால் நான்கொடுக்கமாட்டேன்காண்
உம்முடையசாதிவளக் குங்களுக்கேதோற்றவில்லை
என்மருகன்லெக்கணர்க்கு இப்போதுசீதனமாய்
நன்மையுடன்கொடுக்க நான்வைத்திருக்குகிறேன்
பிளைக்கமதியுமக்குப் பெரியபுத்தியுண்டானால்
வளக்கிட்டவர்களிடம் வாங்குமென்றூர்மாயவரும்

## இடையராய்சென்றவர்கள் கிருஷ்ணனால் கொடுத்த ஆபரணங்களை பெற்று தரியனுடைய பாளயத்திற் செல்லுதல்

ஐயனிவையுரைக்க ஆயர்களுந்தான்கேட்டு
பொய்யையுரையாமல்நல்ல புத்திசொன்னீர்கோபாலா
இதுபோதுமெங்களுக்கு யெந்தவிதமானாலும்
மதிசேர்குலப்பசுவை வாங்குவமேயல்லாது
விட்டுவிடுவதில்லை வில்வேந்தர்வந்தாலும்
இட்டப்படியல்லாது எராஞ்சப்பட்டதினால்
ஆர்க்குங்கிடையாது அரிகேசவாமுகுந்தா
ஊர்க்குடைக்குகிரோ முத்தாரஞ்செய்யுமென்றார்
கூர்மாவதாரன் கோவுகளைத்தான்மேய்த்தோன்
பாரிதனிலுள்ளோர்கள் பரிதாபந்தீர்த்திடுவோன்
வளக்காய்விபகரித்த மன்னரிடையோர்தமக்கு
இளைகூடியதலப்பா இரட்டைமஞ்சச்சாலுவையும்
கொத்துச்சரப்ளியுங் கோர்த்தமுத்துதாவடமும்
இரத்தினமணிபதைக்க ளிரண்டுகையில்மோதிரமும்
காதுக்கிசைந்தவச்சிரக் கடுக்கனிருசோடும்
சாதிக்குவல்லவர்க்குத் தரனீய்ந்தார்மாயவரும்
மாமனுடமைக்கு மருமகனே சொந்தமென்று
தாமோதரனிடத்திற் றான்வாங்கியிடையர்
அச்சுதனார்தன்பதத்தை அன்புடனேதான்பணிந்து
எச்சரிக்கையாக யிருமென்றுவார்த்தைசொல்லி

தேனையொற்றசொல்லான் றிரியோதனனிருக்கும்
பாளையத்தைதவந்துகண்டார் பாலர்களுமம்மானை

விருத்தம்.

யானைகோடிகள்வீரரும் ஒருபுரம்ரதங்கள்
சேனைகோடிகள்துரகத மொருங்கிறைகொழிக்கும்
வானமோடதிற்பேரிகை முளங்கிடும்வளமாய்க்
கானவாய்விடுமவர் படைநடந்திடக்கடலே

அளவிலாதசேதார் துரகதங்கரிபரியாவும்
வளையுமோரெழுகடலென நிறைந்திடும்வளமை
இளைஞ்ஞூனவ ரதையொருமசகமாயெண்ணி
பளையகோனெனனுளைவர்கள் பாளயப்பதியில்

அம்மானை

படையினுடபெருக்கம் பாலர்களுந்தான்பார்த்து
இடையரெனநடுவே யேகினாரம்மானை
ஊடேயிருவர்தனைத் துட்புலனுந்தான்பார்த்து
சாடையதுபேசித் தான்வருகும்வேளையிலே

## பாளையத்திற்சென்ற இடையர்களை சகுனிகூட்டி வரச்சொல்லி யாரென்று வினவுதல்

தப்புமொழிபகருஞ் சகுனியுமேதானறிந்து
துப்புவிளங்கவந்த துன்மார்க்கரென்றுசொல்லி
ஆடாமல்தாரி யரிக்காராவாருமிங்கே
நீடாபாளையத்தாள் நிற்கின்றகோன்களையும்
கூட்டியரட்சணத்திற் கொடுவாருமென்றுசொன்னான்
தாட்டிகனார்சொன்னமொழி தானறிந்துசேவகரும்
துடியாய்நடந்துசென்று சுத்திவருமாயர்களை
மடியைப்பிடித்திழுத்து வந்தார்சகுனியிடம்
வந்தயிடையர்களின் மதிமுகம்பார்த்தேசகுனி
எந்தவூர்காணுமக்கு யிங்குவந்தகாரியமும்
சொல்லுமென்றுகேட்டான் துடிசகுனியப்போது



நல்லவரேகேளுமினி நாங்கள்வந்தகாரியந்தான்
மன்னர்புகழ்வணங்கா மன்னனிடஞ்சொல்வதல்லாற்
பின்னொருவர்தங்களிடம் பேசுவதுமில்லையென்றார்
இருமென்றெனவுரைத்த யிடையர்களேயிப்போது
வருவிரெனவே மன்னனிடமேயனைத்துக்
கொலுப்பெருக்கித்தானிருக்குங் கொத்தவனார்முன்னிலையில்
எலிப்புலியரென்றுசொல்லி யிடையரையுந்தான்விடுத்தான்
கண்டுயிடையர்தனைக் காவலனுமேதுரைப்பான்
தண்டில்வரக்காரியமேன் சாற்றுமடையரென்றான்
மடையரெனவுரைத்த மன்னவனைத்தான்பார்த்து

## இடையராய் வந்தவர்கள் துரியனிடம் மாறு பாடாய் சமாச்சாரம் சொல்லுதல்

படையரியவர்சிறுபாலர்களுமேதுரைப்பார்
ஆரென்றுகேட்டருளு மரவக்கொடியோனே
சீருடையகருவூர் சென்றுவளர்கோன்களும்நாம்
வனத்திற்பசுமேய்த்து வருகின்றவேளையிலே
கனத்தபுகளுடைய காண்டீபன்புத்திரனும்
சின்னஞ்சிறுமதலை செங்கையிலேவாளெடுத்து
என்னதுணிவுகொண்டோ வெங்களிடம்வந்தணுகி
துதிபெருகுமாயனுட துவாரகையின்பட்டணத்தில்
அதிசெயமுமேதெனவென் றவர்கேட்கநாங்களுமே
காளமுகில்மேனியனார் கன்னர்மகள்தனக்கு
நாளைமுகூர்த்தமென்று நாங்களந்தபாலரிடம்
பகர்ந்தோமதைக்கேட்டு பாலகருமேதுசொன்னார்
ஜெகமுழுதுமாளுகின்ற திருமால்மகள்தனையும்
சிறைபிடிக்கவந்திருக்கும் திரியோதனன்படையை
அரைநொடிக்குளென்னுடைய வாய்புதத்திறைலீறுத்து
மால்மகளைநானே மணம்புரிய வாரனென்றும்
பாவினியசுந்தரிக்குப் பண்டுமணவாளனென்றும்
நல்முகூர்த்தவேளையிலே நான்மணமுஞ்செய்யாட்டால்
வில்வளைக்கும்வல்ல விசையன்மகனல்லவென்றும்
கோலமிட்டபந்தலிலே கோபாலன்றன்மகளை

மாலையிட்டுக்கொள்ளாட்டால் வாளெடுப்பதில்லையென்றும்
ஆரணியந்தன்னிலிங்கே யானுரைக்குஞ்சேதியெல்லாம்
பாரளந்தமாயனிடம் பறைபோட்டுரையுமென்றும்
சொன்னதொருசிறுவன் சொன்னதெல்லாம்மாயனிடம்
மன்னா அவரிடத்தில் வந்துபிகச்சொன்னோங்காண்
சிதரனுங்கேட்டவுடன் நேர்வேங்கோயுன்னிடத்தில்
காதில்ரகசியமாய்க் கண்டுரைக்கச்சொன்னார்காண்
தங்களுக்குயிவ்வுசனந் தானுரைக்கவந்ததலலால்
எங்களுக்குயென்னயிங்கே யிருக்குதுகாண்பாளையத்தில்
எப்படியுமுங்களுட யேந்திழைமார் தன்னிடத்தில்
தப்பியுயிர்பிழைத்துத் தலைகொண்டுபோயிடுங்கோ
பெண்ணாலேகெட்டவர்கள் பேருலகில்மெத்தவுண்டு
மண்ணாலேகெட்டவர்கள் மானிலத்தில்ரெம்பவுண்டு
இந்தரெண்டுகேடு யிருக்குதுகாணுங்களுக்கு
அந்தரங்கம்சொன்னோம் அரவக்கொடியோனே
போய்வாரோமென்றுசொல்லிப் போனாரிடையர்களும்

## உழவரியவந்த யிடையர்கள் சொன்னதை துரியன் கேட்டு திகிலடைந்து சகுனியிடம்யோசித்தல்

வாய்சோர்ந்துகைசோர்ந்து வணங்காமுடியோனும்
பெருமூச்சுவிட்டெறிந்து பிரளமுளித்துடைந்து
எரிபூச்சிபோ லுருகி யிருந்தசகுனிதனை
கண்ணாரப்பார்த்துக் கமலமுகமீயடிக்க
தொன்னாந்துகொண்டுமன்னன் சொல்லுவானம்மானை

### விருத்தம்.

காதலன்மதுபிள்ளை கலைதெரியிலக்கணர்க்கு
மாதவன்மகளைநாமு மாலைசெய்திடவும்வந்தோம்
பூதலமிளந்தபார்த்தன் பிள்ளைவந்திடவுங்கேட்டோம்
ஆதலாலினிமேற்செய்யு மளப்பென்னசொல்லுமென்றான்

அம்மானை

வையகமெலாம்புகழும் மாமாயினிமேலே
செய்யும்வகையினிமேற் செப்புமென்றுமன்னர்மன்னன்
திரியோதனனுரைத்த சேதியெல்லாந்தான்கேட்டு



## சகுனி துரியனுக்கு திடஞ்சொல்லுதல்

பெரியோனெனுஞ்சகுனி பேசுவான்மன்னனிடம்
தாழிப்பயல்பீமன் துஷ்டனும்வந்தானெனவே
ஏழைக்குரலினிமே லேதுக்குப்பேசுகிறீர்
என்னவொன்றுஞ்சேனையே எக்ரோணிதானிருக்க
கண்ணனுடவுரவு கைவசமதாயிருக்க
தளபதிகள்கைக்காரர் சகலருமேதானிருக்க
துளபமணிமாயன் துவாரகையில்த்தானிருக்க
அரியாச்சிறுவனொரு ஆண்பிள்ளையோநமக்கு
குறியாமலித்தனையுங் கோளைமொழிபேசுவரோ
மனத்திரமுங்கைத்திரமும் வாய்த்திரமுமுண்டானால்
நினைத்தபடிமுடியு நிமிசமதில்மன்னவனே
ஆமையுருவெடுத்த வரிகேசவனிடம்போய்
சாமத்திற்கல்யாணந் தான்முடிக்கவேணுமென்று
சீக்கிரத்திற்காரியங்கள் செய்துமுடிப்பதற்கு
மார்க்கமுடன்பரிசம் வாங்கியவர்கொண்டபின்பு
என்னமாய்ச்சொல்லவந்தீ ரெவருகிலுநமக்கு
கன்னியாதானமது கைகொடுப்பதுண்டோதான்
பணமாத்திரமிருந்தால் பாருலகில்நூறுபெண்கள்
சணமாத்திரந்தனிலே தருகாமல்த்தந்திடுவார்
கனமாய்த்திரவியத்தைக் கையினிலேதான்குடுத்தால்
உனக்குயெனக்கெனவே வோடிவருவார்கள்
தருகாமல்நீருமந்தத் தாமோதரனிடத்தில்
ஒருகாமற்பேசுமென்று வுரைத்தான்சகுனியுந்தான்
ஆங்காணுமும்முடைய ஆலோசனைவழியாய்
நாங்காணுமிப்போ நடக்கிறேனென்றுசொல்லி
திரமுடையகையான் திரியோதனனுரைக்க
அரியதுரோணருமங் கவனுக்கெடுத்துரைப்பார்

## துரோணர் துரியனுக்கு புத்திசொல்லுதல்

பாராளுமன்னவனே பார்த்திபர்க்கெல்லாமரசே
பேராரையேனுனக்கு பெரியபுத்தியில்லாமற்
அடுத்துக்குடிகெடுக்கும் அனல்சகுனிபேச்சைநம்பி

எடுத்துக்கவிக்குகிருய் யின்பமுள்ளபாக்கியத்தை
எத்தனைபேர்கூடி யிருந்தாலுமுன்னிடத்தில்
அத்தனையுங்கொல்வா னபிமன்னரைட்சணத்தில்
குடிகெடுக்கும்மாயனெனும் குண்டணிதன்பேச்சைநம்பி
சுடரில்விழும்விட்டிலைப்போற் சுருண்டுவெந்துபோகாதே
வானோர்புகழ்விசையன் மைந்தனையுமிப்போது
தானேயழைத்துவந்து சகலருமேதானறிய
செய்வீர்கலியாணந் திருமால்மகள்தனையும்
மெய்தானிதுவெனவே வேதியருந்தானுரைத்தார்
பொருத்தமிட்டுச்சொன்னதெல்லாம் பூபாலன்றான்கேட்டு
அருத்தமுமைக்கேட்கவில்லை யாசாரியென்னுடைய
வருதிப்படிநடக்க மாட்டீரேயாமாகில்
விருதுக்குஉம்மையிப்போ விரட்டுவேன்கண்டீரே
பார்த்தன்மகன்றனக்கும் பஞ்சவர்கள்தங்களுக்கும்
ஆத்தாமற்சொல்லுகிறீர் ஆசாரிநீர்தாமும்
நழுவியுரைத்ததினல் நன்மையில்லையென்சபையில்
அழுதுபுலம்பாதீ ரகன்றுபோயுமென்றான்
துஷ்டனுரைத்தமொழி துரோணருமேதான்கேட்டு
மட்டியிவனிடத்தில் வார்த்தைசொல்வதல்லவென்று
வீரம்பொருக்காமல் வீற்றிருந்தார்பூசுரரும்
சாரமறியாதமன்னன் சபைவிட்டெழுந்திருந்து
வீதிவழிநடந்தான் வெஞ்சாமரைவீச
ஆதித்திருமா லிருக்கும்மாளிகையில்
சென்றுதிருமாலுடைய சீர்பாதம்பூண்டுகொள்ள
நன்றுகாணென்றுசொல்லி நாரணர்தாமும்
இருவென்றுபசரித்து இருவர்களும்தான்பேசி
திருமங்கலஞ்சரிக்கத் திருட்டளப்புத்தான்பேசி

## கிருஷ்ணன் ரகசியமாய் மாப்பிள்ளையை அலங்கரித்து கூட்டிவரும்படி தூரியனிடஞ் சொல்லுதல்

சுபலெக்கணமதிலே சுந்தரிக்கும்லெக்கணர்க்கும்
சபையறியக்கல்யாணம் தான்முடிக்கவேணுமென்றல்
வாள்வீமன்வந்து வழிபார்த்திருக்கிறான்



கோளேதுமில்லாமற் கொற்றவரையும்முடைய
தளத்தையணிவகுத்து சட்டதிட்டமாய்நிறுத்தி
விளைத்தகருமமுளே வேண்டிவந்துசூளாமல்
எச்சரிக்கையாக யிலக்கணகுமாரனையும்
உச்சிதமதாக வுடனேயலங்கரித்து
பட்டணப்பிரவேசம் பவனிவலமாகவந்து
இஷ்டமுடன்பகலி லிருபதரைநாழிகைக்குள்
மாப்பிள்ளையைக்கூட்டியிங்கே வந்தீரேயாமாகில்
காப்புத்தரிக்கிறோம் கலியாணம்பண்ணுகிறோம்
காரியத்தைநீர்பாரும் காவலனேயென்றுசொல்லி
தாரிலுற்றவெம்பெருமான் தாமோதரனுரைத்தார்

## தூரியன் பராக்கிரமங்கூறி சகுனியிடம் போய் யோசனைகேட்குதல்

தேவகியாள்பெற்றெடுத்த திருமால்தன்சொற்கேட்டு
ஆவலுடனேமகிழ்ந்து அரவக்கொடியோனும்
உன்பாலுதவிநமக் குண்டாயிருப்பதினல்
என்பாலையந்தனைப்பார்த் தெமனும்பயப்படுவான்
ஆரொருவர்வந்தாலு மஞ்சாதெனதுகைவாள்
நீரொருத்தர்ம்மிடத்தில் நிசமிருக்குமாமாகில்
பாருமெனதுகையிற் பட்டாவின்சித்திரத்தை
மேருப்பொடிப்பொடியாய் வெட்டுவதும்நேரிவீர்
ஆனதினலும்முடைய ஆலோசனைப்படிக்கு
நானுமிலக்கணனை நன்றாயலங்கரித்து
வாறேனென்றுரைத்து மன்னவனுந்தானெழுந்து
வீறனபாளையத்தில் மேவினனம்மானை

### விருத்தம்.

மண்டலீகர்மகுடாதிவர்த்தனரு மன்னனுடையதோர்கர்ணனும்
தண்டரீகசதுரங்கசேனைதள துரோணராதிபர்கள்சூழவே
ரெண்டுகோடிபடைநூறுதம்பியரு மிராசராசர்களிருந்திட
கொண்டலானதிரியோதனநிபதிகொலுவிருந்துமொழிகூறுவான்

அம்மானை.

தனுசுக்கதிபதியாம் சர்திமறையோர்துரோணர்
மனசுத்தவாரியவான் வாள்பெரியகர்னனுடன்
சுத்தரணவீரன் சுகுர் தனுசுவத்தாமா
வெத்திதனில்மிகுந்த விதுரனெனுமன்னவனும்
அடுத்துக்குடிகெடுக்கு மனியாயவான்சகுனி
எடுத்துக்கணைதொடுக்கு மியல்பெரியசல்லியனும்
தான்சேவகனெனவே சாற்றுஞ்சயிந்தவனும்
நான்சேவகனெனவே நாட்டுமொருவிஷ்ட்டுமரும்
காரியங்கள் தானுரைக்குங் காங்கயருமாங்கவரும்
வீரியங்கள் தானுரைக்கும் வில்வேந்தர் நூற்றுவரும்
சிரிக்கும்புகளுடைய தேசத்துமன்னவரும்
பரக்குமொருகுதிரைப் பட்டாணிமார்களுமே
சுத்தியிவர்களெலாஞ் சூழ்ந்துகொண்டுதானிருக்க
கர்த்தனிவனெனவே கட்டியங்கள் தான்கூற
சாமரசங்கள்போடத் தனிவிருதுமேபிடிக்க
கொடியதிரியோதனனுங் கொலுவிலிருந்துகொண்டு
கெடுதிவினையேயெடுத்து கிளர்த்துஞ்சகுனியைப்பார்த்
தாலோசனைமிகுந்த வம்மான்சகுனியரே
நாலாவகையுமக்கு நன்றாய்த்தெரிவதனால்
சொல்லுகிறேனும்மிடத்திற் சூசனையைநீர்கேளும்
கல்லையுருவாக்கிவைத்த கண்ணருடன்பேசினதில்
மணவரையின்பந்தலுக்கு மாப்பிள்ளையைப்பின்னேரம்
குணமாய்ப்பவுனிசெய்து கூட்டிவரச்சொன்னார்காண்
துச்சணஞ்செய்வாள்வீமன் சுருக்கில்வருவானெனவே
எச்சரிக்கையாகநம்மை யிசைந்துவரச்சொன்னார்காண்
மாப்பிள்ளையைக்கூட்டி யங்கேமாலையிடப்போவதற்கு
தாப்பரியம்நீரறிந்து தானுரையுமென்றுரைத்தான்
புவிபுரக்குமன்னன் பொருந்தியுரைத்ததெல்லாம்
செவிகொடுத்துக்கேட்டுச் செப்புவான் தூர்ச்சகுனி

## சகுனி வாள்வீமனையிகழ்ந்து துரியனுக்கு திடமும் யோசனையுங் கூறுதல்

வாள்வீமனைப்பெரிய மலையென்றிருக்காதே
ஆள்நெருங்கித்தானிருந்தா லவன்வரவுமாட்டான்காண்



காவலனே ஆயுதத்தின் கைப்பளக்கமின்னமில்லை
சேவகனுமாகவில்லைச் சிறுவனவன்காணும்
கடினச்சமர்க்களத்திற் கையாடிபார்த்தறியான்
வடிக்கின்றரத்த வாடையதுகண்டறியான்
பச்சைப்பயலையொரு பாரமென்றுயெண்ணுவரோ
அச்சமுள்ளவத்தேநாம ளாலோசனைசெயினும்
முண்டனுக்குரெண்டதல்லால் மூன்றுபேரேன்காணும்
கொண்டல்வண்ணன்சொன்னபடி குற்றமொன்றும்வாறாமல்
நாலுதிக்குஞ்சேனைகளை நன்றாய்ப்பிரித்துவைத்து
மேலுந்தளபதிகள் வெவ்வேறாயுண்டுபண்ணி
எல்லாந்தளபதிக்கு மெஜமானதிகாரம்
செல்லுமொருகர்னனுக்குச் சேனாபதிகூட்டி
திசையெட்டுங்காவல் சேனாபதிதனக்கு
வசைசகானுவளவும் வாறுமலேநிறுத்தி
குருக்கள் தலையஞ்சப்பும் கும்பிடையுந்தானிருத்தி
இருக்குமவரையெல்லா மிலக்கணர்க்குப்பின்னனுப்பி
அவர்களுடனாமு மாயனுடபட்டணத்தை
பவுனிவலமாகவந்து பாலனிலக்கணர்க்கு
இன்றுமனைக்காப்புமிட்டு மியல்சோபனமுடிக்க
நன்றெனவேதோணுதுகாண் நம்முடையயோசனைக்கு
அறிந்தமட்டும்சொன்னேனினி யறிந்ததையுந்தான்சேர்த்து
தெரிந்தமட்டும்பாருமென்று செப்பினான் தூர்ச்சகுனி
அப்போதுரிய னகமகிழ்ந்து தான்கேட்டு
இப்படியும்புத்திமெக் கெவர்களுரைப்பாரெனவே
அந்தரங்கமாக அகமகிழ்ந்துகொண்டாடி
இந்தவகைசெய்வதற்கு எண்ணினர்காணம்மானை

## துரியன் துரோணரிடம் பவுனிவர உபாயம் கேள்குதல்

விருத்தம்

மனமதிற்கபடமான வஞ்சகன்கொடியபாவிக்
கனவிலுந்தருமந்தேடாக் கண்ணிலான்பெற்றபாலன்
நினைவிலேபெருமையெண்ணி நிசதனுகுருவைப்பார்த்து
வினைசமர்புரியும்யூகம்விளம்பதுமெவருலென்றான்

அம்மானை.

நிராணியிருந்தோன்சிலைகை சிறந்தபுகழ்வல்லவனுந்
துரோணர்தனைப்பார்த்து சொல்லுவான்காவலனும்
பவுனிவரநாமும் பண்ணுகின்றயோசனைக்கு
புவனமதிலொருவர் பொல்லாங்குவாருமற்
கார்க்கும்வகைகள் தனைக் கண்டுசொல்லுமென்றுரைத்தான்
மூர்க்கன்மொழிந்தவகை முதுமறையோன்தான்கேட்டு

## துரோணர் துரியனுக்கு புத்திகூறுதல்

கனகமுடிபொறுத்த காவலனேயிப்போது
பனகசயனத்தனுட பாசாங்குமிகதனுமற்
துள்ளிவிழுகாதே சூள்சகுனியிச்சைநம்பி
வெள்ளியுதிக்குமுன்னே வினைவளர்த்துக்கொள்ளாதே
அய்யாவேயென்னிடத்தி லற்பயுகளுங்கேளாதே
செய்யமனதிருந்தால் செய்திடுவாயுன்பிரியம்
நீரொருவர்செய்யுகின்ற நேர்மையுள்ளயோசனைக்கு
வேறொருவர்யோசனையும் வேணுமோமன்னவனே
யூகம்வளர்க்குகின்ற யுத்தியெல்லாங்கர்னனுக்கு
வாகுபெரவருங்காண் மற்றொருவர்வேண்டாங்காண்
பொருத்தமுடன்லெக்கணர்க்கு புகழ்பவுனிசெய்வதற்கு
விருத்தரென்றபேரையெல்லாம் விடுவீரவன்பிரகே
அப்படியும்பாராமல் ஆலோசனையிருந்தால்
எப்படிநீர்கலியாண மிசைந்துபண்ணப்போரீர்காண்
மலையாமலேநடந்து வந்ததெல்லாந்தான்வரட்டும்
பலனேதுமில்லையென்று பகர்ந்தார்துரோணருமே
அவ்வார்த்தையெல்லா மரவுயர்த்தோன்தான்கேட்டு
செவ்வையுள்ள்காரியத்தைச் செப்பிடவுமாட்டீரே
பதினேழுஅக்ரோணி படையில்வருமண்டலீகர்
அதிபலமாயுள்ளோ ரனைவோரையுமழைத்து
மன்னர்மகுடமுடி வர்த்தனர்களெல்லோரும்
கன்னனுடனுத்தாரக் கட்டளையில்நில்லுமென்று



## லெக்கணகுமாரன் பவுனிவருவதற்கு யூகம்வகுக்குதல்

தானேவருதிசொல்லித் தானனுப்பகர்னனுக்கு
சேனைபதிமகுடந் திரியோதனன்றரித்தான்

விருத்தம்

மத்தகெஜமானதொருகோடிபரிகோடி
யுத்தமிடுசேனையிருகோடிதிரளெல்லாம்
உத்தவர்களாகவர உண்மையுடனே தான்
வெத்திபுரியுருசகுனி மேல்திசையில்நின்றான் ௧

வேகமிடுபாய்பரி யனேகமதுலட்சம்
வாகுபெருசேனைரதக் காரரெழுகோடி
ஏகமன்தாகயியல் சல்லியனிசைந்து
சேகரமதாகியொரு தென்திசையில்வந்தான் ௨

அட்டதிசையானைகள் பதாதிகளனேகம்
திட்டமொருசேனையெழு கோடிரதவீரர்
சட்டமொடுசூரதள கர்த்தனெனவேதான்
கெட்டியாய்வீஷ்டுமருங் கீழ்திசையில்வந்தான் ௩

தேசரதிகாள்விஜய சூரரெழுகோடி
பூசலிடுசேனைபனி ரெண்டுயெழுகோடி
வீசுசதுரங்கபல தூளியுதமேவ
வாசமிருகர்னனும் வடதிசையில்வந்தான் ௪

இந்தவிதமாகயிரு நால்திசையிலேதான்
வந்துயெழுமேகமு மிருண்டவிதம்போல
பந்தனமதானபடை யானதுபகுத்தார்
அந்தவகைவானவ ரிந்துபிரமித்தார் ௫

நாலுதளநாயகரும் நாலுதிசைநின்றார்
காலனதுகண்டிருகை தட்டியேசிரித்தான்
கோலமிடுபேய்கள்பல கூளிகளிருந்து
மாலவனைபோற்றிமன மானதுகளிக்கும் ௬

தீதுகுடியானதிரி யோதனனுமங்கே
ஆதிகுருதுரோணர்முத லானவர்களெல்லாம்
சாதுரியலெக்கணனை தன்பதிகள்மெய்க்க
வீதிதனிலேபவுனி விரைவினிலேவந்தார்

அம்மானை.

சேனைதளகர்த்தர்களைத் திசையெங்கனுமிருத்தி
தானுமனதிலொரு சஞ்சலங்களில்லாமல்

## இலக்கணகுமாரன் பவனிவருவதற்கு அலங்காரஞ் செய்தல்

பாலனிலக்கணனைப் பரிவாய்வரவழைத்து
சீலவபிஷேகத் திருமஞ்சனமாட்டி
கொஞ்சுங்கனகரத்தினக் குண்டலமுங்காதிலிட்டு
செஞ்சுடர்கள்போலிலங்கச் சிரசில்கிரீடம்வைத்து
கண்டசரமணிந்து கைக்கொளுசு தான்புனைந்து
வெண்டயமுங்காலில் விருதுக்ளுந்தான்பூட்டி
அங்கிமிகத்தரித்து அதின்மேற்பதைக்கமிட்டு
திங்களெனும்நெத்தியிலே செந்தூரப்பொட்டுமிட்டு
அரைஞாணிடையிலிட்டு அன்புடையலெக்கணனை
திருமால்மருகனெனத் திருஷ்டியொன்றுந்தான்கழித்து
ஆனையலங்கரித்து அதின்மேலவனைவைத்து
சேனைதளபதிகள் திரளாகமுன்னடக்க

## இலக்கண்குமாரன் பவுனி வருகுதல்

காங்கையர்துரோணரையுங் கர்னனுக்குபின்னாக
ஆங்கவர்கள்தன்னையெல்லா மனகாய்ரதமேற்றி
பெருமையிலக்கணன்றன் பின்னாலேபோங்களென்று
உருமையுடனுரைத்து வுயர்பவுனிக்கானதெல்லாம்
பரிகளொருகோடிதன்மேற் பட்டாணிமார்நடக்க
கரிகளொருகோடியின்மேற் காவலர்கள்முன்னடக்க
தங்கரதக்காரர் சதிருடனேதானடக்க
வெண்கலத்தேர்க்காரர் விரைவாய்நடந்துவர
மந்திரிகள்கோடி வளமாயொருபுறமும்
தந்திரிகள்கோடி தானேயொருபுறமும்



வேல்பிடிக்குமன்னவர்கள் வில்லாளிகளோர்புறமும்
மால்மிகுத்தமண்டலிகர் வளமாயொருபுறமும்
முத்துக்குடைகோடி முன்னாகத்தானிலங்க
பத்தரைமாற்றுப் பசுங்குடைகள்தானிலங்க
அருணனொளிபோலே ஆலவட்டந்தானிலங்க
சருகைச்சுருட்டிகளுந் தானோர்புரமிலங்க
அரவக்கொடிதுலங்க அனுமக்கொடிதுலங்க
வரிசைவரிசையதாய் மருடக்கொடிதுலங்க
பாவாடைவீசப் பன்னீர்பனுமார
பாவாணர்சங்கீதம் பண்பாய்ப்படித்துவர
தாரைதவில்முரசு தம்பட்டம்முன்னதிர
பேரிகையும்டம்மாணம் பிரகேயதிர்ந்துவர
மத்தளமும்வீணை மல்லாரிதான்முழங்க
தித்தியுடன்கைத்தாளம் சேர்ந்துயிசைமுழங்க
கொம்புடனேடங்கா குமுறிமிகமுழங்க
தம்பூருவீணை சாமண்டலமுழங்க
மங்கையர்களிங்கிதமாய் வந்துநடனம்புரிய
நாவாற்றுதிக்கும் நட்டுவர்பண்பாடிவர
பூவாணர்மெச்சபொரிவாணமும்பரக்க
மத்தாப்புக்கோடியதில் வானம்பலகோடி
வித்தாரமாகவெங்கும் விளங்குபகல்வர்த்திகளும்
தங்கத்திவட்டிகளும் தானேயிருகோடி
இங்கிதமதாக யிருபக்கம்மின்றிலங்க
அண்டங்கிடுகிடென வகிலமெலாந்தானதிர
கண்டவருங்கேட்டவருங் கதையோவெனமொழிய
மவுவிதரித்த வணங்கான்ரவுயர்த்தோன்
பவுனிதனக்குண்டான பவுசுகளெலாமனுப்பி
சாதுரியமானதொரு தன்மகனும்லெக்கணனை
வீதிவரச்செய்துவிட்டு வேந்தனுமேதேரேறி
முன்னாகவேநடந்தான் முகூர்த்தமணப்பந்தலுக்கு
பின்னாகலெக்கணனும் புறப்பட்டான்வீதிவலம்
மாப்பிளையும்வீதிசுத்தி வாராரெனவேதான்
மூப்புடையதாதி முறையிடவேமாயவரும்

## கிருஷ்ணன் தோழிப்பெண்களைக் கொண்டு சுந்தரியை மணக்கோலஞ் செய்தல்

செங்கமலத்தாதிகளைச் சிறப்பாய்வரவழைத்து
மங்கையெனுஞ்சுந்தரிக்கு மணக்கோலஞ்செய்யுமென்று
உறுதியுடன்தாதியர்க்கு வுத்தாரமிட்டார்காண்
வருதிதனைப்பெற்று மகிழ்ச்சியுடன் தாதியரும்
அந்தப்புரந்தனிலே ஆயிரம்பேர் தாதிகளை
இந்தச்சணமே எல்லோரும்போவமென்று
போனளரண்மனைக்குள் பொற்கமலத்தாதியரும்
தானேயிருந்துகொண்டு தவிக்கின்றசுந்தரியை
பார்த்துமொருசெங்கமலப் பாங்கியருமேதுரைப்பாள்
சித்துநுதலாளே கிளிமொழியின்வாயாளே
கணையின்விழியாளே கரும்பினியசொல்லாளே
இணையுமொருசந்திரன்போ லிலங்குமுகத்தாளே
பதுமமலர்த்திருவே பத்தினியேயுத்தமியே
சதுர்பெருகும்லட்சுமியே தாமோதரன்மகளே
ஆயனரும்மையிப்போ அலங்கரிக்கச்சொன்னார்காண்
மாயனரும்மையிப்போ மணமிடவுஞ்சொன்னார்காண்
விரதஞ்செயுமுகூர்த்த வேளையுமேதானச்சு
திருமஞ்சனமாடத் தெள்ளமுதேவாருமென்றாள்
சிவிமயிர்முடிக்கச் செல்வியரேவாருமென்றாள்
காவினிளங்குயிலே கன்னியரேயிப்போது
திட்டமுடனே சிறப்பாகவேதானும்
அட்டளகன்லெக்கணருங் கனபவுனிதான்வாருர்
மாப்பிளையும்பெண்ணுமதாய் மணவரையிலேயிருந்து
காப்புத்தரிக்கவெபந்தன் கன்னியரேவாருமென்றாள்
பெண்கட்சரசியரே பெருமாளுடமகளே
வண்ணக்கறத்திலங்க வளைசரிகையிட்டிடவும்
நீலவிழிக்கஞ்சனமும் நெத்தியினிற்குங்குமமும்
கோலத்திருச்செவியிற் கொப்பிடவும்வாருமென்றார்
ஆதரவுசெய்யுமெங்கள் ஆண்டவனர்தன்மகளே
பாதசரந்தண்டையிடப் பைங்கிளியேவாருமென்றாள்



பாங்கியர்களிவ்விதமாய்ப் பகர்ந்தமொழிகளெல்லாம்
காங்கையுடன்சுந்தரியுங் காதுகளிலேகேட்டு

## சுந்தரி அலங்கரிக்கவந்த தோழிப் பெண்களை தூசித்தல்

திடுக்கிட்டெழுந்திருந்து செங்கமலத்தாதியரை
துடுக்கானவார்த்தைபல தூற்றிடுவாளம்மானை
தாதியரேசூப்பியரே தனியடப்பக்காரிகளே
காதுகளும்மூக்குகளும் கையறுக்கச்சொல்வேனுன்
கத்துகிதீர்புத்தியற்ற கன்னியரேயென்னுடைய
சித்திரையைத்தானெழுப்ப நினைவுகெட்டுப்போனீரோ
பஞ்சையிந்தலெக்கணர்க்குப் பத்தினியைப்பெண்சாட்டி
மஞ்சள்குளியென்றுசொன்ன வாயைக்கிளித்திடுவேன்
தீய்ப்பிடிக்கும்லெக்கணனைச் சிறந்தமணவாளனென்று
காப்புத்தரிக்கவந்த கையையறுக்கிடுவேன்
பொய்யுரைக்கும்லெக்கணனைப் புருடனென்றுசொல்லியிங்கே
மையிடவுவந்தவர்தன் மார்பையறுத்திடுவேன்
மட்டரியாலெக்கணனை மாப்பிளையாமென்றுசொல்லி
பட்டுடுத்தவந்தவரைப் பருங்கழுவிற்போட்டிடுவேன்
கண்டரியாலெக்கணனை கணவனென்றுசொல்லியிப்போ
தண்டையிடவந்தவரை தானப்புதைத்திடுவேன்
பிணிபெருகும்லெக்கணனைப் பேசுமணவாளனென்று
பணிதியிடவந்தவர்தம் பல்லைத்தகர்த்திடுவேன்
பாமரனாம்லெக்கணனைப் பகர்ந்துமணவாளனென்று
பூமுடிக்கவந்தவரைப் போட்டிடுவேன்தூண்டியிலே
ஆதிநாட்பேச்சுகளை யரியீரோயென்னுடைய
சேதியரிந்திருந்தும் செப்புவதேதோதாதியரே

## சுந்தரி வாள்பீமனுக்கு மணக்கோலமாவே னென்று தாதியர்களிடம் சொல்லுதல்

அஞ்சலெனைக்காக்கு மபீமவீரனுமன்னருக்கு
மஞ்சள்குளித்திடுவேன் மையிடுவேன்பொட்டிடுவேன்
பூசிமுடித்திடுவேன் பொற்துகிலும்தானுடுப்பேன்

வாசமலராபரணம் மனமகிழ்ந்துபூண்டிடுவேன்
கண்டுமகிழ்ந்திடுவேன் கண்ணாலேபார்த்திடுவேன்
கொண்டலபீமரிடம் கொஞ்சிவிளையாடிடுவேன்
ஆசைமணவாள ரபீமனென்றுஞ்சொல்லாமல்
தோசியிலக்கணனைச் சொன்னீர்பிழைபொருத்தேன்
எல்லாருமென்னிடத்தி லிருங்கோசணனேரம்
வல்லாளரென்கணவர் வாள்வீமர்தான்வருவார்
அப்போதுவாருமெந்த னழகுமணக்கோலம்
இப்போதுபேசா திருங்களென்றாளம்மானை

விருத்தம்

காதலன்வரும்வகை காணலாமென
மாதவனருள்மகள் வாய்மைகூறிட
தாதியர்றியலாமென்று தானவர்
மாநிட்டத்திருந்தனர் மகிழ்வதாகியே ௧

வேறு

இந்தவகையாலிவ ரிருந்தனர்களிங்கே
அந்தரதிகாவ்திசை யடங்கலுமிருந்தார்
விந்தைதிரியோதனர்கள் வீதிவரும்வேளை
வந்தசிருபாலருட வண்மையதுசொல்வாம் ௨

## இராவான் கடோர்கயனும் துவாரகையில் நடந்த சங்கதிகளை அபீமனிடம் வந்துசொல்லுதல்

இவடத்ததிசயங்க ளிப்படியேதானிருக்க
அவடத்திருந்துவந்த ஆனசிருபாலகரும்
இராவான்கடோர்க்கசனும் யிடையரெனவேசமிட்டு
பிராணைபன்வாழும் பெரியதுவாரகையில்
மேவியரிகேசவன்றன் மேலழப்புத்தான்பாத்து
பாவிதிரியோதனன்றன் பானையமுந்தான்பார்த்து
வந்தகடோர்க்கசனும் வாசமுள்ளராவானும்
சொந்தமுள்ளதம்பியெனும் துரைதானிருக்குமிடம்
மணிச்சாவடிதனிலே மலர்மடந்தைவீட்டினிலே
கணப்பொழுதுதன்னில்வந்து கண்டார்களம்மானை



விருத்தம்

தாரணிதமையர்சென்று தான்வபீமன்கண்டு
காரணிருவர்பாதம் கையிறைகவிந்துபோற்றி
நாரணரிடத்திற்போன நன்மையுமரவயர்த்தோன்
தோரணவகையுமங்கே சொல்லுமெய்றுரைக்கலுற்றான் ௧

வண்டணிமலர்சேர்மார்பன் வகையிதபீமன்கேட்டு
அண்டர்கள்பரவும்வேத வருட்கடலரியோன்றன்னைக்
கண்டதுமவர்தான்சொன்ன காரியமரவயர்த்தோன்
சண்டையிற்றெரியுமென்றான் தலந்தனைபுண்டவாயோன் ௨

அரவயர்த்தவனைக்கண்ட வதிசயமெல்லாஞ்சொல்லி
திரூபடனுக்குசேனை சிரந்திருப்பதையுஞ்சொல்லி
இருபதுகடிகைக்குள்ளே யிசைபகல்முகூர்த்தமென்றும்
உரிமையினுடனேதம்பிக் குரைத்துயோசனைசெய்வாரே ௩

அம்மானை.

நல்லதுவாரகையில் நடந்ததொருசேதியெல்லாஞ்
சொல்லியொருவர்க்கொருவர் சுகமாய்மனமகிழ்ந்து
இனிமேல்நடக்கும்வகை யென்னவென்றுவாள்வீமன்
கனிவாய்த்தமையரிடங் கைகுவித்துத்தான்கேட்டான்
மொழிந்தசிறுவனையும் முகத்தில்முகத்தோடணைத்து
குளிர்ந்துமனமகிழ்ந்து கூர்வாளிடும்பிமகன்

விருத்தம்.

நூற்றுவர்தனையுந்தங்கள் சேனையும்நொடிக்குமுன்னே
காற்றினிலிலவம்பஞ்சாய்க் கவுரவர்பறந்துபோகத்
தூற்றினம்பெருமானீன்ற சுந்தரிதனையுனக்கு
ஏற்றநன்மாலைசூட்ட யிசைந்தனன்கடோர்க்கனென்றான்

வேறு

அன்னவர்கள்தங்களைதிராகவுமேசென்று
பொன்னுலகில்வானவர் புரந்தரனுமாகப்

பின்னுமுலகங்களுள்ள பேர்வரினுமிப்போ
மின்னுமரைநாழிகையில் வெல்வதிசமென்றான்

அம்மானை

மார்க்கமுள்ள தம்பியரே வாழ்வீமாயிப்போது
தீர்க்கமுடனுங்கள் செப்புமொழிகேட்டருள்வாய்
இணங்கா தரவுயர்த்தோ னெண்ணரியசேனையையும்
வணங்காமுடியன்முதற் வாய்த்ததம்பி நூற்றுவரும்
கன்னன்சகுனியையும் காக்குமரதிகர் தனையும்
மன்னன்சயிந்தனையும் வாள்பெரியவீஷ்மரையும்
சொற்பெரியமாமறையோன் துரோணாசுவத்தாமன்
மற்பொருதுமண்டலிகர் வாகுபெருசல்லியனும்
இன்னிலத்திலுள்ளவரு மிராசர்மருமன்னியரும்
பொன்னுலகந்தன்னிற் புரந்தரனும்வானவரும்
குறையாதிவர்களெல்லாம் கூடியெதிர்வந்தாலும்
அரைநாழிகைதனிலே யவர்களையும்வென்றிடுவேன்
குன்றைக்குடைபிடித்த கோபாலன்றன்மகளை
இன்றைக்கேமாலையுனக் கிட்டிடுவேன் தப்பாமல்
திரியோதனன்படையைச் ஜெயித்துவருமளவும்
அரியோன்மடத்தருகி லம்மையார்வீட்டினிலே
புத்தியுடனிருங்காண் போர்க்குவரவேண்டாம்நீ
வெத்திரணசுத்த வீரன்கடோர்க்கசனும்
சென்றுசமர்க்களத்திற் றிரியோதனன்படையை
கொன்றுஜயஸ்தம்பங் கொடிவிருதுநாட்டுகிறோம்
பாரும்மகிமையென்றும் பகர்ந்தானிராவானும்
கூறும்வசனமெலாங் குழந்தையுமேதான்கேட்டு
சரணம்சரணமென்று தமையரிடமேதுரைப்பான்
திரமையுளனெனவே செப்புகின்றஅண்ணாவி
சர்ப்பக்கொடியுடையோன் றானுமுமக்கெதிரோ
அற்பத்தனத்தையங்கே யரைநாழிகைதனிலே
திருமால்செயலாலே ஜெயித்[illegible]கொண்வாரேன்
சிறுவனிவனெனவே சிந்தைகுன்றவேண்டாங்காண்
திறமாயிதுவசனஞ் செப்பினான்வாள்வீமன்



இந்தவசனமதை இராவானுந்தான்கேட்டு
சிந்தைகலங்கிச் செப்புவான்ராவானும்
என்னமொழியுரைத்தாய் யினிதானதம்பியரே
அன்னையுனக்குமன்றோ எதிபிரியமாய்மகிழ்ந்து
கையில்மணமுகூர்த்தக் காப்புத்தரித்திருக்க
எய்யும்சமர்க்களத்தி லெந்தவிதம்போவதுகாண்
மாலையிடுமளவும் வாளெடுக்கலாகாதே
மேலுமொருகாரியத்தை வேண்டிடவுமாகாதே
அந்தவகைநீரும் அறிந்திலையோ தம்பியரே
இந்தவகைதானும் யேனுரைத்தீர் தம்பியரே
வாருமென்றுசொல்லி மலர்மடந்தைவீட்டினிலே
சீருபருமூவர்களும் சேர்ந்தார்காணம்மானை

விருத்தம்.

சிறுவர்கள்வந்தபோது சிறந்தநல்லம்மையாரும்
அறுசுவையுடனே தூய்ய அன்னமூவர்க்குநல்கி
கருமுகில்மகள்கல்யாணக் காரியம்பார்க்கப்போறேன்
உருமையுள்ளவரேநீக்க ளுயர்மனையிருமென்றாளே

அம்மானை

தாகமுடன்வந்தசிறுத் தம்பியர்கள்மூவருக்கும்
பாகமுடனேருசியாய்ப் பாலன்னந்தான்படைத்து
சீரேருஞ்சுந்தரிக்குத் திருமணமுமானதினால்
போறேன்துவாரகைக்குப் போய்நான்வருமளவும்
சுத்தமுள்ளநன்மனையில் சுகமாயிருங்களென்று
புத்திமிகவுரைத்துப்போனாள் மலர்மடந்தை
போமென்றுபசரித்துப் போர்பெரியராவானும்

## துரியோதனனிடம் யுத்தத்திற்குபோவதாய் அபீமனிடம் இராவான் கடோர்க்கயன் சொல்லுதல்

ஆமென்றருகிருந்த வபீமனையுந்தான்பார்த்து
புவனமதிற்கீர்த்திபெற்ற புண்ணியரேநாங்களிப்போ
கவுரவர்கள்சேனையிலே கையாடிவெத்திகொண்டு

ஒருநாழிகைதனிலே யுத்தமனையும்மிடத்தில்
வருவோமதுவரையு மாயன்மணிச்சாவடியும்
பூங்காவனமுமிந்தப் பூமடந்தையார்வீடும்
நீங்காதிருமெனவே நிகழ்த்தினன்ராவானும்
மன்னனுரைத்தமொழி வாள்வீமன்றான்கேட்டு
சொன்னபடிகேட்டுமக்குத் தொண்டுசெயும்நானடியேன்
தேவர்சொன்னபுத்தி சிந்தைமுடிமீதுவைத்து
ஏவல்செய்துகொண்டிருப்பேன் னென்றனன்பீமனுமே
மகிழ்ந்துகடோர்க்கசனும் வன்மைமிகுராவானும்
புகழ்ந்துசமர்புரியப் போர்க்கோலம்செய்யலுற்றார்

## வாள்பீமனை பூமடந்தையின்வீட்டில் நிருத்திவிட்டு ராவான் கடோர்க்கயனும் போர்க்கோலங்கொண்டு துரியனுடைய பாளையத்தில் செல்லுதல்

விருத்தம்.

கச்சையிடைகட்டினர் கதித்துயிடைமீது
உச்சிதமதானவுடை வாளதுபுனைந்தார்
இச்சையுடனேகெதை யெடுத்தனர்கையில்லும்
அச்சமிலேயென்றுவெகுவாயுதமெடுத்தார்

ஐவர்துணையென்றுமன தன்பதுபுனைந்தார்
கையிலொருமேல்விருது கங்கணமிசைந்தார்
சைவநிறைமாயனிரு தாள்சரணமென்றே
தெய்வபலமாகவமர் செய்திடநடந்தார்

அம்மானை

கார்மேகமேனிக் கடோர்க்கசனும்ராவானும்
போர்புரியவேணுமென்று போர்க்கோலமும்புரிந்து
கையிற்றனுவெடுத்துக் கடும்பகழி தானெடுத்து
செய்யகெதையுடனே தெண்டாயுதமெடுத்து
கூடவரும்தம்பியரைக் குணமாகவேநிறுத்தி
காடுறைந்தபஞ்சவரைக் கருத்தில்மிகநினைந்து
சீரானதர்மன் ஜெயமாகுமென்றுசொல்லி



நாராயணாவெனவே நடந்தாரிருபேரும்
வந்தார்துவாரகையில் வடகோட்டைவாசலிலே
செந்துள்ளிளம்பத் திரியோதனன்படைகள்
முன்னணியும்பின்னணியும் முப்பணைதங்காதவழி
கன்னன்ரதமேரிக் கடுகவந்துநிற்கிறதும்
கடல்போல்வளைந்துகொண்டு கவ்ரவர்கள்சேனையெல்லாம்
திடமாயிருப்பதையும் சென்றிருவர் தான்பார்த்து
கட்டழகன்ராவான் கடோர்க்கசனைத்தான்பார்த்து
பட்டணத்தைச்சுற்றியிந்தப் பாளையமுண்டானதினால்
தென்கோட்டைவாசல்முகம் செல்லுமென்றுதானனுப்பி
மன்னனராவான் வடகோட்டைவாசல்சென்றான்
வில்வளைத்துவார விருதுதனைப்பார்த்து
மல்யுத்தஞ்செய்யுமொரு வக்ரதந்தனென்றொருவன்

## இராவான் கடோர்க்கயன் ஆயுதத்துடன் வரக்கண்ட வக்கிரதந்தன் துரியனிடஞ்சொல்லுதல்

திரியோதனனிடத்திற் சேதிதனைச்சொல்லிடவே
எரிபூச்சிபோலவிழுந் தேங்கியேமன்னவனும்
எதினிமேல்நாமு மெடுத்ததொருகாரியமும்
தோதாய்நடக்குமென்று தோணவில்லையென்றுமன்னன்
ஆசாரியாதமதை யன்பாகவேதொழுது
லேசாயிருவரையும் நிமிசம்விரட்டுமென்றான்

## உத்தத்திற்குவந்த இருவரையும் விரட்டும்படி சொன்ன துரியன்வார்த்தையை துரோணர் கேட்டு வக்கிரதந்தனை யுத்தத்திற்கனுப்புதல்

துரோணர்துவரிந்து துருசாயெழுந்திருந்து
குரோதவக்கிரதந்தனையுங் கொடியசமர்செய்யுமென்றார்
தந்தவக்கிரன்றானும் தளபதிகளைக்கூட்டி
வந்தோரிருவருடன் வாகாய்சமர்க்கெழுந்தான்
ஆயுதமுந்தானெடுத்து அரவானிடமேபி
பாயும்புலிபோலே பாய்ந்துயெதிர்வந்துநின்று

## வக்கிரதந்தன் ராவான் கடோர்க்கயனுடன் எதிர்த்து யுத்தஞ்செய்யுதல்

ஆரடாநீயுமிங்கே அஞ்சாமல்வாரதுவும்
பாரடாவுன்னையிந்தப் பாணத்தினலறுத்து
சரிபிடிக்கிறேனெனவே தளங்களுடன்வந்தெதிர்த்தான்
அரிமருகனுன அதிகபெலராவானும்
வாடாமுதற்பெலிக்கு வக்கிரதந்தாவுன்னுயிரை
தாடாயினியெனவு சமர்த்தறியுமென்றுசொல்லி
கோலத்தனுவளைத்துக் குணத்தொனியுஞ்செய்யலுற்றான்
ஞாலத்தவர்களெல்லாம் நடுங்கினர்காணம்மானை
குருவேசரணமென்று குணமுடையராவானும்
தருகாமலோர்கணையைத் தானெடுத்துவிற்பூட்டி
வனுவாயிழுத்துவிட்டான் வக்ரதந்தன்றன்மேலே
நிலையாதொருகணைதா னிமிஷமதிலேயெழும்பி
வாதாடும்வக்ரதந்தன் வருமரதமுந்தானறுத்து
மீதானவன்பிடித்த வில்லையுமேதானறுத்து
எரியுமனல்போல யிருந்திடவும்வக்கிரதந்தன்
கருகிமனதுநொந்து கண்சிவந்துவில்லதனை
எடுத்துச்சரந்தொடுத்தா னிராவாணுடல்மேலே
அடுத்துத்தளங்களெல்லாம் அஸ்திரமயமாய்த்தொடுத்தார்
சூழ்ந்தகணையையெல்லாஞ் சொல்லரியராவானும்
தாழ்ந்துவிழும்படியாய்த் தாக்கினனோர்பகழி
தாவிவந்தசேனையெல்லாந் தவிடுபொடியாகி
பாவியெனும்வக்கிரதந்தன் பற்களுமேதானுடைந்து
ஓடினான்தேரையும்விட் டோகோகோவென்றுசொல்லி
ஓடுவையோவென்று ஒருகணையிற்பூசவிட்டான்

## வக்கிரதந்தன் சண்டை செய்யமாட்டாமலோடியபின் கர்னன் ராவாணுடன் யுத்தஞ்செய்தல்

தீர்க்கமுள்ளகர்னனுமே நேரேரிவில்வளைத்து
மார்க்கமுள்ளராவான் மார்புதனில்நூறுகணை
பேசரியநெத்தியிலும் பிடரியிலும்நூறுகணை



மாசிலாவில்வளைக்கும் மன்னன்கரந்தனிலே
கொடிதானபாணங் குறையாமலேநூறு
கடிதாகவேதொடுத்தான் கர்னனுமேயம்மானை
எரிந்துவருங்கணையை இராவாணொருகணையால்
முரிந்துவிழும்படியாய் முடிகிச்சமர்புரிந்தான்
அங்கர்கோன்சினந்து ஐந்நூறுபாணமதை
திங்கள்முகத்தழகன் சிறுவன்மேலேதொடுத்தான்
வாரகணைகளெல்லா மாரிவிழும்படியாய்
சூரனொருபகழி தொடுத்தேயறுத்துவிட்டான்
கண்டுமனதுநொந்து கர்னனுமேதான்சினந்து
தண்டாளமார்பன் தனுவளைத்துவேகமதாய்
ஐந்துமுகக்கணையு மாறுமுகநற்கணையும்
சந்திராயுதக்கணையுந் தருகாமலேதொடுத்தான்
கொடியபகழிதன்னைக் கோலமுள்ளராவானும்
பொடியாயறுத்துவிட்டான் போர்க்களத்திலம்மானை
அதுக்குமொருசக்கரத்தை யங்கர்கோன்றானறுத்து
நெருக்கிரதம்பட்டத்தி நிமைமுளித்துமூடுமுன்னே
சிறுவனெனும்ராவான் சிரசதனைப்பார்த்து
உருவிவிடும்படியாய் யோராயிரங்கணையும்
இடிபோற்சிலதுகணை யேழாயிரந்தொடுத்தான்
கொடியவடவாக்கினிபோற் கோடிகணைதான்தொடுத்தான்
பூவுலகமெங்கும் பொரிந்துபுகையாகிடவும்
மேவுமொருஅஷ்டகிரி மேனுலகெலாமசைய
வானவர்களெல்லா மதிமயங்கியோடிடவும்
தானவர்கள்கெந்திருவர் தத்தளித்துப்போய்விடவும்
கடல்கள்சுவரிடவுங் கானகமுந்தீப்பிடிக்க
திடமுடனேபார்சுமக்குஞ் சேடன்முடிதானசைய
காடாக்கினியெனவே கர்னன்தொடுத்தகணை
தாடாவுயிரெனவே தான்வளைந்துராவான்றன்
மார்பிலொருகணைதான் வந்துமிகவேயிடிக்கும்
சேருமிருகரத்திற் சிலதுகணைதான்பாயும்
முதுகிலொருகணைதான் மூர்க்கமுடன்றான்பாயும்
பதுமமுகந்தனிலே பாயுஞ்சிலதுகணை

சிலைபருப்பனென்று சிலதுகணைசீறிவரும்
தலைபருப்பனென்று தாவிவருமஸ்திரங்கள்
சுத்திவளைந்துகொண்டு சுடர்போலெரிக்குதுகாண்
வெத்திமிகுராவணனும் வேடிக்கையாய்ப்பார்த்து
மனதில்நிசயித்து மன்னவனும்ம்ன்னேரம்
கனைதையுள்ளபொற்சிலையிற் கதிரோன்கணைபூட்டி
மார்புரனவாங்கி வலுவாயிழுத்துவிட்டான்
கூர்பெரியபாணங் கொடுங்கோப்மாயெழுந்து
வெய்யோன்மகன்கணையை வெஞ்சாம்பலாயெரித்து
கையாடவொட்டாமற் கர்னன்ரதங்குதிரை
கட்டுங்கொடிதனையுங் காத்திருந்தசேனையையும்
சுட்டுப்பொடிப்பொடியாய்த் தூள்சாம்பலாக்கியபின்
செய்யபுகழ்கர்னன் சிலைநாணையுமறுத்து
துய்யகணைபாலனிடஞ் சுருக்கில்வந்துசேர்ந்ததுவே

விருத்தம்.

பாலோன்விடுவெங்கணைபாயவுமே
ஆலோசனை யாகியவன்கர்பிரான்
மேலாகியதேரினில் மேவியபின்
சூலாயுதமொன்றுதொடுத்தனனே

அம்மானை.

விந்தையுள்ளராவான் விடும்பகளிதன்னாலே
சிந்தையதுகலங்கித் திரமர்னகர்னனுந்தான்
வேறேசிலையெடுத்து மிக்கதொருநாணேத்தி
தேரைமுடிகிவிட்டு சிறுவனெனும்ராவான்மேல்
காலவிஷமெனவே கனகோபமாயெழுந்து
சூலாயுதமெடுத்துத் தொடுத்துவலுவாய்விடுத்தான்
பொல்லாதசூலமது பொங்கிவடவாக்கினியாய்
செல்லாதவானந் திசைகளெங்குந்தீப்பிடிக்க
மின்னலிடியுமதாய் மேதினியெலாம்நடுங்க
மன்னனெனும்ராவான் மார்புதனைக்கீரவென்று
கோபித்துவந்ததுகாண் கொடுஞ்சூலமானதுவும்
சாபமிடவாரதுபோல்த் தாண்டிவருஞ்சூலமதை



காட்டானைக்கூட்டமதில் கடியசிங்கம்பாய்ந்தாப்போல்
போட்டானேசத்தி [illegible]
வேலாயுதமவிடவே வெகுண்டுவிரைவாயேகி
சூலாயுதந்தனையே துண்டுதுண்டாய்ச்செய்ததுவே
பருதிமகன்கர்னன் பார்த்துமனதிலெண்ணி
இருதிமுடிவென்றிருந்தோ மிவனுமிந்தச்சூலமதை
துண்டுபண்ணிப்போட்டுவிட்டான் சூரனொருசத்தியினால்
வண்டனிவனுமெனவே மனதில்வெகுகோபமுற்று
வாய்வாஸ்திரந்தொடுத்து மார்புக்குநேராக
தீப்போலெரிக்குமொரு திவ்வியாஸ்திரந்தொடுத்தான்
சோமாஸ்திரந்தொடுத்தான் சுருண்டுவிழுந்திடவே
ஏமாஸ்திரந்தொடுத்தான் இராவானிரந்திடவே
கடலானதுபிரண்டு காசினியில்வந்தாப்போல்
விடமானதுபரந்து மீளுகின்றவாரதுபோல்
எனக்குவுடலெனவே யெழுந்துசிலபாணம்வரும்
உனக்குவுயிரெனவே ஓடிவெகுபாணம்வரும்
எய்த்தால்விடுவதில்லை யென்றுசிலபாணம்வரும்
தேய்த்துவிடுவேனென்று சிலதுகணையோடிவரும்
கொண்டல்கவிந்ததுபோல்க்கோலமுள்ளராவானை
அண்டிப்பட்டபடுத்து அதட்டிவரும்வேளையிலே
மாத்தலர்கள்சிங்கம் வலுவுடையராவானும்
யுத்தமொருசிலையி லிரண்டுகணைதான்பூட்டி
நாராயணாவெனவே நமஸ்கரித்துயெய்யலுற்றான்
சூறுவளிபோலச் சுளன்றுகணைதானோடி
துடிக்குமொருஅங்கரர்கோன் றய்யதொருஅஸ்திரத்தை
நொடிக்குட்பொடிப்பொடியாய் நொருக்கிவிட்டதம்மானை

விருத்தம்

விட்டகணையாவையும் விழும்படியறுத்தான்
துட்டனிவனென்றுமிக துன்பமதையுற்றான்
அட்டதிசையோர்புகழு மானதொருகர்னன்
திட்டமுடன்சேனையெதிர் திரமுடனின்றான்
25

அம்மானை.

சேனபதித்தலைவன் திறமுடையகர்னனுந்தான்
தானயிரங்கோடி சரமாரியாகவிட்டு
பாலன்றனைச்செயிக்க பக்குவமுமில்லாமல்
காலனிவனெனவே கருத்தில்மிகநினைந்து
தாண்டுமொருராவான் றனைச்செயிக்கவேணுமென்று
நீண்டசிலைவளைத்து நீலமுளிக்கண்சிவந்து
தளத்தைத்மிகநடத்தித் தானுமொருதேரேறி
வளைத்தசிலையிலொரு வாய்வாஸ்திரம்பூட்டி
தோள்புளவாங்கிவிட்டான் சூரன்மகன்ராவான்மேல்
கோள்பெரியசோலையெலாங் கோடையிடிபோல்முழங்க
வெத்திகளும்பேசி விருதுமிகவேகூறி
சுத்திவெகுதிரளாய்ச் சூழ்ந்துசமர்செய்யலுற்றார்
விளங்கும்பகலவனை மேகம்வந்துசூழ்ந்தாற்போல்
தளங்கள்கவிந்துகொண்டு சமர்புரியுமன்னேரம்
பூமியதிர்ந்திடவும் புனல்சுவறிப்போய்விடவும்
எமகிரிமுதலா் வெட்டுங்கிடுகிடென
நாடாதவானமதில் நட்சேத்திரமதிர
காடாய்வனங்களெல்லாங் கனல்பிடித்துத்தானெரிய
சந்திரனுஞ்சூரியனுந் தத்தளித்துத்தான்மறைய
இந்திரரும்வானவரும் ஏங்கிப்பயந்துநிற்கச்
சிறுவனெனும்ராவான் நினைத்துப்பிரமைகொள்ள
அரவுயர்த்தோன்சேனதனை அங்கரகோன்றனடத்தி
பாணம்வருசையதாய்ப் பாலகனார்தன்மேலே
வேணுமொருமுகூர்த்த வேளையுமேசண்டைசெய்தார்
அவர்கள்கவிந்துகொண்டு அமர்புரியராவானும்
இவர்கள்விடும்பகழிக் கெவ்வளவுமஞ்சாமல்
பருத்திப்பொதியிலொரு படுதீவிழுந்தாப்போல்
எரித்துக்குமித்துவிட்டா னிராவானொருகணையால்
பெருகுமுகிலையொரு பெருங்காற்றடித்தாற்போல்
சிறுவனடித்துவருஞ் செயலறிந்துவங்கரர்கோன்
தேரையெதிர்நடத்திச் சிலைவளைத்துகர்னனுந்தான்



ஆறாயிருகோடிஅஸ்திரங்கள் தான்விடுத்தான்
எக்கணைகள்விட்டாலும் மெல்லாமிவனரிந்து
கைக்கணையொன்றேதொடுத்து கண்டதுண்டமாக்கிவிட்டான்
கனத்தபுகழுடைய கர்னன்மனம்வெகுண்டு
சினத்துச்சிலைவளைத்துச் சிருநாணொலியுமிட்டு
இடிபோலொருகணையை யெடுத்துமிகவிற்பூட்டி
நெடியதொருராவான் நெற்றிதனிலெய்யலுற்றான்
எய்யுமொருகணைதா னிராவான்திருநுதலில்
தையவடித்ததுகாண் நடுங்கிமனம்நொந்திடவும்
குருதிமிகவடிய கோபமுற்றுராவானும்
பருதிமகன்கர்னனையும் பார்த்தேதுரைக்கலுற்றான்

விருத்தம்

அடங்கிநீயுமமர்செய்குறாயுனது சுத்தவீரமுமறிவன்யான்
இடங்கொளாமல்வருசேனையானைரத மியாவும்ஓடியேயொளித்திட
அடங்கலாகவொருகடிகைதன்னி லுடலாவிபோகும்வகையாகவே
விடங்கலானகணையேவுவேனெனவும் வில்வளைத்துவமர்மேவினன்

அம்மானை

வாரும்யினிமேலாய் வந்தாவியோன்மகனே
பாருமினியெனது பராக்கிரமமுள்ளதெல்லாந்
தெரியப்படுத்துகிறேன் நிரமாகநில்லுமென்று
எரிபோலுரைத்து யிராவான்மிகச்சினந்து
பாரச்சிலையதனைப் பாங்காகவேவளைத்து
கூர்மையெனுஞ்சூலக் கொடுங்கணையில்விற்பூட்டி
அங்கரர்கோன்றன்மேலே அழுத்தமுடனெய்யலுற்றான்
சிங்கம்மதகரியைச் சினந்தெழுந்துபாய்ந்தாற்போல்
சூலக்கொடுங்கணையுந் துடியாகவேயெழும்பி
கோலப்பருதிமகன் கொடிரதமுந்தானறுத்து
தேருநுஞ்சாரதியைத் தியக்கமுறவுண்டுபண்ணி
பாரேழ்புகழ்கர்னன் பணிமகுடந்தானொருக்கி
கைபிற்பிடித்தவில்லைக் கண்டதுண்டமாயொடித்து
துய்யதிருமார்பிற் சூலமதுபாய்ந்திடவே
கன்னன்மதிமயங்கிக் கணமூர்ச்சையாய்விழுந்தான்

தென்னன்மெலிவுகண்டு சேனையெலாந்தத்தளித்து
சகுனிக்கமயமென்று தளமுறிந்துவோடுவதை
பகைபைத்துட்டிங்கிவைத்த பயல்சகுனி தான்பார்த்து

## இராவணனுடன் சகுனி யுத்தஞ் செய்யுதல்

தம்முடையதேருந் தளங்களையுந்தானடத்தி
நம்முடையகீர்த்திகளை நாட்டுகிறோமென்றுசொல்லி
ஆரடாநீயெனவே யதட்டியந்தராவணை
பாரடாவென்றுசொல்லிப் பாணமதைவிற்பூட்டி
கரவேகமாகியதோர் கைப்பழக்கம்வந்தவர்போல்
சரமாரியர்கவுமே சகுனியுமேதான்தொடுத்தான்
நிரைந்ததளங்களெல்லாம் நிறைநிறையாய்த்தான்பொருதார்
இரைந்துவரும்பகழி பிடிபோலவேமுளங்க
நாலுதிசைகளையு நன்றாகவேகவிந்து
பாலனெனும்ராவணை படைகூடியேபொருதார்
அங்கரர்கோன்மூர்ச்சை யவனுமிகவேதெளிந்து
பங்கமதைநினைந்து பரிவுடையதேரேறி
வில்லெடுத்துநாணில் விசையாய்க்கணைபூட்டி
சொல்லுரைத்தராவணைத் துணித்துவிடவேணுமென்று
எதிராகவந்துநின்று யெய்தான்கணைமாரி
சதிராகப்பாலருடன் சமர்பொருதானம்மானை

### விருத்தம்

வடதிசைத்தளமும் நல்வாய்ந்தகர்னனும்
தடவரைக்கீள்திசை சகுனிசேனையும்
படவமர்சூழ்ந்துகொண் டிவர்களோங்கினர்
குடதிசைச்சமரினைக் கூறுவாமரோ

### அம்மானை

வாகாய்வடதிசையில் வந்ததொருசேனைகளும்
தாகமுடன்கிழக்குச் சகுனியுடபானையமும்
நன்றாயிருதிசையில் நாட்டிநின்றமன்னவரும்
ஒன்றாகவேகூடி யுகாந்தபிரளயம்போல்
வந்துகவிந்ததொரு மன்னவர்கள் தன்னுடனே



சிந்தையுள்ளராவான் திடமாய்சமர்பொருதான்
மால்கிருபையாலே வயணந்தெரிந்திடவே
மேல்திசையிற்சண்டை விளம்புவன்கேளம்மானை

### விருத்தம்.

கத்தியம்செய்திடுங் கடோர்க்கயனுமங்கே
வெத்திசெயவேணுமென மேல்திசையில்வந்தான்
சத்தமுகிலென்னவே சயிந்தவனெதிர்த்தான்
அத்தனையும்வெல்வனென ஆண்மையுடன்சொன்னான்

## மேல்திசையில் கடோர்க்கயனுடன் சயிந்தவன் யுத்தஞ்செய்யுதல்

### அம்மானை

கைபிற்கெதையெடுத்துக் கடோர்க்கயனுமன்னேரம்
எய்யாமல்மேல்திசையில் எதிர்ந்தனம்மானை
தளத்துக்கதிபதியாஞ் சயிந்தவனைத்தான்பார்த்து
உளத்தில்மிகநினைந்து யோசனையுமுண்டாகி
ஆர்களானுமிங்கொருவ னஞ்சாமல்வாரதுவும்
வீரேதுபேரேதுரையென்று வந்தெதிர்த்தான்
வந்தசயிந்தவனை மன்னன்கடோர்க்கயனும்
சிந்தைதகலங்கமற் றிரயாயெதிராடி
அடித்தானொருகெதையா லவன்தேருடைபடவே
துடித்தான்சயிந்தவனுந் துயரமதுவுண்டாகி
பொல்லாதகோபமதாற் பொங்கிமனம்வெகுண்டு
வில்லொன்றுவெடுத்து விந்தையுள்ளதேரேறி
முக்கோடிசேனைதளம் முன்னாகவேநடத்தி
தொக்காகவேயிவனைத் துணித்துவிடவேணுமென்று
பெரியசிலைவளைத்து பிசகாமல்நாணேற்றி
சொரியும்மழையெனவே தொடுத்தான்சயிந்தவனும்
பூமியதிர்ந்திடவே பூட்டினன்கோடிகணை
எமசரங்களிலே எண்ணூறாயிரம்தொடுத்தான்
இடிபோர்சிலதுகணை எழாயிரந்தொடுத்தான்
கொடியவிஷக்கணையிர்க் கோடானகோடியெய்தான்
வருணாஸ்திரந்தனையு மழைமாரிபோற்றொடுத்தான்

ஒருநாளிகைதனிலே வுலகமெலாந்தீப்பிடிக்க
நெருப்புக்கணைதனிலே ரெண்டுலட்சந்தான்தொடுத்தான்
குறிப்பான அஸ்திரங்கள் கோடானகோடிதொட்டான்
பிரவாய்க்கணைகோடி பிரளயம்போலேதொடுத்தான்
குறையாதசேனைதளங் கூட்டமுடனேகவிழ்ந்து
எய்தார்கொடுங்கணைகள் இவனொருவன்றன்மேலே
செய்தார்கள்யுத்தஞ் சிறுவன்கடோர்க்கசன்மேல்
கிரீட்டமர்புரிய வீமன்மகனன்னேரம்
எரிட்டவன்பார்த்து வெரியெனவேகன்கிவந்து
தண்டாயுதமெடுத்து சாடினான்வீமன்மகன்
அண்டமல்லின்றவர்க ளாயுதமெலாம்நொறுக்கி
தேரிழந்துவில்லிழந்து சிந்தைதகருந்தானுடைந்து
ஊரிழந்தபொற்துமரம் சுழன்டலைந்துவிழுந்தாற்போல்
கூவிவரும்படைகள் குதம்படங்கியேவிழுந்தார்
தாவியெதிராகவந்த சயிந்தவனுந்தேரிழந்து
பற்கடித்துவந்த பராக்கிரமந்தானிழந்து
விற்பிடித்தகையுமிக நடுங்கிமெய்சோர்ந்து
சபையோர்புகளுஞ் சயிந்தவனுமன்னேரம்
அபையமபையமென்று மவன்றிரும்பியோடலுற்றான்

விருத்தம்

தானுமெதிர்வந்த சயிந்தவனும்
நானேதென வோடினனுசயிறுற்
சேனுபதிசல்லி யனுந்திறமாய்
மேனாதமேவி நடந்தனனே

ஊனும்படிசேனைகள் போதரவாய்
காணும்படிவந்து கடோர்க்கஜன்முன்
தோனும்படி வெஞ்சிலைதோன்புரள
வூனும்படியோர்கணை விட்டனனே

அம்மானை

தாளாமலங்கே சயிந்தவனுந்தானோடி
கோளானதையறிந்து கூர்மையுள்ளசல்லியனும்



## சல்லியன் கடோர்க்கபனுடன் யுத்தஞ் செய்யுதல்

தென்புரத்தில்நின்றதொரு சேனைகளைத்தானடத்தி
என்புரத்தில்வந்தவனொ ரென்றுசொல்லிவாக்கிரமித்து
கனகமணித்தேரக் காவலனும்முன்னடத்தி
பனகமணிமகுடன் பாரவில்லுந்தான்வளைத்து
வந்துவளைந்துகொண்டு வாகானபாலகனை
முந்தியடியெடுத்து முன்னேக்கிவைக்காமல்
ஐயாயிரம்பகழி யவன்மேற்றொடுக்கலுற்றான்
கையாடவொட்டாமல் கணைமாரியாய்ப்பொழிந்தான்
தூண்டுமொருசேனைகளும சொற்பெரியமன்னர்களும்
தாண்டியெதிர்நடந்து சமர்பொருதாரம்மானை
கடுகிவருஞ்சல்லியனைக் கண்டுகடோர்க்கசனும்
முடுகியொருகதையால் மூட்டினன்கோபமுடன்
பஞ்சாய்ப்பரந்ததுகாண் பாரமுள்ளசேனையெல்லாம்
அஞ்சாமல்வந்தெதிர்த்த ஆண்மைமிகுசல்லியனும்
செங்கரத்திலேபிடித்த சிலைநாணதுமுரிந்து
தங்கள்ரதமும்முரிந்து தவிடுபொடியாகி
காலோடுகால்கள்பின்னிக் காதுஞ்செவிடுபட்டு
கோலூனுமந்தகன்போல் கோவென்றபயமென்று
இவனைச்ஜெயிப்பதற்கு யேலாதுயென்றுசொல்லி
புவனத்தரவுயர்த்தோன் பொல்லாங்குசொன்னாலும்
நமக்கேன்வீதியெனவே நாணித்தலைகவிழ்ந்து
தமக்குள்மனதுநொந்து சல்லியனுமோடலுற்றான்
மேல்திசையும்தென்திசையும் வேந்தர்படைசேனையெல்லாம்
காலனுடபட்டணத்தை தக்கைகொண்டாரம்மானை

விருத்தம்.

தளபதிசயிந்தவன் தவரியோடினன்
அளகுயர்சல்லிய னவனுமோடினன்
பிளையிதுயெனவரும் பெரியசேனைகள்
மளையினிற்கொசுகென மயங்கினார்களே

தென்திசைமேல்திசை சேனையானையும்
வென்றனன்விருதுசொல் வீமனார்மகன்

சென்றனன்துவாரகைத் தெருவுலாவினன்
அன்றவர்பவுனிவிட்டவனைநாடினர் ௫.

வேறு.

மேவுநகர்வீதிதனில வீமன்மகன்வந்தான்
தாவுவடகீழ்திசை தன்தந்தையுங்கொருக்கி
காவலெனுமோர்சகுனி கர்ணனைவிரட்டி
பூவுலகையாள்விசைய புத்திரனும்வந்தான் ௬.

துய்யசிறுபாலகர் துவாரகையில்வந்தார்
பையரவுயுத்திடு பதாகையுடையோனும்
உய்யும்வகையேதென வுயர்த்திடுதுரோண
னய்யனிருபாதமல ரருச்சினைபுரிந்தான் ௭

ஆதிதனிலேயருளு மய்யன்மொழிகேளாத்
தீதுவினைசெய்த துரியோதனனுரைப்பான்
ஏதுபிழைசெய்யினு மெனக்கதுபொறுத்து
வாதுபுரிவோர்களை வதைத்திடுதியென்றான் ௮.

அம்மானை.

சட்டமுடன்மேல்திசையில் சயிந்தவனுஞ்சல்லியனும்
திட்டமுள்ளதென்திசையில் சேனைதளமத்தனையும்
கதையாயுதத்தாலே கடோர்க்கசனுந்தான்விரட்டி
சுதையாய்த்துவாரகையிற் றோன்றினர்காணம்மானை
வடதிசையிற்கர்ணனையும் மற்றுமுள்ளசேனையையும்
நெடியதொருகீழ்திசையில் நீண்டசகுனியையும்
துலையர்தமன்னரையுந் துறத்திமிகவடித்து
இலையானதைவளைத்து சிலைராகவன்போல
பாரித்துவாரகையிற் பட்டணத்தின்வீதியிலே
சூரத்துடன்ராவான் றோன்றினன்காணம்மானை
தம்பிகடோர்க்கசனும் தமையனெனும்ராவானும்
இன்பமுடனேதா னிருவர்களுஞ்சேர்ந்துகொண்டு
பவுனிவரும்லெக்கணனார் பாதைவழிதான்பார்த்து
சிவனுந்திரிபுரத்தை செந்தழலாற்றீய்த்ததுபோல்
துள்ளிவிளையாடி சுருக்காய்வருகையிலே



கள்ளமனதன் கபடனரவக்கொடியோன்
பாலகிருவரையும் பதைபதைத்துத்தான்பார்த்து
காலனிவனெனவே கருத்திலமிகநினைந்து

## துரியோதனன் மனவருத்தத்தை துரோணரிடஞ்சொல்லுதல்

சொரணைதெரியாமற் றுரோணரிடமாயோடி
சரணஞ்சரணமென்று தான்பணிந்துயேதுசொல்வான்
ஏர்க்கையுடனெனக்கு மென்றம்பிநூற்றுவர்க்கும்
தீர்க்கடனும்தீர்க்கடனும் செய்துமுடிப்பதற்கு
பெத்தேன்தவமிருந்து பேரிட்டேன்லெக்கணனை
இத்தேசமெல்லாம் மிவனாளவேணுமென்று
மங்களமுஞ்செய்து மகுடமுடிதான்சூட்டி
இங்கிதமாய்வைப்பதற்கு மெண்ணினேன்சிந்தையிலே
மனதின்படியாக வாளலாமென்றிருந்தேன்
எனதுவிதிப்பயனோ யீஸ்பானுர்கற்பினையோ
பெண்ணைக்கொடுப்பனென்று பெருமாள்வரவழைத்து
மண்ணையள்ளிக்கொண்டுயென்தன் வாயிலடித்துவிட்டார்
உள்ளபரிச மொருமிக்கத்தாருமென்று
கொள்ளையடித்துவிட்டார் கோபாலரென்பொருளை
பணத்தைப்பணமெனவே பாருமலெக்கணர்க்கு
குணத்துடனேகலியாணங் கூடுமென்றுதானிருந்தேன்
ஆற்றில்கரைத்தபுளி யாச்சுதுகாணென்பவரும்
வார்த்தைதப்பகீர்த்தி வந்ததுகாணென்பவரும்
இலவுதனைக்காக்கும் மின்பகிளிபோலானேன்
வலையிலகப்பட்டதொரு மான்போலுமானேனே
வாரியெடுக்கவந்த மகிமையதுதான்போதும்
போரிலுயிர்பிழைத்துப் போகும்வகைசொல்லுமையா
எண்ணப்படாததொரு எகீரோணிசேனையெல்லாம்
கண்ணனுடபிரட்டால்க் கரைசேர்ந்துபோனார்கள்
தம்பியரும்நானும் தலைமகனும்லெக்கணனும்
வம்பிலுயிர்தனையே மாண்டிறந்துபோகாமல்
காத்தருளுமென்றுசொல்லிக் காவலனுமன்னோபம்

தோத்திரமுஞ்சொல்லித் தொழுதுரைத்தானம்மானை
பொல்லாதநெஞ்சன் பொருந்தியுரைத்ததெல்லாம்
சொல்லாற்பெரிய துரோணருமேதான்கேட்டு

## துரோணர் துரியனுக்கு புத்திகூறி தைரியஞ்சொல்லுதல்

பின்னால்வரும்பிழையை பிரபலமாய்தனுக்கு
சொன்னதெரிந்துகொண்டு சும்மாயிருகாமல்
குரளியுடபேச்சைநம்பி கொற்றவனேநீயுமிப்போ
வெருண்டுமுளித்தாக்கால் விடுவானோவுன்பாட்டன்
அணைகடந்துபோனவெள்ளம் அடைக்கவெவராலமுடியும்
துணைக்கிவந்தபேர்களெல்லாம் சொந்தடிமையாவாரோ
தாலிகட்டவேணுமென்று தான்வந்தானைக்காக
கூலிக்கிவந்தவர்கள் கூடநின்றுசாவாரோ
நரிகள்திருவணையை நன்றாயடைத்திடுமோ
அரியோனுடமனதை யாரறியவல்லவர்காண்
சனியன்பிடித்தலைத்தாற் றப்பயெவராலமுடியும்
இனிமேல்மதிமயக்க மேன்காணும்மன்னவனே
நானுமிருக்க நல்லசிறுவிஷ்டுமரும்
தானுமிருக்க தளபதிகள்தாமிருக்க
மயக்கமினிவேண்டாம் மன்னாவினிமேலே
தியக்கமதைவிட்டுவிடு சிறப்புடையலெக்கணர்க்கு
பொருத்தமிட்டசுந்தரியை பூவுலகோர்தானறிய
திருத்தமுடன்கல்யாணஞ் செய்துமுடித்திடலாம்
ஆனாலிவனுக் கயன்விதியுமுண்டானால்
தானேகலியாணந் தான்முடியுமன்னவனே
விசையன்மகனான வீரமிகுராவானும்
அசையாதகண்ட னவனோபலாட்டிகவான்
வீமன்மகனோ வில்லிற்பெரியவன்காண்
ஏமனிவனெனவே எல்லோருமஞ்சிடுவார்
பார்த்தன்மகன்வாள்பீமன் படைக்குளமன்காணும்
நேர்த்தியுடன்சண்டைசெய்தால் நீருமபயப்படுவீர்
சண்டைக்கவனுந் தான்வருகவுங்காணும்



ரெண்டுபேர்தங்களுக்கே ரெம்பவுமேஓடிவிட்டார்
மூவருமாய்வந்தால் முடியுமாசண்டைசெய்ய
கேவலமாயெண்ணினதால் கேடுமக்குவந்ததுகாண்
வந்ததெல்லாங்கண்டறிவோம் மன்னாமயங்காதே
இந்தவிதமாசாரி யெடுத்துரைத்துமப்போது

## இராவான் கடோற்கயனுடன் துரோணர் யுத்தஞ்செய்யுதல்

படையையணிவகுத்துப் பாலர்களைத்தானோக்கி
தடையறவேநேரைத் தானடத்தியப்போது
இராவான்கடோர்க்கயனுமே சீராய்பிரங்கணையை
சூறாவளிபோலே தூக்கியவன்மேலெறிந்தான்
ஏமாஸ்திரத்தை யெடுத்துமிகப்பூசைசெய்து
சாமானியமாகத் தானெடுத்தேவிவிட்டார்
அண்டங்குலுங்க அதிர்ச்சிமிகவுண்டாகி
சண்டனெனும்ராவானைத் தான்தேடிவந்ததுவே
வந்ததொருஅஸ்திரத்தை மாபெலவான்ராவானும்
தந்தைதருவிட்டதைப் தடுக்கலாகாதெனவே
என்றுமனதி லெண்ணியிருந்துவிட்டான்
சென்றுவந்தஅஸ்திரமுந் தீபாக்கினியுடனே
விசையன்மகன்வைத்திருந்த மிக்கதொருதெண்டதனை
திசைகளெட்டுந்தாமறிய சீராய்முறித்ததுவே
அப்போதுராவா னதிகோபமாயெழுந்து
செப்பரியஅஸ்திரத்தை செங்கரத்திலெடுத்து
பூசைபுரிந்து புகலொணாமந்திரத்தை
ஆசையுடன்ஜெபித்தங் கார்ப்பரித்துவிட்டனனே
விட்டதொருஅஸ்திரமும் வேகமுடன்விற்குருவின்
மட்டவிரும்பாத மலர்தொளுதுசென்றதுவே
அன்னதைக்கண்ணார்க்கண் டரியகடோர்க்கயனும்
என்னவதிசெயமென் றேங்கிமிகச்சினந்து
நாகக்கணையெடுத்து நற்குருவைச்சின்னபின்ன
மாகக்கலக்கி யகவந்தேரைத்தகர்த்தான்

## இராவானுடன் வீஷ்டுமர் யுத்தஞ்செய்யுதல்

அந்தச்சமையத்தை யறிந்தவீஷ்டுமரும்
இந்தக்கொந்துராவான்முன் தேரைச்செலுத்திநின்று
அறியாச்சிறுபிள்ளை யானதிறலெங்களுடன்
குறியாதுபோரிற் குருகிரோஞ்சாமல்
வேண்டாநின்னூர்க்கு விரும்பியேசென்றுவிடுற்
நாண்டாபிழைப்பீர் அதாதுசெய்தாயினமுங்கேள்
பாரிலொருகருமம் பண்ணினுமவர்க்கு
சேரும்பொருளையன்றிச் சேருமோசேர்ந்து
ஆகையால்நீங்க ளீயாதிவடம்விட்டு
வேகமாய்வந்தவளி விட்டுவொய்தேரையென்றான்
அம்மொழியைக்கேட்டவுடன் ஆக்கிரமித்துப்பாட்டாநீ
செம்மொழியாய்செய்யவந்த தென்னவிதுபோரல்வோ
வாயதியாய்மன்னர் வலியதியாய்வன்செருவிற்
போயதியாயுன்சொல் புதுமையேயுன்தேரை
திருப்பிநீர்செல்லுமெனச் சீறியேகங்கைமகன்
நெருப்புப்பொறிசிதற நின்விழியைத்தானுருட்டி
வில்லெடுத்தாரணின் விசையிழுத்தங்கம்புகளை
பல்லாயிரந்தொடுத்து பண்பாய்விடுத்தனனே
விட்டவந்தபாணம் விசைவாய்க்கடோர்க்கஜன்மேற்
பட்டுமயங்கிபரதவித்து பின்னெழுந்தே
ஏதடாசும்மா விருந்தால்மதிமோசம்
வாதுசெய்துதானிவரை வணக்கவென்றுலகணையை
தொடுத்துவிடுத்தான் ஐயமொருதோள்தனிலே
விடுத்தவொருபாணம் விசையாகப்பட்டிடவே
கங்கைமகனும்மயங்கி காலமெனவேதான்
அங்கவன்தன்தேர்தனிலே யப்போதுசாய்ந்திடவே

## இராவான் கடோர்க்கயனுடன் விதுரனன் யுத்தஞ்செய்தல்

கண்டுவிதுரன் கடுங்கோபமுண்டாகி
வண்டுபண்ணியே தொலைப்பேனெனப்புகன்று
சென்றக்கினிக்கணையைச் சீக்கிரமதாயெடுத்து



ஒன்றுபத்துநூறா யோராயிரந்தொடுத்தான்
சென்றந்தப்பாணஞ் சிரங்கரந்தோளிற்படவே
கன்றிக்கடோர்க்யனும் காலாஸ்திரமெடுத்து
வில்லிற்றொடுத்து விடுத்தானதுவெகுண்டே
அல்லிற்கரியதொரு அந்தகனைப்போற்சீறி
வந்ததைக்கண்டச்சமுற்று மாவிதுரனோர்கணையாற்
சிந்தவறுத்துத் திகைத்துநின்றங்கோர்கணையை
மெல்லவெடுத்து விடுத்தான்கடோர்க்கயன்மேல்
வல்லதொருகணையால் வாட்டிவிட்டானம்மானை
அப்பால்விதுர னதிசயித்து மெய்சோர்ந்து
செப்பரியதேரைத் திருப்பிவந்தாரப்போது

## துரியோதனனுக்கு அவன் தம்பிமார்கள் தைரிஞ்சொல்லுதல்

சூதுசெய்யுமன்னனுக்குத் துணைவரெனும்நூற்றுவர்கள்
ஆதரவாய்வந்து அரவக்கொடியோன்றனையும்
தொழுதுநமஸ்கரித்துச் சொல்லுவார்தம்பியர்கள்
பழுதுசெய்யவந்தசிறு பாலர்களைநாங்களுந்தான்
அரைநாழிகைதனிலே அவர்களுயிர்தான்மாய்த்து
குறைதீர்க்குவோமெனவே கூறினான்மன்னனிடம்
தனக்குத்துணைவரெனுந் தம்பியர்கள்சொற்கேட்டு
எனக்குப்பயமினிமே லெவ்வளவுமில்லையென்றான்
ஆறுவினிமே லைதியுமென்றுதானவர்கள்
சேனைபதியெனவே திரண்டுவெகுசேனையுடன்
அவர்கள்ரதமேறி ஆயுதமும்பூண்டுகொண்டு
எவர்களினிநமக்கு யெதிராளுமில்லையென்று

## இராவான் கடோர்க்கயனிருவர்கள்மேல் திரியோதனன் தம்பிமார்களும் யுத்தம்செய்குதல்

ஓடிவந்தசேனைகளை ஒருதிரளாய்த்தான்சேர்த்து
கூடவந்தபாலர்தன்மேல்க் கொக்கரித்துச்சண்டைசெய்தார்
விருதுபலபேசி வில்வளைத்துச்சண்டைசெய்தார்

பொருதிவரும்நூற்றுவர்மேற் பூசைசெய்யவேணுமென்று
தோராதராவான் துடிசேர்கடோர்க்கசனும்
நேராகவந்துநின்று நிமிஷமதில்வில்வளைத்து
முப்புரத்தையீசன் முன்னெரித்ததுபோற்
செப்பரியவக்கினியின் திவ்வியாஸ்திரமெடுத்து
தனுவெடுத்துமந்திரத்தைத் தானேயுருச்செபித்து
அனல்போற்றொடுத்துவிட்டா னுக்கிரமித்துராவானும்
வீமனன்றுபெற்றெடுத்த வீரன்கடோர்க்கஜனும்
எமதண்டந்தனை யெடுத்தோசுழற்றிவிட்டான்
அப்போதிவர்கள்விடும் ஆயுதங்கள் தன்னாலே
தப்பாதுலகமெலாந் தானேயசைந்திடவே
தாங்கமுடியாமற் றலைமாறினன்சேடன்
ஓங்கும்பெருவழியி னுருக்கினமெலாமுதிர
ஆதித்தன்சந்திரனும் அஷ்டதிக்குப்பாலர்களும்
பேதித்தவர்கள்நிலை போந்துதடுமாறிவிட
சத்தமுகில்களெல்லாஞ் சருகாயுலர்ந்துவிட
அஸ்தகிரிமேருகிரி அட்டகிரிதானடுங்க
இந்திரனும்பொன்னகர் விட்டேயோப்பயந்தோட
அந்தகனூர்சற்றே அருண்டுபயந்தோடிவர
ஆழிகொதிகிளம்பி அனல்பாய்ந்துநீருக
ஏழுலகும்வானுலகு மெங்குங்கிடுகிடென
கங்குல்பகல்தோணுத கதிர்மாதவுந்தோனும்
தங்கள்தவசைவிட்டுத் தானேமுனிந்துநிற்க
ஒன்றுபத்துநூறு யோறுயிரங்கோடி
அன்றுபிரளயமா யாயுதங்கள்தானெழும்பி
தீயாயெரித்ததுகாண் திரியோதனன்றனத்தை
பேயாகநூற்றுவர்கள் பிரஞ்சாய்ந்தாரம்மானை

விருத்தம்.

மாற்றலர்களாகிய வனுத்தசிலையாளர்
நூற்றுவர்களோடினர் நொருங்கினர்கள்சேனை
ஆற்றமுடியாதிவ ரவர்த்திரமையம்மா
சாற்றிடுகளப்பெலிமை சாற்றவசமாமோ



அம்மானை.

பார்த்தன்பயின்றெடுத்த பாலகனும்ராவானும்
நாற்றிசையுங்கீர்த்திகொண்ட நல்லகடோர்க்கசனும்
விட்டதொருபாணமதால் மெலிந்துதுரியனுடன்
தட்டழிந்துவோடிவிட்டார் தம்பியர்கள்நூற்றுவரும்
சேனுபதிகள்முதல் சேரவேயோடியபின்
தானுபதிசகுனி தான்விளைத்தவல்வினையால்
சாகும்விதிசூழ்ந்துகொண்டு சதுரங்கசேனையெல்லாம்
வேகமுடன்சிறுவர் விட்டகணைதன்னாலே
கரிகளொருகோடி கண்டதுண்டமாய்விழுக
பரிகளொருகோடி பதைபதைத்துத்தானுருள
தேர்களொருகோடி சிதறிப்பரந்தோட
பார்க்கவந்தபேர்களெல்லாம் பல்லுடைந்துநிற்பாரும்
கால்களறுபட்டுக் களத்திற்கிடப்பாரும்
மேல்களறுபட்டு விதனமுற்றுச்சாவாரும்
அய்யோஅபயமென்று அலறிவிழுவாரும்
கையானதுமுறிந்து கவிழ்ந்துகிடப்பாரும்
மூக்கிலொருஅம்புபட்டு முனங்கியழுவாரும்
நாக்குரெண்டுதுண்டாக நடுங்கிவிழுவாரும்
கண்ணிழந்து காதிழந்து கதறிவிழுவாரும்
மண்ணும்விண்ணையும்பார்த்து வாய்குளறிநிற்பாரும்
சென்னியறுபட்டுச் சிதறிவிழுவாரும்
கன்னமறுபட்டுக் கதறிவிழுவாரும்
தோள்களறுபட்டு துடித்துவிழுவாரும்
கால்களறுபட்டு கதறிவிழுவாரும்
நெஞ்சொடிந்துவீழ்ந்து நெடுமூச்செறிவாரும்
பஞ்சுபஞ்சாய்த்தேகம் பதறிவிழுவாரும்
கண்டமறுபட்டுக் கதறிவிழுவாரும்
மண்டையுடைந்துசிதறி வாயுளறிவீழ்வாரும்
சரலறுபட்டு பிறந்துகிடப்பாரும்
ஊருங்குடல்சரிந்து உருண்டுவிழுவாரும்
அம்புபட்டவேதனையி லாத்தாமல்மெய்சோர்ந்து
தம்பியெங்கேயென்று தயங்கித்திரிவாரும்

புண்ணுனகாயம் பொருக்கமுடியாமல்
அண்ணனெங்கேயென்று அலறித்திரிவாரும்
கொள்ளிக்குறிய குழந்தைதனைக்காணுமல்
பிள்ளைதனைத்தேடிப் பிரமைகொண்டிருப்பாரும்
மங்கையர்மேலாசைவைத்து மயங்கிவிழுவாரும்
தங்களுடதாயாரை தானினைந்துவிழ்வாரும்
தேடுந்திரவியத்திற் சிந்தைகொண்டுவிழ்வாரும்
வீடுநமக்கில்லையென்று விழுந்துமடிவாரும்
பெண்டிரும்நானும் பிரியமுடன்தூங்கையிலே
கண்டேன்கனுவெனவே கதறிவிழுவாரும்
வாகாய்ப்படையெடுத்து வருதுமந்தப்பாதையிலே
ஆகாச்சகுனமெனக் காச்சுதென்றுவிழ்வாரும்
அகிலமதையாளு மரவுயர்த்தோன்சேனையெல்லாம்
சகுனிசகுனியென்று தான்புலம்பிவிழ்வாரும்
சட்டியிலக்கனர்க்குச் சோபனமுஞ்செய்யயிலே
அட்டமத்திலேசனிய ஞச்சுதென்றுவிழ்வாரும்
தோசியிலக்கனர்க்கு சோபனமுஞ்செய்யயிலே
ராசியில்லையென்றுசொல்லி நடுங்கிவிழுவாரும்
அடுத்துக்குடிகெடுக்கு மாதிநாமுயணரும்
தொடுத்தவினையெனவே சொல்லிவிழுவாரும்
பெரியோருரைத்தமொழி பேணியதுகேளாமல்
திரியோதனுடைய தீங்கென்றுவிழ்வாரும்
பாலன்கடோர்க்கயனும் பாரமுள்ளராவானும்
காலன்நமக்கெனவே கதரிவிழுவாரும்
கௌரவர்களெல்லோரும் காடுரைந்துபோவார்கள்
இவர்கள்முடிபெருவா ரென்றுசொல்லிவீல்வாரும்
இந்தவிதமாக யெக்குரோணிசேனைதளம்
அந்தரணக்களத்தி லவர்களுயிர்தானிழந்து
மலைபோற்பெருஞ்சேனை மடிந்துபிணக்காடாய்
அலைபோல்க்குதித்து வெள்ளமாரதுபோற்றுேடை
உதிரப்புனல்பெருகி யோடுஞ்சமுத்திரத்தில்
விதமுடையதேர்கள் மிதந்துகவிழ்ந்திடவும்
பாம்பதுபோலானைப் பருங்கைகள்தான்மிதக்க



மீன்போலஅஸ்திரங்கள் மிதந்துஅதிலேவோடிவர
கூறுமொருதாமரையின் கொடிபோற்குடல்மிதக்க
ஆறுதனில்மண்டைகளு மாமையதுபோல்மிதக்க
இரத்தநதிபெருகி யோராளமாயோட
குரத்தலைபேய்களெல்லாங் கூத்தாடிக்கொண்டிருக்க
பூதப்பிசாசுகளும் புகழ்ந்துநின்றுகூத்தாட
காதவழியிருந்து கருநாய்களோடிவர
வாச்சுதென்றுதான்கழுகு வட்டமிட்டுத்தான்பரக்க
காச்சியில்லையென்றுநரி தான்கூடியூளையிட
ஆனைப்பிணங்கள்தின்று ஆடுஞ்சிலபேய்கள்
ஊனைக்குடிப்பேமினென்று வோடுஞ்சிலபேய்கள்
எனக்குத்தலையெனவே யெடுக்குஞ்சிலபேய்கள்
உனக்குக்குடலெனவே உரைக்குஞ்சிலபேய்கள்
கால்கள்தனையெடுத்து களிக்குஞ்சிலபேய்கள்
தோல்கள்தனையெடுத்துச் சுவைக்குஞ்சிலபேய்கள்
குருதிப்புனல்தனிலே குளிக்குஞ்சிலபேய்கள்
கருதிமணமருந்திக் களிக்குஞ்சிலபேய்கள்
நல்லவிருந்தாக நமக்களித்தாரென்றுசொல்லி
வல்லமையாய்ப்பாலர்களை வாழ்த்துஞ்சிலபேய்கள்
நன்றாய்பெருங்குருதி நல்லதசையுள்ளதெல்லாம்
தின்றேப்பமிட்டுச் சிரிக்குஞ்சிலபேய்கள்
போர்க்களத்திலேபிணங்கள் பொருப்பென்றெனக்குவிய
தீர்க்கமுள்ளயானைபரி செத்துக்கிடப்பதுவும்
ஊழிப்பிரளயத்தி லுகாந்தமுடிந்ததுபோல்
ஆழியதுபொங்கியுமே வசிலமழிந்தாப்போற்
கரியோனுடமருகன் கடோர்க்கயனும்ராவானும்
திரியோதனன்படையைச் சேர்த்தேவிரட்டிவர

விருத்தம்.

நீதுமணத்துடையானரவக் கொடியோன்தளமத்தனையும்
மோதியபற்றெருநாளினையிற் சிறுபாலகர்மிகுத்துவர
வேதனையுற்றவர்போல்மனம் வெட்கிமுன்வேதனைமின்றநாளும்
மாதவன்முற்றயிலொளியிகிற் குடிவாழுமதித்தனனே

## கிருஷ்ணன் பாற்கடலில் பள்ளிகொள்ளுதல்

திருமாலிதுவரிந்து திரியோதன்றனும்
வருவானெனவே மதித்துமனந்தனிலே
நாமிங்கேதாமிருந்தால் நல்லதொருநாவானும்
தாமிங்கேவந்து தான்விரட்டுவானெனவே
என்றுநினைந்து இயல்பாகவேயெழுந்து
அன்றுதம்பிமார்க ளனைவருக்குஞ்சொல்லிவிட்டு
பாரளந்தமாயன் பரசுராமன்றனக்கும்
சிருடையலெட்சுமிக்குஞ் சேதிதனைசொல்லிவிட்டு
துவராபுரிகடந்து சூழும்வனங்கள்தனை
தவராதுதான்கடந்து சயனிக்கபார்க்கடலில்
காலாலுலகளந்த காயாம்புமேனியனுர்
பாலானபாற்கடலிற் பள்ளிகொண்டாரம்மானை

## துரியோதனன் முதலானவர்களும் சேனைசயினியங்களெல்லாமிழந்து சித்திரமணிச்சாவடியில் வந்து ஒளியுதல்.

### விருத்தம்

மாதவனுங்கடலாழியிலேபுக வான்திரியோதனர்கள்
கால்கள்பிணைந்தவரோடினர்சோபன காரியவேதனையாய்
சோலைமடங்களிலேயிவர்கூடிய சோரர்கள்போலொழிய
பாலனெனும்ஜெயபீமனெதிர்த்திட பாதையில்வந்தனரே

### அம்மானை.

சாற்றுமிருபாலருடன் சமர்புரியமாட்டாமல்
நூற்றுவர்களோடி நுழைந்தார்மடந்தனிலே
ஆடெடுத்தகள்ளரைப்போ லரவக்கொடியோனும்
சடுகமக்கில்லையென்ற இயல்சகுனிகர்னனுடன்
மையல்வெறிபிடித்த மாப்பிளையாம்லெக்கணனும்
நொய்யமனவேதனையால் நோருஞ்சயிந்தவனும்
என்னசெய்வோமென்று யிவர்களோருசேகரமாய்
கன்னமிடுஞ்சோரரைப்போற் கைகால்தடுமாறி
கொம்பிளந்தமந்தியைப்போற் கூடியொருமுகமாய்



வெம்பிமனதுநொந்து வெத்திசொன்னவாயிழந்து
சித்ரமணிச்சாவடிக்குள் திரளாகவேநுழைந்து
உந்தொருவர்காணும லொழித்தார்களம்மானை

## போர்க்கஞ்சியோடின திரியோதனாதிகளை இராவான் கடோர்க்கயன் தேடித்திரியுதல்

இவர்களிங்கேதானொளிய யிராவான்கடோர்க்கயனும்
தவரியிருந்தவரைத் தாருமாராயடித்து
துரத்திவிட்டுபின்பு துவாரகைக்குள்ளே நுழைந்து
திரமானநூற்றுவரைத் தேடியங்குதான் திரிந்தார்
இந்தவகைதுரோண ரியல்பாகவேயறிந்து
சிந்தைமயங்கித் திருமாலேதஞ்சமென்று
ஓடிவொளியவென்று வுடனேவிதுரனையும்
தேடிப்பிடித்து சிறுவிஷ்டுமருடனே
மூவருமாய்சேர்ந்து முன்புஅஸ்தினாபுரிக்கு
போவமெனவே புந்திதனிலேநினைந்து
சிங்காரதோப்புவழி சேர்ந்துவந்தாரம்மானை

## வாள்வீமன் அண்ணர்களைத் தேடிவருகுதல்

மலர்மடந்தைவீட்டினிலே வந்திருக்கும்வாள்பீமன்
கலகமிருந்தவகை காரியமெலாங்கேட்டு
மனதுபதறி மலர்மடந்தைவீட்டைவிட்டு
தனதுடைய அண்ணர்களைத் தான்தேடியப்போது
என்னுதுமெண்ணி யேங்கிமுகம்வாடி
தன்னுளமுழுது தவித்துமேவாள்பீமன்
போர்முகத்திற்சென்ற புண்ணியராமண்ணருக்கு
தேர்பரியுமில்லை சேர்ந்தோர்துணையுமில்லை
தமையனார்தங்களுக்குத் தானுதவிசெய்யவென்று
சமர்புரியும்பாளையத்தை தான்போயறியவென்று
வந்தான்வெகுவிரைவாய் மணிச்சாவடிவழியாய்
அந்தமடந்தனிலே அழகுமிகுசாவடிக்குள்
ஆந்தைமுழிப்பதுபோ லரவக்கொடியோனும்

சேர்ந்த தளபதிகள் திரமான நூற்றுவரும்
வெக்கித் தலைகவிழ்ந்து மெள்ளமெள்ளத் தானவர்கள்
பக்கமறியாமற் பதுங்கியிருப்பதுவை

## வாள்வீமன் துரியோதனாதியர்களை சித்திரமணிச் சாவடிக்குள் அடைத்துவைக்குதல்

விருத்தம்

இட்டுண்டுடுபுகழ்மேவிய யிடைமாதர்கள்மனையில்
தொட்டுண்டுதிருமாலவர், தொழில்சோதனைய தனால்
தட்டுண்டுதுரியோதனன் றம்பியுடனடைதான்
பட்டுண்டனரபிமன்கையில் பாராயிதுமெய்யே

அம்மானை

கண்டுமிகவாள்பீமன் கனகோபமுண்டாகி
திண்டுமுண்டாய்வைது சித்திரமணிச்சாவடியில்
உள்ளேயிருந்தபடி யடைத்தவைத்தான்மூடி
சன்னலொழிந்ததென்று தாப்பாளுந்தான்போட்டு
பூட்டிவிட்டுத்தானும் போனான்விசையன்மகன்
தாட்டிகமாயுள்ளிருந்த தளபதிகளெல்லோரும்
கோணிமனதுகொதிப் புமிகவுண்டாகி
நாணித்தலைகவிழ்ந்து நாமென்னசெய்வமென்று
நிலைபிரிந்துபோனவகை நிந்தனையாமென்றுசொல்லி
தலையின்விதியெனவே தானிருந்தார் நூற்றுவர்கள்

## துரோணாச்சாரி முதலானோர்கள் துரியோதனனைத் தேடிவருகையில் அபிமனன் கண்டுகொள்ளுதல்

ஆசாரியாந்துரோணர் ஈசுவத்தாமாவுடனே
தேசாதிபன்றனையுந் தேடியேகாணவென்று
சாத்துமின்றசித்திரமணிச் சாவடியைத் தானோக்கி
பார்த்துவருகையிலே பாலனுைம்வாள்வீமன்
கண்டுதுரோணருட கமலபதமேதுணையாய்
தெண்டனிட்டுபோற்றிச் செப்புவானம்மானை



விருத்தம்

தனுவித்தைதயிலருளாகிய தாளேகுருசரணம்
தாள்வாகியவடியார்களை யாள்வாய்குருசரணம்
வினைபெற்றிடுசிறியேனொரு பொருளோகுருசரணம்
மேலாகியகிருபாநிதி வாள்வேகுருசரணம்
நினைவிற்றுயில்மரவேனுனை நெடுநாளடியேனும்
நேருகியசீவனிவனென்றே யருள்புரிவாய்
தினையத்தனையரமாகினு மரியார்கவுரவரைத்
தீதாகியகாபந்தனஞ் செய்தேனுனதருளே

அம்மானை

கொடியவினைமாத்தாங் குருவேசரணமய்யா
அடியார்க்கெளியதொரு ஆதிசரணமையா
கொள்ளாதகுற்றங் குழந்தையர்கள்செய்தாலும்
தள்ளாமற்காக்கவந்த சாமிசரணமையா
படைப்பெருக்கமில்லாத பஞ்சவர்களென்றறிந்து
அடைக்கலத்தைதக்காக்கவந்த அரனேசரணமையா
ஏனைமதிஐவர்களை இரக்ஷிக்கவேணுமென்று
கோனையகற்றிவைக்குங் குருவேசரணமையா
மதித்துனதுபர்தம் வணங்குஞ்சிறியோர்கள்
எதுத்துச்சமர்புரிந்தா ரென்றுமனதெண்ணமற்
காத்தருளவேணுமுந்தன் கால்பிடிக்குஞ்சிஷர்களை
பாத்துமனதிரங்கிப் பச்சம்வைக்கவேணுமையா
சமரின்முகமறியாச் சண்டாளர் நூற்றுவர்கள்
மமதைபெரிதேனவே வளக்களிவுசெய்தார்கள்
மாயன்மகளாரே என்மாமன்மகளாயிருக்க
ஞாயமதுகவிள்த்து நடுக்கேடுசெய்தார்கள்
சலுகைவளக்கிந்து தானுரையாரென்பதுபோல்
வலியயிந்தச்சாவடியில் வந்திருந்தார் நூற்றுவர்கள்
உள்ளேயவர்களையும் ஒருமிக்கவேயிருத்தி
தள்ளிக்கதவடைத்து தாப்பாளும்போட்டுவைத்தேன்
இனிமேல்நடக்கும்வகை யெளியேனுக்கேயுரைத்தால்
கனிவாயுமதுடைய கட்டளையைத்தள்ளாமல

குறித்தூடக்குகிறேன் குருவேசரணமென்று
தெரிந்து அபிமனுமே செபபிறனம்மானை
அன்பாய்வணங்கி யபிமனுரைத்ததெல்லாம்
தென்பாய்த்துரோணர் சிந்தைமகிழ்ந்தேகேட்டு

## அடைடாட்டிருக்குந் துரியோதனுதிகளை துரோணர்பார்த்து சொல்லுதல்

சன்னல்வழிபார்த்துத் தானுமதிமயங்கி
மன்னவர்கள் நூற்றுவரும் மயங்கிபேசிற்பதாவும்
கண்டுமனதுநொந்து கர்னன்சகுனியெனும்
குண்டனிகளைப்பார்த்துக் கூருவாராசாரி
பண்டுநான்சொன்னசொல்லை பழுதுரைத்துவேந்தனையும்
கொண்டுவந்துயிந்தக் கோலமதுசெய்துவைத்தீர்
நற்புத்திகேளாத நாகக்கொடியோனும்
துற்புத்திகேட்டுமல்லோ துன்பத்திற்குள்ளானான்
பாவிகளேநீங்களந்தப் பாலருடனேபொருதிச்
சேவகமுஞ்செய்தீரோ திராணியடைத்தீரோ
காரியமும்பார்த்தீரோ கலியாணஞ்செய்தீரோ
பாரிலுனைவல்லவனைப் பார்த்திபனுமேபகர்ந்தான்
ஆறுலுங்கூடாதே அரவான்கடோர்க்கசனை
சீறுச்செயிக்கச் சிவனுலுங்கூடாதே
பஞ்சையெனவுரைத்த பாவிகளேயிப்போது
வெஞ்சமரிலோடிவந்தால் விடுவானோவாள்விமன்
கட்டடத்திலேயடைத்து கைவாள்தனைத்திட்டி
வெட்டிடவுஞ்செய்வான் விவேகமில்லாமன்னவரே
என்றுயிவருரைக்க யிதுதானிசமெனவே
ஒன்றுமுரையாம லூமைபோலேயிருந்தார்
அந்தக்கருவாயி லாசாரிவீஷ்மருடம்
இந்தச்சிறுவனுட னெவர்வந்தெதிர்த்தாலும்
வெல்வதரிதாகும் வேந்தர்களைக்கைவாளால்
கொல்லுவானென்றுங் குறித்தேயிருவர்களும்
மதிபோல்முகமிலங்கும் வாள்வீமனைநோக்கி
துதிசேர்புகழுடைய துரோணருமங்கேதுரைப்பார்



## துரோணரபிமனுக்குப் புத்திகூறி திரியோதனுதிகளைத் திறந்துவிடும்படி சொல்லுதல்

திரியோதனன்முதலோர் சேனைபதிதனையும்
பெரியதகப்பனென்று பிரிதிகளைச்செய்யாமல்
ஓடிவந்தபேர்களுக்கு வுபசாரஞ்செய்யாமல்
தேடிபுனைவந்தவர்க்கு தீங்குகளைச்செய்வர்களோ
செப்பரியசாவடியில் சேர்த்தேதப்படைத்துவைக்க
இப்படியும்புத்தியுமக் கேதுகாண்தம்பியரே
சட்டமுடன்நூற்றுவர்கள் தங்களையுமிப்போது
திட்டமுடனேகதவைத் திறந்துவிடுமென்றுரைத்தார்
சொன்னதுரோணருமே சொற்கேட்டபிமனுந்தான்
அன்னுளிலோடி யபிமனுமேநல்லதென்று
வணங்காமுடியனையும் மகிமையுள்ளகர்னனையும்
இணங்காச்சகுனியையும் இலக்கணகுமாரனையும்
அரவக்கொடியுடையோ னவன்தம்பிமார்களையும்
விரைவில்க்கதவை வேகமுடனேதிறந்து
வலுப்பிலனுமற்றவராய் மாறுகிராயுதராய்
உப்பையெடுக்கவந்த வூளியத்துஆள்களைப்போல்
விட்டைக்குள்ளேயிருந்த வில்வேந்தர்நூற்றுவரை
கூட்டிவந்துவிட்டான் குருவானவரிடத்தில்
வண்டனெனுங்கபட மனதுடையமன்னனையும்
கண்டுமனதுநொந்து கருமவிதியோவெனவே
சிரிட்டுயர்புகழான் திரியோதனன்முகத்தை
எரிட்டுப்பார்க்கமன தெள்ளளவுமில்லாமல்
தேருதலாய்த்துரோணர் திரியோதனன்றனையும்
வாருமிருமென்றுசொல்லி மகிழ்ந்தனர்காணம்மானை

### விருத்தம்.

வாரும்வாருமென்றுரைத்தனர் துரோணருமனதாய்க்
கூருவாரதுகேள்செவியுணர்ந் திடுங்கொடியோன்
தாரிலோர்தரமரிந்து தன்னிரமலந்தணிந்து
ஆரும்நீரெனஉளமும் வெந்திருந்தனரசந்தே

விருத்தம்.

திடங்கொள்மந்திரத்தியான் முன்னிலைபினில்மனது
ஒடுங்குவாரெனவிருந் திடும்மகிபனையுவந்து
அடங்கவேவினைபாவைபு மகற்றுதற்கரிவாய்
துடங்குமோர்நலமானவை துரோணர்நன்கொகுப்பார்

## துரியோதனனிடத்தில் துரோனர் வாள்பீமனுக்கு கலியாணஞ்செய்து வைக்கும்படி சொல்லுதல்

அம்மானை

சொந்தமனதுடைந்து தூற்றுவர்களெல்லோரும்
வந்திருந்தார்களங்கே வணங்காமுடியோனும்
வாருமென்றுசொல்லி மகிழ்வுடனேயாசாரி
சேரும்படியவர்க்குச் செய்தியெல்லாந்தானுரைத்து
அரியாச்சிறுகுழந்தை யபிமன்றன்செய்ததெல்லாம்
திரியோதனமபோ சிந்தைதவைக்கவேண்டாங்காண்
மன்னவரேனும்பஞ்சவர்கள் வனவாசம்போனதினால்
தன்னுடையபிள்ளையெனத் தானினைந்துவிட்டபோது
குழந்தையபிமனுக்குக் கூரியசேர்சுந்தரியை
வளர்த்தமகிழ்வெனவே மணமாலைதான்சூட்டி
உறவுதவராம லுலகமெல்லாங்கொண்டாட
மாவுபெரிதெனவே வாழ்ந்திருக்கவும்முடைய
சித்தமகிழ்ந்துமிகச் செய்வீர்கலியாணம்
உத்தகுலங்களிலே வுன்மகனும்லெக்கணர்க்கு
செல்லக்கலியாணமது செய்திடலாம்பின்னாலே
சொல்லும்வசனமெல்லாம் சொன்னார்துரோணருமே
மறையோனுரைத்தமொழி வணங்காமுடியோனும்
கரையாமிலேசுரைந்து காதுதனிலேகேட்டு
காமென்றுபேசுதற்கு கவிவழும்பமாட்டாமல்
ஆமென்றுசொல்லி யவனுரைப்பானம்மானை

விருத்தம்

முன்னவொருகாரிய முந்தவதறக்
கென்னலவந்தினி யெய்தினதா
அன்னவபிமற்க கரியோன்மகளைச்
சொன்னனிசமென் றதுசோபனமே



ஷை விருத்தம்.

அரியோனபிமற் கதுசோபனமும்
குரியோமெனவுங்குளிரப் பெருமாள்
கிரிவாக்கியசொல்லினவும் படியே
தெரியாவகைசெய்து தெளிந்தனமே

## ஆதியில்கிருஷ்ணன் சொன்னசேதிகளை துரியோதனன் துரோணரிடம் சொல்லுதல்

அம்மானை

செய்யகுருவிடத்தில் துரியோதனனுரைப்பான்
ஐயனேகேட்டருளும் ஆயனுடமாய்கைதனை
நந்தன்மகனார்க்கும் நல்விஜயன்புத்திரர்க்கும்
அந்தநாட்சொன்னபடி யாகுமென்றுதானிருந்தேன்
ஊரைக்குடிகெடுக்க வுடலெடுத்தமாயவனும்
மாறுபஞ்சொல்லிவிட்ட வகையதனைக்கேட்டருளும்
வனம்போனபஞ்சவர்கள் மாண்டுவிட்டாரென்றுசொல்லி
அனல்போல்சுபத்திரையா ளபிமனையுந்தான்கூட்டி
வேறேநினைவுகொண்டு விதற்பகோன்றன்னிடத்தில்
பேருயபிமனையும் பிடித்தவன்றன்கைக்கொடுத்து
என்மகனையுண்டுபண்ணி யிவ்வுலகெலாமறிய
உன்மகளைமாலையிட்டு உருப்படுத்துமென்றுசொல்லி
தேனுள்சுபத்திரையுஞ் சேர்ந்தாளவடமென்றும்
தானுமவர்களுடன் சம்மந்தமில்லையென்றும்
மண்ணுக்குரியஐவர் மாண்டிறந்துபோனதினால்
பெண்ணுக்குமாப்பிளை யுன்பிள்ளைசுகியமென்றும்
அன்னியத்தில்ச்சுந்தரியை யான்கொடுப்பதில்லையென்றும்
தன்மையாய்லெக்கணர்க்குத் தானேகொடுப்பனென்றும்
இந்தவசனமெலா மெழுதியேமாயவனும்
அந்தரங்கமாகவெனக் காளனுப்பிவைத்ததினால்
தம்பியபிமனுக்குச் சம்மதியில்லாதபெண்ணை
இன்பமுள்ளலெக்கணர்க்கு யிசைந்துதிருக்கல்யாணம்
கூட்டிமுடித்ததினால் குற்றமில்லையென்றுசொல்லி
காட்டிவிந்தயோசனையை நாமுடித்ததல்லாது

## துரியோதனன் துரோணரிடம் அபீமனனுக்கு கல்யாணஞ் செய்துவைப்பதாகசொல்லுதல்

அருமையபீமனெனக் கன்னியமோவாசாரி
உருமையுள்ளபாத்தியங்க ளுமக்குத்தெரியாதோ
மாயன்மகளாரை மாலையிடவேணுமென்று
சேயனிவன்வந்துசொன்னாற் செய்திடவுமாட்டேனே
தம்பிவிஜயன்மகன் றானுவேறுநான்வேறோ
வம்புசெய்தாரென்றுசொல்லி மனதில்நினைப்பேனோ
புவனமதிலெக்கணனும் பொருந்தியதோர்பிள்ளையல்லோ
இவனெனக்குசொந்தமக னில்லையோவாசாரி
வல்லமையாய்வாள்பீமன் வந்தானதுபோதும்
நல்லதொருகல்யாணம் நான்முடித்துவைக்குகிறேன்
பகைகளினிவேண்டாம் பாலனபீமனுக்கு
வகைதெரியச்சொல்லுமென்று வணங்காமுடியோனும்
எட்டாதகாரியத்துக் கென்றுசெய்வோமென்றுசொல்லி
கொட்டாவிகொண்டுமெள்ளக் கூறினனம்மானை

### விருத்தம்

நல்லகாலமுநமக்கில்லையென்றரவுயர்த்தோன்
சொல்லுவாளபீமனுக்கொருசுகம்புரிவதுபோல்
வல்லனாகியதுரோணர்தன் றிருவுளமகிழ்ந்து
சொல்லும்வார்த்தைதனைச் சிருவனுங்கேட்டனன்சுகமாய்

### அம்மானை.

அரவுயர்த்தோன்சொன்னதெல்லாம் மாசாரிதான்கேட்டு
திரமாய்மனமகிழ்ந்து செப்புவாரம்மானை
தென்பானபுத்தியுள்ள திரியோதனவரசே
உன்போலபீமனுக்கு வுண்டோவுதவியிங்கே
பச்சைக்குழந்தையிங்கே பாலனபீமனுக்கே
கொச்சையிடக்குலத்துக் கோபாலன்றன்மகளை
திருப்பூட்டுவேனெனவும்செப்பினீர்மன்னவனே
உருப்போட்டுனையனைத்த ஆசாரிமாயனுக்கு
சம்மதித்தபோதலவோ தான்முடியுங்கல்யாணம்



உம்முடையதந்திரத்தா லுண்டுபண்ணவேணுமல்லால்
மற்றவர்கள்சொன்னதினால் மாயவனுஞ்சம்மதியான்
கொற்றவனேயென்று கூறினார்துரோணருமே
ஆசாரிகூறினதற் கரவுயர்த்தோனேதுசொல்வான்
பேசாதிருங்களிப்போ பெருமாளுடமகளை
எந்தவிதமாகிலு மியல்சேரபீமனுக்கு
தந்திரமாய்க்கல்யாணம் தான்முடித்துவைக்குகிறேன்
வாருந்துவாரகைக்கு மாயவனார்தன்னிடத்தில்
சேரும்படியெனவே திரியோதனனுரைத்தான்
வஞ்சனுரைத்ததெல்லாம் மாமறையோன்தான்கேட்டு
நெஞ்சிலடக்கி நெடியதொருஆசாரி
அருகிலிருந்ததொரு வபீமன்றனைப்பார்த்து
பெரியதகப்பனுட பேச்சையெல்லாங்கண்டீரோ

## துரியோதனனை அபீமன்வணங்கும்படி துரோணர் புத்திகூறுதல்

ஆலோசனையினிமே லுனுவளவும்வேண்டாங்காண்
மேலாகியதகப்பன் விந்தைமலர்ப்பாதமதை
பேணிநமஸ்கரித்து பெரியபிதாசொன்னபடி
காணிபிசகாமற் காரியத்தைப்பாருமென்றார்
ஆதிகுருமொழியை யபீமனுமேதான்கேட்டு
நீதியிதுவாகும் நேசமுள்ள ஆசாரி
பாவிமுன்னாளென் தாயைப் பற்றித்துகிலுரிந்தும்
ஆவிபதைபதைக்க அநியாயவார்த்தைசொல்லி
பஞ்சவரையும்வனத்திற் பரக்கவிட்டபாதகனை
நெஞ்சைப்பிளக்காதிருந்தேன் நேயமுள்ளயென்தகப்பன்
வந்தபின்புசெய்வமென மகிழ்ந்திருந்தேன்நீரும்வந்தீர்
சொந்தக்குருவெனவுன் சொற்கேட்டுகாணிருந்தேன்
நெஞ்சுமஞ்சாமலந்த நெட்டுரனைப்பணிய
வஞ்சமன்றிச்சொன்னதென்ன மாமறைநூல்வல்லவரே
பெரியதகப்பனெனப் பேசுவதேவாசாரி
சிறியபயலிவனைச் செய்வதென்னவொன்றுமில்லை
என்தமையர்வந்து யிசைக்குமொழிதப்பாது

உன்வார்த்தையுந்தவறு தோதிரான்செய்யவென்றும்
ஆனாலுமென்பாட்டனரி பீஷ்டுமர்தனையும்
மேனாளென்றுய்க்கி விளங்கும்படிநீதி
கூறும்விகர்னரையுங் கொண்டாடிநான்பணிவேன்
சிறுயர்க்தோங்கும்விதுரன் றிருவடியுநான்பணிவேன்
அல்லாதுமற்றிவர்க ளடிபணியேனென்றுரைத்த
வல்லாளனைப்பார்த்து வருந்துவார்பீஷ்மருமே
சகலகலையுணர்ந்த தனஞ்சயன்றன்புத்திரனே
இகலேபெரிதெனவு மெண்ணார்கள்நல்லோர்கள்
சகுனிப்பயலாலுன்றந் தையர்க்குநூற்றுவர்க்கும்
விகுவுவந்ததல்லாது மிகக்கர்னன்சொற்கேட்டு
சதிருடையமன்னவனுந் தவ்வினன்மன்னும்வின்னும்
இதுவரிந்துநாங்க ளெல்லோருந்தான்சேர்ந்து
ஏசாதுமேசிவிட்டோம் யினிநீயுங்கோபமதாய்
பேசாதுநீயுமுந்தன் பெரியபிதாவைப்பணிந்து
காரியத்தைப்பாருமெனக் கழரவபீமன்கேட்டு
பாரிற்பெரியோர்கள் பகருமொழிமருத்தல்
நன்றலவென்றேவேதம் நவில்வதால்நாமும்வஞ்சன்
றன்னைப்பணிந்திடவுந் தான்வேண்டுமென்றெழுந்து
தென்னவர்க்குத்தென்னன் றிரியோதனன்றனையும்
கன்னன்விதுரன் காங்கையர்க்கும்விஷ்டுமர்க்கும்
மரியாதையாகவுமே வணங்கிநமஸ்கரித்து
திரியோதனனிடத்திற் செப்புவானம்மானை

அம்மானை.

செய்யாதகுற்றம் செய்தாலும்பிள்ளையின்மேல்
ஐயாகிருபைவைத்து ஆதரிக்கவேணுமல்லால்
பின்னேயொருகருமம் பெற்றார்நினைப்பாரோ
உன்னுதவியெங்களுக்கு யுண்டென்றிருக்குகிறோம்
காத்தருளுமென்றுசொல்லிக் கட்டழகன்வாள்வீமன்
தோத்திரமுஞ்சொல்லித் தொழுதான்காணம்மானை
பணிந்தசிறுவனையும் பார்த்துஅரவக்கொடியோன்
தணிந்தசிறுவனுக்குத் தானேதுரைக்கலுற்றான்



## துரியோதனன் அபிமனுனுக்கு கலியாணஞ்செய்து வைப்பேனென்று புத்திகூறுதல்

ஒன்றுக்குமென்மகனே யோசனையும்பண்ணாதே
இன்றைக்கேகல்யாண மியல்பாய்முடித்துவைப்பேன்
வாஞ்சையுடனென்பிறகே வாருமென்றுமன்னவனும்
காஞ்சமனதுடைய கபடனெடுத்துரைப்பான்
சொன்னமொழிப்படியே துரோணர்முதலெல்லோரும்
மன்னவனுர்தன்பிறகே வந்தார்துவாரகையில்
ஆதிகாருயனார்தன் னரண்மனையின்வாசலிலே
நீதுகுடிகொண்ட திரியோதனராசன்
வெத்திகொண்டுவந்தவர்போல் வீற்றிருந்தாரம்மானை
சத்தியவனருகிற் றுரோணருமேதானிருக்க
அங்கரர்கோன்சல்லியனு மசுவத்தாமாவிருக்க
சங்கையுள்ளகாங்கையரும் சயித்தவனுமேயிருக்க
செவ்வையுள்ளமன்னனுடை சேனைதனமத்தனையும்
இவ்வேசமாக்கவந்த மியல்சகுனிதானிருக்க
தப்பியுயிர்பிழைத்த தினங்களுமேதானிருக்க
இப்படியோகாலமென்று யிலக்கணனும்வீற்றிருக்க
நொந்துமனமுருகி நாற்றுவர்கள்சூழ்ந்திருக்க
அந்தஅளப்பரிந்து வபிமனுமேவீற்றிருக்க
கொலுப்பெருக்கிவீற்றிருந்தான் கொடியதிரியோதனனும்
வலுப்பெரியராவானும் மன்னன்கடோர்க்கஜனும்

## துரியோதனன் முதலானவர்களும் அபிமனுனும் துவாரகையிலிருக்கும்போது இராவான் கடோர்க்கஜனுந்தேடி வருகுதல்

திரியோதனனைத்தேடி யெங்குங்காணமல்
அரியோனரன்மனையை யவர்களங்குதேடிவர
வள்ளல்திரியோதனனு மிருக்குமால்பார்த்து
கள்ளநரிசந்தைகொள்ள கடைவளியேவந்ததுபோல்
ஏதுகாணென்றுசொல்லி யெண்ணியேராவானும்
ஆதாவுமாரெனவே யடுத்துவந்துபார்ப்பளவில்

அரவக்கொடியோனிடத்தி லபீமனிருப்பதுவும்
குருகுலத்துமன்னரெல்லாங் கூடியிருப்பதுவும்
கண்டபொழுதினிலே கடோற்கசனும்ராவானும்
வண்டனிவளிந்த வணங்காமுடியோனும்
கற்பனையாய்த்தம்பியரைக் கைப்பிடியாகப்பிடித்து
சற்பனைகள்செய்வதற்கோ தானினைந்தாரென்றுசொல்லி
பதரிமனங்கலங்கிப் பாரமுள்ளவில்வனைத்து
எதிரிதிரியோதனன்மே லேவிவரும்வேளையிலே
தாங்கமுடியாதிவரைத் தானிருந்தாற்றுவரும்
வேங்கைதனைக்கண்டதொரு வெள்ளாடுபோல்நடுங்கி
அபயமபயமென்று பீமனிடந்தனிலே
சபையிலிருந்தமன்னன் தான்புலம்பிநின்றிடவே
அஞ்சாதிருங்களென்று வீமனருகிருத்தி
வஞ்சகனையாதரவாய் மனதுதிடப்படுத்தி
மார்க்கமுடனிருந்த வாள்விசையன்புத்திரனும்
கார்க்குநின்றராவான் கடோற்கசன்றன்பாதமதில்

## இராவான் கடோற்கசனை வாள்வீமன்வணங்கி நடந்தசங்கதிகளை சொல்லுதல்

வந்துநமஸ்கரித்து வணங்கியுபசாரமிட்டு
அந்தரங்கமெல்லா மவர்களுக்குத்தானுரைத்து
ஆதிமுதலாக அந்தம்வரைதானடந்த
சேதிமுழுவதையுந் தினையளவுகுன்றாது
நடந்தவயனமெல்லாம் நலமொருவாள்வீமன்
திடமாகவண்ணருக்கு செப்பியபினின்றுதினம்
சுகசோபனமுடிக்கத் துரோணருடசொற்படிக்கு
சகலவயனமெல்லாம் தமையரிடமாயுரைத்து
குருவினனுபூதி கொள்ளும்படியதுவாய்
பெரியமனசுபண்ணி பேதையெனைக்காருமென்று
சிரானதம்பிசொன்ன செய்தியெல்லாந்தான்கேட்டு
மார்போடணைத்து மனமகிழ்ந்துராவானும்
வாள்வீமாவுன்னுடைய மனதுக்குகந்தபடி
தாள்வேதுமில்லாமற் றுனடப்போமென்றுசொல்லி



போர்முகத்திற்செய்தகுற்றம் பொறுத்தருளவேணுமென்று
பார்புகழுபாட்டன்மார் பாதந்தனைத்தொழுது
தோணும்படியாக துரோணருடபாதமதில்
காணும்படியவர்கள் கண்டுநமஸ்கரித்து
பாங்காய்த்தொழுதுநின்ற பாலர்களைத்தான்பார்த்து
நீங்காதசெல்வம் நிறைந்திருப்பீரென்றுசொல்லி
பேசுமரவக்கொடியோன் பெரியபிதாவாகையினால்
பாசமுடனவர்தன் பாதமலர்பணிந்து
வாருமென்றுவேத மறையோன்பகர்ந்திடவே
கார்படிந்தமெய்யோன் கடோற்கசனும்ராவானும்
வணங்காமுடியருக்கும் வளர்கர்ணன்பீஷ்மருக்கும்
குணங்காண்பெரிதெனவே கும்பிட்டடிபணிந்து
மாருவிஷக்கொடியின் மன்னவனைத்தான்பார்த்து
சீராகராவான் செப்புவானம்மானை

## இராவான் துரியனுக்குபுத்தி கூறுதல்

விருத்தம்.

தலைவிதிமுடிவுகாலம் சரியுனக்குறைத்தேனின்னம்
சிலதுநாளிருப்பதாலே சிறுவனுக்கபயமென்றாய்
கலைதெரிவீமராசன் கைக்கதைக்கிரைநீயென்று
விலகினான்விரட்டிவிட்டேன் மெய்யிதுவறிந்துகொள்ளே

அம்மானை.

வஞ்சகத்தைநெஞ்சில்வைத்த வணங்காமுடியோனே
அஞ்சிப்பணிந்தனென்று அளப்புகளைச்செய்யாதே
தலையெழுத்துமுயவின்னஞ் சற்றேயிருந்ததினால்
விலகியுயிர்பிழைக்க விட்டுவிட்டேன்நம்பியர்க்காய்
மரணமடையாமல் வாள்வீமன்றன்னிடத்தில்
சரணமடைந்ததினாற் சகித்தேனென்னம்பியர்க்காய்
வெல்வேந்தர்போற்றிசெய்யும் வீமருடகைக்கதையால்
கொல்வனென்றுஉன்னைக் கூறியிருப்பதினால்
எடுத்தவிலைதன்னையிப்போ யிரக்கினேன்நீபிழைத்தாய்
அடித்தவர்களும்பிழைத்தா ருலகையினிப்போது

துற்புத்தியானதெல்லாந் தூரமதிலேபோட்டு
நற்புத்தியானதெல்லாம் நன்றாய்வரவழைத்து
செப்புந்துரோணர்மொழி சிரசுமுடிமீதாவைத்து
தப்பிதங்களில்லாமற்த் தம்பியபிமனுக்கு
சங்குசக்ரபாணியெனுஞ் தாமோதரன்மகளை
மங்களமுஞ்செய்து வாள்த்தியனுப்பிவையும்
தாமதமாய்நீயுந் தானிருந்தாயாமாகில்
ஏமனுடபட்டணத்துக் கியல்பாயனுப்பிடுவேன்
அபசாரமானதொழி லாகிவருதென்றுசொல்லி
உபசாரமாகவுமக் கோதினேன்கண்டறிந்து
பாருமதனாலே பலனுமக்குஆருமென்று
தேருதலாய்வார்த்தை தனைச் செப்பினான்ராவானும்
சூபையரியாருவான் றானுரைத்தவார்த்தையெல்லாம்
கபடனரவக்கொடியோன் காதுதனிலேகேட்டு
புண்ணாய்மனதுநொந்து பொரிகலங்கிமெய்யசந்து
எண்ணுதயெண்ணமெல்லாம் யெண்ணிமனதுள்ளடக்கி
தப்பியுயிர்பிழைக்குஞ் சாதகத்தையேநினைந்து
செப்புங்கடோர்க்கசன்றன் திருமுகம்பார்த்தேதுரைப்பா
அருமைக்குழந்தையரே அருச்சுனனார் தன்மகனே
தெரியப்படுத்துகிறேன் சேதிதனைக்கேட்டருளும்
சாந்தகுணமுடையோன் தம்பியபிமனுக்கு
எந்திளையைக்கல்யாண மிப்போதேசெய்திடலாம்
ஆயனுடகருத்தை யாமரியவேணுமிப்போ
மாயனையுமிங்கே வரவழையுமென்றுரைத்தான்
இதமானவார்த்தையிது வென்றுகடோர்க்கசனும்
பதபாகமான்குரு பாதமதிலேபணிந்து
வல்லவரேயும்முடைய வாக்கால்நடக்குமினி
சொல்லுமையாவென்று தொழுதான்கடோர்க்கசனும்
அப்போதுரோண ரகமகிழ்ந்துயேதுசொல்வார்
இப்போதுமாயவரு மிங்குவரவேணுமென்றால்
நெடுமாலிருக்குமிடம் நிசமரியக்கூடாது
கடல்மேற்றுயின்றிருப்பார் காயாம்புமேகவண்ணர்



## பாற்கடலில் பள்ளிகொண்ட கிருஷ்ணனை கடோர்க்கயன் போய்கூட்டிவருகுதல்

கோதண்டராமனையுங் கூட்டிவரவேணுமென்றால்
வாதென்றதூற்றுவர்க்கு வல்லமையும்போறாது
கெவுனசித்தியுள்ளவனுங் கிருபைகடோர்க்கசனை
அவனையனுப்பிவையு மாயன்வரவேணுமென்றால்
மற்றொருவர்கண்டறிய மாட்டார்கள்மாயனையும்
புத்தியிதுவெனவே புகன்றார்துரோணருமே
இவ்வசனங்கேட்டவுட னிராவான்கடோர்க்கசனை
பவ்வியமாய்த்தானழைத்துப் பகர்ந்தான்பரிவுடனே
கோவிநிரைக்காத்தவனைக் கூட்டிவரவேணுமென்று
ஏவுகின்றராவா னிருதாளையும்பணிந்து
வாரேனொருநொடியில் மயங்காதிருங்களென்று
கார்மேகமேனியனைக் காணவென்றுசிந்தைய தாய்
நடந்தான்கடோர்க்கசனும் நாரணனைத்தான்தேடி
அடர்ந்ததுவாரகையி னரண்மனையெலாம்பார்த்து
மலைகள்நதிமுதலாய் வனாந்திரமெலாம்பார்த்து
அலைகடலுந்தாண்டியவ னாய்ந்துபார்க்கையிலே
பாற்கடலின்மேலேயொரு பாம்பணையின்மெத்தையிலே
தீர்க்கமுடன்மகிழ்ந்து செங்கண்மால்கண்வளர்ந்தார்
பணிமுடியின்மேலாகப் பள்ளிகொண்டமாயவனை
கணிதமுடனரிந்து கண்டேகடோர்க்கயனும்
எவருமரியாதபொரு ளெம்பெருமாளச்சுதனை
தவமாய்த்துயிலுகின்ற தாமோதரமுகிலை
எந்தவிதம்நாமு மெழுப்புவோமென்றுசொல்லி
சுந்தரனேயென்றுசொல்லித் தோத்திரமுஞ்செய்யலுற்றான்

## கடோர்க்கயன் கிருஷ்ணனை தோத்திரம்செய்யுதல்

### விருத்தம்

வானோர்புகழ்விரிவேதிரு மார்பாமன்றமுடிவே
தானாயிகபரம்யாவையும் யோகியதனுவே

ஊனேடியிருருவாகிய வுரகாமுடிநடனு
ஞானேதயவெளியே யரிநாராயணகுருவே ௧

வேதாகமபொருளே யதின்மேலாகியவருள் தான்
ஓதாதவர்பிரவிக்கட லுளல்வாரவருடனே
நீதானவனரியாமையை விடவேயடியேன்முன்
நாதாயெதிர்வரவேணுமென் னுராயணகுருவே ௨

குன்றாகியகோவர்த்தன கிரியானதுகுடையாய்
அன்றாவினுக் கிடர்தீர்த்திடு மாதியருவுருவே
ஒன்றாய்வெகு விதமாகிய மொழிவாகியமணிபில்
நன்றாகியபொருளே யரிநாராயணகுருவே. ௩

வேயூதியவாயாய்ஜெக விளைவாகியசரணு
ஓயாதெழுவுல்காவையு முண்டாயரநொடியில்
நீயேபெரிதெனவோதுவர் நினைவேமதிசுடரே
நாயேனொருபொருளொவரி நாராயணகுருவே ௪

ஆகாசமுன்னிலையில்வரு மாதாரமுமதிலே
யேகாசனகிருபாநிதி யிமையோர்பணிமுதல்வா
யோகாசனமேலாகிய யொளியேபரவெளியே
நாகாசனவாள்வேயரி நாராயணகுருவே ௫

மந்தாகினிகிரியாலலை மதுவானதைமெதுவாய்
சிந்தாமலேயமுதங்கடை தேவேயருள்வாள்வே
தந்தாள்வதினுலேயொரு தாள்வானதுவருமோ
நந்தாவரவிந்தாவரி நாராயணகுருவே ௬

பால்வாரியினடுவேதுயில் பரமேதனிமுதலே
மால்வேதிணையதிலேமன மாளாவகையருள்வாய்
மேல்வேதியன்முனிவோர்முதல் விண்ணோர்பெருமானே
நால்வேதமும்நீயேயரி நாராயணகுருவே ௭

காமாகரவினைமாதர்செய் கபடானதிலுருகி
ஏமாரியேவிளுமோடனை யினியாள்வதுன்கடனே
தாமோதரகிருபாநிதி சரணுகெதியருள்வாய்
நாமாதவருமாஅரி நாராயணகுருவே ௮



கெவுனுதிப்முனிவோர்தொழு கிருபாகரகுணனே
புவனுதிபவரசேவரு புனிதாவுனைமறவேன்
தவமாதர்களிடையர்மனை தனிலேதயிர்திருடும்
நவநீதனகிருஷ்ணுவரி நாராயணகுருவே ௯

பேராயிரமுடையாய்வரு பிரமாதிகள்முதலாய்
ஆராகிலுமுனையோதின ரவரேபிரவாதார்
கூராதவர்துயர்வேதினைக்குடியேருவர்முகுதம்
நாராயணநாராயணநாராயண குருவே ௰

அம்மானை.

ஐயனே அச்சுதனே ஆதிமகாமூலம்
கையாற்றயிர்திருடும் கண்ணுதிருமார்பா
காலால்புவியளந்த மாயாம்புமேகவர்ணு
பாலாளிதன்னைப் பருந்தாகடைந்தோனே
காமன்தனைப்பயின்ற கருணுதிபவருனே
பூமன்றுயிர்முதலாய்ப் பூத்தருளும்புண்ணியனே
சாரங்கபாணியனே தாமோதரப்பொருளே
சீரங்கம்வாளுந் திருவெங்கிடமாலே
மண்ணையள்ளியுண்டதொரு வாயாவசுதேவா
வெண்ணையளவாண்ட விநோதாசெகநாதா
வேதனையும்பெற்றெடுத்த விண்ணோர்பெருமானே
ஆதியானுதி யரிகேசவாமுகுந்தா
சோலைமலைவாளுஞ் சுந்தரனேமந்திரனே
நாலுமறைதனக்கு நடுவாயிருந்தவனே
ஐவர்சகாயா ஆதிபராபரனே
பையரவிற்பள்ளிகொண்ட பச்சைநெடுமாலே
சிஷன்வருந்துவதுன் திருச்செவியில்கேட்கலையோ
ஆசையுடனுமது அனந்தல்தெளியலையோ
நீதியுடனடியேன் நினைவறியவேணுமென்று
சோதனையும்பார்க்கத் துயின்றால்விடுவேனே
பாண்டவர்கள்தங்களுக்கு பச்சமுள்ளமைத்துனனே
ஆண்டவரும்நீராச்சு அடிமையுமேனாளுச்சு
திருக்கண்மலர்ந்துவுந்தன் சிஷனையும்பாருமையா

மருக்கொண்டசெஞ்சகனை மனதிரங்கிக்காருமையா
சமையமெழுந்தருளும் சாமிசரணமென்று
கமலமலர்முகத்தான் கடோர்க்கசனும்தோத்திரமாய்
நேசமுடன்தொழுது நின்றானுருமையதாய்
வாசமுள்ளமாயன் மனதிலதையறிந்து

## கிருஷ்ணன் நித்திரை தெளிந்து யெழுந்திருக்குதல்

காரணனார்செங்கமலக் கண்முளித்து அன்னேரம்
பூரணமாய்வந்தசிறு புதல்வனையுந்தான் பார்த்து
கிருபைக்கடலான கேசவனார் தன்பதத்தில்
அருமைக்கடோர்க்கசனு மன்பாகவேதொழுதான்
வேண்டிவணங்கிநின்ற வீமன்மகனுக்குரைப்பார்
தாண்டியெழுகடலுஞ் சதிராகயென்னிடத்தில்
வந்தவகையேது மன்னகடோர்க்கசனே
அந்தவகைசொல்லுமென்று ஆயனுமேதானுரைத்தார்
கண்ணனுரைத்திடவே கடோர்க்கசனுந்தான்கேட்டு
அண்ணலெனுமென்பெருமாள் அடியிணையைப்பூண்டுகொண்டு
தேவர்பணியுமெங்கள் தெய்வச்சிலையானே
மூவருக்குமூத்த முகுந்தாயினிக்கேளும்

## வாள்பீமன் கலியாணத்திற்குகிருஷ்ணனை வரச் சொல்லுதல்

காண்டீபன்பெற்றெடுத்த காளையபிமனுக்கு
ஆண்டவரேயும்முடைய அழகுபெருஞ்சுந்தரியை
சொல்லியிருந்தபடி சோபனமுஞ்செய்வதற்கு
நல்லமுகூர்த்தமது நாழிகையுமானதினால்
உத்தமரேமங்கிலிய முடனேதரிப்பதற்கு
சித்தமிரங்கியங்கே சீக்கிறத்தில்வாருமையா
நூற்றுவருமற்றுமுள்ள நவலரியசேனைகளும்
காத்திருக்கிறார்களங்கே கண்ணாவெழுந்தருளும்
அய்யனேயுங்களுக்கு ஆளடிமைநாங்களுந்தான்
செய்யும்பணிவிடையிற் றீதுகுறைவந்ததுண்டோ



ஆழியதுகொதித்தா லாற்றுவாராருமுண்டோ
ஏழைப்பயலுமக்கு யெதிரோபெருமானே
கருணைகருகிருபைக் கடலேயெழுந்தருளும்
தருணைதருணமதிற் சாமியெழுந்தருளும்
வைகுண்டம்வீற்றிருக்கு மாலேசரணமென்று
கைகொண்டுகூப்பிக் கடோர்க்கசனுக்தான்றொழுதான்
வளமாய்புரைத்ததெல்லா மாயவனுந்தான்கேட்டு
உளமானதுமகிழ்ந்து வுற்றசிறுபாலகன்மேல்
சந்தோசமாகியவர் தானேயெழுந்திருந்து
சுந்தமலர்மார்பன் கடோர்க்கசனார் தன்னுடனே
கன்றாற்கனியெரிந்த காருத்தனும்மனதாய்
சென்றாற்துவாரகைக்கு சீதரனுமம்மானை

## கிருஷ்ணன் துவாரகைக்கு வந்தபின் எல்லோரும் வணங்குதல்

### விருத்தம்

ஐயனுங்கடலாழி யகன்றுதான்
வெய்யவன்னிருள் தன்னை விலக்கல்போல்
செய்யமானகரான துவாரகை
வையமுண்டனர் வந்தமகிழ்ச்சியே

### அம்மானை

செங்கன்நெடுமாலும் சிறுவன்கடோர்க்கசனும்
வங்கணமதாகவுமே வந்தார் துவாரகையில்
மாயாவுதாரனிங்கே வந்தாரெனவறிந்து
தீயானநூற்றுவர்கள் திரியோதனன்முதலாய்
சாற்றும்புகழ்மறையோன் சகுனிசயிந்தவனும்
ஏற்றமுள்ளகர்ண னிலக்கணகுமாரன்முதல்
பெரியகுருமகனும் பிலமானகாங்கையரும்
அரியோனடியிணையை யன்பாய்வணங்கிநின்றார்
மார்க்கமுடன்விதுரன் வந்துவணங்கிநின்றான்
ஆர்க்குமடங்காத பீமனொடொருவனும்
கேசவனார் தாளிணையைக் கிருபையுடன்வந்துசுற்றி
பூசனையதாய்மிகுந்து போற்றிப்பணிந்துநின்றார்
ஆசையுள்ள தன்மருக னபிமனையுந்தான்பார்த்து

ராசகோபாலரெனும் நாராயணர்மகிழ்ந்து
கருத்தில்மிகவடக்கி கண்ணனுமங்கேதுரைப்பார்
பொருத்தமிட்டலெக்கணர்க்குப் பொருந்துகின்றசுந்தரியை

## இராவான் கடோர்க்கயனை கிருஷ்ணன் கோபித்து சொல்லுதல்

நல்லமணமுடிக்க நாம்நினைத்தகாரியத்தை
அல்லவென்றுபண்ணவுமக் காமோசிறுவர்களே
கொள்ளஅவன்றுணிந்தான் குடுக்கவுமேநாம்துணிந்தோம்
தள்ளிவிடநீங்கள் சாதித்தலைவர்களோ
படித்தமணவரையின் பந்தலிலேவந்தவரை
அடித்துவிரட்டவுமக் கதிகாரமார்கொடுத்தார்
இன்னிலத்தில்நூற்றுவரை யிசைகேடுசெய்திடவும்
தன்னரசுநாடிதுவோ தான்சேவகனீரோ
என்னபுத்திகாணுமக்கு யிராவான்கடோர்க்கசனே
தன்னுடையகாலபலந் தானறிந்துபாராமல்
பாண்டவர்கள்கருநிரைந்த பாவனையுந்தோன்றாமல்
தாண்டிவிழுந்து தலைசிதறிப்போவாரோ
வேண்டாமினிமேலாய் விட்டுவிடுந்தம்பியரே
தீண்டாமலேயிருங்கள் திரியோதனப்பெருமாள்
நேமித்துவந்தபடி நிறைவேறவேணுமென்று
நாமித்தனைவயணம் நன்றாயுமக்குரைத்தோம்
கூசாமற்கல்யாணங் கூடுகின்றநாள்வரைக்கும்
பேசாதிருங்களென்று பெருமாளுந்தானுரைத்தார்

## இராவான் கிருஷ்ணனைபார்த்து சொல்லுதல்

இராகவனார்சொன்னமொழி ராவானுந்தான்கேட்டு
துராகிருதமாயவரும் சொன்னாரெனவறிந்து
வண்ணமுள்ளமாயவனார் மலர்முகமுந்தானோக்கி
எண்ணமுள்ளராவான் எடுத்துரைப்பானம்மானை
தயிர்திருடுங்கோமானே சுவாமியநாராயணனே
மயிர்பிளந்துநீரும் வழக்குரைத்தீர்நேர்த்தியதாய்
கட்டியுமைப்பேசிடவும் தானொருவரில்லாட்டால்



கெட்டியென்றபேருமக்கு கிடைக்குமென்றேசொல்லுகிறீர்
வார்த்தைதபடித்தமென்று மாயவரேபேசுகிறீர்
ஆர்க்குஞ்சரியாமோ அனிவளக்குநேருரைத்தீர்
சொல்லிச்சிரியாரோ தொல்லுலகமன்னரெல்லாம்
நல்லாயிருக்குதையா நடந்துகில்லும்பார்க்கடலில்
அந்தமுருக்குமக்கு ஆய்ப்பாடியாரிடத்தில்
இந்தப்பிரளிபிங்கே யேலாதெனுந்தருளும்
உள்ளவளக்கிருக்க ஒருவருடபட்சமதாய்
கள்ளவழக்குரைக்கும் கண்ணாநடந்துகில்லும்
எடுப்பாரொருவனுண்டோ யெங்கட்கிசைந்தபெண்ணை
கொடுப்பாரொருவருண்டோ கோலமயில்சுந்தரியை
நானென்றுமாலையிட நாங்களேசொந்தமல்லால்
தானென்றொருவர்சொல்லத் தலைமேல்தலையுமுண்டோ
மரியாதைக்காகவும்மை வரவழைத்தோமாகில்
பிரியமாய்ப்பேசுகின்ற பேச்சேன்பெருமானே
தேவரெதிர்வரினும் தேவேந்திரன்வரினும்
மூவரெதிர்வரினும் முனிவோரெவர்வரினும்
காலனெதிர்வரினும் காசினியோர்தான்வரினும்
மேலுமொருநிமிச வேளையிலேசைக்கணையால்
வெத்திசெய்துகாரியங்கள் வேண்டிமுடிப்பனென்றும்
உத்தபெலவானெனவும் உமக்குத்தெரியாதோ
மாமாலவித்தைதனை மறந்துவிடும்மாயவரே
நீமாமனென்றுசொல்லி நின்றேமிதுவரையும்
கட்டபனைமரத்தில் காலால்நடப்பவரை
எட்டமட்டும்தாங்கிடலாம் யெட்டாட்டாலென்னசெய்வோம்
குருக்களென்றுநூறுவிசை கும்பிடுவதல்லாது
சருக்கரைதானென்றுசொன்னாற் சம்மதிப்பாராருமுண்டோ
ஆனதினால்மாயவரே அபகேடுசெய்ததெல்லாம்
போனதெல்லாம்விட்டுவிட்டோம் பொறுமைபெரிதெனவே
சோபனமும்நல்வேளை தொடங்கியிருப்பதினால்
ஆபரணமாகவுமே அபிமனிந்தமன்னனுக்கு
கன்னியெனுஞ்சுந்தரியைக் கைப்பிடித்துத்தாருமையா
என்னபணிவிடைநீ ரிட்டாலுங்கேட்குகிறோம்

நல்முகூர்த்தவேளையிலே காரணரேசுந்தரியை
செல்வனபீமனுக்குச் செய்வீர்கலியாணம்
குத்தமதுசெயினுங் கொண்டருளியேபின்மேற்
சித்தந்திரும்புமென்று செப்புவான்ராவாணும்
சமத்துரைத்ததெல்லாம் தாமோதரன்கேட்டு
அமைத்தபடிமுடியு மல்லாதுவேறுமுண்டோ
என்றுசொல்லிமாயவரு மிராவாணைத்தான்மகிழ்ந்து
அன்றுவருகிருந்த வரவக்கொடியனையும்
ஏரிட்டுப்பார்த்து பெம்பெருமாளேதுசொல்வார்
வாரணிந்தபெண்கள் கழுமுடியோனே

## கிருஷ்ணன் துரியனை பார்த்து சொல்லுதல்

இருவருடயோசனைக்கு யிடர்வருமோவென்றிருந்தேன்
சிறுவனுரைத்ததொரு செய்தியெல்லாங்கேட்டீரோ
௬௨ எனக்குமனது அந்த யிலக்கணன்மேலல்லாது
உனக்குமனதினிமே லோதுமென்றார்மாயவரும்
செந்திருமால்சொன்னதொரு செய்தியெல்லாந்தான்கேட்டு
வெந்துருகிநின்றதொரு வேந்தனெடுத்துரைப்பான்

### விருத்தம்.

முன்னமுங்கெடுத்தது முளுதுமில்லையென்
றின்னமுங்கெடுப்பதற் கெண்ணினீரய்யா
தன்னிலென்னுயிருடன் தப்பவேணுமென்
றுன்னையுந்தொழுதன னுய்யவேண்டியே
திட்டமாய்சொலும் சிறுவர்கையிலே
பட்டபாடதையினிப் பகரவேண்டுமோ
அட்டமச்சனிபிடித் தாட்டியென்றனை
விட்டதேயினிநிசம் மேகவண்ணனே

### வேறு

மாதவனேகேளுமபி மன்னவன்றனக்கு
மாதளகிசுந்தரியை மாலையிடுமையா
ஏதுமரியாதவ் விலக்கணனுக்கேற்ற
சாதிதனிலோர்வனிதை தான்மணமுஞ்செய்வோம்



## துரியோதனன் கிருஷ்ணனிடத்தில் நியாயத்தைச் சொல்லுதல்

### அம்மானை

குஞ்சரத்தைக்காத்தருளுங் கோபாலாவுன்னுடைய
வஞ்சகத்தைக்கண்டறிய வல்லவனுமுண்டோதான்
காட்டிக்கொடுத்திடுவாய் கள்ளனென்றுஞ்சொல்லாமல்
மீட்டிவிலக்கிவிப்பாய் வேண்டியதெலாமுடிப்பாய்
கட்டியழுதிடுவாய் கண்டவரெல்லாமகிழ
தொட்டிலையுமாட்டித் துடைதனையுங்கிள்ளிடுவாய்
ஊரைவிட்டோடி யொளிப்பாய்ப்பாயம்தாய்
ஏரவிட்டுயேணி யெடுப்பாயிரக்காமல்
சாடிசொல்லவேணிவாய் தன்மனுசர்தன்னுடனே
கூடிவிளையாடுங் கோமானும்நீயலவோ
முரிஞ்சபடையதனை முளுதுங்கெடுப்பதற்கு
குரிஞ்சிமருந்தலவோ கோபாலரேநீரும்
பணமுமக்குநான்துகையாய்ப் பரிசங்கொடுத்ததுவும்
மணமுடிக்கவந்ததுவும் வாரியெடுத்ததுவும்
ஒருகாமல்ராவான்வந் திற்றுத்தமசெய்பயிலே
கிருபாகஞ்செய்துயென்னை நிறுத்தினதும்போதுமையா
மன்னனபீமனுக்கு மங்களமுந்தான்முடித்து
என்னைவிரட்டுமையா யிருந்தவிடம்போய்ச்சேர
வாலிபனும்வான்பீம மன்னனுக்குச்சுந்தரியை
தாலிகட்டவேணுமல்லால் சந்தேகஞ்செய்வாரோ
இனிமேலொருஅளப்பும் மென்னிடத்தில்கேளாமல்
கனிவானசோபனமாங் காரியத்தைப்பாருமென்றுன்
திரியோதனனுரைத்த சேதியெல்லாந்தான்கேட்டு
பெரியோனெவர்களுக்கும் பெருமாளுமேதுரைப்பார்

## கிருஷ்ணன் துரியனிடத்தில் நடந்த வரலாறைச் சொல்லுதல்

அவனிதனையாளு மரவக்கொடியோனே
சவனமதாரியுரைத்த கருத்தின்படியாக
முடிக்கவெனப்பஞ்சவர்கள் முன்மொழிந்ததுள்ளதுதான்

வடிப்பமுள்ளபஞ்சவர்கள் வனம்போனபிற்பாடு
சும்மாயிருகாமற் சோபனமுஞ்செய்யவென்று
அம்மானெனுஞ்சகுனி ஆலோசனைப்படியாய்
பஞ்சவர்கள்நஞ்சுசீர் பருகியவர்கானகத்திற்
றஞ்சினரென்றுஞ் சுந்தரியைலெக்கணர்க்கு
கொடுத்திடவும்வேணுமல்லால் கொடுக்கோமெனவுரைத்தால்
தடுத்துவமர்செய்திடவுந் தனஞ்சயன்மற்றோருமில்லை
இதுசமையமணமு மிப்போமுடித்திடுவேன்
எதுசம்மதமெனவு மெனவினவிவாருமென
சகுனிதனைவிட்டீர் தான்பயந்துசம்மதித்தேன்
திருதிருவென்று செம்பொன்பரிசமிட்டு
வந்தீர்முகூர்த்தமிட்டு மன்னுபடையுடனே
அந்தத்தருணமதி லபிமன்வந்தானெனவே
இடையர்வந்துசொன்னதையு மேந்தலேகீர்கேட்டு
தடையரவேயப்போது தான்முடிக்கவேணுமென்றீர்
அதற்குநான்சம்மதித்தேன் அப்பாலவர்கள்வந்து
எதுத்துச்சமர்பொருதார் யித்தனைபேருங்கூடி
இருவர்தனைச்செயிக்க யேலாமல்நீங்களுந்தான்
குருகுருவென்றேமுழித்தீர் கோமானேநானிடையன்
என்னசெய்யலாகுமென்மேற் பளிசுமத்திச்
சொன்னதினாலென்னபயன் றுறையேநீரிப்போது
பேசியபீமனுக்குப் பெண்கொடுக்கவேணுமென்று
ராசிபண்ணினீரானால் நாமொன்றுரைக்குகிறோம்
வாள்பீமன்றன்னுடைய மாதாபிதாக்களெல்லாம்
தாள்வானகானகத்திற் றனேகுடிபோனார்
இருக்கவிடமுமில்லை யிந்தவபீமனுக்கு
உருக்கமுடனேவாழ்ந்து வுண்டிருக்கச்சோருமில்லை
காருவின்பாலைக் கடைவில்க்கவிழ்ப்பாரோ
ஊரானவர்களெல்லா முற்றசனமாவாரோ
உமக்காகவேண்டியெந்த னுற்றபெண்ணையான்கொடுத்தால்
எமக்கார்பருசமிங்கே யீய்ந்திடுவாருருமுண்டோ
வரிசைமகள்தனையும் வாள்பீமனுக்கீய்ந்தால்
பரிசங்கொடுப்பவரார் பார்த்திபனேசொல்லுமென்றார்



## கிருஷ்ணனிடத்தில் துரியோதனன் தான்கொடுத்த பரிசம் வாள்பீமனுக்கு வைத்துக் கொள்ளும்படி சொல்லுதல்

மேகவண்ணன்சொன்னதையும் வேந்தனுமேதான்கேட்டு
ஆகமிகவுருகி அரவுயர்த்தோனேதுசொல்வான்
வாள்பீமனென்னுடைய மைந்தனல்லால்வேறுமுண்டோ
தாள்வேதுநானுமிங்கே தான்வந்திருக்கையிலே
தாரமனுஷரெல்லாஞ் சொந்தமுண்டோமாயவரே
குரவிப்பயல்களினாற் குடிகேடுவந்ததல்லால்
பிரளியனுவளவும் பேதமுண்டோஐவருக்கு
பிரந்தானபீமனவன் பிள்ளையல்லவோவெனக்கு
இரந்தாற்பொதிபிடித்து யேகினபேறுநமுண்டோ
பரிசங்கொடுப்பதற்கு பாத்திபமுநானேயல்லால்
வரிசையுள்ளபூவுலகில் மற்றொருவருருமுண்டோ
சொந்தமதாயுந்தனுக்கு சொல்லுகிறேனிப்போது
எந்தன்மகன்லெக்கணர்க்கு யீய்ந்ததொருநற்பரிசம்
வாள்பீமன்பேருமேலே வரவெழுதியின்றுதினம்
நாளானலெக்கணத்தில் நல்லமணஞ்செய்யுமய்யா
பந்தற்சிலவுமுதற் பலசிலவுக்கானதெல்லாம்
இந்தாருங்கோடிசெம்பொன் னெடுத்துச்சிலவுபண்ணும்
மங்களமுஞ்செய்து மாயவரேயிப்போது
எங்களையுந்தானுமிப்போ விரட்டுமையா
குணங்காணிதுவெனவே கோபாலன்றன்னிடத்தில்
வணங்காமுடியோனும் வகுத்துரைத்தானம்மானை

## கிருஷ்ணன் அபிமனனை மணக்கோலத்திற் கலங்காரஞ்செய்யச்சொல்லுதல்

அனியாயன்சொன்னமொழி ஆயனுமேதான்கேட்டு
இனிமேல்வளக்குநமக் கில்லையென்றுகோபாலர்
வெற்றியுள்ளமன்னவனும் விதுரனையுந்தான்பார்த்து
மற்றுமுள்ளதுரோணருடன் மன்னரையுந்தான்பார்த்து
சங்கீதலோலனெனுந் தம்பியபீமனையுஞ்
சிங்காரமாப்பிளைபோர் செய்யுமென்றாரம்மானை

வீமன்றனக்கிளைய விஜையன்மகனென்பாரும்
அஷ்டதிசைபுகழு மழகேசனென்பாரும்
சட்டமுள்ளபூவுலகிற் சண்முகனோவென்பாரும்
இந்திரனோவென்று யிச்சைகொண்டிநிற்பாரும்
சந்திரனோசூரியனோ தானவனோவென்பாரும்
மன்னவன்மேலாசைகொண்டு மதிலேறிநிற்பாரும்
சின்னஞ்சிறுதனங்கள் தெரியவெதிர்நிற்பாரும்
கையிலிடும்பூஷணத்தைக் காலிலிடுவாரும்
மெய்யிற்பணிதிகளை வேண்டித்தரிப்பாரும்
கட்டும்ரவுக்கைதனைக் கழட்டியெறிவாரும்
வட்டமதிமுகத்தில் மஞ்சள்க்குளிப்பாரும்
பவளயிதள்திறந்து பார்த்துச்சிரிப்பாரும்
எவள்மேலேஆசைகொள்வா ரென்றுயெண்ணிநிற்பாரும்
ஒயிலாய்நடந்து ஓடிவந்துபார்ப்பாரும்
பயில்பேசிக்கொண்டுமெள்ளப் பக்கத்தில்நிற்பாரும்
இச்சைகொண்டுதங்களுட யின்பமதுக்குள்ளாக்க
பச்சிலைகள்தேடிப் பறித்துத்திரிவாரும்
மூலிகையினாலே முகமினுக்கிநிற்பாரும்
வேல்விழிக்குஅஞ்சனத்தை வேண்டியிடுவாரும்
கண்ணால்சயிக்கினையால் காட்டியெதிர்நிற்பாரும்
அண்ணாந்துபார்த்து ஆவல்கொண்டுநிற்பாரும்
காமவெறிபிடித்துக் கலைசோர்ந்துநிற்பாரும்
தேமல்தனம்பிதுங்க திரள்மோகங்கொள்வாரும்
மருவியணையயிங்கே வாராரோவென்பாரும்
சருவிவலியவுமே தழுவுவோமென்பாரும்
பார்த்தன்மகனெனையும் பார்க்கானோவென்பாரும்
பித்தச்சிரிக்கிசும்மா பிதற்றுகிறாளென்பாரும்
என்மாப்பிள்ளையிவர்கா னென்றுசொல்லிநிற்பாரும்
உன்மாப்பிள்ளையோவென் றுடன்வாதுசெய்வாரும்
பேசாரோவென்று பெருமூச்சிடுவாரும்
கூசாமலேமயிரைக் கோதிமுடிப்பாரும்
ஆயன்மகள்சுந்தரிதன் னதிஷ்டக்காரனென்பாரும்
தாயவிலக்கணனுந் தோசிகாளென்பாரும்



மாதவனூர்பட்டணத்தில் மங்கையர்களெல்லோரும்
காதல்கொண்டுநிற்கவுமே கட்டழகன்வீதிவந்தான்

## சுந்தரியை மணக்கோலத்திற் கலங்காரஞ் செய்ய சொல்லுதல்

பதிவாயபீமன் பவனிவலமாகவர
விதியோன்றனைப்பயின்ற மேகவண்ணனெம்பெருமாள்
தாதியரைத்தானழைத்துத் தானேதுரைகளுற்றார்
மாதுநல்லாள்சுந்தரியை மணக்கோலஞ்செய்யுமென்றார்
திருமாலுரைத்தமொழி செங்கமலத்தாதியரும்
தருகாமலேகேட்டுத் தான்போனாள்சுந்தரியாள்
பார்த்தன்மகனாசைகொண்டு படுத்திருக்குஞ்சுந்தரியை
தேத்தியரவணைத்துச் செப்புவாள்தாதியரும்
மானேமரகதமே மயிலேகுயிலாளே
தேனேநவரசமே தெகுட்டாததெள்ளமுதே
கண்ணேமணியேயென் கற்பகமேவிற்பனமே
பெண்ணேயெவர்களுக்கும் பெரியகுலமணியே
விஜயன்மருமகளே மேகவண்ணன்றன்மகளே
திசையாளும்வாள்பீமன் றேவியெனுஞ்சுந்தரியே
மங்கையேயுந்தன் மனதில்நினைத்தபடி
செங்கமலகண்ணன் றிருவுளமுந்தான்மகிழ்ந்து
வாள்விமனுக்குவுன்னை மாலையிடவேணுமென்று
நாள்முகூர்த்தவேளையிலே நன்றாய்மணமுடிக்க
நாற்றுவர்கள்தங்கள்மனம் நொந்துதலைசாய
பார்த்தன்மகன்றனையும் பவனிவரச்சொன்னார்காண்
வாரான்பவனியதோ வாள்பீமனின்னேரம்
நாருயணருமும்மை நன்றாயலங்கரித்து
கூட்டிவரச்சொன்னார்காண் கோபாலிப்போது
கேட்டவுடனிங்குவந்தேன் இருபையுள்ளசுந்தரியை
அலங்காரஞ்செய்வதற்கு அன்பாகவாருமென்றான்
கலங்காமலேயுரைத்தாள் கமலமுகத்தாதியரும்
தாதியுரைத்தவகை தான்கேட்டுச்சுந்தரியும்
ஆதவனைக்கண்ட வருள்தாமரைபோல
பெற்றாள்மனதிலுற்ற பீடையெல்லாம்தான்போக்கி

வைத்தாள்கருணை மதிபோலவேவளர்த்தாள்
பூரித்துடம்பு புளகிதமுமுண்டாகி
காருற்றமேகசெலங் கண்டபயிர்போல
இன்பம்பெருகி யெழுந்திருந்துசுந்தரியும்
அன்புமிகப்பெருகி யவளுமங்கேதுரைப்பாள்
சந்தோசவார்த்தைசொன்ன தாதியரேயுந்தனக்கு
தந்தேனேயாடைநிதி சகலபணியாபரணம்
இந்தாருமென்று யெடுத்துமிகவேகொடுத்தாள்
கருத்தாகசெய்ததவங்கைமேற்பலித்ததென்றாள்
உருத்தாகசெய்நோம்பு உடனேபலித்ததென்றாள்
கும்பிட்டதெய்வமிப்போ கூலிகொடுத்ததென்றாள்
தெம்பிட்டுமுன்னாளிற் செய்ததவம்வாய்த்ததென்றாள்

## சுந்தரிக்கு அலங்காரஞ் செய்யுதல்

தேனேமரகதமே செங்கமலத்தாதியரே
தானேயொருவிபிசம் தாமிதங்களில்லாமல்
திருமஞ்சனமாடச் செலமெடுத்துக்கொண்டாரும்
அருமையுள்ளமஞ்சன்சொம்ப வரைத்துமிகக்கொண்டாரும்
கோலமுள்ளபொற்றுகிலைக் கொய்துமிகக்கொண்டாரும்
வேல்விழியினஞ்சனத்தை விளக்கிமிகக்கொண்டாரும்
செய்யதிருநுதலிற் செந்தூரப்பொட்டிடுங்கோ
கையிற்சரியிடுங்கோ கடையமுதற்காப்பிடுங்கோ
கொந்தளப்பொன்னோலைதனை கொண்டாருங்காதிலிட
சந்திரப்பிரவைதனை ஜடையாயணிந்திடுங்கோ
முகத்துக்கிலங்கவொரு மூக்குத்திதானிடுங்கோ
நகத்தில்மருதோணி நிரைநிரையாய்ப்பூசிடுங்கோ
கழுத்துக்கிசைந்ததொரு கண்டசரங்கொண்டாரும்
முழுத்தாமாய்செய்த ரற்றினமுத்தாரங்கொண்டாரும்
அட்டியலைக்கொண்டாரும் வழுகுமிகுத்திடவே
கட்டும்ரவுக்கைதனைக் கன்னியரேகொண்டாரும்
இடைக்கிசைந்தபொன்னரைஞா ணிடுங்கோசுருக்காக
சடைக்கிமலர்முடிங்கோ தாமிதங்களில்லாமல்
பாதசரந்தண்டை பதருமற்றுணிடுங்கோ



அம்மானை.

காதில்முருகிடுங்கோ கணையாளிதானிடுங்கோ
எண்ணுமரியா தென்னழகைநான்பார்க்க
கண்ணாடிகொண்டுவந்து காட்டிடுங்கோமுன்னாலே
கண்ணிரைந்தமாப்பிள்ளைக்கிக் காதல்மிகவுண்டாக
வண்ணச்சுருள்மடித்து வளமாகத்தாருமென்றாள்
ஏலம்கிராம்புமுந்த விப்போகொடுத்திடுங்கோ
மாலாகியகளப வாடைதனைப்பூசிடுங்கோ
மருவிலாதென்னழகும் வாள்வீமன்தன்னழகும்
சரியோசரியில்லையோ தாதியரேசொல்லிடுங்கோ
கணவனபீமற்வந்து காத்திருப்பாரிந்நேரம்
மணவரைக்குக்கூட்டியெனை மங்கையரேசொல்லுமென்று
நாரணனார்புத்திரியும் நயந்துரைத்தவார்த்தையெல்லாம்
காரணமோவென்றுசொல்லிக் காத்திருக்குந்தாதியரும்
மாறாதயின்பம் மனதில்மிகவுண்டாகி
சீறானசுந்தரியைச் சிரப்பித்தாரம்மானை
திருமால்மகளார்க்குத் திருமஞ்சனமாட்டி
பெரிதானசந்திரவற்னப் பிடவையதுதானுடுத்தி
பொன்னாற்சமைத்தாற்றினப் பூசணமுந்தான்தரித்து
மின்னானசுந்தரிக்கி விக்கினங்கள்வாராமல்
திட்டிமிகச்சுத்தி திருநீற்றுக்காப்பணிந்து
கட்டழகியாமெனவே கமலமுகத்தாதியர்கள்
பாரளந்தமாயவனும் பச்சைமால்தன்னிடத்தில்
சீர்மிகுந்தசுந்தரிக்குத் திருக்கோலஞ்செய்ததெல்லாம்
சொன்னார்கள்தாதியர்கள் சுந்தரமால்தான்கேட்டு
அன்பானமாய னகமகிழ்ந்துசம்மதித்து
வந்தார்மனமகிழ்ந்து மணவரையின்பந்தலிலே
சந்தோஷமென்றுசொல்லித் தானிருக்கும்வேளையிலே

## வாள்வீமன் பவனிவந்தபின் கொலுப் பெருக்கி வீற்றிருக்குதல்

பார்த்தன்மகன்வாள்வீமன் பவனிவலமாகவந்து
சாத்திரியராசர் தளங்களூரமுறையும்
திரியோதனன்முதலாய்ச் சேனைதளமத்தனையும்

அரியோனிருசரணமடிவணங்கித்தெண்டனிட்டு
சதிர்ப்பெருக்கிவீற்றிருந்தார் தாமோதரனிடத்தில்
விதிப்பயனேநம்மைவிட்டு விலக்கவில்லையென்றுசொல்லி
மருபேச்சுரைக்க வாயுலர்ந்துநாற்றுவர்கள்
பெருமூச்சதிகமிட்டுப் பின்னுலேவீற்றிருந்தார்
பழுதொன்றுமில்லாமல் பார்த்திபன்றன்மகர்க்கு
அழகாய்முகூர்த்தமதுக் காரம்பஞ்செய்புமென்றார்

## கலியாணத்திற்குப் பஞ்சபாண்டவர்க ளில்லையே யென்று யோசிக்குதல்

மாதவனுருத்தாரம் வாள்வீமன்றான்கேட்டு
நீதமுள்ளசிந்தை நினைவிலோரெண்ணமதாய்
மாதாபிதாவுமிங்கே வாறுதகல்யாணம்
போதாதுயென்றுமனம் புண்ணாகிவாள்வீமன்
அண்ணாரிடத்தி லன்பாகவேயுரைக்க
கண்ணனிடத்தில் கடோர்க்கயனும்ராவாஹும்
சொன்னார்களப்போது தூயதிருமால்கேட்டு
நன்னயமாய்ப்பஞ்சவர்கள் நாடுவிட்டுக்காடுதனில்
காய்கிழங்குதின்று காடேகெதியெனவும்
வாய்ந்தஐவர்கானகத்தில் வாகாயிருக்கையிலே
மன்னன்னவீமனுக்கும் வாகானசுந்தரிக்கும்
என்னகலியாணம் யாம்செய்யப்போரோமென்று
தேட்டமுடனே திருமால்நினைக்கையிலே
காட்டிலிருந்தஐவர் கதையையினிச்சொல்வேனே

## பஞ்சபாண்டவர்கள் வனத்திலிருக்கும் போது நிமித்தங் காணுதல்

பஞ்சவர்களைவருந்தான் பாரவனந்தோறும்
வஞ்சமரவேதிரிந்து வள்ளிக்கிழங்குகிள்ளி
காயுங்கிழங்குங் கனத்தபலாப்பழமும்
நேயமுடனேபரித்து நீள்விசையனுந்தானும்
மானுள்துரோபதையாள் மங்கையிடந்தான்கொடுக்க
தானுகவாங்கி கூனைத்தில்சமையல்செய்தால்
ஐவர்சுனைதனிலே அடவாய்குளித்துவந்து



செய்யதிருநாமமிட்டுத் திருமாலைப்போற்றியபின்
திங்கிலாஐவருக்குஞ் சிறந்தயிலைபோட்டு
பாங்காயவர்களுக்கு பழவர்க்கமுள்ளதுவும்
காப்பிட்டகையழகி கனிகிழங்குந்தான்படைத்தாள்
சாப்பிட்டிளைப்பாறி தானிருக்கும்போதினிலே
செப்பமுள்ளமாயன் திருவருளாலப்போது
தப்பாமற்றர்மன் சாரும்வலப்புறத்திற்
பல்லிபலபலெனப் பாரேழ்புகழ்தருமன்
நல்லமுகூர்த்தமென்றும் நமக்குநல்லகாலமென்றும்
வல்லசகாதேவனையும் வாகாகவேயழைத்து
சொல்லுவாயிக்கெவுளி சொல்லியதோர்சாஸ்திரத்தை

## தருமருக்கு சகாதேவன் கெவுளி சொல்லிய சாஸ்திரத்தை சொல்லுதல்

என்றேதரும ரியம்பச்சகாதேவன்
நன்றாய்நிலக்கிரி நாலுதிசையுமடைத்து
ஈரேழுலகமுட னெட்டுத்திசையதிர
சீராகவுடருத்துச் செப்புவான்சாஸ்திரத்தை
அண்ணாவிப்போது அரையுகிறேன்கேட்டருள்வீர்
மண்ணுளைகொண்ட வணங்காமுடிவேந்தன்
தன்மகளும்லெக்கணர்க்குத் தான்மணமுஞ்செய்யவென்று
மன்னவனுஞ்சென்றான் மாயவனார்தம்மிடத்தில்
இந்தச்சமாச்சாரம் யெப்படியோவாழ்வீமன்
சிந்தைதனில்கேட்டு திருமணமுஞ்செய்யவென்று
சுற்றமுள்ளராவான் றுணைசேர்க்கடோர்க்கயனும்
உற்றவர்களாகி உடனேதுவாரகைக்கு
சென்றுதிருமால் திருப்பாதம்போற்றிசெய்து
இன்றுதிருக்கல்யாண மிப்போமுடிப்பமென்று
பாவிதுரியோன் படைகளையுந்தானொருக்கி
தாவியவர்களையுந் தான்பிடித்துக்கூட்டிவைத்து
மால்மகளைக்கல்யாணம் வாளவீமன்செய்வதற்கு
பால்போல்மனதுடைய பாலர்களுந்தானினைந்து
திருமாலிடந்தனிலே செப்பினன்ராவாஹும்
உருமையுடன்மாயவரும் உடனேவரவழைத்தார்

இன்றுதினம்கல்யாணம் இனிவாய்நடக்குமென்று
நன்றியுள்ள தர்மரிடம் நவின்றான்சகாதேவன்
அப்போதரும ராலோசனையாகி
செப்பமுடனென்செய்க்கிச் செய்யுங்கலியாணம்
பார்க்கயெனக்குப் படைத்திலனோநான்முகத்தோன்
ஆர்காணுமென்போ லனியாயஞ்செய்தார்கள்
செல்லக்குழந்தையர்க்குக் செய்யுங்கலியாணம்
வல்லவரேநான்பார்க்க வாய்க்கலையேயென்றழுதார்
இந்தவிதமாக யேங்கிப்பரதவித்து
சிந்தைதமிகத்தேறி சிறந்ததருமருந்தான்
காத்தருள்வார்மாய னெனக்கருதியேயப்பொழுது
பார்த்தன்றனையழைத்துப் பகருவாரம்மானை

விருத்தம்.

எத்திசைபுகழுவேதா னெழில்மிகுவிஜயாவுந்தன்
புத்திரன்றனக்குங்கிருஷ்ணன் புதல்விக்கும்விபாகமென்று
வெத்தியாய்நிமித்தஞ்சொன்ன விபரத்தைக்கேட்டாயல்லோ
உத்தமியாளைக்கூட்டி உறுதியாய்ச்செல்லியென்றான்

அம்மானை

எத்திசையெலாம்புகளும் மெழில்சேர்விஜயாவுன்
புத்திரர்க்குக்கல்யாணம் பொருந்திநடப்பதினால்
சந்தோசமாகத் தம்பியரேயிப்போது
உந்தன்மனதிலொன்றும் யோசனைகள்செய்யாமல்
நேயமுள்ளதுரோபதையு நீயுமெழுந்தருளி
போய்வாருமென்றுசொல்லிப் பொருந்திவிடைகொடுத்தார்

## அருச்சுனனுந் துரோபதையும் ரிஷிவேடமெடுத்து அபிமனன் கலியாணத்திற்கு வருகுதல்

உத்தாரமிட்டஅண்ணருறுதியுள்ளபாதமதை
பத்தியுடனே பணிந்துநமஸ்கரித்து
நடந்தார்துரோபதையு நல்லதொருபார்த்தனுமாய்
கடந்தார்மலைநதிகள் காடுநகருள்ளதெல்லாம்
தூரவழிதுலைத்துத் துவாரகையைவந்தடுத்து
வேரேயுருமார வேண்டிமனதிலெண்ணி



பார்த்தன்ரிஷிவடிவாய்ப் பத்தினியுந்துரோபதையாய்
நாற்றிசையோர்கொண்டாட நல்கினார்மண்டபத்தில்
வந்தரிசிதனையும் மாயவனார்தான்பார்த்து
இந்தவடிவாக இம்முகூர்த்தமண்டபத்தில்
காணுகின்றமாமுனியைக் காண்டீபனென்றறிந்து
தோணும்ரிஷிபத்தினியே துரோபதையாமென்றறிந்து
உத்தமுனிதனக்கு வுபசாரவார்த்தைசொல்லி
மெத்தமனமகிழ்ந்து வீற்றிருந்தார்மாயவரும்
உரைக்கும்பெருமானை யுள்ளமதிலேபோற்றி
நிரைக்குமணப்பந்தலிலே நிசமுனிவன்வீற்றிருந்தான்
இவர்கள்மனமகிழ்ந்து யிருக்குமந்தவேளையிலே

## அபிமனன் சுந்தரி கலியாணத்திற்கு மற்றரசர்களும் தேவகணங்களும் வருகுதல்

கவனமிகவுண்டாகிக் கன்னிசுபத்திரையும்
மகனையுந்தான்தேடி வந்தாள்துவாரகையில்
ஆகமிகமகிழ்ந்து வபிமனையும்வந்துகண்டு
பூரித்துடம்பு புளகிதமாய்வீற்றிருந்தாள்
காருத்தகூந்தலுடை கமலகன்னிநாககன்னி
கட்டழகன்வாள்பீமன் கலியாணம்பார்க்கவென்று
திட்டமுடன்வந்து சேர்ந்தார்களம்மானை
சுத்தமுள்ளபந்துஜனம் துரைமக்களெல்லோரும்
சித்தமுடன்மகிழ்ந்து சிறப்பாயிருக்கையிலே
அப்போதுஈஸ்பரனும் ஆயன்மகள்தனக்கு
இப்போதுகல்யாண மென்றறிந்துதேவியுடன்
எருதுதனிலேறி ஈஸ்பரனும்வந்தனர்காண்
குமராதுடன்கூடிக் குமரக்கடவுளரும்
மயில்மீதிலேறி வந்தனர்காணம்மானை
கயமுகத்தோன்வல்லபையும் கடுகிவந்தாரம்மானை
அன்னமதிலேறி யயனுஞ்சரஸ்பதியும்
நன்னயமதாக நல்கினார்மண்டபத்தில்
வாசவனிந்திராணிமுதல் வந்தார்முனிவர்களும்
நேசமுள்ளவானவரும் நிரைந்திருந்தார்மண்டபத்தில்

## கிருஷ்ணன் துரோணரிடம் முகூர்த்தத்தை ஆரம்பஞ்செய்ய சொல்லுதல்

ஐவர்சகாயனென்னு மாதிமகாமூலம்
பையரவினிற்றுயிலும் பச்சைமாலப்போது
மணவரையிற்றானும் வாள்பீமனையும்வைத்து
இணையானசுந்தரியை யிடப்பாகமாகவைத்து
குருகுலத்தார்க்குள்ள குணமாஞ்சடங்குதனை
தெரிந்துதுரோணரேநீர் செய்யுமென்றுசொல்லிவிட்டு
சிந்தைமகிழ்ந்தப்போ செப்புவார்மாயவரும்
தந்தைதாயில்லாத தர்மர்புதல்வனுக்கு
ஆருமொருவரில்லை ஐவருமேசெத்துவிட்டார்
பேரும்சிறப்பும் பெற்றவரேசன்னாசி
பார்த்தனுக்குநேர்சரியாய்ப் பைந்தொடியாள்சுந்தரியை
சேர்த்துமணவரையிற் சிறப்பாகவையுமென்றார்
பச்சைமால்சொல்லப் பரதேசியேதுரைப்பார்
அச்சுதரேயிப்போது அப்படியேசெய்யுகிறேன்
என்றுசொல்லித்தானெழுந்து யிருகையாற்றான்பிடித்து
சென்றுமணவரையிற் சிறப்பாய்யிருக்கவைத்து
துரோணரருகிருந்து துய்யசடங்குகளை
சிரோன்மணியாள்சுந்தரிக்குஞ் சிறந்தஅபீமனுக்கும்
செய்வதற்குஆரம்பம் செய்யயிலோராவானும்
துய்யபுகழ்வாள்வீமன் சொல்லுஞ்சபதமுடிக்க

## அபீமனன் சபதத்தை இராவான் முடிக்குதல்

திரியோதனன்முதலோர் சேர்ந்திருந்தநல்வீட்டில்
ஒருவருக்குந்தோற்றாமல் உல்லாந்துலெக்கணனை
பிடித்துபொருபிடதில் பின்னொருவர்காணாமல்
தேசமரையசெம்புள்ளி கரும்புள்ளியிட்டு
நாசுவனைத்தானழைத்து நன்றாகவேதானும்
ஐந்துகுடுமிவைத்து அழகாய்த்தலைசிரைத்து
பஞ்சைகளைப்போலே பக்கத்திருநாமமிட்டு
சாணிதனையெடுத்து தலையிலேதான்வளைந்து
கோணிதில்லாதேயென்று கொண்டுவந்துபெண்ணையிட்டு



பெரியதிரிப்போட்டு பெற்றோர்கள்தங்களுக்கு
அரியாமல்க்கொண்டுவந்து அந்தமணவரையில்
முன்னாகவைத்து முகூர்த்தம்நடத்துமென்று
சொன்னானேராவான் துரோணரிடமம்மானை
இந்தச்சமாசாரம் யெள்ளளவும்நாற்றுவர்க்கு
சிந்தையிற்றோணாமல் செய்துவிட்டான்ராவானும்
காப்புத்தரித்துக் கனமாகயெல்லோரும்
மாப்பிள்ளையைக்கூட்டி வந்தேதநகர்வலமாய்
வந்துவினாயகர்க்கு மாப்பிள்ளையின்கையாலே
சிந்தைமகிழ்ந்து தேங்காய்மிகவுடைத்து
வந்துமணவரையில் வாள்வீமன்றானிருக்க
சிந்தைமகிழ்வுடனே சிறப்பாகசுந்தரியும்
மணவரையிலேதான் மாப்பிள்ளையும்பெண்ணுமதாய்
குணமாயிருக்கையிலே கோபாலரப்போது

## சாதிவழக்கம்போல் பெண்பேசுதல்

வழக்கம்போல்பெண்பேச வாருங்கோவென்றுசொல்ல
முழக்குமுடன்சாதி யுறைமுறையாருந்தானெழுந்தார்
அன்றுரிசிபாத்தனையும் அன்பாகவாருமென
குன்றைகுடைபிடித்த கோபாலன்சொல்லிடவே
ரிஷியுமரிஷிபத்தினியும் நேராகக்கூட்டிவைத்து
உசிதமுடன்பரிச மொன்பதரைக்கால்பொன்னும்
மஞ்சள்துணிமுடிந்து வாள்வீமன்கைக்கொடுத்து
பஞ்சவர்களுக்கு பாரளந்தோன்சொந்தமதால்
வாள்பீமனுக்கு மால்மகளுஞ்சொந்தமென்றும்
தாள்வில்லாமற்பேசித் தான்கொடுத்தார்நற்பரிசம்
இடுபொன்காரைகொடுத்து யிடுமென்றார்சுந்தரிக்கு
கொடுமென்றுசொல்லிக் கொடுத்தார்கள்காரைதனை
வாங்கியேசுந்தரிக்கு வாள்பீமன்சொந்தமென்று
பாங்காய்கழுத்தில் பவுருசமாய்போட்டவுடன்
சந்தனந்தாம்பூலந் தவராதுதான்கொடுத்து
வந்தார்மணவரைக்கு மாப்பிள்ளையைத்தான்கூட்டி
அப்போதுதுரோண ரபிமனையுந்தானழைத்து

இப்புவியோர்கொண்டாட யிவனைமணவரையில்
ஒக்காரவைத்துயுய ரபிமன்சுந்தரிக்கும்
திக்குள்ளோர் தானறிய சீராயிருவருக்கும்
மாமன்மயிலேந்தி மணவரையினற்சடங்கை
சேமமுமுண்டாக செய்யமஞ்சள்காப்புகட்டி
அரசாணிகட்டு அம்முகூர்த்தக்கால்கள்நட்டு
விரசாய்மணவரைக்கி வேகமதாய்பொங்கலிட்டு
மணவரையிற்றுன்படைத்து மங்கிலியஸ்ரீகளுந்தான்
குணமாய்முளைப்பாரி கூடியெல்லோருந்தெளித்தார்

## அருச்சுனனாகிய ரிஷிக்கும் பத்தினிக்கும் கிருஷ்ணனும் லெட்சுமியுந் தாரைவார்த்து கொடுக்குதல்

பார்த்தன்ரிசியும் பத்தினியும்மோர்புரமாய்
நேர்த்தியுள்ளலெட்சுமியும் நெடுமாலுமோர்புரமாய்
மணவரையிற்கெண்டியில்நீர் வைத்துயிருவருமாய்
பணமொன்றுவைத்து பார்த்திபர்கள் தாமறிய
நேரேதுரோபதையும் லெட்சுமியுந்தானிருக்க
தாரைதனைவார்த்தார் தவமுனிக்கிகிருஷ்ணனுந்தான்
தேங்காயுடைத்துத் திருமங்கிலியமதை
குருகுலத்தார்க்குள்ள குணமாஞ்சடங்குகளை
தெரிந்தவரேசெய்யுமெனச் செப்பினார்மாயவரும்
அப்போதுரோண ரன்பாய்மணவரையில்
செப்பமுடன்வந்திருந்து சிரப்பாய்ச்சடங்குகளை
செய்துமகிழ்ந்து திசையிலுள்ளோர்கொண்டாடி
உய்யும்படியாக உற்றஅபிமனுக்கு
ஓமம்வளர்த்தா ஞேதியேவேதமெலாம்
நேமமுடன்பாண்டுவழி நீடூழிவாழ்கவென்று
வலங்கொண்டுவோமம் வளர்ந்தெழுந்ததம்மானை
பெலமுள்ளதுரோணர் பிரியமுடனேவளர்த்தார்
மார்க்கமுடன்பார்த்தோர்கள் மனமகிழ்வாய்த்தானிருந்தார்
ஆர்க்கும்பெரிய ஆயருமவ்வேளை
பாங்காகமாயன் பண்பாய்த்தொட்டுக்கொடுத்து



தோத்திரங்கள்சொல்லி சுபமங்களமாக
நேர்த்தியுடனப்போது நீடூழிவாழவென்று
எல்லாருங்கொண்டாட யியல்புடைய தாலிதனை
வல்லமையாய்த்துரோணர் வலக்கரத்திற்றனெடுத்து
அரசரொடுபெந்துஜன மனைவோருந்தொட்டிய
விரைவாகவாங்கியன்னான் மேலாய்த்துரோணரிடம்

## அபிமனன் சுந்தரிக்கு மங்கிலியந்தரிக்குதல்.

கொடுக்கவவர்வாங்கிக் கொற்றவர்கள் தானறிய
எடுத்துக்கொடுக்க யியல்சேரபிமனுந்தான்
செங்கனெடுமால் செல்வியெனுஞ்சுந்தரிக்கி
மங்கிலியந்தான் தரித்தான் வாள்பீமன்மையாலே
அணிந்தபின்புதேவர்களும் அந்தரமதாயிருந்து
துணிந்துமலர்மாரி சொரிந்துமிகவாழ்த்திடவே
அப்போதுவாள்பீம னமுகுமிகுசுந்தரியை
செப்பமுடன்கைப்பிடித்து சேர்ந்துயிருவருமாய்
காதலுடனம்மிக் கல்லின்மேல்காலைவைத்து
ஆதரவாய்முக்காலு மருந்ததியைத்தான்காட்டி
அரசாணிப்பானையையும் அபிமனுஞ்சுந்தரியும்
விரசாயெடுத்துவைத்து விண்ணோரைப்போற்றிசெய்து
ஆசாரிமார்களுக்கும் அரிகேவன்றனக்கும்
நேசமுடன்தெண்டனிட்டு நெடுமால்மனைதனிலே
சேர்ந்தவர்கள்பாலுபழம் திரமாகவேயருந்தி
கார்குழலாள்சுந்தரியும் கண்ணன்மருமகனும்
இதமாயராமனையி லிவர்களுஞ்சந்தோடமதாய்
மதனும்ரதிபோல வாழ்ந்திருந்தாரம்மானை
அந்தரத்திலவந்திருந்த அரன்முதலாய்தேவர்களும்
சந்தோசமாய்வாழ்த்தித் தன்பதிகட்கேகினார்காண்
அப்பாலிராவான் அரியதொருசந்தனமும்
தப்பாமலெல்லவர்க்கு தாம்பூலந்தான்கொடுத்தான்
துரியோதனன்முதலாய் சேர்ந்தநொருநூற்றுவரும்
பெரியோர்களான பீஷ்மர்முதலானவரும்
தாம்பூலம்சந்தனமும் தான்வாங்கிகொண்டபின்பு
சோம்பிமுகம்வாடி துரோணன்ரையுந்தான்கூட்டி

## திரியோதனன் முதலானவர்கள் அஸ்தினா புரஞ்செல்லுதல்.

கலியாணவீட்டில் கௌரவர்களெல்லோரும்
களிப்பாயெழுந்திருந்து தன்மகனுமிலெக்கணனை
காணாதுதேடி கலங்கிப்பரதவித்து
வீணையலைந்து வெகுநேரங்காணாமல்
மணவறையின்முன்னாக வந்துபார்க்கும்பொழுது
மணமிலாலெக்கணனை மாறுதலாய்த்தான்சிறைத்து
தலையிலேசாணிதனைத் தான்வளர்த்துயெண்ணெயிட்டு
நிலையாகவேதான் நெடுந்திரியைத்தான்போட்டு
பருவமுடன்விளக்குப் பார்க்கவேத்தானேற்றி
உருவேதெரியாமல் உளுக்காந்திருப்பதையும்
கண்ணாலேகண்டு கடுங்கோபமுண்டாகி
எண்ணாதமெண்ணி யிவர்களொருசேகரமாய்
கூடியிவனுக்கு கொடுப்பேனுராச்சியத்தை
தேடிவனத்திற் றிரியும்படிசெயுரேன்
என்றுசபதமிட்டு யிலக்கணனைத்தான்கூட்டி
அன்றுமொருவரிடம் அவர்களுந்தான்சொல்லாமல்
வந்தாரஸ்தினாபுரிக்கி மன்னவர்களெல்லோரும்
செந்திருமால்தானும் சிறப்பாகயெல்லோர்க்கும்
சாப்பாடுசெய்து தாம்பூலமுங்கொடுத்து
மாப்பிளையும்பெண்ணும் மகிழ்வாயிருந்தார்கள்

## ருஷ்ணன் அனைவருக்கும் விருந்து செய்யுதல்

மறுநாள்தினத்தில் மாயவருமப்போது
பெரியதாய்விருந்து பிரபலமாய்த்தான்சமைத்து
உற்றசனத்திற்கும் உறமுறையர்தங்களுக்கும்
மற்றுமந்தவூரிலுள்ள மகாஜனங்கள்தங்களுக்கும்
பத்துவகைக்கறியும் பாயாசம்முப்பழமும்
புத்துருக்குநெய்யுடனே பொருந்துவடைமுதலாய்
சாப்பாடுசெய்து சந்தோடமாயிருந்து
ஒப்பாயிராக்கழித்து மூன்றுநாள்காலையிலே
மறையோர்கள்வந்து மணவறையிலேயிருந்து



## அபிமனனுக்குஞ் சுந்தரிக்குங் காப்பவிள்த்து நலுங்கிடுதல்

பிறைநுதலாள்சுந்தரிக்கும் பெலவானபிமனுக்கும்
காப்பவிழ்க்கவேண்டி களிப்பாயிருக்கவைத்து
மந்திரங்கள்சொல்லி மறையோருங்காப்பவிழ்த்தார்
விந்தையுடனே மிகவேநலுங்குகளும்
சந்தோடமாகத் தான்முடித்தபிற்பாடு
தொட்டிலொன்றுகட்டி சுகமாயதிலேதான்
மட்டற்றஆசையாய் மரப்பிள்ளைதான்போட்டு
தாலாட்டினார்கள் சம்மதம்போலேயிருவர்
மாலின்மகள்கையிலே மலர்ச்செண்டுதான்கொடுத்து
மன்னனபிமன் மடியில்விழச்செண்டாடி
அன்னவன்கையாலே அழகானதேங்காயை
சுந்தரிமேலேயுருட்டச் சுந்தரியாளப்போது
விந்தையதாய்வான்பீமன் மேலேயுருட்டிவிட
இப்படியாக யிவர்கள்விளையாடையிலே
செப்பமுடன்மங்கையர்கள் சிரித்துவிளையாடி

## சுந்தரி அபிமனனுக்கு சட்டுவம் பரிமாறுதல்

மன்னனபிமன் மணவறையில்வீற்றிருக்க
பொன்னனையசுந்தரியும் போந்துமணமீதேறி
முக்காலிதன்கணவன் முன்னாலேபோட்டதன்மேல்
தக்கநவரத்தினத்தாற் றூணிழைத்தவட்டிலதை
வைத்ததிலேமுல்லைமுகை மானுமமுதோர்மலைபோல்
சுத்தியேகுன்று தொடர்ந்திருக்கும்பாவனைபோல்
பொரிக்கறிகள்வைத்ததன்மேல் பொன்னோல்பருப்பதனை
விரிக்குஞ்சிகரமென வேய்ந்தருவியென்னநெய்யை
விட்டுத்தன்நாயகற்கு வேணமட்டுஞ்செய்பவள்போல்
சட்டுவத்தினாலேமுன் றூன்படைத்தாளம்மானை
வண்ணான்கொடுத்தநெசரு மாற்றதனைமாப்பிளையும்
பெண்ணுமுடுத்தி பிரியமுடன்காசிகங்கை
தனுக்கோடித்தீர்த்தமுதற் சாரணர்கள்கொண்டுவர
மனுக்கோடிவாழ்த்தெடுக்க வந்துநீராடியபின்

## அபீமனுக்கு மற்றரசர்கள் மரியாதை செய்யுதல்

அப்பாலேயைம்பத்தி யைந்துதேசத்தில்வளர்
எப்பாரும்போற்று மெழிலரசர்சூழ்ந்திருந்து
மாப்பிள்ளையைமட்டு மணவரையிற்றனிருத்தி
காப்பபிஷேகஞ்செய்யகரங் கண்டமட்டுமெள்ளியள்ளி
பொன்னுமணியும் பொருளுடனுடைகளும்
மன்னனபீமற்கு வழங்கிமரியாதைசெய்தார்
மஞ்சள்நீராட்டி மகிழ்வாகவன்றிரவில்
மஞ்சுகுழல்சுந்தரியும் வாள்பீமமன்னனையும்

## ஊர்கோலத்திற்கு சுந்தரியை அலங்காரஞ் செய்யுதல்

ஊர்கோலஞ்செய்வதற்கு குகந்தாரேமாயவரும்
சீர்சேர்ந்ததாதியர்கள் தெரிந்தந்தச்சுந்தரிபால்
வந்தார்சம்பங்கி வார்த்தார்குழல்தனக்கு
கொந்தாருங்கூந்தல் குணப்படுத்திபின்னல்செய்து
மாலையணிந்தார் மதிநுதலில்சுட்டியிட்டார்
ஓலையணிந்தார் யுயர்வயிரத்தினத்தால்
சந்தனக்கோலமிட்டார் சவ்வாதுப்பொட்டணிந்தார்
கந்தபொடியணிந்தார் கைக்கிக்கணையாழியிட்டார்
தண்டைசிலம்பணிந்தார் சதங்கைபலவணிந்தார்
கனத்ததனங்களுக்குக் கச்சணிந்து நூலிடையில்
வனத்தகலையணிந்து மகிழ்வுடையசுந்தரியை
சிங்காரஞ்செய்த செயலறிந்துமின்னார்கள்
மங்காதமாரன் மனைவியிவளெனவே
தாதியர்கள்சுந்தரியைத் தானழைத்துக்கூட்டிவந்து
மீதுயர்ந்தமண்டபத்தில் விட்டனர்காணம்மானை

## அபீமனுக்கு அலங்காரஞ் செய்யுதல்

திசைகடோரும்புகுந்து செருச்செய்துகீர்த்திபெற்ற
விசையன்மகன்றனையும் வேந்தர்பலசேர்ந்து
அணியாலலங்கரித்து அம்பொனுடைபுனைந்து
மணிமகுடகுண்டலங்கள் வாய்ப்பாகவேயணிந்து
நவரத்தினமகுடம் நாயகம்போலேயணிந்து
பவளமுத்துமாலை பதக்கமுடன்புனைந்து



இடையிலுடைவாளிடதுபுரந்தான்றுலங்க
தடையறுமன்னவனைத் தானேயலங்கரித்து
அரசர்பலதிரண்டு அபீமன்றனையழைத்து
விரசுகோலத்துடனேவிட்டாரேமண்டபத்தில்

## யானையை அலங்காரஞ் செய்யுதல்

மணமக்கள்வந்தவுடன்மன்னரெல்லாந்தான்கூடி
வணங்கரியராஜ மதயானையைக்கொணர்ந்து
நெற்றிதனிற்சிந்துரத்தைநிலாப்பிறைபோலெழுதி
எற்றுகின்றகால்களுக்கு கிருங்கொலுசு தானணிந்து
அரசிலைபோற்காதுகளில் அலங்காரமாயணிந்து
புரசை முகங்களிலே பொன்பட்டந் தானணிந்து
கொம்பிடையிற் றோரணங்கள் குறிப்பாகத்தானணிந்து
கம்பவொலிவீர கண்டாமணியணிந்து
பொற்படாம்போற்றி புகர்முகமுன்தொங்கவிட்டு
அற்புதமாய்முதுகில் அம்பாரிதானமைத்து
சந்திரகுலந்துலங்க தாரணியிற்கோலிலங்க
விந்தையதாய்ப்பூச்சக்ர வெண்குடையுமேலிலங்க

## அபீமனுஞ் சுந்தரியும்யானைமீதேறி ஊர்கோலம் வருகுதல்

அலங்காரஞ்செய்ததொரு யானையின்மேல்சுந்தரியை
இலங்கும்அபீமனையும் யேற்றினார்மங்களமாய்
இந்திரனுஞ்சசியு மிருந்ததொருபாவனைபோல்
செந்திருவுமாலுஞ் சேர்ந்திருந்தலெட்சணம்போல்
மதனும்ரதியும்போல் வந்திருந்தாரானையின்மேல்
இதமாயிருபுறமும் இருங்கவரிதானிரட்ட
நாகசுரந்தவிலும் நாடியொருபால்முழங்க
மேகமுழக்கமென வீரசின்னந்தான்முழங்க
மத்தாப்புச்சூரியன்போல் மாதிரமெலாந்துலங்க
சித்தாகப்பாணந் திசைகளெல்லாம்பறக்க
எண்ணவொண்ணாதீவட்டி எழுநாற்றுக்காதவழி
நண்ணயிருமருங்கும் நற்பகல்போற்றுலங்க
மன்னர்புடைசூழ மானிலத்தோர்கொண்டாட

கன்னல்விற்காளையர்கள் களித்துமுன்னேநடக்க
விருதுபலகூற விசையன்மகனூர்கோலம்
வரும்போதுகண்டு மங்கையர்களாசைகொண்டார்

## அபிமன்னன் சுந்தரியினூர்கோலத்தை பார்த்த பெண்கள் சந்தோஷ மடைதல்

மாலைதனைக்கண்டாரின்னூர் மாலாகித்தாமணிந்த
சேலையிடையகன்று சிதறுவதைநோக்கார்கள்
மன்னன்றனைப்பார்க்க மகிழ்வடைந்தமின்னார்கள்
உன்னிதமாய்பூஷணங்கள் உயர்வாகவேயணிந்து
வந்தார்தெருவீதி மன்னன்முகங்கண்டவர்கள்
சிந்தாகுலமடைந்து சிதறினார்கைவளைகள்
திண்புயத்தைக்கண்டவர்கள் திண்புயத்தேநோக்கிநின்றார்
கண்மலரைக்கண்டவர்கள் கண்மலரேநோக்கிநின்றார்
முன்னழகைக்கண்டவர்கள் முற்றுமிழந்திடுவார்
பின்னழகைக்கண்டவர்கள் பெட்பின்மையனுற்றிடுவார்
மார்பழகைக்கண்டவர்கள் மையல்மிகவுண்டாகி
சேர்வோமெனக்கருதில் சிந்தியாளென்றுசொன்னார்
அன்றுபலவீதி ஆலாத்திதானெடுக்க
சென்றாரணியணியாய்த் தெய்வேந்திரன்போலே
வந்தாரவேவொரு மாயன்மனைதனிலே
சந்தானமாயெவரும் தான்களிக்கப்போய்ப்புகுந்தார்
வண்ணமெலச்சமங்கையர்கள் மாப்பிளைக்கும்பெண்ணினுக்கும்
கண்ணெச்சிலைக்கழிக்க கனகத்தாலாலாத்தி
எடுத்தார்மனமகிழ இட்டார்திரவியத்தை
விடுத்தார்புரந்தனிலே வீற்றிருந்தாரம்மானை

## கிருஷ்ணன் சுந்தரிக்கு சீதனங்கொடுக்குதல்

அன்புதல்விசுந்தரிக்கு தான்சீதனமாக
பொன்மணியும்பூஷணமும் பொருந்துநவரத்தினமும்
வெள்ளிப்பணிதிகளும் வெங்கலப்பாத்திரமும்
அள்ளிப்பொதிபிடித்து யனுப்பினாரானையின்மேல்
தங்கப்பணிதிகளும் சரப்பளிக்கொத்துகளும்
பொங்கமுடன்மற்ற பூஷணமுஞ்சேகரித்து



பிடித்துக்கடகரியிற் பிரபலமாய்த்தானனுப்பி
வட்டப்பமுடன்கோடிசெம்பொன் வளமாகவுங்கொடுத்து
தாதிமாருங்கொடுத்துத் தண்டிகையுந்தான்கொடுத்து
நீதியுள்ளசுந்தரிதன் நினைவில்நினைத்ததெல்லாம்
வாரிக்கொடுத்தார்காண் மண்டலத்தோர்தாமறிய
கோரிக்கையாக கொண்டாளேசுந்தரியும்

## பார்த்தனுந் துரோபதையும் கல்யாண முடித்து விட்டு வனத்திற்குச்செல்லுதல்

சீருகொடுத்ததையும் தேர்விசையன்துரோபதைக்கு
பாருமென்றுசொல்லி பார்த்திபன்றான்காட்டி
செங்கண்ணெடுமால்பதத்திற் றேர்விசையன்துரோபதையும்
மங்களமதாய்ப்பணிந்து வாகாயிருபேரும்
தருமரிருக்குமிடம் தான்சேர்ந்துசங்கதியை
சரிவரவேசொல்லித் தானிருந்தாரம்மானை

## அபிமன்னன் சுந்தரி முதலானவர்களுங் கிருஷ்ணனிடம் விடைபெற்று இந்திரபிரஸ்தஞ் செல்லுதல்

பார்த்தனும்துரோபதையும் பிரிவாகப்போனபின்பு
நேர்த்தியுடனங்கிருந்த நிருபனெனும்வாள்பீமன்
செப்பமுடன்வந்து செங்கணெடுமால்பதத்தில்
அப்போதுசுந்தரியும் அபிமனுந்தான்வணங்க
வாழ்த்தியனுப்பினர்காண் மாயவனைப்போது
தாழ்வில்லாமாயனையுந் தான்வணங்கியெல்லோரும்
போரால்பெரியப் பெலவான்கடோர்க்கயனும்
நேர்கவந்துநின்று நெடுமாலைத்தான்பணிந்து
தாய்மார்கள்மூவரையும் தண்டிகையில்த்தானேற்றி
வாய்வேகமாக வழிநடந்தாரம்மானை
ஆறுங்குளமும் அடவிகளுந்தான்கடந்து
கூறும்பலவனமுங் குவடுகளுந்தான்கடந்து
சத்திரமுஞ்சோலைகளுந் தாவளமுந்தான்கடந்து
பத்திரமுங்கொய்யுகின்ற பாரவனங்கடந்து
இந்திரப்பிரஸ்த மெனுமாநகரதனில்

வந்தாரேசேனையுடன் வாள்பீமராஜாவும்
அந்தவூர்மங்கையரு மாடவரும்வோடிவந்து
சந்தோடமாகத் சகலரையுந்தான்கூட்டி
கட்டியங்கள்கூற கற்புள்ளசுந்தரியும்
மட்டில்லாவாள்பீமன் வந்துமனைபுகுந்தான்
மரியாதைசெய்தார் வந்தவர்களெல்லோர்க்கும்
அரியோனேதஞ்சமென அனைவோரும்வீற்றிருந்தார்
வாள்பீமன்சுந்தரியும் மதனும்ரதிபோலவிரு
தோள்பூரித்தென்றும் சுகமாகவாழ்ந்திருந்தார்
கமலகன்னிநாக கன்னிகடோர்க்கயனும்
விமலனடியை மேவுகின்றராவானும்
சுபத்திரைவாள்பீமன் சுந்தரியையும்பார்த்து
சுபமங்களமாக சுந்தரமாய்வாழவென்று
நல்லவாக்குத்தான்கொடுத்து நடந்தாரவர்பதிக்கி
வல்லதொருவாள்பீமன் வாழ்ந்திருந்தாரம்மானை
இக்கதையைத்தானு யிதமாய்ப்படித்தோர்க்கு
தக்கபடிகலியாணந் தவறாதுதானடக்கும்
சுந்தரியைவாள்பீமன் சுகமாய்மணம்புரிந்த
இந்தக்கதையை யெழுதிவைத்தோரும்
சாற்றவேகேட்டுச் சந்தோஷமானவரும்
எற்றப்புவியி லெல்லோருமவாழியவே

சுந்தரி கலியாண அம்மானை,
முற்றுப் பெற்றது.

119078
0-87M
NO6